குன்றக்குடி அடிகளார்

நூல்வரிசை

தொகுதி - 4

திருக்குறள்

குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

தொகுதி - 4

திருக்குறள்

முதன்மைப் பதிப்பாசிரியர்

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பாரிமுனை,

சென்னை-600108.

முதல் பதிப்பு : செப்டம்பர், 2001
திருவள்ளுவர் ஆண்டு : 2032
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
விலை : ரூ. 75-00

பதிப்பாசிரியர் குழு :

தமிழாகரர் தெ. முருகசாமி

நா. சுப்பிரமணியம்

குன்றக்குடி பெரியபெருமாள்

க. கதிரேசன்

மரு. பரமகுரு

செயலர் :

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

சிதம்பரம்	: 30069
சென்னை	: 5361039
மதுரை	: 622853
கோயமுத்தூர்	: 397155
திருச்சி	: 706450

அச்சிட்டோர் : பவர்மேன் பிரிண்டர்ஸ், சென்னை - 1.
✆ : 5243591, 5248342



தமிழ் மாமுனிவர்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

வாழ்க்கைக் குறிப்புகள்

ஆண்டு	நிகழ்வுகள்
1925	• தோற்றம்
	• பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி
	• பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன்
	• தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம்.
1931 - 1936	• சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம். • 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு.
1937- 1942	• தமையனார் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல்.
	• பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல்.
	• 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு.
	• 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல்.
1945	• தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல்.
	• தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல்.
1947 - 1948	• சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல்.
1949	• குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்.
1951	• காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு.
1952	• குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல்.
	• அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம்.

- 'மணிமொழி' என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953
- ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954
- இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955
- அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- 'தமிழ்நாடு' நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956
- அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958
- குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959
- ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960
- மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962
- சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965
- இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966
- தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967
- திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சீலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968
- இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - 'திருக்குறள் உரைக்கோவை' நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல் - திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.

- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.
- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- **மணிவிழா**

1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப்பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989
- இவர் எழுதிய ‘ஆலயங்கள் சமுதாய மையங்கள்’ என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



அடிகளாரின் குறள் பணிகள்

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்
நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில் சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும் அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறு பெற்றேன். அப்பொழுதெல்லாம் அடிகளார் சிந்தனைகள் அனைத்தையும்

ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அடிகளார் அவர்களுக்கு டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கிய போது அவர்களிடம் வாழ்த்துப்பெற்று, அடிகளார் நூல் வரிசைத் திட்டத்தை விரிவாக விளக்கினேன். "நல்ல திட்டமாக இருக்கிறது. செய்யலாம்" என்று சொல்லி இசைவளித்தார்கள். அடிகளார் எழுதிய 50-க்கு மேற்பட்ட நூல்களையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களை நேரில் சந்தித்து ஆசிபெற்று நூல்வரிசைத் திட்ட அறிக்கையைப் பணித்தேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்த்தி இசைவு தந்தார்கள். பதிப்புக்குழுவை உருவாக்கினார்கள். கட்டுரைகளை வகைப்படுத்தும் பணி தொடங்கிற்று.

ஒவ்வொரு தொகுதியும் 400 பக்கங்கள் கொண்ட 10 தொகுதிகளாக வெளியிடும் திட்டத்தில் ஏற்கனவே முதல் மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன. இன்று நான்காவது தொகுதி வெளிவருகிறது.

1. திருக்குறள்
2. இலக்கியம்
3. சமயம்
4. சமுதாயம்
5. பொது

என 5 நிலைகளில் இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மறைமலை அடிகளுக்குப்பின் 1960-90களில் சைவ உலகில் அடிகளார் பெரும்புரட்சி செய்தவர். சைவ சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர். சமயக் காழ்ப்பின்றி சைவசமயத்தின் கோட்பாடுகளை, தத்துவக் கூறுகளை பொதுமக்களும் உள்ளம் கொள்ளும்படி விளக்கியவர் தமிழ்மாமுனிவர். சைவசமயத்தை நடைமுறைச் சமயமாக்கவும், சீர்திருத்தக் கருத்துக்கள் செயற்படவும் அல்லும் பகலும் அயராது உழைத்து, புதியதொரு விடியலைக் கண்டார்கள். பெரியாரும் போற்றும் வண்ணம் பெருமிதமாக வாழ்ந்தார்கள். தமிழ்நாட்டில் பெரிய சைவத்திரு மடங்கள் 18 இருந்த போதிலும் குன்றக்குடி ஆதீனமே மக்களால் பெரிதும் அறியப்பட்டிருந்தது. தமிழ் மறுமலர்ச்சியின் ஒரு கூறாகிய சமய எழுச்சி, திருமுறை

எழுச்சி, திருக்குறள் இயக்கம் முதலியவற்றின் வாயிலாக, எழுச்சி மிக்க புதிய தமிழகத்தை உருவாக்கினார்கள்.

அடிகளார் அவர்களை

புரட்சித்துறவி

சிந்தனையாளர்

நூலாசிரியர்

சொற்பொழிவாளர்

நிறுவனர்

என ஐந்து நிலைகளில் வைத்து அடிகளாரின் பங்களிப்பை நாம் விளக்கலாம்; மதிப்பீடு செய்யலாம்.

புரட்சித்துறவி : தத்துவ தரிசனங்கள் அனைத்தையும் கற்றதோடு மார்க்சியமும் கற்றவர். சமூக இயலில் ஆழங்கால் பட்டவராதலால் தமிழ்ச் சமூக மாற்றத்திற்கு சைவ சமயம் வழியாக எவ்வாறு மேம்பாடு காணலாம் என உழைத்தார். தமிழ்வழிபாடு, ஆட்சிமொழி, பயிற்றுமொழி, இந்திஎதிர்ப்பு முதலிய அனைத்து இயக்கங்களுக்கும் தலைமையேற்று தமிழகத்திற்கு வழிகாட்டினார். அவருடைய எழுத்திலும், பேச்சிலும், புதுமைகள் பூத்துக் குலுங்கின. திருமடத் தலைவர்கள் பல்லக்கில் பவனிவந்தபோது பட்டி தொட்டிகளுக்கெல்லாம் அடிகளார் சைக்கிளில் சென்று சமயம் பரப்பினார். புரட்சித்துறவி அடிகளாரின் புரட்சிச் சிந்தனைகளை இந்த 10 தொகுதிகளிலும் நாம் காணலாம். நடைமுறைக்கு ஒத்துவராத சமயக் கருத்துக்களைத் துணிவோடு எடுத்துக்காட்டிய சமயப் புரட்சியாளர்.

சிந்தனையாளர் : தமிழ்ச் சிந்தனைக்குப் புதுவளம் சேர்த்தவர். திரு.வி.க. நெறியில் சமுதாய நோக்கில் சமயச் சிந்தனைகளை வழங்கியவர். பன்னூற் பயிற்சியும், பேரறிஞரின் நட்பும், தொடர்ந்த மேடைப்பொழிவுகளும், பட்டறிவும் அவருக்குப் பல்வேறு புதிய சிந்தனைகள் தோன்ற வாய்ப்பளித்தன. துறவியாய், தமிழறிந்த சான்றோராய் மட்டுமல்லாமல் மானுடம் மேன்மையுற வேண்டும் என்ற வேணவாவினால் எவர்க்கும் அஞ்சாமல், எதனையும் எதிர்பாராமல் புதிய சிந்தனை விதைகளைத் தூவினார்கள். அவை இன்று பூத்துக் குலுங்குகின்றன. அவரின் சிந்தனைகள் தனி நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன.

நூலாசிரியர் : பல்வேறு காலங்களில் பல்வேறு இதழ்களில் அடிகளார் எழுதிய கட்டுரைகள் நூல்வடிவம்

பெற்றுள்ளன. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் அவர் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் அறிஞர் பெருமக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுகின்றன. சிறியனவும், பெரியனவுமாய் 54 நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் அடிகளாரின் சிந்தனைத் தெளிவும் விளக்கும் திறமும், விரித்துரைக்கும் வகையும் நூலாசிரியர் இயல்புகளாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு நூலிலும் சமூகப் பார்வையுடன் கூடிய புதிய சிந்தனை, புதிய செய்தி ஒன்று இருக்கும்.

சொற்பொழிவாளர் : 1960-90களில் தலைசிறந்த சொற்பொழிவாளர் ஐவரைச் சுட்டினாலும், மூவரைச் சுட்டினாலும் அடிகளார் பெயர் முதல் வரிசையில் நிற்கும். புதுமைச் சிந்தனையாலும், புரட்சிக் கருத்துக்களாலும் தமிழக இளைஞர்கள் மத்தியில் பாராட்டப் பெற்றவர்.

நிறுவனர் : அருள்நெறித் திருக்கூட்டம் : அடிகளார் தொடங்கிய இந்த இயக்கம் தமிழ்ச்சைவ உலகில் புத்தார்வத்தையும், புத்துணர்ச்சியையும், புத்தெழுச்சியையும் உண்டாக்கியது. சிற்றூர்களில், பேரூர்களில் கிளைகள் முகிழ்த்தன. திருமுறைகள் வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றன. ஊர்தோறும், திருக்கோயில் தோறும் உழவாரப்பணி ஊக்குவிக்கப் பெற்றது. நாள்வழிபாடு ஒழுங்கு செய்யப் பெற்றது. வார வழிபாட்டுக்கூட்டம் வளர்ந்தோங்கியது.

தெய்விகப் பேரவை : தமிழக அரசின் இந்து அறநிலையத்துறையின் வழி தொடங்கப் பெற்ற இந்த அமைப்பு பேரியக்கமாகப் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. சமய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இறைஉணர்வு நாளும் பெருக நல்லதொரு இயக்கமாக வளர்ந்தது.

திருக்குறள் பேரவை : தமிழ்மாமுனிவர் தோற்றுவித்த அமைப்புக்களில் இன்றும் இளமை குன்றாது மாநாடுகள் நடத்திவரும் பேரியக்கம் இது. தமிழறிந்தோர் எல்லோரும் திருக்குறள் அறிந்திடுதல் வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் திருக்குறள் கருத்தரங்கு நடைபெறுதல் வேண்டும். ஆண்டுதோறும் மாநில மாநாடுகள் நடத்துதல், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகத் திருக்குறள் மாநாடு நடத்துதல் முதலியன இதன் செயல்திட்டங்கள்.

திருக்குறளைத் தேசியநூல் எனப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அடிகளார் எழுப்பிய குரல் இன்று நாடு முழுவதும் ஒலிக்கிறது.

அணிந்துரை

டாக்டர் வா.செ. குழந்தைசாமி

திருக்குறள் வகுப்பறையில் பாடமாகவும், அறிஞர்கள் மன்றில் விவாதப் பொருளாகவுமே நீண்ட காலம் இருந்து வந்திருக்கிறது. 'வாழ்வியல் நூல்' என்ற அணுகு முறையொடு அதை யாரும் மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லவில்லை. சைவர், வைணவர், சமணர் போன்ற ஒவ்வொரு சமயத்தினரும் கொண்டாடினாலும் அடிப்படையில் சமயச் சார்பற்ற அந்நூலின்மீது சமய அடிப்படையில் எந்தச் சமயத்தினரும் ஆழ்ந்த ஈடுபாடு காட்டவில்லை. தேவாரம் போலவோ, திவ்வியப் பிரபந்தம் போலவோ குறள் சொற்பொழிவுப் பொருளானதில்லை. சமய உலகத்தவருள், குறளை மக்கள் மன்றத்திற்கு முதன் முதலாக எடுத்துச் சென்றவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்தான்.

பெரும்பாலும் குறளை ஒரு நீதி நூலாக மட்டுமே தமிழறிஞர்கள் பார்த்து வந்தனர். ஆங்காங்கு சில குறள்களில் அவர்கள் இலக்கிய நயம் காண்பதுண்டு. ஆனால் குறள் தமிழர் தம் தத்துவப் பார்வையைப் பிரதிபலிக்கும் வாழ்வியல் நூல் என்பது அவ்வளவாக உணரப்படவில்லை; மக்கட்கு உணர்த்தப்பட வில்லை. "திருக்குறள் சமயம் கடந்த வாழ்வியல் நூல்: தமிழ்ச் சமுதாயத்தினர் தங்கள் வாழ்க்கையை அதன் எல்லாக் கட்டங்களிலும் நெறிப்படுத்திக் கொள்ள உதவும் வழிகாட்டி" - என்ற பிரகடனத்தைத் தோளில் சுமந்து கொண்டு கால் நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழகத்தில் வலம் வந்தவர்; பின்னர் இப்பணியில் ஈடுபட்டுள்ளோர்க்கு முன்னோடியாக இருந்தவர் தவத்திரு அடிகளார்தான். இயற்கையாகவே அடிகளாருக்கு அமைந்திருந்த x-கதிர் (x-ray) போன்ற பார்வை, ஒவ்வொரு பொருளிலும் உள் நுழைந்து உண்மை தேடும் அணுகுமுறை, திருக்குறளின் அடிப்படைக்கு ஏற்றதாக, ஒத்ததாக இருந்தன. எனவே குறளின் அகலமும் ஆழமும் கொண்ட கருத்துகள் விரிந்து அவர் பார்வையின் முன் பரந்த வானில் முழுப் பிரகாசத்தொடு ஒளிவீசும் தாரகைகள்போல விளங்கி நின்றன.

குறள் மக்கள் இலக்கியமாக மலரவில்லை; ஆனால் அறிஞர்கள் மத்தியில் தொடர்ந்து பயிலப்பட்டு வந்த நூல். பல உரைகள் கண்ட நூல். பல மொழிபெயர்ப்பு களைக் கொண்ட பெருமையுடைய நூல். இவ்வளவு நீண்ட கால, ஆழ்ந்த ஆய்வுக்குப் பின்னரும் பல குறள்கட்கு அடிகளார் முந்தையவர்களினின்றும் வேறுபட்ட விளக்கங்களைக் காண்கிறார். அவரது ஒவ்வொரு விளக்கமும் குறளின் வாழ்வியல் கூறுபாட்டை மேலும் கூர்மையுடைய தாக்குகிறது. குறள் வழி நிற்பதற்கு வழி காட்டுகிறது. சில சான்றுகள் பார்ப்பது பொருந்தும்.

அழுக்காறு விலக்கப்பட வேண்டிய உணர்ச்சி. அழுக்காறாமை என வள்ளுவர் ஒரு அதிகாரமே வைத்திருக்கிறார்.

அழுக்காறாமை எனும் பண்பை அடைதல் எவ்வண்ணம் என்னும் கேள்வியை எழுப்பி, அடிகளார் ஏறத்தாழக் கணிதச் சூத்திரம்போல் சுருக்கமாகப் பதில் சொல்கிறார்:

> 'மற்றவர்கள் வாழத் தம் வாழ்க்கையின் தேவைகளைக் கூட விட்டுக் கொடுத்தல்; குறிப்பாகச் சொன்னால் 'வாழ்தலை விட வாழ்வித்தலில் ஆர்வம் காட்டுதல்'. (21)

என்கிறார். நாம் வாழ்க்கையில் கடமைகள் பற்றிப் பல வகையான வழியில் கருத்துக் கூறுகிறோம். கடமைகளை எப்படி அணுக வேண்டும் என்பதற்கு அடிகளார் கூறும் தத்துவம்,

> கடமைகளும் பொறுப்புகளும் சுமைகள் அல்ல; அவை மாந்தனை வளர்க்கும் வாயில்கள் (24).

எனவே நமது நலனுக்காகவும் நாம் கடமைகளைச் செய்ய வேண்டும்.

வள்ளுவரின் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரம் பற்றிப் பேசும் பொழுது 'வாழ்க்கைத் துணை' என்ற சொல்லே, அவர்கட்குச் சம உரிமை வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியிருக்கிறது எனப் பொருள் காண்கிறார்.

> துணையாக அமைவது: எல்லா வகையாலும் தம் அளவுக்கு வளர்ந்ததாக, தம்மினும் கூட வலிமை சார்ந்ததாக அமைந்தால்தான் துணையாக அமைய முடியும். இதனால் பெண்கட்குக் கல்வி முதலிய உரிமைகளும் சம நிலைப் பாங்கும் வேண்டும் என்று கூறியதாயிற்று (32).

என்கிறார். பெண்கள் சமத்துவத்திற்கு அடிகளாரைப் பொருத்தவரை, நீண்ட வாதம் தேவைப்பட வில்லை. ஆண் மகன் தனது நலன் கருதியே. சமநிலையை ஏற்க வேண்டும் என்கிறார் (32).

'கற்பு' என்பது தமிழ்ப் பண்பாட்டைப் பொருத்தவரை மிக முக்கியமான இடம் பெற்றுள்ள சொல். 'கற்புடைப் பெண்டிர் பிறர் மனம் புகார்' என்பதில் இருந்து 'கற்பெனப்படுவது அறம்திறம்பாமை' என்பது வரை கற்புக்கு வகுக்கப்பட்டுள்ள இலக்கண வரைவுகள் பல. ஆனால் அடிகளார்

> காதலர்களிடையே நிலவ வேண்டிய மாறாத அன்பைக் கற்பு என்று சிறப்பித்துக் கூறுதல் மரபு

என்று கூறி, வாழ்வில் அது இன்றியமையாத தேவை என்பதாக்கி மேலும் அது இருவருக்கும் பொது என்பதையும் உறுதிப்படுத்தி விடுகிறார் (36).

தெய்வம் தொழாஅள்; கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற குறள் வாதத்திற்குரிய ஒன்றாக இருந்து வருகிறது. பெண்ணியவாதிகள் அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். பெண்களை அடிமைப்படுத்தும் வாக்கு என்கிறார்கள். இக்குறளுக்கு அடிகளார் பின்வருமாறு பொருள் காண்கிறார்.

> உறக்கத்தில் இல்லாளுக்கு உணர்வு இல்லை. உறக்கம் தெளிந்தவுடன், உணர்வுகள் திரும்பியவுடன் தன் தலைவனை, கணவனை நெஞ்சத்தால் தொழுது, வாழ்த்தி எழுதல் வேண்டும்.

இதனால் மறவாது நினைந்து வாழும் திறன் வளரும். இங்ஙனம் வாழும் பெண் தன் கணவருக்கும் பெய்யென வேண்டும்போது பெய்து உறுதுணையாய் அமையும் மழை போல் துணையாயமைவள். (37)

கணவனை மனத்தால் தொழும் கடமையொடு கணவனை வாழ்த்தும் பெருமையையும் கொடுத் திருக்கிறார். இங்கு பெண்களைத் தாழ்த்துவது என எதுவும் இல்லை. இயற்கைக்கு எதிரான கூறுபாடு எதுவும் இல்லை.

அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

என்ற குறளில் 'மறத்திற்கும் அஃதே துணை' என்ற பகுதி பல வகைகளில் பொருள் கொள்ளப்படுகிறது. பகைமை காரணமாக உள்ளத்தில் மறம் நிகழ்ந்தும், அவன் மேல் அன்பு செய்யவும் அது நீங்கும். எனவே மறத்தை நீக்குதற்குத் துணை அன்பு என்பார் பரிமேலழகர். இதற்கு அடிகளார் கூறும்பொருள் ஆழ்ந்து எண்ணத்தக்கது.

....தீமைகளைக் கண்டும் பொறுத்துக் கொள்ளுதல் அன்பு அல்ல. பொறுத்துக் கொள்ளாது அறிவுறுத்தல், கண்டித்தல், தண்டித்தல் முதலிய அன்பிலாமை போலத் தோற்றமளிக்கும் மறச் செயல்களை மேற்கொள்ளுக. இத்தகு மறச்செயல்கள் நேரிடையான அன்பு இல்லை. ஆனால் விளைவு அன்பேயாம்". (51)

பொதுவாகத் தீமையை ஒழிப்பதும் அன்பின் பட்டதேயாம். தனி மனிதரைக் கண்டித்து அல்லது தண்டித்துச் சமுதாயத்தைக் காப்பதும் அன்பே யாகும். ஜான் டூயி (John Dewey) என்ற அமெரிக்கத் தத்துவ அறிஞர், "நல்ல மனிதர்கள் என்பவர்கள் தீமையை எதிர்க்க வேண்டும்" என்பார். பாரத மாதாவைப் பற்றிப் பாட வந்த பாரதி,

நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள் - தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடையாள்

என்கிறார். வேதம், வாள் இரண்டும் சமமாகவே அவற்றின் பயன் பொருத்து நல்ல கருவிகளாகின்றன. இக்குறளுக்கு அடிகளாரின் மேலே கூறப்பட்டுள்ள விளக்கம் எண்ணி, எண்ணி மகிழத்தக்கது.

சிறுமையுள் நீங்கியஇன் சொல் மறுமையும்
இன்மையும் இன்பந் தரும்

என்ற குறளுக்கு விளக்கம் கூற வந்த அடிகளார்,

நல்லதுக்குத் தானே சொல்கின்றேன் என்று ஏசக் கூடாது. திட்டக் கூடாது. பழி தூற்றக் கூடாது. (65)

என்று கூறுவது நம்மில் பலருக்கும் பயன்படும் அறிவுரை.

நமது சமுதாயத்தில் நாம் பலவகை நோன்புகளைக் கடைப்பிடிக்கிறோம். உண்ணா நோன்பு, பேசா நோன்பு (மௌன விரதம்) முதலியன நாம் காண்பவை. நோன்புகட்கு அடிகளார் ஓர் அடிப்படையான விளக்கம் தருகிறார்.

விரும்பி நுகர்பவைகள் தேவைகளாக மாறிவிடாமல் தடுக்க, இடையிடையே நோன்புகளின் பெயரால் நுகர்வுகட்கு ஓய்வு தருதல் நல்லது. (85)

தீவினையச்சம் என்ற அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள குறள்கட்கு விளக்கம் கூறவந்த அடிகளார்,

"தீயவினைகள் செய்யாமையை முற்றாகத் தவிர்க்கும் பொழுது 'ஏமாளி', 'கோழை' என்ற ஏளனப் பேச்சுகள் கிடைக்கும். கவலற்க; இழிவை விரும்பாமை போலவே புகழையும் விரும்பாதிருத்தல் உயர் பண்பாகும். (116)

என்கிறார். இக்கருத்து ஆய்தற்குரியது. பொதுவாகத் தமிழ்ப் பண்பில் சிறந்து நிற்பது 'இசைபட வாழ்வது'

புகழெனின் உயிரும் கொடுக்குவர்
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்

என்பது பாண்டிய மன்னன் கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதியின் பிரகடனம்.

ஈதல், இசைபட வாழ்தல் அல்லாது உயிருக்குப் பயன் தருவது வேறு இல்லை என்பது வள்ளுவம்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறுவித்தாம் மாய்ந்தனரே

என்பார் பெருந்தலைச் சாத்தனார். இந்தப் பின்னணியில் புகழ் விரும்பாமை ஓர் உயர்பண்பு எனக் கூறுவது எந்த அளவுக்கு ஏற்கத்தக்கது என்ற கேள்வி எழக்கூடும்.

வீடும் வேண்டா விறலினர்

என்பதில் வீடு மிகவும் விரும்பத்தக்கது என்றாலும் அதுவும் வேண்டாத வலிமை பாராட்டத்தக்கது என்பது போல, 'பெரிதும் விரும்பத்தக்க புகழையும் விரும்பாமை' என்று பொருள் கொள்ளலாம். ஆனால் அடிகளார் உரைகேட்கும் சாமானியக் குடிமகனுக்கு இவ்வறிவுரை எந்த அளவு பொருந்தும் என்ற கேள்வியும் எண்ணப்பட வேண்டும்.

அடிகளார் அவர்களே 'புகழ்' என்ற தலைப்பின் கீழ் தொடங்கும் பகுதியில் (134) புகழ்பட வாழ வேண்டிய தேவையை ஒன்றுக்கு மேற்பட்ட இடத்தில் வலியுறுத்தி இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

இன்றைய வாழ்வில் துறவு வேடம் பூண்டு சமுதாயத்தில் நடமாடும் துறவிகளின் நடைமுறை அடிகளாருக்கு ஏற்புடைத்தாக இல்லை. அதைப் பற்றி மனம் நொந்து பின்வருமாறு கூறுகிறார்:

துறவுக்குப் புகழ் உரிய தன்று. துறவு, புகழ் பழிகளைக் கடந்தது. ஆனால் இன்றோ இல்லறத்தாரை விடத் துறவிகளே புகழ் வேட்டையாடுகின்றனர். துறவி களிடத்தில் புகழ் வேட்டை தலையெடுத்ததுடன் விளம்பர மன நிலையும் பொய்யும் நடிப்பும் மிகுந்து வளர்ந்து வருகின்றன. (134)

இந்நிலையைப் புகழ் தேடுவது என்பதை விட, பின்னர் குறிப்பிட்டிருப்பது போல 'விளம்பர வேட்கை' என்று கூறுவது பொருந்தும். மற்றவர்கள் கூறத் தயங்கும், கூற அஞ்சும் சில

கருத்துகளை அடிகளார் அவர் தம் மனச் சான்றிற்குப் பணிந்து துணிவாகவே சமுதாயத்தின் முன் வைத்திருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டும் அரசு பற்றிய அத்தியாயம் மிகச் சிறப்பான ஒன்று. ஆழமான கருத்துகளைக் கொண்டது. திருவள்ளுவர் பேசுவது மன்னர் ஆட்சி பற்றியே என்றாலும் ஒரு குடியாட்சிக்கு வேண்டிய உயர் பண்புகள் அனைத்தும் கொண்ட கூறுபாடுகளுடைய ஆட்சியை வள்ளுவர் படம் பிடிக்கிறார் என்பதைத் தெளிவாக விளக்குகிறார்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு

என்ற குறளுக்கு,

> நீ அரசை நீண்ட நாட்களுக்கு நடத்த வேண்டு மென்றால் தரம் குறைந்த வார்த்தைகளினாலே செவிக்குக் கேட்கும் படியாகச் சொன்னால் கூடக் கவலைப் படாதே (194)

என அடிகளார் உரை கூறியிருக்கிறார். இது இந்தக் குறளுக்கு மற்ற உரையாசிரியர்கள் கூறியிருக்கும் கருத்தில் இருந்து மாறுபடுகிறது. தனது ஆட்சியைப் பற்றி அரசன் தனது அமைச்சர் போன்றார் கூறும் கசப்பான விமர்சனங் களைப் பொறுத்துக் கொண்டு கேட்கும் பண்புடையவன் என்பதே பொதுவாகக் கூறப்படும் பொருள். அடிகளார் கூட இதே பொருளில்தான் இக்குறளை ஒரு முறைக்கு மேலாக மேற்கோள் காட்டுகிறார். ஆனால் இங்கு கூறியுள்ள விளக்கம் மட்டும் சற்று மாறுபடுகிறது. இது ஆய்வுக் குரியது.

உலகின் அன்றாட வாழ்க்கையில் நாம், 'வினை' என்ற சொல்லை 'விதி' என்று தொனிக்கும் வகையில் 'அது அவனவன் வினை' என்று கூறுகிறோம். இங்கு அடிகளார் ஒரு கருத்தைத் தெளிவாக எடுத்து வைக்கிறார்.

> 'மீண்டும், மீண்டும் கூறுகிறேன். ஒன்றைத் தயவு செய்து மறந்து விடக்கூடாது. வினை, விதி என்று சொன்னால் ஏதோ நமது மூளையிலே ஒரு பயங்கரமான பீதி உண்டாக்கி இருக்கிறார்களே, அது போன்ற ஒரு பீதியை நாம் கொள்ளக் கூடாது. 'வினை' என்றாலே 'செயல்' என்றுதான் பொருள். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்று தமிழ் இலக்கியம் பேசும். ஓர் ஆண் மகன் என்று சொன்னால் செயல் செய்வதுதான் அவனுக்கு இயற்கை. செய்வது தான் அவனது உயிரியற்கை. செய்யாமல் இருந்தால்தான் தவறு. எனவே செயல்கள் செய்யாமல் சோம்பி இருப்பது வாழ்க்கையன்று. (207)

வாழ்க்கையின் இன்றையச் சாதனைகள், முன்னேற்றங்கள் அனைத்திற்கும் மனித முயற்சிதான் காரணம். எனவே வள்ளுவர் மனித முயற்சியைப் பலபடப் பாராட்டுகிறார். முயற்சி, ஊழையும் புறங்காணும் என்கிறார். அவனன்றி ஓரணுவும் அசையாது என்று நம்பும் சமயஉலகின் தலைமகன் ஆயினும் அடிகளார் முயற்சியின் மாண்பு பேசுவதில், மகத்துவம் கூறுவதில் வள்ளுவரொடு முழுமையாக ஒன்றிவிடுகிறார்.

> சிறந்த முறையில் எண்ணி ஊக்கத்தோடு செயல் பட்டால் காரியம் கை கூடினாலும், கூடாது போனாலும் அந்த எண்ணத்திற்கும்

ஊக்கத்திற்கும் பயனுண்டு. வாழ்க்கைப் போராட்டங்களில்தான் நற்பண்பு தங்கி இருக்கிறது. வெற்றியிலல்ல என்னும் அனுபவ உரை எண்ணி இன்புறத்தக்கது (242)

என்பது அடிகளார் பிரகடனம், அடிகளார் வள்ளுவரின்

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

என்ற குறளை ஓர் இடத்திற்கும் மேலாகக் கையாளுகிறார். இக்குறளுக்குப் பொருள் கூற வந்த பரிமேலழகர்;

தம் மக்களதறிவுடைமை, பெரிய நிலத்து மன்னா நின்ற உயிர்கட் கெல்லாம் தம்மினுமினிதாம்

என்கிறார். அடிகளார் இவ்விளக்கத்தை ஏற்கவில்லை. 'தம்மை விடத் தமது மக்கள் அறிவுடையராயிருத்தல் உலக மக்கட் கெல்லாம் இனிமை பயப்பது' என்றே பொருள் கொள்கிறார். பலரும் இவ்வாறே பொருள் கொண்டுள்ளனர். ஆனால் அடிகளார் இக்குறளில், உலகில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் மாற்றத்தின், அந்த மாற்றத்தின் அடிப்படையாக உள்ள பரிணாம வளர்ச்சியின் வித்து வள்ளுவர் சிந்தனையில் இடம் பெற்று இருப்பதாகக் காண்கிறார்.

மேலும் அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கக் கூடிய ஒன்று. அஃது நிலைபெற்ற தன்மையுடைய தல்ல. இன்றைய அறிவு, நேற்றைய அறிவை விட வளர்ச்சி யுடையதாக இருக்க வேண்டும். இன்றைய அறிவை விட நாளைய அறிவு வளர்ச்சியுடையதாக இருக்க வேண்டும். இது உலக நியதி. (245)

என்கிறார். மேலும்,

(i) மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் ஏற்றத்திற்கும் அறிவு இன்றியமையாதது.
(ii) அறிவு உலகியலில் யதார்த்த நடப்புக்கு ஒத்திருக்க வேண்டும்.
(iii) அறிவு, வளர்ச்சி அடையக் கூடியது

என்னும் மூன்று கருத்துகளும் சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள். அக்கருத்தினையே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர் குறள்பா வடிவில் எடுத்துக் காட்டியுள்ளதை எண்ணுகிறபொழுது பெருமித உணர்ச்சி மேலிடுகிறது. (245)

என்கிறார். இத்துடன் நில்லாது,

உலகம் என்றால் உயர்ந்தோர் - நிகழ்கால அறிவை விடச் சென்ற கால அறிவு சிறந்தது என்பது போன்ற கருத்துகளே பரவி வருகின்றன. அதனாலேயே தமிழினம் வளர்ந்து, வீழ்ந்து இருக்கிறது. (246)

எனக் கூறி, கண்ணை மூடிக் கொண்டு பழமை பாராட்டுவோரை இடித்துரைக்கிறார் (245, 246). அடிகளார், செயலை மதிப்பவர்; செயலை ஊக்குவிப்பவர். இந்நூல் முழுவதிலும் ஆங்காங்கு செயலின் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து பேசுகிறார். ஓர் இடத்தில் 'முத்தாய்ப்பு வைத்தது போல,

அறிவு, ஆற்றல் இவை பெருகி வளரும் வாயில் செயற் படுதலே யாம் (259)

என்ற அருமையான தத்துவத்தை முன்வைக்கிறார். அடிகளார் சமய உலகம் தந்த சமுதாயச் சீர்திருத்தவாதி. சமுதாயப் புரட்சியாளர். தன்னம்பிக்கையின் பெருமை பேசவந்த அவர்,

> தன்னுடைய அறிவையும், ஆற்றலையும் நம்பாது ஜோசியத்தை நம்புவது, இராசிப் பலனைப் படித்து மயங்குவது, ஆகிய கெட்ட பழக்கங்கள் ஊக்கக் கிளர்ச்சிக்கு எதிரானவை (250)

என்கிறார். ஜோசியம் பார்ப்பது தவறு என்று மட்டும் கூறவில்லை. 'கெட்ட வழக்கம்' என்கிறார். மானிட உள்ளத்தின், உளத்திண்மையின் சிறப்புப் பற்றிப் பேச வந்த அடிகளார்,

> இந்த உலகத்தின் வேறுபட்ட வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் இன்று நம் முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கும் மூலமும் முதலும் உள்ளமேயாகும். ஏன்? கோயிலில் கடவுளும் மனிதன் படைப்பேயாகும் (263)

என்று அறுதியிட்டுக் கூறும் அடிகளார் ஓர் அரிய அறிவுரையும் வழங்குகிறார்.

> உள்ளமோர் விந்தையான பொருள்....... உள்ளத்தை ஒரு பொழுதும் ஓயவிடக்கூடாது. அதற்கு ஒழுங்காக முறை வைத்து வேலை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் (264)

நாம் குடியரசு நாட்டில் வாழ்கிறோம். அது வெற்றியடைய ஆட்சி பற்றிய நமது அணுகு முறை தெளிவுடையதாக இருக்க வேண்டும். 'வாக்காளர்களுக்கு வள்ளுவரின் அறிவுரைகள்' என்ற தலைப்பில் வள்ளுவர் கண்ட அரசு பற்றிய சில சிந்தனைகளை முன் வைக்கிறார். வாக்குச் சீட்டுப் பற்றிய தமது கருத்தைக் கூற வந்த அடிகளார்,

> நமது நாட்டில் கட்சி ஆட்சி முறைதான் இருக்கிறது. ஆதலால் தனி ஒருவர் தேர்தலில் கணிப்புக் குரியர் அல்லர். கட்சியின் அமைப்பு, கட்சியின் கொள்கை, கட்சியின் தலைமை,கட்சியின் சென்ற கால வரலாறு, ஆகியனவே கவனத்திற்குரியன; ஆய்வுக்குரியன (278)

என்கிறார். அவருடைய இன்னொரு அறிவுரையும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

> நாட்டை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் பொழுதும், நல்லாட்சி நடத்தும் பொழுதும் சில தனி நபர்கள் பாதிக்கப்படலாம். அவர்கள் பெரியவர்களாகவும் கூட இருக்கலாம். ஆயினும் தயக்கம் கூடாது. நாட்டின் நலனுடன் சம்பந்தப்பட்ட காரிய சாதனையே குறிக்கோளாக அமைய வேண்டும். (279)

என அறுதியிட்டுக் கூறுகிறார். ஆட்சியாளர்கட்கு இது சில சமயங்களில் ஏற்படும் மயக்கம் தீர்க்கும் மருந்து. இருளகற்றும் கை விளக்கு.

வாழ்க்கைத் துணை நல வாழ்த்து என்ற அத்தியாயத்தில் அடிகளார் ஒரு கருத்தை முன் வைக்கிறார்.

> தமிழர் மரபில் கூட்டுக்குடும்பம் கிடையாது. கூட்டுக் குடும்ப முறை அயல் வழக்கு.

என்கிறார். இது ஆய்வுக்குரியது. அடிகளார் சமயப் பற்றுள்ளவர் என்பது மட்டுமன்றி ஒரு சமய நிறுவனத்தின் தலைவர். அந்தப் பீடத்தில் அமர்ந்து கொண்டும் அவர் சமயத்தால் நேர்ந்த நன்மை தீமைகளைப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்கத் தவறவில்லை. பார்க்கும் துணிவு அவருக்கிருந்தது. ஏன் எனில், அவர் அடிப்படையில் சமுதாயப் பற்றாளர். சமுதாயத்திற்காகத் தான் சமயம் என நம்புபவர். சாதி பற்றிப் பேச வந்த அடிகளார் சாதிகளின் தோற்றத்திற்குச் சமயம் காரணமல்ல என்று கூறுவாரேனும்

> வரலாற்று அடிப்படையில் நோக்கினால் நிலப் பிரபுத்துவத்தில் பிறந்து வளர்ந்தது தான் சாதி. இந்தச் சாதி முறையை நிலப் பிரபுத்துவத்திற்கு அனுசரணையாக அங்கீகரித்த பாவத்தை மதம் செய்தது உண்மை (303)

என ஒப்புகிறார். மதம் செய்த 'பாவம்' என்றே தயக்கமின்றிக் கூறிவிடுகிறார்.

பொதுவாக நமது புலவர்கள் குறளை ஒரு நீதி நூலாகவே பார்த்து வந்தனர். ஆங்காங்கு இலக்கியப் படைப்பாகவும் பார்த்தனர். ஆனால் அடிகளார் குறளின் முழுப் பரிமாணத்தையும் தமிழ்ச் சமுதாயத்தின்முன் பின்வருமாறு பிரகடனம் செய்கிறார்.

> ..... சமயச் சார்பற்றது, வள்ளுவரின் சமயம் தனித் தன்மையுடையது. சமயக் கணக்கர் வழி சாராதது. குறளியம் நாடு, மொழி, இனங்களைக் கடந்தது. குறளியத்தின் நெறி புது நெறி, பொது நெறி; குறளியம் உலகந் தழீஇயது; நம்பிக்கைக்குரியது. எளிதில் பின்பற்றத்தக்கது. இது வரையில் தோன்றியுள்ள அனைத்து நூல்களிலும் திருக்குறள் உயர்ந்தது. வையகத்தை வாழ்வாங்கு வாழ வழி நடத்துவது. குறளியத்தில் தத்துவங்கள் உண்டு. மெய்ப் பொருள் சிந்தனைகள் உண்டு. பொருளியல் கோட்பாடுகள் உண்டு. சமுதாய நெறிகள் உண்டு. துறவும் உண்டு. ஆக குறளியம் ஓர் பொது மறை; தமிழ் மறை; குறளியத்தில் அற நெறி அடையாளம் காட்டப்படுகிறது; பொருள் நெறி போற்றப் படுகிறது. குறள் நெறியில் ஆள் வினையாளர்களும் அருளாளர்களும் சமுதாயத்தை வழிநடத்தும் உறுப்புகளாவர். குறள் நெறி நிலமிசை நீடுவாழ வழிகாட்டுகிறது. (307)

அடிகளாரின் எழுத்துகள், சொற்பொழிவுகள் ஆகியன குறள் பற்றிய மேற்கண்ட அவரது இந்தத் தீர்ப்பை நியாயப் படுத்துவனவாக, மெய்ப்பிப்பனவாக அமைந்துள்ளன. வருங்காலத் தமிழ்ச் சமுதாயம் அடிகளார் அவர்களை 'குறள் நெறி பரப்பிய குன்றக்குடி மகா சன்னிதானம்' என நினைவில் நிறுத்தும்.

அடிகளார் அவர்களின் குறள் பற்றிய கட்டுரைகளை, சொற்பொழிவுகளை, ஒரு நூலாக அன்றி, ஒரு நூல் வரிசையாக வெளியிட மணிவாசகர் பதிப்பகம் முன்வந்திருப்பது பாராட்டு தலுக்குரிய தமிழ்ப்பணி என்பதில் ஐயமில்லை. பயன் நிறைந்த இப்பனுவல்களைத் தமிழகம் மனமுவந்து வரவேற்கும். படித்துப் பயன் பெறும் என்பதிலும் ஐயமில்லை.

தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

முன்னுரை

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

அருள்நெறித் தந்தை, தமிழ்மாமுனிவர் இருபதாம் நூற்றாண்டின் அப்பரடிகள், மனிதநேய மாமுனிவர், காவி உடுத்திய கார்ல் மார்க்ஸ் எனப் பலவாறு அழைக்கப்பெற்ற நம் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுதிய பல்வேறு நூல்கள் இன்று தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது. திருக்குறளைப் பற்றிய பல்வேறு சிந்தனைகள் இன்று செறிவாகச் சீர்செய்யப்பட்டு, சிறப்புடன் நமது கரங்களில் தவழ்கின்றது. பேச்சே வாழ்க்கை, வாழ்க்கையே பேச்சு என்று உலக உபதேசியாக மட்டும் இராமல் பேசியதை வாழ்வில் நடைமுறைப்படுத்திச் சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத செயற்கரிய செயல்களை ஆற்றிய அருந்தவ வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

உலக உயிர்கள் நலம்பெற உபதேசித்த அப்பர் அடிகளும், சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் எந்த அடைப்புக் குறிகளுக்குள்ளும் தம்மைச் சிறைவைத்துக் கொள்ளவில்லை. மடங்கள் என்ற நிறுவனங்களில் தங்களைச் சிறைவைத்துக் கொள்ளாமல் சுதந்திர வானில் சுடர்விட்டுப் பிரகாசித்தார்கள். பட்டு, பீதாம்பரங்களை அணிந்துகொண்டு பல்லக்கில் பவனிவரும் - காலத்திற்கு ஒவ்வாப் பரம்பரை மரபுகளை மறுதலித்துவிட்டு, தம் கடமைக்குரிய மரபுகளை வழுவாது நிறைவேற்றி, தம் பாதங்கள் நோகப் பாலைவனத்தில் பயணம் செய்து பாமர மனிதனின் வாழ்வை வளப்படுத்தச் சிந்தித்துச் செயலாற்றிய சமய சமுதாய உலகில் முதல் திருமடத்தின் தலைவர் நம் அருள்நெறித் தந்தையேயாவார். சுவாமி விவேகானந்தர் பெருமானும், வள்ளலார் பெருந்தகையும் மடாதிபதிகளாய் இருக்கவில்லை! திருமடத்தின் பொற்கூண்டுக்குள் மரபுகள் எனும் கத்திரிகள், சுதந்திரச் சிறகுகளை வெட்டிய பொழுதும் அதையும் தாண்டி, உலக மக்களின் ஆன்ம விடுதலைக்கு வித்திட்டு, வேதம் புதுமை செய்த மடாலயத் தலைவர் தாம் நம் மகாசந்நிதானம்! வளர்ந்து வருகின்ற உலகில் பேச்சும் எழுத்தும் வாழ்க்கை வாணிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது, சமுதாய மாற்றங்களுக்கு விதைக்கின்ற நாற்றங்காலாக அவற்றை மாற்றிக் காட்டினார்கள். உருவமும், கோலமும் அடையாளமும் மட்டும் அல்ல துறவு நெறி! எண்ணும் எண்ணத்தால் நினைக்கும் உள்ளத்தால், வாழும் வாழ்க்கை முறையால் வாழ்வதுதான் உண்மைத் துறவுநெறி என்று துறவிகளிடம் மிக்க

கண்டிப்பாக இருந்த திருவள்ளுவப் பெருந்தகையின் குறள்நெறியை, குவலயம் எங்கும் பட்டிதொட்டி எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டு, குறள்நெறிக்கு இயக்கம் கண்ட முதல் துறவி நம் மகாசந்நிதானமே ஆவார். குறள்நெறி பற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், ஆய்வுச் சிந்தனைகள், வானொலிச் சொற்பொழிவுகள், கருத்தரங்கங்களில் மலர்ந்த மலர்கள்தான் இன்று திருவள்ளுவர் சிந்தனை பற்றிய நூல் தொகுப்பாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

சீனத்தில் கன்பூஷியஸ், கிரேக்கத்தில் சாக்ரட்டீசு, பிரெஞ்சு தேசத்தில் ரூஸ்ஸோ, சோவியத்தில் மார்க்சியம் புரட்சியை - மாற்றத்தை விளைவித்ததைப் போலத் தமிழ் மண்ணில் தமிழ் நிலத்தில திருவள்ளுவப் பெருமானின் சிந்தனைகள் ஏன் புரட்சியை, மாற்றத்தைத் தோற்றுவிக்கவில்லை? என்ற நியாயமான வினாவினை மகாசந்நிதானம் எழுப்புகின்றார்கள். சிந்தனையைக் கிளறும் இந்த ஆழமான வினாவிற்கு அற்புதமான விடையையும் தருகின்றார்கள். "தமிழ் நிலத்தை, தமிழ் மண்ணை ஆண்ட அரசர்கள் அருளரசர்களாக இருந்தார்கள். 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று புறநானூறு பாடும். 'உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்' என்று கம்பன் தசரதனைப் பாடுவான்! முடி ஆட்சிக் காலத்தில் மன்னன் உடம்பாகவும் மக்கள் உடம்பை இயக்குகின்ற உயிராகவும் வாழுகின்ற ஆட்சிமுறை இருந்தது. புறாவிற்காகத் தன் தசையை அறுத்த சிபிச் சக்கரவர்த்தியும், கன்றை இழந்த பசுவிற்காகத் தன் மகனைத் தேர்க் காலில் இட்ட மனுநீதிச் சோழனும், அநீதி இழைக்கப்பட்ட அபலைப் பெண்ணிற்காக உயிர்நீத்த பாண்டியன் நெடுஞ்செழியனும், கொழுகொம்பின்றி வாடிய முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலும், தண்தமிழுக்குத் தலைஈந்த குமணவள்ளலும் போன்ற அருளரசர்கள் ஆண்டமையால் உயிர்க்குலம் துன்பத்தைச் சந்திக்கவில்லை! நலம் செய்யாத அரசுகள் சில வாய்த்தபோதிலும் அவை மனிதகுலத்திற்குத் தீங்கு இழைக்கவில்லை. நலம் செய்யாததோடு தீங்கிழைக்கும் அரசுகளை நோக்கித்தான் புரட்சிகள் தோன்றும். இடையிடையே இருள் கவிந்தாலும் வள்ளுவர் வழித்தோன்றியவர்கள் இலக்கிய மாணவர்களாகவே அமைந்துவிட்டோம்! பரிமேலழகர் காலம் முதல் இன்றைய உரையாசிரியர்கள் வரை பாட்டுக்குப் பொருள்வரையும் உரையாசிரியர்களாக வளர்ந்து விட்டோம். திருக்குறள் நெறிக்கு எழுத்தில் உரை கூறுகின்றோம். வாழும் வாழ்க்கையில் உரைசெய்யத் தவறிவிட்டோம்! திருவள்ளுவரை வழிபாட்டுக்குரிய பொருளாக மாற்றி விட்டோம்!" என்று

அருள்நெறித் தந்தை திருக்குறள் வாழ்வியல் நூலாக வெற்றி பெறாமைக்குக் கூறும் விளக்கம் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்துவற்றுள் எல்லாம் தலை

என்ற திருக்குறள், கொல்லாமை எனும் அதிகாரத்தில் ஏன் வைக்கப்பட்டுள்ளது? என்ற வினாவினை எழுப்புவார்கள்! ஈகையில் வைக்கப்பட்டிருக்கலாம், ஒப்புரவறிதலில் வைக்கப்பட்டிருக்கலாம், விருந்தோம்பலில் கூறி இருக்கலாம். கத்தி எடுத்துக் கொன்றால் மட்டும் கொலை என்பதன்று. பெற்ற செல்வத்தைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்து, பலரையும் பேணி வளர்க்காமல் சோறிட்டு மருந்து முதலியன வழங்கிப் பலரையும் பேணி வளர்த்துப் பாதுகாக்காமல் சாகடித்தலும் கொலைக் குற்றமே என்பதனை உணர்த்தவே இந்தக் குறள் கொல்லாமை அதிகாரத்தில் அமைந்திருக்கின்றது என்ற அரிய விளக்கம் அருமையானது.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

என்னும் குறளுக்கு அறிவியல் பார்வையில் தருகின்ற விளக்கம் அற்புதமானது. ஊர் நலம் போற்றுபவனின் விளைநிலம் உரிமையால் தனி மனிதனுடையதாக இருப்பினும் நிலம் பேணப்படுவதில் பொதுவுடைமையாகப் போற்றிப் பேணப்படும். உரிமையாளர் விவசாயம் செய்ய மறந்திருந்தால்கூட ஊரார் அவருக்காக வேளாண்மை செய்து விளைச்சலை வீடு கொண்டுவந்து சேர்ப்பர் என்ற விளக்கம் பாராட்டுக்குரியது.

அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ(டு) ஊர்ந்தான் இடை

என்பதற்கு, சமய ஞானியாய் இருந்துகொண்டு கூறும் விளக்கம் அடிகள் பெருமான் சமய உலகின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட புரட்சித்துறவி என்பதனைப் பறைசாற்றுகின்றது.

மரபு வழிப்பட்ட சமயவாதிகள் வறுமைக்கும் ஏழ்மைக்கும் காரணமான பழியை, பரம்பொருள் மீதும் விதி - ஊழின் மீதும் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் பொழுது, 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று வாழ்க்கை வழித்தடத்தில் உரை கூறிய வள்ளல் பெருமான்தாம் நம் அடிகள் பெருந்தகை!

அறிவு என்பது செய்திகளின் தொகுப்பு அல்ல! நூல்களின் இருப்பிடம் அல்ல. கற்றதைத் திரும்ப, கூறியது கூறும் கிளிப்பிள்ளை மொழி அல்ல! துன்ப நீக்கத்திற்குரிய மருந்து! நேற்றையத் துன்பத்தை இன்றைய இன்பமாக மாற்ற உதவும் கருவிதாம் அறிவு என்ற விளக்கம் புதுமையானது; உலகம் முழுமைக்கும் பொதுமையானது.

வள்ளுவ மருத்துவர் உயிரைத் தேடுகின்றார். வாழ்பவனை எல்லாம் அவர் உயிர் உள்ளவனாக ஏற்றுக் கொள்ளவில்லை. இடுகாட்டில் எரியும் பிணங்கள்! நடுவீட்டில் நடைபோடும் பிணங்கள் என்று கூறுகின்றார். சுவாசிப்பதாலும் இதயம் துடிப்பதாலும் உடல் இயங்குவதாலும் உயிர் இருப்பதாக ஒத்துக் கொள்வதில்லை. இயந்திரங்களும் தான் இயக்கினால் இயங்குகின்றன. கடிகாரமும் பெண்டுலம் அசைந்தால் ஓடுகின்றது. இயந்திர மனிதனும்தான் இன்று இயங்குகின்றான். இதயம் இல்லா மனிதனும் இயங்குகின்றான். எவன் இதயத்தில் அன்பு துடிக்கின்றதோ அவனே உயிர்த் துடிப்புடைய மனிதன் என்று வகைப்படுத்துவது இதுவரை உலகம் எண்ணிப் பாராத சிந்தனை ஆகும்.

நட்பு, காதல், ஒப்புரவில் இன்றைய இருபதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் காணுகின்ற வாழ்க்கைப் போக்கோடு எண்ணிப் புதிய சிந்தனையைத் தந்திருப்பது எண்ணி எண்ணிப் போற்றத்தக்கது.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்

என்ற குறள் நெறிக்கு, பொது வாழ்வில் - பொது நன்மைக்குப் போராடும் பொழுது மான அவமானம் பார்க்கத் தேவை இல்லை என்ற விளக்கம் சிந்திக்கத்தக்கது. இந்தக் குறளுக்கு வாழும் வாழ்க்கையால் உரை சொன்னவர் பேரறிஞர் அண்ணா என்பதைச் சுட்டிக்காட்டி இருப்பது இளைய தலைமுறைக்கு வழிகாட்டுவதாகும்.

வள்ளுவம் கடவுளை நம்புகின்றது. அது ஆணும் அல்ல; பெண்ணும் அல்ல. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கோபுரங்கள் - கோட்டைகள் இல்லை. வள்ளுவம் காட்டும் கடவுளுக்குக் கணக்கும் இல்லை; வழக்கும் இல்லை; அது பேரறிவு! தூய்மையான அறிவு! குணங்களின் திரு உரு! இன்பத்தின் திரு உரு! அன்பின் திரு உரு! அறத்தின் திரு உரு! என்ற வரிகள் உண்மையான, போலித்தனம் இல்லாத சமய உலகை அடையாளம் காட்டுகின்றது.

திருக்குறள் ஒரு சமயத்திற்காகத் தோன்றிய நூல் அன்று! அது சமயச் சார்பற்ற நூல். ஆயினும் மனித குலத்தைச் சிந்தனையில் - அறிவியலில் - வாழ்க்கையில் வழிநடத்தும் நூல். திருக்குறள் கொள்கை சமயமாக உருப்பெறுகின்றது. அறிவின் வழிப்படும் பொழுது அன்பு கருக்கொண்டு அருள் உருப்பெறுகின்றது என்ற வைர வரிகள் சமயம் உறைந்துள்ள இடத்தை நமக்கு அடையாளம் காட்டுகின்றது.

முறை செய்து காப்பாற்றும் மன்னவனுக்குச் செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பும் அறிவுறுத்தும் நல் ஆலோசகர்களும் தேவை என்கிறார். உயிர்க்குலம் துன்புறும்

போரை, விரும்பாத போக்கும் எதிர்பாராத தாக்குதலும் எதிரிகளால் ஏற்படலாம். எனவே நல்ல படை பலமும் தேவை என்கிறார்.

ஆண்டவன் வரம் கொடுத்தாலும் பணப் பெட்டியின் மீது பித்துக்கொண்ட பூசாரிப் புரோகிதர்கள் எனும் நந்திகள் சமய வாழ்க்கையைச் சடங்குத் தன்மையுடையதாக மாற்ற வல்லார்க்குச் சாமரம் வீசுகின்றனர்.

'நியாயம் வழங்க வேண்டிய அரசியல், வாய்ப்புடையார் வாயிலில் காத்துக்கிடக்கும் சேவகத் தொழிலாக மாறிவிட்டது. எங்கு நாட்டின் நீதியியலை முறைப்படுத்தி நிர்வகிக்கின்ற அரசு தோன்றவில்லையோ அங்கு அரசை ஆட்டிப்படைக்கின்ற தனியார் நிதிக் குவியல் தோன்றும்' என்ற சிந்தனைக்குரிய வாக்கு நினைவிற்கொள்ளத்தக்கது. திருவள்ளுவ நெறிவழி மனிதகுலத்தை மேம்படுத்துவதற்கு அக வாழ்விலும் புற வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கக் கூறுகளை ஆழமாகச் சிந்தித்து. அற்புதமாக நமது மகாசந்நிதானம் தமிழ்ச் சமுதாயத்திடம் ஒப்படைத் துள்ளார்கள். இந்தச் சிந்தனைப் பெட்டகத்தைச் செயலாக்க வேண்டியது நமது கடப்பாடு.

பல குழுக்களாக விரவிக்கிடக்கின்ற தமிழ் இனத்தை ஒருமைப்படுத்த திருவள்ளுவப் பெருமான் முயன்றதைப் போல, பல பொழிவுகளாக விரவிக்கிடந்த கருத்துப் பெட்டகங்களைத் தொகுப்பு நூலாக மாற்றும் முயற்சியில் மணிவாசகர் பதிப்பகம் வெற்றி கண்டுள்ளது. பதிப்புக் கலையில் முத்திரை பதித்த வித்தகர் மெய்யப்பன், இதிலும் முத்திரை பதித்துள்ளார்.

இந்நூல் எழுத்துக் கருக்கொண்ட நாள் முதல் இன்றுவரை அல்லும் பகலும் அயராது உழைத்த பெருமை நம் ஆதீனக் கவிஞர் மரு. பரமகுருவைச் சாரும். பல வகைகளில் இந்நூல் தொகுக்கும் களத்தில் கடமை ஆற்றிய இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர் தெ. முருகசாமி, பேராசிரியர் நா. சுப்பிரமணியம், ஆதீனப் புலவர் க. கதிரேசன், எழுத்துச்செம்மல் பெரியபெருமாள் போன்றவர்களின் பணிகள் அளப்பரியன; எண்ணி எண்ணிப் போற்றும் கடப்பாட்டுக்குரியன.

இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை நல்கிய முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வரிய நூலின் கருத்துக்களை, சிந்தனைப் பெட்டகங்களைச் செயலாக்க மகாசந்நிதானம் திருநாமத்தைச் சிந்தித்துப் பயணம் செய்வோம்!

இந்நூலை வாசிப்பதோடு நிறுத்திவிடாது அருள்நெறித் தந்தையின் சிந்தனைகளைச் செயலாக்குவதே, இந்நூலுக்கு அணிவிக்கின்ற பொன் அணியாகும். அருள் நெறித் தந்தையின் கனவு, நனவாகக் கற்றவழியில் கடமை ஆற்றுவோம்.

உள்ளுறை

1. திருக்குறள் வாழ்க்கைச் செயல்முறைக் குறிப்புகள் 25
2. திருவள்ளுவர் காட்டும் அரசு 160
3. திருவள்ளுவர் உணர்த்தும் இறையுணர்வு 211
4. பொங்கல் பரிசு 239
5. வானொலியில் 255
6. வாக்காளர்களுக்கு வள்ளுவரின் அறிவுரைகள் 273
7. வாழ்கைத் துணைநல வாழ்த்து 291
8. திருக்குறள் காட்டும் நீதி 306
9. குறளியம் முன்னுரை 313
10. சமநிலைச் சமுதாய அமைப்புக்குத் திருக்குறள் முரணாகாது 318
11. பெரியாருக்குப் பிடித்த குறள் 322
12. அருளும் துறவும் 324
13. திருவள்ளுவர் காட்டும் அரசியல் 327
14. சிந்தனைச் செல்வம் 336
15. ஏன் திருக்குறள் பேரவை? 344
16. குறள் நூறு 349

அச்சும் அமைப்பும்

தமிழவேள் ச. மெய்யப்பன்

மணிவாசகர் பதிப்பகம்

1

திருக்குறள் வாழ்க்கைச் செயல்முறைக் குறிப்புகள்

1. கடவுள் வாழ்த்து

திருக்குறள், கடவுளை நம்பித் தொழுதலை ஏற்றுக் கொள்கிறது. திருக்குறள் நெறியில் கடவுள் வழிபாட்டுக்கு உருவம் இன்றியமையாததன்று; பெயர் இன்றியமையாத தன்று. உருவமாகிய பற்றுக் கோடின்றிச் சிந்திக்க இயலாதார் உயிரினங்களைத் தாங்கி யருளும் திருவடிகளை மட்டும் வைத்துக் கொள்ளலாம். (திருப்பெருந்துறையில் திருவடி வழிபாடு இருப்பது அறிக.) வழிபடுவோர்க்குச் சுற்றுப்புறச் சூழ்நிலைத் தூய்மை இன்றியமையாதது. காற்று மண்டலத் தூய்மைக்கும், இனிய சூழ் நிலையைப் படைக்கவும் நறுமணப் புகையைப் பயன்படுத்தலாம். வேறு எப்பொருளும் – படையல் பொருள்கள் உட்படத் தேவையில்லை. காலையில் கதிரவன் எழும் நேரமும் மாலையில், கதிரவன் படும் நேரமும் ஏற்றன. இயலாதார் காலையில் எழுந்தவுடனும், இரவில் படுக்கப் போகும் முன்னும் செய்யலாம். ஒருவகையில் பின் குறிப்பிட்டுள்ள நேரம் அதிக நன்மை தரும்.

திருக்குறள் வழிபாட்டின் பயன்கள் நான்கு.

1. நெஞ்சத்தில் இறைவனை இருக்கச் செய்து நினைத்தல்; சிந்தித்தல்.

2. இறைவனைத் தலை தாழ்த்தி வணங்குதல்.

3. இறைவன் புகழ் கூறுதல்.

4. விருப்பு, வெறுப்பின்றிப் பொறிகளில் தூய்மையுடன் இறை நெறியில் வாழ்தல்.

பொறிகளில் தூய்மை என்பது நல்லனவும் உரிமையுடையனவும், இன்றியமையாதனவுமே. விரும்புதல், துய்த்தல்.

பொறிகளின் இயல்பு மற்றவர்க்கு இனிமையாயமைத்தல்.

இறைவனைச் சிந்தித்தல் (தியானித்தல்) தனக்குவமையில்லாதவனாகவும், எண்குணத்தானாக இருப்பவனும் என் மனத்தின்கண் எழுந்தருளி அருளுபவனும், எல்லாப் புகழையும் தனக்கேயுடையவனுமாகிய இறைவனுக்குப் போற்றி! போற்றி!

2. வான் சிறப்பு

இறைவனின் அருளிப் பாடாக நினைந்து போற்றத் தக்க இயற்கை நிகழ்வு வான்மழை, ஆதலால் வான்மழை போற்றுதல் வேண்டும். இங்குப் போற்றுதல் என்பது, தூய்மையாகப் பாதுகாத்துப் பேணிப் பயன்படுத்துதல்.

வாழ்க்கைக்குத் தண்ணீர் இன்றியமையாதது. ஆதலால், மழைத்தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்த வேண்டும். தண்ணீர் ஆளுமை (நிர்வாகம்) இன்றியமையாதது. தண்ணீரை வீணடிக்கக் கூடாது. தண்ணீரைக் கலப்படம் ஏற்படாமலும், தூய்மை கெடாமலும் பாதுகாக்கவேண்டும்.

வான்மழை சுரத்தலுக்கு உதவியாகக் காடுகளைப் பேணி வளர்க்க வேண்டும். ஒருவர் தம் வாழ்நாளில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மரம் வைத்தால்கூட நமது நாடு சோலையாக மாறிவிடும். ஆதலால், திருக்குறள் நெறி நிற்போர் தாம் பிறந்த நாள் நினைவாக ஆண்டுதோறும் மரம் நடுதல் நல்லது.

1. மழைத் தண்ணீரைத் தேக்கிப் பாதுகாத்தல்.
2. தண்ணீரை வீணடிக்காமல் உரியவாறு பயன் படுத்துதல்.
3. தண்ணீரின் தூய்மை கெடாமல் பாதுகாத்தல்.
4. மழைவளம் காணக் காடுவளம் காணல்.

ஆகியன வான்மழையைச் சிறப்பிக்கும் நெறி முறைகள்.

3. நீத்தார் வழிபாடு

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பர். வாழ்க்கையில் குணமென்னும் குன்றேறி நின்று விளங்குபவர் கள் உயர்ந்தோர். இவர்களே நீத்தார். நீத்தார் பெருமைகளைப் பாராட்டி அவர்தம் நெறியில் நிற்றல்.

1. இதுதான் உலகியல் என்று கருதிப் போற்றும் பொருள் முதலியவற்றைப் பற்றுக்கோடாகக் கொண்டொழுகும் ஒழுக்கத்தை விட்டவர்களின் பெருமை உயர்ந்தது.
2. புலன்கள், பொறிகளின்மீது தமது அறிவாட்சியைச் செலுத்தி முறையாக வைத்திருப்பவர்கள்.
3. உலகியல் வாழ்க்கையின் பகுதிகளாகிய கடவுள், உயிர், நிலம், நீர், தீ, வளி, வெளி இவற்றை நுகரும் பொறிகள், பொறிகளுக்குத் துணை நிற்கும் அறிகருவிகள், மனம், அறிவு (புத்தி), நடைமுறை (சித்தம்), அகங்காரம், செய்கருவிகள் ஆகியவற்றின் இயல்பறிந்து மெய்ப் பொருள்களை (தத்துவங்களை)ச் சிந்தனையால் நாள்

தோறும் தூய்மை செய்து வாழ்க்கைக்கு உரியவாறு பயன்படுத்திக் கொள்ளலில் வெற்றி பெற்றவர்கள்.

4. குற்றங்குறைகளைக் கடந்து குணக் குன்றாக விளங்கு பவர்கள்.

5. செயற்கரிய செயல்களைச் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள்.

6. எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை கொண் டொழுகும் அருளாளர்கள்.

இவர்களைக் காணின் போற்றுதல்; அவர் தம்மைப் பேணுதல்; அவர் அருளும் மறை மொழிகளைக் கேட்டு அவ்வழி நடத்தல்.

குறிப்பு: இதனால் தோற்றத்தால் மட்டும் துறவிகளாக (சந்நியாசிகளாக) இருப்பவர் போற்றத்தக்கவர்கள் அல்லர் என்பது வெளிப்படை.

4. அறம்

திருக்குறளில், அறம் என்பது ஒன்றேயாம். அதாவது "மனநீக்ஷதுக்கண் மாசிலனாக வாழ்தலே அறம்." இந்த அறத்தை வாழ்க்கையிற் பெறத் துணையாக அமையும் ஒழுக்கங்களையும், பெற்ற தூய்மையைப் பேணிப் பாதுகாத்தலுக்குப் பயன்படும் ஒழுக்கங்களையும் அறம் என்று ஏற்பது உலகியல் வழக்கு.

1. மனத் தூய்மையாகிய அறம் கெடாத வழியில் செல்வம் சேர்க்கலாம்; வீட்டின்பத்தையும் பெறலாம். அற வாழ்க்கையின் மூலம் பெறும் செல்வமே உயிர்க்குத் துணை.

2. சிந்தனை, செயல் ஆகியவற்றால் வாழ்க்கையின் துறைதோறும் இயன்றவாறெல்லாம் அறநெறிபேணல்.

3. மனத்தின்கண் மாசின்றி வாழ்தலே அறம். மனத்தின் கண் மாசுகொண்டு செய்யும் செயல்கள் ஆரவாரத் தன்மையுடையன.

4. மனத் தூய்மைக்குக் கேடு செய்யும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கையும் தாம் விளக்கி வாழ்தலே அறம். இத்தீமைகள் மற்றவர்களிடம் தோன்றாதவாறு, தாம் முறையாக வாழ்தலும் அறம்.

(அ) **அழுக்காறு:** அழுக்கு வழி, அதாவது மற்றவர்கள் செல்வம், புகழ் முதலியவற்றைப் பெற்றிருப்பதையும் மகிழ்ந்து வாழ்வதையும் பொறுத்துக் கொள்ள முடியாது தவித்தல். எந்த வகையிலும் அழுக்காறு, ஒன்றைப் பெறத் தூண்டாது; ஊக்குவிக்காது; வழி நடத்தாது. அழுக்காறு, மற்றவர்கள் பெற்றிருப்பதற்குக் குற்றம் கண்டு பிடிக்கவும், அதனை அவர்கள் இழந்து அல்லற் படுமாறு செய்யவுமே விரும்பும். ஆதலால், அழுக்காறு கொள்ளுதல் கூடாது.

அழுக்காறு என்ற கொடிய தீமையை விலக்க ஒரே வழி மற்றவர்கள் வாழ உரிமையுடையவர்கள், அவர்கள் வாழ வேண்டும் என்று நினைத்தால், மற்றவர்கள் வாழத் தம் வாழ்க்கையின் தேவைகளைக் கூட விட்டுக்கொடுத்தல்; குறிப்பாகச் சொன்னால் வாழ்தலைவிட வாழ்வித்தலில் ஆர்வம் காட்டுதல்.

(ஆ) **அவா:** வாழ்க்கைக்கு இன்றியமையாதன அல்லாத வற்றையும் விரும்புதல். எதையும் மிகையாக விரும்புதல் கூடாது.

(இ) **வெகுளி:** விரும்பும் ஒன்றைப் பெறாதபோது வரும் சினம் (கோபம்). இது கூடவே கூடாது.

(ஈ) **இன்னாச்சொல்:** சினத்தால் (கோபத்தால்) கடுஞ் சொற்களைக் கூறுதல். இது கூடாது.

3. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய வற்றை வாயிலாகக் கொண்டே மனத்தூய்மை கெடுகிறது; அறம் கெடுகிறது. இவை வளர்ச்சியடை யாதவர்களை இழுத்து எறியும் ஆற்றலுடையன. இவற்றின் இழுப்பில் செல்லாது அறநெறி பேணுதல் கடமை. தாம் எளிமையாக வாழ்தல், மற்றவர்களுக்கு வெகுளி உண்டாகும்படி நடவாதிருத்தல், மேற் கொண்டு அறவாழ்க்கையை உறுதி செய்க.

6. மனத் தூய்மையாகிய அறநெறி பேணுதல் ஒவ்வொரு நொடியிலும் செய்யத்தக்கது. இதற்குக் காலக்கெடு வைக்க வேண்டாம்.

7. மனத் தூய்மையைத் தரத்தக்க – பேணத்தக்க அறச் செயல்களை இயன்றவாறெல்லாம் வாயில்களை வலிய அமைத்துக்கொண்டு செய்க. அங்ஙனம் செய்யும் அறச்செயல்களை வாழ்க்கையில் துறை தோறும் மேற்கொள்க. அறம் என்றும்-எப்போதும் பயன்படும்.

8. மனத்தூய்மை கெடாதிருக்கத் துன்புறுவார் துன்பம் அறத்தின் வழியது என்று நினைத்துத் துன்பம் துடைத்தலைத் தவிர்க்க வேண்டும்.

9. வாழ்க்கையின் ஒவ்வொரு முயற்சியையும் மேற் கொள்ளும்போது அம்முயற்சிகளை, மனத்தூய்மை கெடாதவாறும், மற்றவர் வாழ்க்கைக்குத் துன்பம் செய்யாதவாறும், நன்மையாக அமையுமாறும் பார்த்துக் கொண்டால் அறவாழ்க்கை எளிது.

10. உயிர் நலத்திற்கு அறமே துணை செய்யும். அறமே இப்பிறப்பு வாழ்க்கைக்குரிய செல்வத்தையும், வீடு பேற்றினையும் தரும்.

(அறவழி வந்த பொருள் வீட்டின்பத்துக்கும் துணை செய்யும்).

5. இல்வாழ்க்கை

மனத்தூய்மையே அறம். மனத்தூய்மை, அன்பு செய்தல்; இன்புறுத்தல், வாழ்க்கையின் வாயிலாக அடையக் கூடியது. மேலும், மனத்தூய்மை உழைத்தல் வழியும் அடையலாம். இல்வாழ்க்கைக்குப் பொருள் இன்றியையாதது. இல்லற வாழ்க்கைக்குப் பொருள் செய்ய வேண்டியிருப்ப தால் உழைத்தலைக் கட்டாயமாக்குதலால் அறத்தினைச் செய்தலுக்கு இல்வாழ்க்கை சிறப்புடைய முதன்மையான களம்.

'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.' 41

வாழ்க்கையின் நடுப்பகுதி இல்வாழ்க்கையே. இல் வாழ்க்கையில் பொருளியல் வாழ்க்கை தற்சார்புடையது. அதாவது இல்வாழ்க்கை வாழும் ஒவ்வொருவரும் பொருள் ஈட்டவேண்டும். (1) குழுகாயத்தில் வாழ்க்கையின் முதற்பகுதி யாகிய கல்விகற்கும் பருவம் (2) இல்வாழ்க்கையில் முறையே வாழ்ந்து சிறந்தது பயிற்றலாகிய *முதுமைக்காலை* அந்தண வாழ்க்கையை மேற்கொண்டார். *(3) பொருளியற்ற இயலாத கடமைகளையுடையவர்கள், ஆகிய இவர்களைப் பேணுத லும், இவர்தம் நெறிக்குத் துணை நிற்றலும் வேண்டும்.*

1. கல்வி கற்கும் பருவத்தினர் ஊண், உடை இன்னபிற வாழ்க்கைத் தேவைகளுக்குக் கவலையுறாமல், கல்வி கற்கும்படி செய்தல்;

2. கல்வி கற்பதற்குரிய ஏந்துகள் (வசதிகள்) அமைத்துத் தருதல்;

3. சிறந்தது பயிற்றும் தவத்தினருக்கு ஊண், உடைகள் வழங்குதல்;

4. அந்தணர் வாழ்க்கையை மேற்கொண்டவர்களுக்கு ஊண், உடைகள் வழங்கி, அவர் தம் நெறியில் நின்றொழுகத் துணை நிற்றல்.

இதனால் வளரும் தலைமுறை கல்வி, அறிவு நலம் பெறும். மூத்தோர் உடல், உணர்வு வருந்தாமல் அமைதியாக வாழ்வதின் வாயிலாக நற்சிந்தனையாளர்களாகித் தவத்தால் வையகத்திற்கு இன்ப வாழ்க்கையையும் அவர்தம் மெய்யறிவால் (ஞானத்தால்) உயர்ந்த நூல்களையும் அருளிச் செய்வர். இத்தகு அறிஞர்கள்-மெய்யறிவாளர்களால் செய்யப் பெற்றவை அறநூல்கள். குமுகாயப் பொது அறம் தழைக்க நோற்கும் அந்தணர்கள் வாயிலாகக் குமுகாயம் இணக்கமும் மேம்பாடும் அடையும்.

'துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.' 42

இல்வாழ்க்கை, கடமைகளுடையன. கடமைகளும், பொறுப்புகளும் இல்வாழ்க்கையின் தலைவனை, அறிவறிந்த ஆள்வினையாளனாக, பொருள்கள் பல படைத்துள்ள வனாக, ஒப்புரவு நெறிமேற் கொண்டொழுகுதல் வழி அவனை அற வாழ்க்கை மேற்கொண்டவனாக மாற்றி வளர்க்கிறது. கடமைகளும் பொறுப்புகளும் சுமைகள் அல்ல. மாந்தனை வளர்க்கும் வாயில்கள்!

1. ஏதாவது ஒரு காரணத்தால், உரியவர்களால் ஏற்றுக் கொள்ளப் பெறாது ஒதுக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல்.

வாழ்க்கை, அகநிலை உணர்வுகளால் ஆயது. இஃது எல்லாருக்கும் ஒரே தன்மையதாக (மாதிரியாக) இயல்பாக அமைந்துவிடாது. இவ்வழி, குமுகாயத்தில் ஏற்படும் பிழைகள் ஏராளம், தந்தை-மகன் பிரிவு, கணவன்-மனைவி பிரிவு கூட வந்துவிடுகின்றன. இங்ஙனம் உரிமைச் சுற்றமுடையோரால் துறக்கப் பெற்வர்கள் வாழத் துணை செய்தல்.

(அ) 1. இளைஞராயின் கல்வி கற்கத் துணை செய்தல்; அவர்கள் தாமே தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளத் துணை செய்தல்.

2. தொழில் செய்யும் திறமுடையாருக்குத் தொழில் அமைத்துக் கொடுத்தல்.

3. தொழில் செய்யும் அகவையும், ஆற்றலும் இல்லாதாருக்கு ஊணும் உடையும் மருந்தும் முதலியன வழங்கிப் பாதுகாத்தல்.

(ஆ) உலகியலில் துய்க்கும் பொருள்கள் பலப்பல. இவற்றுள் தாம் ஒன்றைத் துய்த்து மகிழ்ந்து வாழும்பொழுது அவற்றைத் துய்க்கும் வாய்ப்பில்லாதவர்களுக்குத் துய்க்கும் வாய்ப்புக்களைப் படைத்துத் தருதல்.

இப்பணி உதவி, ஈதல், ஒப்புரவு முதலிய நெறிகளால் மட்டுமின்றி "எல்லாருக்கும் எல்லாம்" என்ற ஒப்பற்ற குமுகாயம் அமைந்தாலே "துவ்வாதவர்கள்" இல்லாமற் போவர் என்பதும் கொள்ளத்தக்கது.

அதாவது, எந்த ஒன்றையும் தாம் மட்டுமே துய்க்காது மற்றவர்களுடன் கூடிக் கலந்து துய்த்தல். இதனால், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலிய குற்றங்கள் தோன்றா.

(இ) துய்த்தற்கு இயலாத வறுமை வாழ்க்கையில் இருப்பவர்களுக்குத் துணைசெய்ய, "எல்லாருக்கும் எல்லாம்" என்ற குமுகாய அமைப்பை அடையக் கூட்டுறவின் வழி தொழிற்கழகங்களை நிறுவிப் பணிசெய்தல்.

(ஈ) யாதொரு பற்றுக்கோடும் இன்றி இறந்தார்க்கு இறுதிக் கடன்களைச் செய்தல்.

இறுதிக் கடன்களைச் செய்தல் சார்ந்தார், உரியார் கடமை. அங்ஙனம் யாருமில்லையாயின் குமுகாயத்தின் பொறுப்பேயாம். இதில் அரசுக்கு யாதொரு கடமையும்

இல்லை. இடுகாடு வரையில் அரசு வருவது, குமுகாயத்தின் பொறுப்புணர்வைக் குறைக்கும்.

*'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.'* 43

*1) **முன்னோர்:** இன்று அறிவராக வாழ்வோர், தென்திசை நோக்கியும் தங்கியும் அறிவுரைகள் வழங்கி வாழ்விக்கும் நல்லறிஞர்கள் ஆகியோரைத் தென்புலத்தார் என்றல் தவறன்று.*

தமது குடியில், தமது குடியின் மேம்பாட்டுக்காக வாழ்ந்து மறைந்து போனவர்களை நினைவு கூர்தல்; அவர்கள் நினைவு பசுமையாக விளங்க, அவர்கள் விரும்பி மேற்கொண்டு செய்த அறங்களை நினைவு கூர்ந்து செய்தல்; அவ்வறங்களை வாழ்த்துதல்; இதுவே நீத்தார் வழிபாடு. மற்றச் சடங்குகள் பயனற்றவை; பொருளற்றவை.

2) கடவுளை வணங்குதல்; கடவுட் கோயிலைப் பேணுதல். இதனால் அறிவு, ஆள்வினை வளர்த்து ஞானம் வரும். கடவுட் கோயில் வளர்வதன் மூலம் குமுகாய இணக்கங்கள் ஏற்படும்; குமுகாயம் மேம்பாடுறும்.

3) நாடு விட்டு நாடு காணும் இயல்பினராக - அந்தணராக வரும் புதியவர்கள், விருந்தினர்கள். இவர்களை வரவேற்று ஊண், உடை முதலியன வழங்கிப் பேணுதல். இதனால் அயல்வழி உறவுகள் வளரும். குமுகாயம் விரிவடையும்.

*4) **ஒக்கல்:** சுற்றம், சுற்றம் என்பது இல்வாழ்க்கைத் தலைமகனது உடன் சுற்றமாகும். அதாவது தன் உடன் பிறந்தார் முதற்சுற்றம். அடுத்துத் தந்தை, தாய்வழி, உடன் பிறப்புச் சுற்றம், மனைவி வழி உடன் பிறப்புச் சுற்றம்.*

சுற்றத்தினரைப் பேணுதல் குடும்பம் வளமையாக அமையத் துணை செய்யும். சுற்றத்தினரைப் பேணுதல்

என்பது அவர் தம் வாழ்க்கைத் தேவைகளைப் பெறுதற்குரிய வாயில்களை அமைத்துத் தருதல்.

சுற்றம் பழகும் பழக்கங்களால், வழக்கங்களால் அகவுணர்வுகள் செழுமையாக வளர்ந்து பயன் தருவது. அதனால், அடிக்கடி கண்டும் கலந்தும் மகிழ்ந்து உரையாடியும், கலந்து உண்டும், மகிழ்ந்து விளையாடியும், உதவிகள் செய்தும், உதவிகள் பெற்றும் உறவு நிலைகளைப் பேணுதல் இன்றியமையாதது. உறவுகள் செழிப்பாக அமையாத சுற்றம் சுமையாகிவிடும்.

5) **தான்:** தலைவன். அவன் இல்வாழ்க்கையின் குடும்பத்தின் ஆக்க நிலையில் அமைந்த உறுப்பு. ஆதலால், அவனும் தன்னைக் காலத்தில் உண்ணுதல், உடல்நலத்திற் குரிய உழைப்புகளை மேற்கொள்ளல், நல்ல நூல்களைக் கற்று அறிஞனாக விளங்குதல், அன்பு நலத்தை வளர்த்துக் கொள்ளற்குரிய வாயில்களைப் பெறுதல் - அமைத்தல் ஆகியவை வழி பேணிக்கொள்ளுதல் இன்றியமையாதது.

'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.' 44

மற்றவர்களால் பழிக்கப்படும் தீய செயல்களைச் செய்ய அஞ்சி வாழ்தல் வேண்டும். இவை இரண்டு வகையின:

1. பழித்தற்குரிய தீய செயல்களைச் செய்யாது தவிர்த்தல்.
2. இல்வாழ்க்கைக்குரிய செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது விடுதல் வாயிலாகப் பழிவருதல்.

ஆதலால் மனை வாழ்க்கை சிறப்புறுதலுக்குரியன செய்க. செய்யத் தகாதன செய்யற்க.

பழியஞ்சுதல்:

1. தம்மைச் சார்ந்தோரும் சுற்றத்தாரும் வருந்தத் தாம் மகிழ்ந்து வாழாமை.

2. தாம் மகிழ்ந்து இனிது வாழ்வதற்காக மற்றவர்களை வருத்தாமை.

3. தாம் வளர்த்து மேம்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டிய மக்களைப் பேணும் பணியில் சோர்விலா திருத்தல்.

4. தன்னயப்புகளால் குமுகாயப் பொது அறங்களைச் செய்தலில் அயர்தல் அல்லது செய்யாது விடாமை.

பாத்தூண்:

உணவு பகுத்துண்டல் பண்பாடுகளின் களன். பகுத்து உண்ணலால் அன்புக் கிளர்ச்சிகளும் மனமகிழ்வும் தோன்றும். அவ்வழி வாழ்க்கை செழிக்கும்.

1. குடும்பத்திற்கு உரியார் அனைவரும் விருந்தினர் உண்டாயின் அவரும், சுற்றத்தார் இருப்பாராயின் அவரும், உடனிருந்து பகுத்து, மற்றவர் விருப்பம் அறிந்து வழங்கி உண்பித்து, உண்டு வாழும் வாழ்க்கையை உடையார் தலை முறை தலை முறையாக வளர்வர்.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

அன்பும் அறனும் உடையதாக அமைந்த இல்வாழ்க்கை பண்பாகவும் அப்பண்பின் பயனாகவும் விளங்கும்.

அன்பு:

இல்வாழ்க்கை அன்பு விளைவிக்கும் பண்ணை. அன்பு செய்தலே முன்னுரிமை. அவ்வழிதான் அன்பு பெறுதல் இயலும். தன்னை நடுவமாகக் கொண்ட வாழ்க்கையில் அன்பு செழிக்காது. மற்றவர்களை நடுவமாகக் கொண்ட வாழ்க்கையில் அன்பு செழிக்கும்.

இல்வாழ்க்கையிலும் பழுத்த துறவு வேண்டும். தாம் துய்த்தற்காக அல்லாது, துய்த்தற்குத் தருதலும் அவ்வழியில் மற்றவர் துய்ப்பு இடையீடின்றி நிகழத் தான் துய்த்தலும் தவிர்க்க முடியாத வழித் துய்த்தலுமே அன்பின் செயல்கள். இத்தகைய அன்பின் விளை நிலமாக இல்வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டும். இத்தகு அன்பில் மனத் தூய்மையும் அவ்வழி நிகழும் செயல்களும் அறமாகும்.

1. வாழ்க்கைத் துணை நலமாக அமைந்த மனைவிக்காக, அன்பு காட்டும் அவளுக்காக வாழ்க! மக்களிடமும் சுற்றத்திடமும் அன்பு காட்டுக.

2. அறம்: வாழ்வாங்கு வாழ்தல்; வாழ்வித்து வாழ்தல்.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்.' 46

அறநெறியில் இல்வாழ்க்கையில் பெறாத எதனைப் புறநெறிகளில் போய்ப் பெறமுடியும்?

முற்கூறிய அறநெறியில் இல்வாழ்க்கையைச் சிறப்புற நடத்தினாலே இம்மை, மறுமை நலன்களை அடையலாம். இல்வாழ்க்கையில் பெற முடியாத எந்த ஒன்றையும் துறவு நெறியில் பெற்றுவிட முடியாது.

நின்றொழுகும் நெறிகள் விருப்பத்தின்பாற் பட்டனவேயாம். இரு நெறிகளிலுமே வாழ்க்கை நலன்களையும் திருவருளின்பத்தையும் பெறலாம்.

'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.' 47

இல்வாழ்க்கைக்குரிய இயல்புகளுடன் கூடி வாழ்பவன், வாழ்க்கையை வெற்றிகரமாக - இன்பமாக அமைத்துக் கொள்ள முயற்சி செய்வார் எல்லாருள்ளும் தலைவன் ஆவான்.

1. இல்வாழ்க்கையின் இயல்பு, காதல் மனையாளுடன் கூடிக் கலந்து மகிழ்ந்து வாழ்தல்.
2. நன் மக்களைப் பெறுதல்.
3. பொருள் ஈட்டுதல்; ஈத்து மகிழ்தல்; துய்த்தல்.
4. சுற்றம், விருந்து பேணுதல்.
5. தென்புலத்தார், தெய்வம் போற்றுதல்.
6. புகழ் பெறுதலுக்குரிய அறவினைகளைச் செய்தல்.
7. இம்மை, மறுமை இன்பங்களைப் பெறச் செய்யும் முயற்சிகளில் தலையாயது இல்வாழ்க்கை. துறவாவது போன்ற அமைப்பில் துறத்தலும், இன்புறுதலும் அமைந்துள்ள இல்வாழ்க்கை முயற்சி சிறப்புடையது.

'ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.' 48

தவம் செய்வோருக்கு உரிய உதவிகள் செய்து அவர் தம்மைத் தவநெறியில் நிற்கச்செய்தும், தாமும் தமது நெறியில் நின்றொழுகும் இல்வாழ்க்கை, தவம் செய்வாரின் தவத்தினும் சிறப்புடையது.

குறிப்பு: இல்லறத்தார் தவத்திற்குத் துணை செய்தலாகிய அறத்துடன் தமது இல்லற அறத்தினையும் மேற்கொள்வதால் சிறப்புடையதாயிற்று.

1. தவம் செய்வோர் தமக்குரியனவற்றைத் தேடாமல் அவர்களுக்கு வழங்குவதன் வாயிலாகத் தவத்திற்கு உறுதுணையாயிருத்தல். நுகர்வன தேடுவதன் வாயிலாகப் பொருட் பற்றுகள் வளரும். பாலுக்குப் பதில் பசுவின் மீது நாட்டமும் - பசுவுக்கும் புல் வளர்க்க நிலத்தின் மீது நாட்டமும் செல்லும். தவம் செய்வார்க்கு நுகர்வனவும் துய்ப்பனவும் தர வேண்டுமே ஒழிய மூலப் பொருள்களோ பணங்களோ

தருதல் கூடாது. அங்ஙனம் முறைபிறழ்ந்து கொடுத்ததன் விளைவை இன்று நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

2. தவம் செய்வோர் தவம் செய்தற்குரிய சூழல்கள் அமைத்துத் தருதல்.

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.' 49

இல்வாழ்க்கை அறம் என்று சிறப்பித்துக் கூறப் பெற்றதேயாம். அத்தகு இல்லற வாழ்க்கையும் மற்றவர்களால் பழிக்கப் படாமல் இருக்குமாயின் நன்று.

1. இல்வாழ்க்கை அறத்தின்பாற் பட்டதே. ஆனாலும் பழிப்புக்குரியதாக இல்லாமலிருத்தல் நன்று.
2. இல்வாழ்க்கையில் ஏற்படும் ஊடல், புலவி ஆகியன நீட்டிக்க அனுமதிப்பதன் வாயிலாக ஒழுக்கச் சிதைவுகள் தோன்ற அனுமதித்தல் கூடாது.
3. காதலர்களின் குறை - நிறைகள் தம்தம் நெஞ்சிற் கிடந்து திருத்தங்கள் காண முயலவேண்டும். அவை புறத்தே மற்றவர்களிடத்திலும் கடவுள் முன்னிலையிலும் கூறத் தக்கனவல்ல.
4. தம் வாழ்க்கை வளமாக அமைய மற்றவர் வாழ்க்கையைக் கெடுப்பதன் வாயிலாக வரும் பழியைத் தவிர்த்தல்.
5. காதல் மிகுதியால் தகாதன செய்யாதிருத்தல் (பெண் வழிச் செல்லுங் குற்றம்).
6. நன் மகனைப் பெறுதல் இருவரின் நோன்புவழி நடைபெறக் கூடியது. ஆதலால் நன் மக்களைப் பெறுதலுக்கிசைந்தவாறு இல்லறத்தினை அன்புத் தவமாக நிகழ்த்துதல்; மக்களை முறையாக வளர்த்தல்.

இவை வாயிலாகப் பழியைத் தவிர்க்கலாம்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.' 50

இம்மண்ணில் வாழும் முறைப்படி வாழ்பவர்கள் இம்மண்ணிலேயே தெய்வம் போல் மதிக்கப்படுவார்கள்.

1. வாழ்வாங்கு வாழ்தல் - முற்கூறிய நெறிமுறைகளின் படி (இல்வாழ்க்கை, குறள் 1 முதல் 9 முடியவுள்ள விளக்கம் காண்க.)

2. தெய்வமாம் தகுதிக்கு விண்ணகம் வேண்டாம்.

   மண்ணகமே போதும் - வாழ்வாங்கு வாழ்ந்தால்.

   தெய்வம்: கண்டோர் வணங்க - மகிழ - வாழ்வளிப்பது.

   அது போலவே சிறந்து வாழ்பவர் வாழ்க்கையும் அமைதலின் தெய்வம் என்றார்.

6. வாழ்க்கைத் துணை நலம்

முன்னுரை

திருக்குறள், தலை மகனின் வாழ்க்கைக்குத் துணையாக அமையும் பெண்களை "வாழ்க்கைத் துணை" என்று குறிப்பிடுகிறது. துணையாக அமைவது எல்லா வகையாலும் தம் அளவுக்கு வளர்ந்ததாக, தம்மிலும்கூட வலிமை சார்ந்ததாக அமைந்தால்தான் துணையாக அமைய முடியும். இதனால் பெண்ணிற்குக் கல்வி முதலிய உரிமைகளும், சமநிலைப் பாங்கும் வேண்டும் என்று கூறியதாயிற்று. ஆதலால் திருக்குறளில் வரும் தலைவனின் துணையாய் அமையும் பெண் வாழ்க்கைத் துணையாகின்றாள்! 'இல்லை' அந்தத் துணையால் அடையக் கூடிய 'நல'மாகத் திகழ்கின்றாள்.

'மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.' 51

மனையறத்திற்குத் தக்க மாட்சிமைக்குரிய பண்புகளை உடையவளாக விளங்கி, தலைமகனின் வருவாய்க்குத் தக்கவாறு குடும்பத்தை அமைத்துத் துணையாய் அமைபவள் வாழ்க்கைத் துணை.

1. **மனையறத்துக் குரிய பண்புகளுள் முதன்மையானது இன்புறு காதல் வாழ்க்கை நிகழ்த்துதல்.**

2. *மனையறத்துக்குரிய தன்னுடைய தலைவனை முறையாக வளர்த்தல்.*

3. *இருவர் கூடி முழுமையான வாழ்க்கை வாழ்தல் எளிமையான ஒன்றன்று. அத்தகு முழுமையான வாழ்க்கை வாழ்தலே முழுமையான வாழ்க்கை – வெறுப்பு, துன்பம், பழி வராத வாழ்க்கை.*

4. **வளத்தக்காள்:** *தலைமகன் பொருள் செய்யும் முயற்சி களில் ஈடுபட்டுப் பொருளீட்டுவான். அப்பொருள் வந்து சேரவேண்டிய கருவூலம் வாழ்க்கைத் துணையே. இல்வாழ்க்கையில் பொருட் செல்வப் பொறுப்புடைய வள் வாழ்க்கைத் துணைவியேயாம். அவள் பொருட் செல்வத்தை முறையாகப் பங்கீடு செய்து தலைமகளின் – குடும்பத்தின் பொறுப்புகளை நிறைவேற்றி, எதிர் காலச் சேமிப்பும் வைக்கவேண்டும்.*

'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.' 52

வாழ்க்கைத் துணையாய் அமைந்தவளுக்கு மனையறத் திற்குரிய சிறப்புடைய பண்புகள் இல்லையாயின் ஒருவன் வாழ்க்கை, செல்வம் முதலிய வேறு வகைகளில் சிறப்புடைய தாய் அமைந்திருப்பினும் அச்சிறப்புகளால் பயன் இல்லை.

1. செல்வம் இருந்தாலும் முறையான செயற்பாடு இன்மையால் செல்வம் அழிந்துவிடும்.

2. தலைமகன் புகழ்படு செயல்கள் பல உடையனாயினும் இவளின் வழிபடு செயல்களால் அவன் புகழும் கெடும்.

3. தலைமகள், வாழ்க்கைத்துணையாய் அமைந்தும், அவள் முறையாகத் துணையாயமைந்து செயற்படாத தால் உணவுக்கும் உணர்வுக்கும் வேற்றிடங்களை நாடி ஒழுக்கம் குன்ற நேரிடும். ஆதலால் வாழ்க்கைத் துணை நலம் தேடி அமைக்கும் முயற்சி சிறப்பாக அமைதல் வேண்டும்.

'இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.' 53

இல்லத்துத் தலைவி மாண்புடையவளாக விளங்கினால் அந்த இல்லத்தில் இல்லாதது எது? இல்லத்துக் குரியவள் மாண்புடையவளாக இல்லாது போயின் உள்ளது எது?

"இல்லை" என்பது இல்லாமையால் மட்டும் பிறப்ப தன்று; இல்லாமை இல்லாமல் செய்து ஒழுகுதல் என்ற ஒழுக்கமின்மையால் பிறக்கிறது. தேவைகளை முன் கூட்டியே அறிந்து உரிய முயற்சிகளை மேற்கொண்டு, தேவை வரும்போது பயன்படுத்துதல் என்பது நல்லாட்சி முறை. சிறந்த இல்லத்தாட்சி இப்படி இருக்குமாயின் அந்த வீட்டில் இல்லாதது எது?

சிறந்த இல்லத்தாட்சி இல்லையாயின் உள்ளதையும் கூட அன்றைக்குப் பயன்பாடு இல்லையென்று கருதி, கவனிக் காது அழியவிட்டுப் பின் அந்தத் தேவை வரும்பொழுது இல்லையென்று கூறுதல். அல்லது தேவை வந்த பிறகு [illegible]டுதல் சிறந்த இல்லாட்சி முறையன்று.

1. இல்லத்தாட்சிப் பொறுப்புள்ளவள் அனைத்தையும் வரும் முன்பே உரிய காலத்திலேயே திட்டமிட்டுத் தேடிப் பாதுகாத்துத் தேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

2. உணவுப் பொருள்களை உரிய பருவக் காலங்களில் சேகரித்தால் விலை குறைவு, அவ்வப்பொழுது தேடும் உழைப்பும் மிஞ்சும்.

3. ஒரு வீடு பலர் வாழ்வது; ஆதலால், யாருக்காவது எப்போதாவது உடல்நலமில்லாது போகலாம். அதற் குரிய முதல் உதவி மருந்துப் பொருள்கள் இல்லத்தில் இருக்கவேண்டும்.

4. தம் மக்கட் செல்வங்களின் கல்வி, திருமணம் முதலிய நிகழ்வுகளுக்குரிய பொருள்களை உரிய காலத்திலேயே திட்டமிட்டுச் சேகரித்து வைத்து அவை வரும் பொழுது கடன் படாமலும், பெருமூச்சைச் செலவழிக்காமலும் செய்தல் வேண்டும்.

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.' 54

ஒருவன் அடையக் கூடிய பேறுகளில் இல்லாளின் மேம்பட்ட பொருள் யாது? அவள் உறுதியான கற்பினைப் பெறின்.

பெண் பெருமையுடையவள். வாழ்க்கைத் துணை யாகிய இல்லாளே பெறக் கூடிய பெரும்பேறு அவளிடம் கற்பென்ற உறுதி இருக்குமாயின்!

ஒருவனின் உடல் தேவைகளையும் உயிர்த் தேவை களையும் உணர்வுத் தேவைகளையும் அறிந்து, கடப் பாட்டுணர்வுடன் காலத்தால் வழங்கி வாழ்விப்பவள் இல்லாள். ஆதலால் சிறப்புடைய பேறு.

காதலர்களிடையே நிலவ வேண்டிய மாறாத அன்பைக் கற்பு என்று சிறப்பித்துக் கூறுதல் மரபு.

கற்பு, திண்மையுடையதாதல் எங்ஙனம்?

1. காதல் வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கருதுதல்.
2. காதல் வாழ்க்கையில் நிகழவேண்டிய அன்பை நாள் தோறும் முறையாக வளர்த்துச் சோர்விலாது காப்பாற்றிக் கொள்ளல்.
3. அன்பு நிகழ்தலுக்கும் உறுதிப்பாடு அடைதலுக்கும் உரிய செயல்களை இல்லத்துப் பணியாட்கள் வாயிலாக அன்றித் தாமே செய்தல்.
4. இடையூறுகளும் சோர்வுகளும், உற்றுழி நிலையில் மாறாது நிற்றல்.

கற்பென்னும் திண்மை:

வாழ்க்கை நம்பிக்கையால் ஆவது; உறுதியான அன்பால் வளர்வது; வாழ்வது, யாதானும் ஒரு வகையில் உரிய தலைமகள் குறைப்பட்டுழி, இல்லாள் அக்குறைகளின் காரணமாகக் கணவனை இகழ்தல், காதல் செய்யாதிருத்தல், விலகிப் போதல், உடை அணிகள் இன்ப ஆசைகளால் பிற ஆடவர்களை நாடல் முதலியன பெண்ணின்பால் நிகழ்ந்தால் அன்பு குறையும்; ஒழுக்கம் குன்றும்; கற்புக் கெடும். இவ்வழி அவளும் பெருமை இழப்பாள்; கணவனுக்கும் தீங்கு செய்வாள்.

கற்பு உடையதாக அமைவதுடன் அது உறுதி யுடையதாக வேண்டும். ஏன்? யாதானுமொரு காரியத்தைச் செய்ய ஆற்றல் மிக்க கருவியாகப் பயன்படுதல் வேண்டும். கற்பென்னும் திண்மை பெற்ற பெண்ணுக்குத் தெய்வங்களும் ஏவல் செய்யும்.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.' 55

தெய்வங்களைத் தொழமாட்டாள்; கணவனைத் தொழுது எழுவாள், அத்தகையவள், பெய்யெனப் பெய்யும் மழை.

இல்லாள், தெய்வங்களைத் தொழும் ஆவலைத் தணித்துக் கொள்ளுதல் வேண்டும். கடவுளைத் தொழுதல் தவறில்லை. அக்கடவுளையும் கூடக் கணவனோடிணைந்து தொழுதலே சிறப்பு. கடவுள் வழிபாட்டில் குறைகள் கூறுதல் இல்லை. பேரறிவு, பேராற்றல் பெறுதல் கடவுள் வழிபாட்டின் நோக்கம்.

உறக்கத்தில் இல்லாளுக்கு உணர்வு இல்லை. உறக்கம் தெளிந்தவுடன், உணர்வுகள் திரும்பியவுடன் தன் தலைவனை, கணவனை நெஞ்சத்தால் தொழுது வாழ்த்தி எழுதல் வேண்டும். இதனால் மறவாது நினைந்து வாழும் திறன் வளரும். இங்ஙனம் வாழும் பெண் தன் கணவருக்கும் பெய்யென வேண்டும்போது பெய்து உறுதுணையாய் அமையும் மழை போல் துணையா யமைவாள்.

பெய்யென வேண்டும் பொழுது பெய்யும் மழையே பருவ மழை, பருவ மழையினாலேயே பயிர்கள் வளரும்.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.' 56

இல்லாள் தனது கற்பொழுக்கத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்; தன்னுடைய கணவனையும் பேணிக் காத்தல் வேண்டும். தம் குடும்பத்திற்குரிய பெருமைமிக்க புகழையும் காப்பாற்ற வேண்டும். இந்தப் பணிகளைச் செய்தலுக்கேற்ற வாறு சோர்விலாது இருத்தல் வேண்டும்.

தற்காத்தல்:

1. ஒரு பெண் தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் ஒழுகித் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதாவது தன் கணவன் கண்டு மகிழ்தலுக்கு மட்டுமே மாலை நேரங்களில் ஆடைகளால், அணிகலன்களால் ஒப்பனை செய்து கொள்ளுதல் வேண்டும், மற்ற நேரங்களில் கவர்ச்சியாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

   மற்ற வீடுகளுக்குச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் பொழுதும் கவர்ச்சியான ஒப்பனைகள் இல்லாது எளிமையாகச் செல்லவேண்டும்.

2. இயன்றவரை கணவனுடனேயே நிகழ்ச்சிகளுக்கும் திருக்கோயிலுக்கும் செல்லவேண்டும்.

3. திருமணமாகாத - திருமணமாகியும் சீராக வாழாத ஆடவர்களிடம் பழகுதலைத் தவிர்த்தல் வேண்டும். இன்றியமையாமை ஏற்படின் தேவைக்குப் பேசி, விடுதல் வேண்டும்.

4. மற்றக் குடும்பத் தலைவர்களிடம் அவர்கள்தம் வாழ்க்கைத் துணைவிகளுடன் உள்ளபொழுதே அளவோடு பேசி அதுவும் அவள் வாயிலாக அவருடன் பேசும் முறையை மேற்கொள்க.

5. மற்ற ஆடவர்களின் நிறைகளை எண்ணுதல், பேசுதல் தவிர்க்கப்பெறல் வேண்டும். தம் கணவனுக்கு ஒப்பார் யாருமில்லை என்று கருத்துக் கொள்ளுதல் வேண்டும்.

6. தன் கணவன் யாதானும் ஒரு வகையில் நிறையுடையன் அல்லனாயினும் அதைக் குறையாக எண்ணுதல் கூடாது. நிறைவைத் தரத்தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் தன் கற்புக்குப் பற்றுக் கோடாக உள்ள அன்பு வளரும்.

தற்கொண்டாற் பேணல்

1. *தன் கணவனின் அனைத்துத் திறன்களையும் வளர்த்துப் பேணவேண்டியவள் பெண்ணே.*

2. *கணவனின் காதல் இன்பப் பெட்டகமாக இருந்து அவன் நிறைவுபெறத் தக்க வகையில் கூடலும் ஊடலும் செய்து இன்புறுத்துவதன் வழியாகக் கணவனைப் பிறனில் விழையாமலும் பரத்தையின் வழிச் செல்லாமலும் பாதுகாப்பது பெண்ணின் கடமையேயாம். கணவனின் கற்புக்கு இல்லாளே பொறுப்பு.*

3. *கணவனின் உடல் நலமே மனையறத்திற்கு முதல். அதனை உரியவாறு பேணல்.*

4. *கணவன் அறிவிலும் ஆற்றலிலும் தொழில் திறனிலும் வளர்ந்து மனையற வாழ்க்கையைச் செப்பமாக அடையத்தக்க வகையில் இல்லாள், கணவனுக்குப் பற்றாக்குறைகளையும் – அரிப்புத் தொல்லைகளையும் கவலைகளையும் தராது வாழ்தல்.*

தகைசான்ற சொற்காத்தல்

1. *தன் குடும்பத்தின் பெருமைக்குரிய சொற்களைப் பாதுகாத்தல். அதாவது, குடும்பத்தைச் சீராக நடத்திப் புகழ்பெறுதல்.*

2. *குடும்பக் குறைகளை வெளியிற் சொல்லாமல் குடும்பத்தின் உயர்வினை என்றும் பாதுகாத்தல்.*

சோர்வின்மை

1. *குடும்பக் கடமைகளை நிறைவேற்றுதல்; சுறுசுறுப்பாய் இருத்தல்.*

2. குடும்ப வாழ்க்கையில் ஒரோ வழி இன்பங்கள் குறையினும் துன்பங்கள் வரினும் அவை காரணமாகச் சோர்ந்து விடாமல் எழுச்சியுடன் கடமைகளைச் செய்து குடும்ப வாழ்க்கையைச் சீரமைத்தல்.

'சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.' 57

மகளிரைச் சிறை வைத்துக் காக்கும் காப்பு என்ன செய்ய இயலும்? மகளிர் தம் கற்பினால் காத்துக்கொள்ளும் காப்பே தலையாயது.

பெண்களை அவர்கள் கற்புக் கெடாதவாறு பாதுகாக்க வீட்டிற்குள் அடைத்து வைத்துக் காத்தல் பயனைத் தராது. பெண்கள் தம்மை அவர் தம் கற்பொழுக்கத்தால் காத்துக் கொள்வதே தலையாயது.

வீட்டிற்குள் சிறை வைத்திருக்கும்போது அவள் உள்ளத்தால் நினைந்தொழுகினும் கற்பு நலம் குன்றிடும். அவ்வழி உரியவளிடத்தில் ஒழுகும் கற்பொழுக்கத்தில் சிதைவு தோன்றும். உடலினால் கெட்டால் மட்டும் கற்பு கெடுதல் இல்லை. உள்ளத்தால் நினைத்தாலும் கெடுகிறது. அதோடு உரியவனிடத்தில் ஒழுகும் கற்பொழுக்கத்தின் தரம் குறைந்தாலும் கற்பு கெட்டது போலவேயாம்.

கணவன் தன் மனைவியைச் சிறைப்படுத்தி வைப்பதனால் புறநிலைகளைக் காண - மகிழ அவளுக்கு ஆவல் தோன்றும். நேரிடையாக ஆவல்கள் நிறைவு செய்யப் பெறாது போனால் புறவழிகளைக் காணவும் அவ்வழி கற்பொழுக்கம் கெடவும் வாயில் அமையும். அதோடு அவர் தம் மனம், நிறைவும் மகிழ்வும் பெறாதபோது அன்பொழுக்கத்தில் குறைப்படுதலும் கற்பொழுக்கத்தின் குறையேயாம். ஆதலால் வீட்டிற்கு வெளியே இயற்கைக் காட்சிகளையும் அறவோர் காட்சிகளையும் கண்டு மகிழத் தக்கவாறு மனைவியை அழைத்துச் செல்க.

'பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.' 58

சிறந்த இல்லாளை ஒருவன் பெறுவானாயின் அவன் புத்தேளிர் உலகத்தைப் பெறுவான்.

ஒருவன் வீட்டின்பத்தை அடைய சிறந்த இல்லாள் துணை செய்ய முடியும் என்பதாம்.

'புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை; இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.' 59

புகழுக்குரியவாறு வாழும் இல்லாளைப் பெறாதார் தம்மை இகழ்வார் முன் பெருமையுடன் நடந்துகொள்ள முடியாது.

தனது கற்பின் திறத்தாலும் சீராகக் குடும்பத்தை நடத்துதலால் செல்வ வளம் காத்தலாலும், உயர் அன்பின் காதலிற் களித்து இன்புறுதலாலும் கணவனைத் தன்பால் ஈர்த்து அவனையும் கற்பொழுக்கத்தில் நிலை நிறுத்தி இருப்பதனாலும், மனையறத் தவத்தில் நன்மக்களைப் பெற்று முறையாக வளர்ப்பதாலும் கணவனுடைய – மனையறத் தினுடைய யாதொரு கடமையும் தவறாது செய்தாலும் குமுகாயத்தின் முன் தன் கணவன் புகழும் – பெருமையும் உடையவனாக மற்றவர் மதிக்கச் செய்தல்.

இங்ஙனம் சீராக வாழாத இல்லாளைப் பெற்றவனுக்குப் புகழ் இல்லையென்பதாம்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.' 60

ஒருவனுக்கு நன்மையா யமைவது இல்லாள்; சிறந்த இல்லாள். அதற்கு மேலும் அணி செய்வது நன் மக்களைப் பெற்றெடுத்தலேயாம்.

1. இல்லாளைப் பெருமைக் குரியவளாக அமைத்துக் கொண்டும் வளர்த்தும், பேணுவதே கணவனின் கடமை.

2. **நன் மக்கள்:** பால் வேறுபாடுகளின் சேர்க்கைவழி மக்கட்பேறு தோன்றுதல் இயற்கை. மனைமாட்சி சிறப்புறுவது நன் மக்கட் பேற்றால்! நன்மக்களைப் பெறுதல் எளிதன்று, இதற்குத் தலைவனும் தலைவியும் ஒத்த அன்பினராகி உயர்தவமுடையவராகி அன்பிற் கலத்தல் வேண்டும்.

3. கூடுதலில் உடல்நிலை மறந்து உயிர்களின் உணர்வு கலத்தல் வேண்டும்.

4. உடற்பசி இழிநிலைக் காமம். உயிர்ப்பசி காதல்.

5. கூடிக் கலந்து மகிழும் நாளில் நீராடி நற்சிந்தனை களைச் சிந்தித்து எண்ணிக் கூடுதல் வேண்டும்.

6. கூடும் நேரத்தில் காமச்சூடு இருத்தல் கூடாது.

7. மக்கட்பேறு

காதல் மனையற வாழ்க்கை மக்கட் பேற்றை நோக்கமாக உடையது. எந்தவோர் உயிரினத்திற்கும் தம்மினம் இடையீடின்றித் தழைத்து வளரவேண்டும் என்ற ஆவல் இயற்கையாக உண்டு.

மனையறத்தின் பயன் மக்கட் பேறேயாம். மக்களைப் பெறுதல் மூலம் குடும்பம் தொடர்ந்து வளர்ந்து வாழ்கிறது. குமுகாயம் தொடர்ந்து பெருகி வளர்கிறது. ஆதலால் மக்கட் பேறு சிறப்புடையது.

> 'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற.' 61

யாமறிந்தவரையில் மக்கட் பேற்றினை ஒத்த சிறப்பான பேறு எதையும் அறிந்ததும் இல்லை; மதித்ததும் இல்லை.

உலகியலில் மக்கட்பேறே சிறப்புடையது; மதிப்புடையது. 'அறிவறிந்த மக்கட் பேற்றிற்குக் கரணியமாக அமைந்த வாழ்க்கையில் ஈடுபட்ட காதலர்களின் காமக்களியாட்டத் தில் அறிவு தொழிற்படாது; காதற் களிப்பில் அறிவு தொழிற்படும். ஆதலால் காதலர்கள் கூடும் பொழுது இன்ன செயலை முடிக்க இன்ன தகுதியுடைய மக்கள் தேவை என்று எண்ணித் திட்டமிடல் வேண்டும் என்பது கருத்து.

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.' 62

எழு பிறப்புகளிலும் தீமை வந்தடையாது பழிகள் பெறாத மக்களைப் பெறின்.

எழுபிறப்பு: – *இனிவரும் பிறப்புகள், எப்பிறப்பு என்பது உறுதிசெய்ய முடியாது. மானிடப்பிறப்பு படிமுறை (பரிணாம) வளர்ச்சியில், முடிவானது. இதில் தவறு செய்யின் படிமுறை வளர்ச்சியின் தொடக்க நிலைக்குச் செல்ல வேண்டியிருந்தாலும் இருக்கலாம். எழுந்த பிறப்பு என்று பொருள் கொண்டு இப்பிறப்பில் என்று பொருள் கொண்டாலும் கருத்தில் முரண்பாடு இல்லை.*

பழிபிறங்கா மக்கள்

1. *கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குதல்.*
2. *நல்லெண்ணமும் நம்பிக்கையும் பெற்றுக் குமுகாயத் தில் விளங்கித் தோன்றுதல்.*
3. *தொழில் முயற்சிகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டுதல்.*
4. *தம் குடும்பத்தின் வழிவழிச் சொத்துகளையும், தந்தை ஈட்டிய சொத்துகளையும் நம்பி வாழாது. தம் முயற்சியையே நம்பி வாழ்தல்.*

5. தம் குடும்பத்தின் வழிவழிச் சொத்துக்களையும் தந்தை ஈட்டிய சொத்துக்களையும் பாதுகாத்து வளர்த்தல்.

'தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.' 63

அறிந்தோர் தாம் பெற்ற மக்களைத் தம் பொருள் என்று கொண்டு போற்றுவர். தம் மக்கள் ஈட்டிய பொருளும் அவர் தம் செயல்வழி பெற்றோரை நோக்கிவரும்.

பொருள்: வாழ்க்கைக்குத் தப்பாது பயன்படக் கூடியவைகளே "பொருள்" என்று சிறப்பாகக் கொள்ளுதல்.

தம் காதல் வாழ்க்கையின் பயனாகத் தோன்றி, தம் வாழ்க்கையின் உறுப்பாக அமைந்து, தமது பணிகளைத் தொடர்ந்து செய்தலோடன்றி, முதுமைக் காலத்தில் துணையாய் அமையும் மக்களைப் "பொருள்" என்று கருதிப் போற்றுதல்.

அவர் பொருள்

1. தம் மக்கள் ஈட்டும் பொருள் பெற்றோரின் துய்ப்புக் குரியன.
2. மக்கள் செய்யும் எச்செயல்களையும் உலகம் பெற்றோருடன் இணைத்தே கண்டு சிறப்பிக்கும்.
3. ஆதலால், மக்கள் சிறப்புற வாழ்ந்தால் அந்தப் புகழும் பெற்றோரையே சாரும்.

'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.' 64

தம் மக்கள் சிறு கைகளால் குழப்பிய கூழ், அமிழ்தினும் இனியதாம்.

1. அமிழ்து சுவைமிக்க உணவு (புராணங்களின் வழி அமிழ்தம் வானோர் உணவு என்பர்).

தூய்மைக் குறைவாகவும், சுவை குன்றிய சூழ்நிலையிலும் விளங்குவதாயினும் தம்மக்கள் சிறுகையிட்டுக் குழப்பிய உணவு, அமிழ்தமேயாம்.

2. குழந்தைகளை உண்பித்தலும், குழந்தைகளோடு உடனிருந்து உண்டுமகிழ்தலும், குழந்தைகள் தர உண்ணுதலும் தவிர்க்கக் கூடாதன.

> 'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.' 65

குழந்தைகளின் உடலைத் தீண்டி விளையாடி மகிழ்தல் உடலுக்கு இன்பம். அவர்தம் சொல் கேட்டல் செவிக்கு இன்பம்.

1. மக்களை எடுத்தும் அவர்களோடு விளையாடியும் மகிழ்தல் மூலம் பெற்றோர் பண்பாட்டில் வளர்கிறார்கள்; குழந்தைகளும் சிறப்பாக வளர்வர்.

2. மக்களின் சொற்களைக் கேட்டு மகிழ்தல் மூலம் குழந்தைகளிடத்தில் தன்னம்பிக்கையையும் சொல்லும் ஆற்றலையும் வளர்க்கலாம். கேட்கும் வாய்ப்பு ஏற்படும் இடத்தில் சொல்லவும் வாய்ப்பிருக்கும், அல்லவா?

> 'குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
> மழலைச்சொல் கேளா தவர்.' 66

தம் மக்களின் மழலைச் சொற் கேளாதவர் குழலிசையும் யாழிசையும் இனிதென்பர்.

யாதொரு முரண்பாடும் இலாத மழலைச் சொல் கேட்பதில் இருபாலும் பயன் இருப்பதால் இசையினும் சிறந்தது.

> 'தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்.' 67

ஒரு தந்தை, தம் மக்களுக்குச் செய்யக்கூடிய உதவி, கற்ற அறிஞர்களவையில் அவர்களை முதன்மைபெறத் தகுதியுடையராக்குதலே.

1. மக்களைச் சிறந்த கல்விகற்கத் தூண்டித் துணைநின்று வழிநடத்தி அறிஞராக்குதல்.
2. தம் மக்களைக் கல்வியுடையராக்குதலே பெற்றோரின் தலையாய கடமை.

'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.' 68

தம்மைவிட, தம் மக்கள் அறிவுடையராதல் இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாம் இனிது.

1. பெற்றோரின் அறிவைவிட, மக்களறிவு சிறந்திருத்தல் வேண்டும். அங்ஙனம் சிறந்திருத்தலே வளர்ச்சிக்கு அடையாளம். அங்ஙனம் வளராதிருப்பின் தேக்க நிலையாகிவிடும். ஆதலால் தம் மக்கள் "தம் சொல்வழி நடப்பாரோ?" என்ற ஐயத்தில் தம் மக்களின் அறிவு மேலும் வளர உதவி செய்யாமலிருப்பது தவறு. மக்கள் அறிவின் வளர்ச்சி, பெற்றோருக்கே புகழ் தரும்.
2. தம் மக்கள் அறிவுடையராக இருத்தல் மாநிலத்துக் கெல்லாம் சிறப்புடையது என்று எண்ணி அறிவு வளர்ச்சிக்கு விரைந்து உதவி செய்க.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.' 69

தாய் தன்மகனைச் சான்றோன் என்று கூறக் கேட்டபொழுது, பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள்.

1. மகன், புறத்திணைகளில் நாட்டுப்பணிகளில் ஈடுபடுத்த லுக்குரியவன்; அங்ஙனம் ஈடுபட்டுச் செய்யும்பொழுது

அவனுடைய பணிகளால் பயன் பெற்றோர் "சான்றோன்" எனப் பாராட்டி வாழ்த்திப் புகழ்ந்து கூறும் பொழுது மகிழ்ச்சி கொள்க.

அங்ஙனமில்லாது மகன் என்ற அளவில் மகிழ்ச்சி அடைந்தால் சிறப்பில்லை; புகழும் தராது. பிறர் சொல்லக் கேட்பதே புகழ். அதனை விரும்புக.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.' 70

மகன் தந்தைக்குச் செய்யக்கூடிய உதவி "இவன் தந்தை என்ன நல்வினை செய்தானோ இந்த நல்வினையாளனைப் பெறுதற்கு" என்று பாராட்டத் தக்கவாறு வாழ்தலேயாம், என்னோற்றான் கொல் எனும் சொல்.

1. பெற்றோர் தம் முதிய காலத்தில் மக்களின் பொருளாதாரத்தை நம்பி வாழ்தல் நன்றன்று; சிறப்பும் தராது. பெற்றோரை முதுமைக்காலத்தில் காப்பாற்றுவது என்பது மகனின் அறவழிப்பட்ட கடமையே. ஆனால் உலகியலில் அது சிறப்பதில்லை. கூடுமானவரை தவிர்த்தல் நல்லது.

2. தம் மகன் நல்ல செயல்களைச் செய்து அவ்வழிவரும் புகழில் மகிழவேண்டுமேயன்றி, தம் மக்களிடம் உள்ள பொருள்களில் மகிழ்தல் நன்றன்று. ஆனாலும் மகிழக் கூடாது என்பதன்று.

3. ஒரு குடும்பத்தின் வளர்ச்சியைத் தந்தைக்குத் தந்த பொருளிலிருந்து அளந்து மதிப்பிட்டுப் பாராட்டுதல் வளர்ச்சியின் அடையாளமன்று. மக்களின் சிறப்பை அளவு கருவியாகக் கொண்டே தந்தையின் சிறப்பை அளந்தறிவர். ஆதலால் நன்மக்களைப் பெறுதலிலும் பெற்ற மக்களை முறையாக வளர்ப்பதிலும் பெரிதும் அக்கறை காட்டுதல்.

8. அன்புடைமை

இல்லறத்தின் கடமைகளை முறையே செய்யவும், உணர்வுகள் குடும்பம் என்ற குறுகிய நிலையில் தங்கி விடாமல் பரந்த குமுகாய அளவிற்கு விரிவடையவும் தேவை அன்பு. அன்பு என்பது ஒருவரைக் கண்டுழியும், காணா வழியும் அவர்மாட்டு நமது பரிவு நிறைந்த உணர்வுகளைச் செலுத்தி நலமறிய நாடல்; நலம் பேண உதவுதல் முதலியன நிகழ்வதற்குக் காரணமாய் அகத்தே நிகழும் ஓர் உணர்வு.

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.' 71

அன்பினைக் காட்டாது தடுக்கத் தாழ்ப்பாளும் உண்டோ? இல்லை! தம்மால் அன்பு செய்யப் பெற்றாரது துன்பங் கண்டபோது அன்புடையாரின் கண்கள் நீரைச் சிந்தும். அக்கண்ணீர்வழி அன்புடைமையை அறியலாம்.

அன்புடைமை செயல்களில் மட்டும் வெளிப்படுவ தன்று; உணர்தலிலேயே வெளிப்படுவதாகும்.

அன்பு என்பது ஒரு சடங்கன்று. ஒப்புக்குக் காட்டுவன வெல்லாம் அன்பல்ல. உண்மையிலேயே மற்றவர்களிடம் அன்போடு பழகுக. அவர்தம் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதுக. அதுவே அன்புடைமையின் சிறப்பு.

'அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.' 72

அன்பிலார் எல்லாவற்றையும் தமக்கே உரிமையாக்கிப் பயன்படுத்துவர். அன்புடையார் தம்மை மற்றவர்க்கு உரிமை யாக்குவர்.

1. "தமக்கே உரியராகும்" தனி உடைமை நஞ்சு, அன்பின்மையால் வருவது; வளர்வது. "என்பும் உரியர் பிறர்க்கு" - பொதுவுடைமை உணர்வு வருவது; வளர்வது.

ஆதலால் குமுகாயத்தில் நாம் ஒருவர் என்று கருதிக் குமுகாயத் தேவையே தம் தேவையாகக் கருதிடுக.

2. எப்பொருளையும் தேடுவதில், படைப்பதில் இலாப நோக்கின்றி குமுகாயத் தேவையை மையமாகக் கொண்டு தொழிற்படுக.

3. வையம் உண்ணாமல் உண்பதும், வையம் உடுத்தாமல் உடுப்பதும் அன்பின்மையின் விளைவே. ஆதலால் இதனை வருவித்த ஒருவரின் தனித்திறன்கள் குமுகாய வரலாற்று நிகழ்வுகள் தந்தவையேயாம். ஆதலால் தனியே எந்த ஒன்றிற்கும் ஒருவர் உரியராதல் இயலாது.

4. "என்பும் உரியர்" - ஒருவர் தமது அறிவாற்றலையும், உழைப்பையும் அவ்வழி படைக்கப்படும் பொருள்களையும் குமுகாயப் பொதுமையாக்குக.

5. பொதுமை நலத்திலிருந்து விலகிய தனிமை வளரக் கூடாது. அங்ஙனம் வளரின் அன்பு தோன்றி வளர்தலுக்குரிய ஊற்றுக் கண்கள் அடைபடும். ஆதலால் தன்னயத்தை மறந்திடுக. தற்பெருமையைத் தள்ளிவிடுக. தற் செருக்கினைத் துறந்திடுக. அன்பைத் தடுக்கும் அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச்சொல் முதலியன தோன்றவும் அவ்வழி அன்பு கெடவும், உறவுகள் சீரழியவும் விடாமல் பொது நலம் நாடுக.

6. ஆதலால் அன்பினைக் காட்டுக. மற்றவர்களோடு இணைந்து பொதுமையைக் காண்க.

> 'அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
> என்போடு இயைந்த தொடர்பு.' 73

உயிர், உடம்போடு இயைந்த தொடர்பு. இணைப்பு அன்போடு இயைந்த வழக்கென்ப.

1. உயிர் உடம்பினைத் துணையாகப் பெற்று வாழத் தொடங்குதல் அன்பு செய்தலுக்கேயாம்.

2. உயிர்களுக்கு எலும்பு முதலியவற்றால் ஆய உடம்புடன் தொடர்பு ஏற்பட்டுப் பிறந்ததே, தலைவனும் தலைவியும் தம்முள் அன்பு செய்த வழக்கத்தின் பயன் அல்லவா?

3. உடற்பிறவி எடுத்த உயிர்கள் அன்புடையராயிருத்தலே வழக்கம். ஆதலால் அன்பு காட்டுதலைக் கடமையாகக் கொள்க; பழக்கமாக்குக; வழக்கமாக்குக.

'அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு.' 74

அன்பு விருப்பங்களைத் தோற்றுவிக்கும்; நட்பைத் தரும்.

1. அன்பு உயிர்ப்புள்ள உணர்வு; வளர்ச்சித் தன்மை உடையது. மற்றவர்களோடு அன்பு கொண்டு பழகுக; அதுபோது அவர் தம் விருப்பங்களை அறிந்து நிறைவேற்றி வைக்கும் ஆர்வம் தோன்றும் முயற்சிகள் கால் கொள்ளும். முயற்சிகள் பயன்களைத் தந்து வாழ்விக்கும். அவ்வழி நட்புத் தோன்றும்; அத்தகு நட்பே நாடி அடையாத - அடையத்தக்க சிறப்புகளைத் தரும்.

2. உற்றவர்களிடத்தில் அன்புடையராதலும் விருப்பங்களுடையராதலும் உறவுக்கு மூல உணர்வுகளாகும்.

3. அன்பு காட்டுக; விருப்பங்களைப் பேணுக. உறவுகளை வளர்த்திடுக; நட்புறவைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்க.

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.' 75

வையகத்து வாழ்க்கையில் இன்புறுதலும், சிறப்புகள் பெறுதலும் அன்பினராகி வாழ்ந்த வழக்கத்தின் பயன். அன்புடையராதல் - வழக்காதல்: ஒரோ வழியன்றி இடையீடின்றி எப்பொழுதும் தொடர்ச்சியாக அன்புடையராதலை வழக்கம் என்று சிறப்பித்தார். அன்புடையராக

வாழ்தலே வையகத்தில் இன்பத்தைத் தரும்; சிறப்பினைத் தரும். ஆதலால் அன்பு காட்டுதலைப் பழக்கங்களாக்குக! வழக்கங்களாக்குக.

அறத்தின் இயலையும் அன்பின் இயலையும் அறியாதவர்கள் அன்பு, அறத்திற்கு மட்டுமே சார்பு என்பர். அன்பின்மை போல் அன்பு, அறத்திற்கு எதிரான மறத்திற்கும் துணையேயாம்.

1. அன்பு, மற்றவர்களுக்குப் பயன்படும் அறச்செயல் களைச் செய்யத் துணையாகிறது.

2. கழனியில் பயிர் வளர, களை எடுத்தாக வேண்டும். அதுபோல அன்புக்குத் தொடர்பில்லாத அறத்திற்கு மாறான மறச் செயல்களையும் செய்ய வேண்டிவரும். ஏன்? அன்பிலாத-பயன்படாத செயல்களைச் செய்து சிலர், தாம் அழிவதோடன்றிக் குமுகாயத்திற்கும் (சமுதாயத்திற்கும்) தீமை செய்வர். இத்தகு தீமைகளைக் கண்டும் பொறுத்துக் கொள்ளுதல் அன்பு அல்ல. பொறுத்துக் கொள்ளாது அறிவுறுத்தல், கண்டித்தல், தண்டித்தல் முதலிய அன்பிலாமை போலத் தோற்ற மளிக்கும் மறச் செயல்களை மேற்கொள்ளுக. இத்தகு மறச் செயல்கள் நேரிடையான அன்பு இல்லை; ஆனால், விளைவு அன்பேயாம்.

3. ஆதலால், குமுகாய நலனுக்குப் பயன்படாதவற்றைச் செய்து வீணே பாழ்பட வாழ்பவர்களைக் கண்டிப்பதில் தவற வேண்டாம். தேவைப்பட்டால் வன்முறையால்கூட திருத்தலாம். இச்செயல் தீயவரை அழிக்கும் நோக்குடையதாக இருத்தல் கூடாது. அன்பி னால் அவர்களைத் திருத்தி நெறி நிற்கச் செய்யும் நோக்குடையதாக அமையவேண்டும்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.' 77

எலும்பில்லாத புழுக்களை வெயில் எரிக்கும்; அதுபோல அன்பில்லாத உயிரை அறம் சுடும்.

1. வெயிலின் வெப்பத்தைத் தாங்கமுடியாமல் புழுக்கள் சுருண்டு விழுவதைக் காண்கின்றோம். அதுபோல அன்பிலாத உயிர்களை அறம் சுடும்.

2. அன்பு இல்லாமையே ஓர் உயிர்க்குறை. இக்குறைபாடு அறக்கடவுளின் சுடுதலுக்கு இலக்காகிறது. இங்கு அறம் முறைமை (நியதி).

அன்பு செய்யாமையாலும் உயிர்கள் கேடுற்று அழியும். அன்பு செய்யாத உயிர், வளர வாய்ப்பில்லை. அன்பு காட்டுதல் தவிர்க்க முடியாத கடமை. ஆதலால் அன்பு காட்டுதலைக் கடமையாகக் கொள்க. அன்பு காட்டுதல் அன்பு செய்யப்படுவாரின் வாழ்வுக்கு என்று எண்ணற்க. அஃது அன்பு செய்வாரை வாழ்விப்பது என்று அறிக.

அன்பு செய்யாதபோது ஆர்வம் இல்லை; முயற்சி இல்லை; பொருள் இல்லை; உறவு இல்லை; நட்பு இல்லை. அதனால் உயிர் இழிவுநிலை எய்திவிடும். ஆதலால் அன்பு காட்டுதலில் மற்றவர்கள் பயன் பெறுகின்றனர் என்று கருதாது, தாம் வளர அன்பு செய்க.

'அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.' 78

உள்ளத்தில் அன்பு இல்லாத வாழ்க்கை, பாலை நிலத்தில் பட்டுப்போன மரம் தளிர்த்தல் போலாம்.

உயிர் தழைத்து வளர்வது அன்பினாலேயாம். உள்ளத்தில் அன்பு உணர்வு பெறாதவர் வாழ்க்கை தளிர்க்க இயலாது; பூத்துக் குலுங்காது. ஒரு மரம் வளர, மரத்திலும் உயிர்ப்புக்குரிய - வளர்ச்சிக்குரிய பசுமை இருக்கவேண்டும்.

அம்மரம் வளரவேண்டிய நிலப்பரப்பிலும் நீர்வளம் இருக்க வேண்டும். அதுபோலத் தனி மாந்தனிடத்தில் அன்பு உணர்வும், அந்த அன்பு உணர்வை வளர்த்துப் பாதுகாக்கக் கூடிய அன்புடைய குமுகாய அமைப்பும் இருக்கவேண்டும்.

1. ஆதலால், உள்ளத்தில் அன்பினைப் பெறுக. உள்ள வாறு அன்புடையராக ஒழுகுக. அன்புடைய குமுகாய அமைப்பைக் காண்க.

2. தனி மாந்தனை அன்பினில் வளர்க்கக் கூடிய குமுகாய அமைப்பினைக் காணுக

3. உள்ளத்தில் அன்பினைக் கண்டு வளர்த்துக் கொள்ளக் குமுகாய அமைப்புத் தேவை என்ற உணர்வோடு குமுகாயத்தை அணுகிக் கலந்து குமுகாயத்தில் ஓர் உறுப்பினராகுக.

'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு.' 79

புறத்தே காணப்படுவனவாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உறுப்புகள் மாந்த உயிரின் உள் உறுப்பாகிய அன்பு இல்வழிப் பயன்படா; பயனற்றவை.

ஒருவருடைய வாழ்க்கையின் வெற்றிச் சிறப்புக்குரிய இடம், பொருள், ஏவல் முதலியன சிறப்பாக அமைந்திருந்தா லும் அந்த ஒருவருடைய உயிரில் அன்பு என்ற பண்பு இல்லாது போயின் பயனற்றவையாகிவிடுகின்றன.

1. **பொறிகள்.** அன்பைப் பெறுதலுக்கும், தருதலுக்கும், அவ்வழி வாழ்க்கையின் சிறப்புக்குரியனவாதற்கும் வாயில்கள்.

உள்ளத்தில் அன்பு இல்லையேல் கண்கள் பேசா. வாய் பேசாது. இந்நிலையில் வாழ்வியல் நடைபெறாது. ஆதலால் அக நிலையில் அன்பை வளர்த்து, பொறிகளின் வாயிலாக வெளிப்படுத்துக.

2. • காலம், இடம், பொருள், ஏவல் பெற்றிருந்தாலும் அன்பு இல்லையாயின் இயங்கா; தொழிற்படா; ஆதலால், காலம், இடம், பொருள், ஏவல் பயன்படத் தக்கவகையில் அன்பினைக் காட்டுக.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.' 80

அன்போடு பொருந்திய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அவ்வன்பு இல்லாதவர்களுடைய உடம்புகள் எலும்பைத் தோலால் மூடியனவேயாகும். அதாவது வெற்றுடம்புகளேயாம்.

உயிரின் இயற்கை, உயிர்ப்பு. உயிர்ப்பாவது இயக்கம். உயிரின் இயக்கத்திற்குக் கருவியே உடம்பு. உடலிடையுள்ள உயிரின் உயிர்ப்பு-இயக்கம் அன்புடையதாக அமையின் அவ்வுயிர்க்கும் பயன் உண்டு. மற்றவர்க்கும் பயனுண்டு. அன்பில்லையாயின் பயன் இல்லை. பயனில் வழி, பயனற்ற வெற்றுடம்பு. அதனால் "என்பு தோல் போர்த்த உடம்பு" என்றார்.

ஆதலால், உயிரின் உயிர்ப்பை அன்பாக்குக. உயிர்ப்பின் வழிச் செயற்படுக. சிந்தனைக்கு அன்பைப் பொருளாக்குக. சிந்தனை வழி வரும் செயற்பாட்டை அன்பின் வழியதாக்குக.

உடலில் உயிர் உள்ளது என்று துணிதலுக்குரிய அளவை அன்பொழுக்கமேயாகும். அன்பில்லாதவர்களின் உடலில் உயிர் இல்லை. ஆதலால், அவர்கள் எலும்பு தோல் போர்த்த போர்ப்புகள் என்று எண்ணப்பெறுவர்.

உயிர் உடலினை உடுத்துக் கொண்டதே அன்பு செய்தலுக்காகவும் அன்பினைப் பெறுதலுக்காகவுமேயாம். இதுவே இயற்கை விதி. உடலின் நோக்கம் நிறைவேறாத பொழுது பயனற்றதாகிறது. உலகில் வளர்ந்துள்ள தீமை,

உடல்கொண்டு வாழ்வதையே பெரிதென்று எண்ணித் தன்னயப்பால் அன்பினைக் கொன்றும் வாழ்வதேயாம். இது தவறு. அன்பினைச் செய்யும் ஒழுக்க நிலையிலேயே உயிர் உள்ள வாழ்க்கை அமைந்திருக்கிறது.

9. விருந்தோம்பல்

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.' 81

கணவனும் மனைவியுமாக இல்லத்தின்கண் இருந்து பொருள்களைப் பேணி வாழ்வதெல்லாம் விருந்தினரைப் பேணுதலுக்கேயாம்.

விருந்து: புதியதாக அறிமுகம் ஆகியவர்கள்; அல்லது உறவு, சுற்றம் ஆகிய சார்புகள் இல்லாதவர்கள்.

அகமும் முகமும் மலர வரவேற்று, தேவையானவற்றைத் தந்து உபசரித்தல்.

நிலத்தை உழுது பயன்காணும் வேளாண்மை என்ற தொழிற் பெயரை விருந்தோம்புதலுக்குப் பொருத்திக் கூறியது, மனம் என்ற நிலத்தில் அன்பால் உழுது, அருள் என்னும் பயன் காண்பதால் என்பதறிக.

1. இவ்விருந்தோம்பல் தமது இல்லத்தின் பொருள் நிலைக்கேற்பவும், காலச் சூழ்நிலைகளுக்கேற்பவும் செய்தல் வேண்டும்.

2. விருந்தினர் – புதியவர் என்றாலும் தமக்கு அறிமுக மான வேறு ஒருவரின் பரிந்துரையுடன் விருந்தினராக ஏற்றுக்கொள்ளுதல் நல்லது.

3. அல்லது இடம் விட்டு இடம் பெயர்ந்து உலா வருதலுக்குரிய தெளிவான நோக்கம் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து தெளிந்து ஏற்றுப் பேணுதல் வேண்டும்.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.' 82

1. விருந்தினர், வீட்டின் புறத்திண்ணையில் இருக்க, மரணமிலாப் பெருவாழ்வு வழங்கும் அமிழ்தமேயாயினும் தனியே உண்ணல் முறையன்று. உண்பதற்கு முன் உண்பிக்க வேண்டிய விருந்தினர் உளரா என்று அறிந்து, உளராயின் உண்பித்துவிட்டு உண்ண வேண்டும்.

2. இஃது இயலாததாயின் பொருள் நிலைக்கேற்றவாறு பருகுவன தந்து பேணி வழியனுப்பிவிட்டு உண்ணல் நன்று.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83

நாள்தோறும் தன்னிடத்தில் வரும் விருந்தினரைப் பேணுவானது இல்வாழ்க்கை, வறுமையால் துன்புற்றுக் கெடுவதில்லை.

1. விருந்தைப் பேணும் செயலுணர்வினால் தூண்டப் பெற்று மேலும் மேலும் செலவை விஞ்சிய வரவு தேவை என்ற உயர் நோக்கில் பொருள் ஈட்டும் முயற்சியில் ஈடுபடுவான்.

வரவுக்குள் செலவு – பாதுகாப்பு உணர்வினால் ஆகும் ஒழுக்கம்; செலவுக்கு விஞ்சிய வரவு மேலும் ஆள்வினை யுடன் பொருள் செயலில் ஈடுபடும் ஒழுக்கம். ஆதலால் வறுமை வராது, அன்பின் விளைவால் அது ஆள்வினையில் ஆற்றுப்படுத்தும்.

'அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.' 84

முக மலர்ச்சியுடன் நல்ல விருந்தினரைப் பேணுவானது இல்லத்தின்கண் திருமகள் மனமகிழ்ந்து குடியிருப்பாள்.

செல்வம் வற்றாது தங்கியிருக்கும் என்பது கருத்து. திருமகள் குடியிருப்பாள் என்பது உருவகம்.

செல்வம் செலவழிப்பதற்குரிய வழிகளைப் பொறுத்துச் செல்வம் வளரும்; அல்லது அழியும்.

நல் விருந்து பேணுதல் மூலம் செல்வம் பயனுள்ள வழியில் அன்பை, ஆர்வத்தை, ஆள் வினையைத் தூண்டி இயக்கும் வழியில் செலவழிக்கப்படுவதால் செல்வம் குறையாது; வளரும்; தங்கும்.

அதோடு நல்விருந்தினர் சிந்தனையால், உணர்வால், செயலால் வாழ்விப்பார்கள். அதனாலும் செல்வம் தங்கும்.

'வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.' 85

விருந்தினரைத் தமக்கு முன்பு உண்பித்து விட்டுப் பின்பு மிகுந்ததைத் தாம் உண்ணும் வேளாளனது நிலத்திற்கு விதை தெளித்தலும் வேண்டுமோ? வேண்டியதில்லை என்பது கருத்து.

இது விருந்தோம்பும் பண்பின் திறத்தை எடுத்துக் கூற, உயர்வு நவிற்சியாகக் கூறியதெனக் கோடல் பிழையன்று. ஆயினும் நடை முறைக்கு வராதது என்று கொள்ளுதல் எதிர் காலத்தில் வளரும் செப்பத்தை மறுத்தலாகும்.

பயன்படுவார் நிலத்தில் பயன் கொள்வோரும் அறநெறிச் சான்றோரும் கூட, பயன் நோக்கி விதைக்கலாம் அல்லவா?

இத் திருக்குறளின் பயன், குமுகாயத்திடம் நம்பிக்கையை வளர்ப்பது ஆகும்.

'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.' 86

தன்னிடம் முந்தி வந்த விருந்தினரைப் பேணி விட்டுப் பின் வரக்கூடிய விருந்தினரையும் வரவேற்றுப் பேணக் காத்திருப்பவன் விண்ணகத்தாரால் பேணப் பெறும் நல்விருந்தினனாவான்.

வந்த விருந்தினர்களை ஏற்றுப் பேணியதால் ஏற்பட்ட பொருள் செலவினாலும், உடற்களைப்பினாலும் மனச் சோர்வு அடையாமல் கிளர்ந்தெழும் அன்புணர்ச்சியுடன் மேலும் விருந்தினர்களை எதிர்பார்த்து இருந்து வரவேற்பதே அன்பு, ஊக்கம் ஆகியவற்றை வழங்கும்.

மறுமைக்குத் துணை செய்வன உடைமைகளைக் கொண்டு செய்யும் அறங்களேயாம்.

'இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.' 87

விருந்தினர்க்கு உணவு படைத்தலின் பயன் இவ்வளவினது என்று அளவிட்டுச் சொல்லுதல் இயலாது; விருந்தினரின் தகுதியளவே அதன் பயன்.

விருந்தினரின் தகுதி பற்றியதாகப் பயன் மிகும்-குறையும் என்பது கருத்து.

1. விருந்தினரைத் தேர்ந்து தெளிதல் நன்று. பயன்கருதிச் செய்யலாமா? என்ற வினாவுக்கு விடையாகத் தீப்பயன் வாராது தவிர்த்தலுக்காகப் பயன் என்று உணர்த்தியதாகக் கொள்ளல் வேண்டும்.

2. விருந்தினர் நல்லோராயின் விருந்தளித்தாரைச் சிந்தனையால், உணர்வால், செயலால் வாழ்விப்பர். அஃதிலாதவர் பரிமாறிய உணவின் அளவுக் குறையையும், சுவைக் குறையையும் இன்ன பிற செய்தி களையும் எடுத்துக் கூறிப் பழி தூற்றுவர். உண்ணும் பொழுதே களவு முதலியன செய்யவும் துணிவர்.

ஆதலால், தேர்ந்து தெளிந்து தக்காரல்லாரைத் தவிர்த்தல் வேண்டும்.

'பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.' 88

விருந்தினரைப் பேணி அவர்களுக்குச் சிறந்த உணவு படைத்தலை மேற்கொள்ளாதார் செல்வத்தை நிலையான தென்று கருதி – வருந்திப் பாதுகாத்து அச்செல்வத்தை இழந்த போது யாதொரு பற்றும் இல்லையே என்று நொந்து கூறுவர்.

செல்வத்தின் பயன் விருந்தோம்புதல். விருந்தோம்பும் பண்பு, செல்வத்தை இழக்கும் பொழுது உற்றுழி உதவும், துணை செய்யும் என்ற கருத்தை எதிர்மறையாக உணர்த்தியது.

வேள்வி – விருப்பமுடன் செய்வது வேள்வி என்றால் தீ வளர்க்கும் யாகம் என்று கொள்ளுதல் தமிழர் மரபன்று.

விருப்பமுடன் செய்யும் தொண்டு வேள்வியாகும். தமிழ் நெறியில் ஐவகை வேள்வியாவன: திருமணம் செய்வித்தல், விருந்தினரைப் பேணல், தெய்வத்திற்குப் படைத்தல், பேய்களுக்குப் படைத்தல், கொடை.

இந்த ஐவகை வேள்விகளையும் வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் விரும்பிச் செய்தால் செல்வம் பயன்படுகிறது என்பதாகும்.

'உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.' 89

பொருள் பெற்றிருக்கும் காலத்திலும் வறுமையாவது விருந்தோம்பாமை.

இத்தகு மடமை அறியாதாரிடத்து உண்டு.

செல்வத்தின் பயன் இல்லாமையால் பொருளுடைமையும் வறுமையாயிற்று.

அறியாமை செல்வத்தையும் வறுமையாக்கும் என்பதால் செல்வம் பெற்ற அளவிலேயே பயன் இல்லை.

செல்வத்தின் பயன் அடையும் பொழுதே உடைமைக்குப் பொருள் தெரிகிறது.

விருந்தோம்புதல் மூலம் தக்கார் நட்பும் உறவும் கிடைப்பதால் என்றும் வாழ்தலுக்கு வழி உண்டு என்பது கருத்து.

'மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.'

90

அனிச்சப் பூவை மோந்தவுடன் அது வாடிப்போம். அதுபோல விருந்தினர் முகம், வேறுபட்டு நோக்கும்பொழுது வாடும். விருந்தினர், வறுமையால் உந்தப்பட்டுப் பிழைப்புக் கருதி வருபவர் அல்லர். நாடு காணும் நோக்குடனும், மக்கள் மன்றத்திற்குப் பணி செய்யும் நோக்குடனும், திருத்தலப் பயண நோக்குடனும் பயணத்தில் வருபவரே விருந்தினராக வருபவராவர்.

ஆதலால், தகுதி மிகுதியும் உடையவரே விருந்தினர். அப்பூதியடிகள் இல்லத்திற்கு வந்த அப்பரடிகள் விருந்தினர்; ஒப்பு நோக்கி அறிக.

விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்றுப் பேணுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினாலும் முகம் கடுகடுக்க அல்லது வேறுபட்டு விருந்தினரை நோக்கக் கூடாது.

விருந்தோம்புதலில் பரிமாறப்பெறும் உணவுப் பொருள்களை விடப் பேணும் (உபசரிக்கும்) பண்பே மிகுதியும் வேண்டற்பாலது.

10. இனியவை கூறல்

'இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.' 91

மெய்ப் பொருளையறிந்த சான்றோரின் வாய்ச்சொல் வஞ்சனை இல்லாதனவாய் அன்பு கலந்தனவாய் அமையும் இனிய சொற்களாகும்.

1. செம்பொருள் காண்பதாவது, நிலையில்லாதன வற்றையும் பயன் தராதனவற்றையும் நாடாது நிலையான இன்ப அன்பினையே நாடுவார் நெஞ்சம் அன்பிற்கனியும். பொய்ம்மையுடன் தொடர்பிலாது வாய்மையோடு தொடர்புடைய நெஞ்சம் அன்பில், அருளில் பழுத்து விளங்கும். அதனால், அவர்கள் சொல்லும் சொற்கள் செவிப்புலனுக்கும் வாழ்க்கைக்கும் இனியனவாக அமையும்.

1. நாளும் ஒருமனப்பட்ட சிந்தனையுடன் செம்பொருளைச் சிந்தனை செய்க.
2. சிந்தனையிலும் செயலிலும் பொய்மையை நீக்குக.
3. அன்பு நெஞ்சத்தில் நனைந்த சொற்களையே கூறிப் பழகுக.

'அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்.' 92

ஒருவரைக் கண்ட அளவிலேயே முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி, பின் அகமலர்ந்த இனிய சொற்களைச் சொல்லுதல் ஒரு பொருளைக் கொடுத்தலைவிடச் சிறந்தது.

செவிப்புலனைவிடக் கட்புலனே காலத்தால் முந்தியும் எளிதிலும் கவர்ந்து ஈர்ப்பது. ஆதலால், முகமலர்ச்சியுடன் வரவேற்கப் பழகிக் கொள்ளவேண்டும். முகமலர்ச்சிக்குத் தடையான பிணக்கு, பகை, வெறுப்பு, அயலாந் தன்மை

ஆகியனவற்றை உட்கோளாகக் கொண்டால் முகமலர்ச்சி வராது.

ஆதலால், அன்பு நிறைந்த உள்ளத்துடன் ஒருமை உணர்வுடன் வரவேற்கவும் அகமும் முகமும் மலர்ந்தவழி இனிய சொற்கள் தம்மியல்பாகவே வரும்.

பொருள் தேவையே பெரிது. ஆயினும் பொருளைவிட அகமும் முகமும் மலர்ந்த வரவேற்பும் இன் சொற்களுமே விரும்பத்தக்கன.

'முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.' 93

யாவரையும் விரும்பி மலர்ந்த முகத்துடன் இனிதாக நோக்கி, பின் மனமும் வாக்கும் ஒத்து இனிய சொல்லைச் சொல்லுதலே அறம்.

1. எந்த வகையாலும் கடுகடுத்த முகத்தைத் தவிர்க்கவும்.
2. மலர்ந்த முகத்துடன் வரவேற்கவும்.
3. இனிய சொற்களைப் பேசவும்.
4. பொருள்தருதல் – தராமை; அறிவுறுத்தல், அச்சுறுத்தல் ஆகிய செயல்கள் எப்படி அமையினும் மலர்ந்த முகமும் இனிய சொற்களும் குறைகளை நீக்கி நிறைகளைத் தரும்.

'துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.' 94

எல்லாரிடத்தும் இன்பம் விளைவிக்கும் இன்சொல்லை உடையார்க்குத் துன்பத்தை விளைவிக்கும் வறுமை இல்லையாம்.

1. ஒருவர் இயற்றும் செயல்களின் விளைவே பட்டறிவுக் குரியது. பிறரை இன்புறுத்துபவர்கள் ஒருகாலும் துன்புறமாட்டார்கள்.

2. மலர்ந்த முகத்தாலும், இனிய சொற்களாலும் இயன்றதைக் கொடுத்து உதவுவதாலும் மற்றவர்களை இன்புறுத்துக. அவ்வழி வறுமையைத் தவிர்க்கலாம்.

3. மற்றவர்களை இன்புறுத்தும் இயல்பில்லாதார் அடுக்கிய கோடி செல்வம் பெறினும் துய்த்தல் அரிது. அவருக்கு மற்றவர்கள் துணை நிற்கமாட்டார்கள்.

'பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவருக்கு
அணியல்ல மற்றுப் பிற.' 95

ஒருவனுக்கு அணியாவன அடக்கமுடைமையும் இன்சொல்லுடைமையுமாம். மற்றுப் பொன்னாலும் மணியாலும் செய்யப் பெற்ற அணிகள் அணிகளாகா. பணிவும் இன்சொல்லும் உடனிகழும் பண்புகள்.

1. எல்லாரிடத்தும் எப்போதும் பணிவுடையோராக நடந்து கொள்ளுக.

2. உடற் பணிவுமட்டுமன்றி வணக்கமுடைய வாய்ச் சொற்களையும் பேசுக.

'அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.' 96

இனிய முறையில் சொன்னால் தீயவை தேயும்; அறம் பெருகும்.

1. ஒளியை உண்டாக்கினால் இருள் அகலும். அதுபோலவே நல்லவற்றை நாடி, அந்த நல்லவற்றை இனிய சொற்களால் சொன்னால் தீமை அகலும்; அறம் வளரும்; நன்மை பெருகும்.

2. வாழ்க்கையில் தொல்லை - துன்பம் தீமையால் வருவது. இத்தீமையை நினைந்து கவலைப்பட்டாலும் அல்லது நீக்க முயன்றாலும் அது நீங்காது. அதற்கு மாறாகத் தீமையை, அவ்வழிப்பட்ட துன்பத்தை

அடியோடு மறந்துவிட்டு நல்லவற்றை நாடிச் சொன்னால், செய்தால், தீமை தானே அகலும்; துன்பமும் தொலையும்.

3. சொற்கள் விளைவுகளுக்கு உரியன. ஆனாலும், சொல்லுக்குரிய பயன் விளைய வேண்டுமானால் தேர்ந்து இனிய சொற்களால் சொல்லவேண்டும். நல்லவை சொன்னாலும் அந்த நல்லவைகளையும் கூட இனிய சொற்களாலேயே சொல்லுதல் வேண்டும்.

4. சொல்லில் இனிமை தவறின், சொல்லால் நன்மை விளையாது.

'நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.' 97

இனிய பண்பின் நீங்காத சொல், பிறர்க்கும் நன்மையைக் கொடுத்து, அங்ஙனம் சொல்பவருக்கும் இம்மையிலும் பொருள், புகழ் முதலியன தரும்; மறுமையிலும் இன்பம் தரும்.

1. சொல்லும் சொற்களைக் கேட்பதற்கு இனிமையாக அமைவதோடன்றி கேட்பவர்க்கு நன்மைகளையும் உண்டாக்க வேண்டுமென்பதை அறிந்து சொல்லுதல் வேண்டும்.

2. ஆதலால், சொல்லுபவருக்கும் கேட்பவருக்கும் நன்மையை உண்டாக்கும் இனிய சொற்களையே சொல்லப் பழகுதல் வேண்டும்.

3. இனிய சொல் என்று கருதி, நன்மை பயவாத சொற்களைச் சொல்லக்கூடாது. சொல்லுவது நன்மை தானே என்ற எண்ணத்தில் கேட்பதற்கு இனிமையாக இல்லாத சொற்களைச் சொல்லக் கூடாது. கடுஞ் சொற்கள், சொல்லும் நன்மையைக் கெடுத்துவிடும்.

*'சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.'* 98

கேட்பவருக்கு மனவருத்தம் தராத சொல், இம்மையும் மறுமையும் இன்பம் தரும்.

1. யாருக்கும் (பகைவருக்கும்கூட) மனவருத்தம் தராத சொற்களாகச் சொல்லுதல் வேண்டும்.

2. சொல்லும் சொல்லளவிலும், பொருள் அளவிலும் மற்றவர்க்கு மனவருத்தம் தராதவாறு சொல்லுதல் உயர்ந்த பழக்கமாகும்.

3. "நல்லதுக்குத் தானே சொல்லுகிறேன்" என்று ஏசக்கூடாது; திட்டக்கூடாது; பழி தூற்றக்கூடாது; வேண்டாதவைகளை நீக்குவதற்கு, துன்புறுத்தாத இனிய முறைகளே நிலையான பயன்தரும்.

*'இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.'* 99

இனிய சொற்கள் இன்பம் பயத்தலை அறிந்தும், கடுஞ் சொல்லைச் சொல்லுவதேன்?

1. பிறர் கூறும் இனிய சொற்கள் தன்னிடத்தில் இனிய பயன் தரத்தக்க விளைவுகளை உண்டாக்குவதைத் துய்த்து அறிந்திருப்பவன், பிறரிடத்திலும் இனிய சொற்களாலே பேசி, நன்மைகளை - இன்பங்களை வளர்க்க வேண்டும்.

2. எந்தக்காரணத்தை முன்னிட்டும் எந்தச் சூழ்நிலையிலும் கடுஞ் சொற்களைக் கூறாமல் இனிய சொற்களையே வழங்கினால் அந்தச் சூழ்நிலைகளையும் நல்ல சூழ்நிலைகளாக மாற்றிவிடலாம். எந்தத் தீமையையும் நீக்கி நன்மையை அடையலாம்.

ஆதலால், இனிய சொற்களையே சொல்லியும் பேசியும் பழகுக!

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.' 100

இன்பம் பயக்கும் இனிய சொற்கள் தன்னிடத்தில் இயல்பிலேயே அமைந்திருக்கும் பொழுது, அவற்றைக் கூறாது கடுஞ் சொற்களை முயன்று கூறுதல், கையகத்தில் இருக்கும் கனியைச் சுவைக்காது கையகத்தில் இல்லாததும் பிறரிடத்தில் இருப்பதுமாகிய காயைக் கவர்வதை ஒத்தது.

1. இயல்பாயமைந்த நிலை இனிய சொற்களை வழங்குதலேயாம்.
2. தம்மிடத்தில் இயல்பில் இல்லா அழுக்காறு, வெகுளி முதலியவற்றை முயன்று அடைந்து அவற்றால் சூடேற்றப்பட்டுக் கடுஞ் சொற்களைக் கூறுதல் கூறுவோருக்கும் இரத்தக் கொதிப்பு முதலிய நோய் களைத் தரும்; கடுஞ் சொற்களால் பாதிக்கப்பட்டோர் தரும் துன்பங்களும் வந்தமையும். ஆதலால், கடுஞ் சொற்களைக் கூறாது தவிர்த்திடுக.
3. **கடுஞ் சொல்:** சொல்லின் பொருள் நல்லது; ஆனால் சொல்லும் சொல் கேட்க இயலாததாக இருக்கும்.

   கொடுஞ்சொல்: சொல்லாலும் பொருளாலும் இன்னல் விளைவிப்பது. பொய், புறங்கூறல் முதலியன.

11. செய்ந்நன்றி அறிதல்

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.' 101

நீ, முன்பு யாதொரு உதவியும் செய்யாத நிலையில் உனக்கு ஒருவர் உதவி செய்தால், அந்த உதவியை

விண்ணுலகு மண்ணுலகு ஆகியவற்றைவிடப் பெரிதாகக் கருதிப் போற்றுக.

பொதுவாக உலகியலில் உதவிக்கு உதவி செய்தல் கூட அரிது. முன்பு நீ யாதொரு உதவியும் செய்யாதபொழுது வலிய உனது தேவை நோக்கி உதவி செய்யும்பொழுது அவர் உண்மையில் நல்லவராக இருத்தல் வேண்டும். இந்தச் சூழ்நிலையில் அவர் செய்யும் உதவி மிக மிக உயர்ந்தது என்று கருதிப் போற்றவேண்டும்.

'காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.' 102

உனக்கு உதவி தேவைப்பட்ட நெருக்கடி காலத்தில் ஒருவர் செய்த உதவியை ஞாலத்திலும் பெரிதாக எண்ணிப் போற்றுக.

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.' 103

நாம் இன்ன உதவி செய்தால் நமக்கு இப்படி உதவி செய்வர் என்று எண்ணாமல் செய்த உதவியின் பயனை அளவிட்டுப் பார்த்து அந்த நன்மை கடலினும் பெரிது என்று கருதுக.

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.' 104

தமக்கு ஒருவன் தினை அளவு நன்மை செய்தாலும் பயனைப் பனையளவாகக் கருதிக் கொள்வர் உதவியின் பயனைத் தெரிந்தவர்.

செய்த ஓர் உதவி அளவிற் சிறியதாயினும் அதன் பயன் நோக்கிப் பெரிதாக எண்ணி மகிழ்க! முகமன் கூறுக.

'உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.' 105

ஒருவருக்குச் செய்த உதவி, அந்த உதவியின் அளவை பொறுத்ததன்று. யாருக்கு உதவி செய்யப் பெற்றதோ, அவர்தம் பண்பாட்டின் அளவுக்கு நிகர்த்தது.

1. ஒருவர் உனக்குச் செய்யும் உதவியைப் பொருளளவில் வைத்து மதிப்புத் தராதே.
2. உதவி யென்பது அளவிற் குறைவுடையதேனும் அதைப் பேரளவினதாகக் கருதுவதே பெருமைக்குரியது.

'மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.' 106

துன்பக் காலத்தில் தனக்குத் துணையாயிருந்து காத்தவரின் நட்பை நீங்காது போற்றுக. மனத்தில் குற்றமற்ற வரது உறவை மறவற்க.

"மாசறுத்தார் கேண்மை" என்றும் பாடம் உண்டு. இங்ஙனம் பாடங்கொள்ளின் அறியாமை நீக்கிய ஆசிரியரின் உறவை மறவாது பேணுக என்பது கருத்து.

1. துன்பம் வந்தபொழுது பெரும்பாலோர் செய்வ தறியாது திகைப்பர். மற்றவரும் அந்த நேரத்தில் உதவிக்கு வருவது இயல்பல்ல. இந்த உலகியல்பைக் கடந்து உனக்குத் துன்பக் காலத்தில் துணையாயிருந்து உதவி செய்தவரின் நட்பை ஒரு பொழுதும் மறக்கக் கூடாது.
2. வாழ்க்கையைக் கெடுப்பது அறியாமை. இந்த அறியாமையை அகற்றும் ஆசிரியரின் உதவிக்குக் கைமாறாக ஈடு செய்யக்கூடியது எதுவுமில்லை. ஆதலால், அறியாமை நீக்கிய ஆசிரியனின் உறவை மறவாது பேணிக் காத்து வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.' 107

தங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்குபவர்களுடைய நட்பை ஏழேழு பிறவியளவும் நினைப்பர் நன்றியறிவுடையோர்.

1. உனக்கு ஒரு துன்பம் வந்த பொழுது அதனைத் துடைத்து உதவி செய்தவர்களின் நட்பை, எப்பொழுதும் அன்புடன் நினைந்து போற்றி வளர்த்துக் கொள்க.

2. துன்பம் நீங்கியவுடன் துன்ப நீக்கத்திற்கு உதவி செய்தவரை மறந்துவிட்டால் மீண்டும் துணையாய் வருபவர்கள் இல்லாமற் போவர். அதனால், ஒருவர் செய்த உதவியை மறவாமல் பாதுகாப்பது பண்பினையும் வளர்க்கும்; மேலும் உதவியாளர்களைக் கொண்டு வந்தும் சேர்க்கும்.

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.' 108

ஒருவர் செய்த நன்மையை மறப்பது அறமன்று. தீமையை அன்றே மறப்பது அறமாகும்.

1. ஒருவர் செய்த உதவியை மறக்கக்கூடாது.

2. ஒருவர் செய்த நன்மைக்கு ஈடாக நாம் செய்யக்கூடிய நன்மையை அல்லது உதவியைச் செய்ய என்றும் அணியமாய் இருக்கவேண்டும்.

3. நமக்கு ஒருவர் செய்த தீமையை மனத்துட் கொள்ளாது அப்பொழுதே மறந்துவிடவேண்டும்.

4. நமக்கு ஒருவர் செய்த தீமைக்கு எதிராக நாமும் தீமை செய்யலாகாது.

5. நமக்கு ஒருவர் செய்த தீமைக்கு எதிர்த்தீமை செய்யாத ஒழுக்கம் அத்தீமையை மறப்பதன் மூலம்தான் பெற முடியும்.

6. நமக்குத் தீமை செய்தவரை மனத்துட் கொள்ளாமைக்குச் சான்று, அவர்க்கு நன்மை செய்தலேயாம். ஆனால், தீமை வழியினால் அனுபவித்த துன்பம் நெஞ்சத்தை உறுத்திக்கொண்டே யிருக்கும். அந்த உறுத்தலிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நமக்கு ஏற்பட்ட துன்பம் நமது அறியாமையினாலோ, ஊழின் வயத்தாலோ வந்தமைந்தது என்று நினைத்து அமைதி கொள்வது தீமையை மறத்தற்குத் துணை செய்யும் பழக்கம்.

'கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.'

109

நமக்கு முன்பு நன்மையைச் செய்தவர், பின்பு கொன்றாற் போன்ற பெருந்தீங்குகளைச் செய்தாராயினும் அத்துன்பமெல்லாம் அவர் செய்த யாதானும் ஒரு நன்மையை நினைந்த அளவில் நீங்கும். அவர் துன்பம் செய்கிறார் என்ற நினைப்பும் நீங்கும்.

1. நமக்கு, ஒருவர்-பழகிய அன்புடன் பலகாலும் நன்மை செய்தவர் நல்லூழின்மையால் அறிந்தோ அறியாமலோ கொலையனைய துன்பத்தைச் செய்தாராயினும் அவர்மீது சினம் கொள்ளக்கூடாது.

2. அத்துன்பத்தை அனுபவிக்கும் பொழுது அவர் மாட்டுத் தோன்றும் சினத்தைத் தவிர்க்க அவர் முன்பு செய்த நன்மைகளில் யாதானும் ஒன்றை நினைந்து மகிழ முயன்றால் அத்துன்பமும் நீங்கும். துன்பம் செய்வாரிடத்துத் தோன்றும் சினமும் நீங்கும்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

110

எத்துணைப் பெரிய அறங்களைக் கெடுத்தவர்க்கும் கழுவாய் உண்டு. ஆயினும் ஒருவர் செய்த நன்றியைக் கெடுத்தவர்க்குக் கழுவாயே இல்லை.

ஒருவர்க்கு உதவி செய்தல் அறம் என்றே போற்றப் பெறுகிறது. அதுபோலவே ஒருவர்க்குக் கிடைக்கும் உதவியைத் தடுக்காதிருத்தலும் அறமேயாம்.

1. எந்த ஓர் அறத்தையும் கெடுத்தல் கூடாது. ஆயினும் சில அறங்களைக் கெடுத்தார்க்குக் கழுவாய் உண்டு என்று அறநூல் கூறும். மருந்து உண்டு என்பதற்காக நோயை வரவழைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயம் என்ன? ஆதலால், எந்த சூழ்நிலையிலும் அறங்களைக் கெடுக்காது வாழ்தலே சிறப்பு.

2. அறங்களிலெல்லாம் தலையாயது உதவி செய்தல் என்ற அறம். உயிரினங்கள் தம்முள் ஒத்து உதவி செய்து கொள்ளும் இயல்பினாலேயே உலகியல் நடைபெறு கிறது. இந்த உலகியல் இடையீடின்றி நடைபெற வேண்டுமானால் உதவிகளைப் பாராட்டுதலும் உதவி யாக இருந்தவைகளை - இருந்தவர்களைப் பேணிப் பாதுகாத்தலும் அறம். இந்தப் பேரறத்தைச் செய்யா தொழுகின் உலகியல் தடைப்படும். அதனால், கழுவாய் இல்லை என்றார். ஆதலால், எந்தச் சூழ் நிலையிலும் ஒருவர் செய்த உதவியை மறப்பதைத் தவிர்த்திடுக.

3. மறவாதிருப்பதற்குரிய பயிற்சி, திரும்பத் திரும்ப உதவி செய்தவர்களை நினைந்து பாராட்டுவதுதான். இங்ஙனம் உதவி செய்தவர்களை நினைந்து பாராட்டு வதால் அவர்களுடைய உதவி செய்யும் பண்பும் மேலும் வளரும்.

12. நடுவுநிலைமை

'தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.' 111

நடுவு நிலைமையெனச் சொல்லப்படும் ஓர் அறம் மட்டுமே நன்று. அது பகை, உறவு, பொது, நட்பு என்னும் பகுதிதோறும் முறைமை தவறாது ஒழுகப் பெறுதல் வேண்டும்.

"தகுதி" எனச் சொல்லப்படும் பண்பு நடுவு நிலைமையேயாகும்.

1. சார்பால், பழக்கத்தால் மனம் உண்மையைக் காண்பதில் ஆராயாது தவறு செய்யக்கூடாது.
2. உறவு, பகை ஆகியவற்றின் காரணமாக நன்றல்லன வற்றை நன்று என்றும் தீதல்லனவற்றைத் தீது என்றும் சொல்லுதல் கூடாது.
3. உதவி செய்தல், வழக்குகளில் முடிவெடுத்தல் இன்னோரன்ன துறைகளில் செயற்படும்போது உறவு, பகை, நட்பு ஆகிய அடிப்படையில் செய்தல் அல்லது செய்தலைத் தவிர்த்தல் கூடாது.
4. நமக்குப் பகைவரேயானாலும் அவருக்கு எதிராக அறமல்லாதனவற்றைச் செய்யக் கூடாது. அவருக்குச் செய்யவேண்டிய நன்மையைச் செய்யாமலும் தவிர்க்கக் கூடாது.
5. ஒருவரிடம் நமக்கு இருக்கிற நட்பு அல்லது உறவின் காரணமாக அவர் செய்யும் அறமல்லாதனவற்றிற்கு உடன் நிற்கக் கூடாது.

'செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.' 112

நடுவு நிலைமை யுடையவனின் செல்வம், அழிவு இன்றி அவனுடைய வரும் தலைமுறையினருக்கும் வலிமை யுடையதாக அமைந்து பாதுகாப்புத் தரும்.

செப்பம்: பகை, நட்பு ஆகியவற்றின் காரணமாக மாறுபடாது சிறப்புடன் அமைந்த குணம் அல்லது பண்பு.

சிறந்த நடுநிலைமையுடையார் யாரோடும் பகை கொள்ளார்; ஒரோ வழி பகை வந்தாலும் பகை நட்பாகக் கொண்டொழுகும் இயல்பினைப் பெற்று விளங்குவதால் செல்வத்திற்கு அழிவு வராது. ஆதலால், செல்வம் நிலையாக அமைந்து அடுத்த தலைமுறையினருக்கும் பயன்படும்.

நடு நிலைமையுடையார் பகை, நட்புக் காரணமாகச் செல்வத்தை இழப்பதற்குரிய வாயில்கள் இல்லை. ஒரோ வழி இழப்பினும் அவர் தம் நடுநிலைக் காரணமாக மற்றவர்கள் அவர்களை வாழ்விப்பர்.

'நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.' 113

நடு நிற்றலைத் தவிர்ப்பதின் மூலம் வரும் பொருள் நன்மையைத்தரினும் அப்போதே ஒழிய விடுக; பேணாது கைவிடுக.

1. நடுவு நிற்றல் என்ற பண்பை இழப்பதால் வரும் பொருள் நன்மையைத் தராது என்பதை "நன்றே தரினும்" என்றார்.

2. நடுவு நிற்றல் என்ற பண்பை இழந்து பெறும்

(அ) பிறர் பங்கைத் திருடுதல்,

(ஆ) மற்றவர் உழைப்பிற்குரிய ஊதியத்தைத் தராமல் சுரண்டுதல்,

(இ) வணிகத்தில் ஏமாற்றுச் செய்தல்,

தி. IV. 6.

(ஈ) முறைமன்று முதலியவைகளில் சார்ந்து நின்று முறைகேடாகச் செய்தல்,

ஆகிய வாயில்கள் வழி வரும் பொருள்களைத் தவிர்த்திடுக.

3. மேற்கூறிய வழிகளில் பொருளீட்டிச் சேர்த்தல் அறிவையும் ஆள்வினையையும் கெடுத்துவிடும். அறிவும், ஆள்வினையும் என்றும் பயன்படும் ஆற்றல்கள்; விலை மதிப்புள்ளவை. பொருளை நம்பி இவற்றை இழப்பது நிரந்தரமான இழப்பாகப் போய்விடும்.

4. அதோடு, நடுவிகந்த வழியில் பொருள் ஈட்டுவதால் அப்பொருளை இழப்பவர்கள் பகை கொண்டு, பொருளைத் தட்டிப் பறிக்கவும் துன்புறுத்தவும் செய்வர்.

5. வணிக ஏமாற்று வெளிப்படும் போது அரசு தண்டனைகள் வழங்கும்.

6. மேற்கூறிய வழிகளில் ஈட்டப்படும் பொருள் இம்மையிலும் மறுமையிலும் இன்பமே தராது, துன்பத்தையே தரும். ஆதலால், அப்பொழுதே கைவிடுக.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.' 114

நடுவு நிலைமை யுடையவர்-நடுவு நிலைமை இல்லாதவர் என்பது அவரவர்களுடைய மறைவிற்குப் பின் நிற்கும் புகழினால் காணப்படும்.

அவரவர்களுடைய பிள்ளைகளாலும் அறியப்படும் என்று கூறுவர்; இக்கருத்துத் தவறன்று. ஆயினும் நடைமுறையில் நூற்றுக்குநூறு பொருந்துவதில்லை. ஒரோ வழி மாறுபாடுகள் நிகழ்கின்றன. அதுமட்டுமல்ல; மாற்றங்

களுக்கும் வளர்ச்சிக்கும் உரிய வாய்ப்புகளால் மாறுபடும் என்பதே உண்மை. "புகழ்" என்பது முற்றிலும் பொருந்தும்.

நடுவு நிலை நின்று வாழ்தல் மூலம் பலரை வாழ்விக்க வாய்ப்பு உண்டு. அதனால், மரணத்திற்குப் பிறகும் புகழ் நிலவும்; நடுவு நிலை பேணுக.

> 'கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
> கோடாமை சான்றோர்க் கணி.' 115

உலகியலில் வாழ்தலும் கெடுதலும் இல்லாத மரபல்ல; இயல்பாக அமைந்தவை. இவற்றின் காரணமாக நடுவு நிலை பிறழாது நெஞ்சத்தாலும் (நினைவாலும்) பிறழாது வாழ்தலே அறிவுடையோர்க்கு அழகு.

1. வாழ்தல், கெடுதல் என்பன பெரிதல்ல. இவை உலகியலில் அமைந்தவை. நாம் உலகியலை அறிந்து, அறிவறிந்த ஆள்வினையோடு வாழ்ந்தால் கேட்டையும் கூட வாழ்வாக மாற்றி அமைத்துக் கொள்ளமுடியும். ஆதலால், மாற்றியமைத்துக் கொள்ள கூடிய வாழ்க்கைக்காக நிலையான-நீடித்த ஆக்கத்தையும் புகழையும் தரக்கூடிய நடுவு நிலைமைப் பண்பிலிருந்து நினைப்பாலும் பிறழ்ந்து ஒழுகவேண்டாம்.

> 'கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
> நடுஒரீஇ அல்ல செயின்.' 116

தன் நெஞ்சம் நடுவு நிற்றலை ஒழிந்து நடுவு நிலைமை யல்லாத செயல்களைச் செய்ய நினைக்குமாயின் தான் கெடுதல் உறுதி என்பதறிக.

1. நடுவு நிலை தவறிச் செல்ல நெஞ்சம் நினைக்குமாயின் நாம் கெட்டுப்போதல் உறுதி என்பதை உணர்ந்து நடுவு நிலையிலிருந்து பிறழ்தலைத் தற்காப்புணர்வுடன் தவிர்க்க வேண்டும்.

2. நடுவு நிலை பிறழ்ந்த சிந்தனை, நினைப்பு ஆகியவற்றி லிருந்து செயல்களில் முறை பிறழ்வு தோன்றுவது தவிர்க்க இயலாதது. ஆதலால், நினைப்பில் தவிர்த்தலே சிறந்த பாதுகாப்பு.

'கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.' 117

நடுவு நிலைமையாகிய உயர்ந்த நன்மைகளை ஏற்று ஒழுகியதால் ஒரோவழி தாழ்வு ஏற்பட்டாலும் அதனை உலகம் கேடாகக் கருதாது. இழிவு செய்யாது.

1. நடுவு நிலைப் பண்பு மேற்கொண்டு ஒழுகுதலால் தாழ்வு வராது. தாழ்வாவது வறுமை, இகழ்வு முதலியன.

2. நடுவு நிலைப் பண்பை மேற்கொண்டு ஒழுகியதால், ஒரோ வழி தாழ்வு வந்தாலும் உலகம் அதனைத் தாழ்வாகக் கருதாது. ஏன் எனில் நன்மை என்பது ஓர் இடத்தில் தாழ்வைக் கொடுத்தால் நன்மை செய்யப் பட்டாரிடம் ஆக்கத்தைத் தந்திருக்கும். அதனால், ஓர் ஆக்கத்திற்காக ஏற்பட்ட தாழ்வு என்று கருதிக் கேடாகக் கருதாது, இகழாது உலகம். நடுவுநிலை பிறழ்ந்து செய்யப்படும், ஒரு நன்மை செய்யப்பட்டிருக் கும் நன்மை, (நன்மை இல்லை. ஆனால் நன்மைபோல அறிவிலிகளால் கருதப்படுவது) ஆக்கத்தைத் தராது. ஆதலால் நடுவுநிலை பேரறமாகிறது.

வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் விருப்பு–வெறுப்பு, பகை – நட்பு, சார்பு – சார்பின்மை, வேண்டியவர் – வேண்டாதவர், உதவியவர் – உதவாதவர், நமது இனம் – அயலினம், நமது மதம் – அயல் மதம், நமது சாதி – அயல் சாதி என்ற காரணங்களுக்காக மனம் மாறுபட்டு ஒழுகுதல் கூடாது; பழகுதல் கூடாது, நன்மையைச் செய்தல் அல்லது

தவிர்த்தல் கூடாது. இங்ஙனம் நடுவுநிலைமை மேற்கொண்டு ஒழுகுதல் மூலம் உலக ஒப்புரவு தோன்றும்; வளரும்.

'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.' 118

நிறுவை செய்யப் பெறுவதற்கு முன் சமனாக நின்று, பின் எடையையும் அதற்கு நிகரான பொருளையும் நிறுத்து அளவு காட்டும் துலாக்கோல் போல, முதலில் எந்த ஒன்றையும் சமநிலையான நடுவுநிலையில் நின்று ஆராய்ந்து முடிவுகள் எடுத்து அறம் காட்டும் ஒழுக்கம், சான்றோர்க்கு அணியாகும்.

1. எந்த ஒரு செய்தியையும், கருத்தையும், நிகழ்வையும் சமநிலை உணர்வில் அதாவது தம் கருத்து, தம்முடைய நலம்போலக் கருதி ஆய்வு செய்தலே ஒழுக்கம்.

2. சாதி, இனம், சமயம், உறவினர், உறவினர் அல்லாதார் பகை - நட்பு காரணமாக ஒன்றை ஆய்வு செய்வதிலும் ஏற்பதிலும் விலக்குவதிலும் முறை பிறழாது அறம் நோக்கியே செயற்படுதல் வேண்டும்.

3. இன்றுள்ள உலகியல் இந்தச் சிறந்த அறத்தின்வழி இயங்காததே துன்பம் அனைத்திற்கும் காரணம். இத்தகு விருப்பு, வெறுப்புகள் இருப்பதால் செல்வ முடையார், அதிகாரமுடையார் ஆகியோரிடத்தில் நடிப்பாளர்கள் மேவிப் பழகும் வாய்ப்புகள் ஏற்பட்டு உண்மையான நட்பும் உறவும் காண இயலவில்லை. இத்தகு சூழ்நிலையால் இம்மைக்குப் பயன் இல்லை; மறுமைக்கும் பயன் இல்லை.

   துலாக்கோலின் நடுமுள், தட்டுகளில் உள்ள பொருள் களின்பால் நாட்டமில்லாமலும், பொருள்களுக்கு உரியார்பால் சார்பு இல்லாமலும் அளவு காட்டும் இயல்பே தன் இயல்பென இயங்குதல் போல் நடுவு

நிலை உடையவர்களும், அறத்தியல்பை இலக்காகக் கொண்டு முடிவுகள் எடுக்க வேண்டும்; செயற்பட வேண்டும்; இயங்க வேண்டும்.

'சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.' 119

நடுவு நிலைமையாவது சொல்லின்கட் சார்பு இல்லாமல் இருப்பதாகும். இப்பண்பு மனத்தின்கண் சார்பு இல்லாது இருந்தால் தான் வந்தமையும்.

1. ஒன்றற்குச் சார்பாக அல்லது எதிரிடையாகப் பேசுதல் என்பது வாழ்வியலில் தவிர்க்க முடியாதது. இயற்கையும் கூட! ஆனால், அப்படிச் சொல்லு வதற்குக் கண்ணுக்குத் தெரிந்த அல்லது தெரியாத மறைமுகமான சார்புகள் ஏதும் இல்லாதிருத்தல் இன்றி யமையாதது.

2. புகை படிந்த கண்ணாடி, உருவத்தைத் தெளிவாகக் காட்டாததுபோல், கலங்கிய தண்ணீர் தம்மிடைப் பட்ட பொருள்களைத் தெளிவாகக் காட்டாதது போல், பகை-நட்பு, உறவு-உறவின்மை, தன்னலம் ஆகிய சார்புகளால் தாக்கப்பெற்ற மனம், எது அறம்? எது நன்மை? எது தீமை? என்பதை அறியாது. ஆதலால், நமது மனம் சார்புகளால் தாக்கப்பட்டு அறத்தினை, நன்மையைத் தேர்ந்து தெளிந்து அறியும் இயல்பினை இழந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை யென்றால் பகையும்-நட்பும் உறவும்-உறவின்மையும் இருக்காதா? இருக்க வேண்டாமா? ஆம், இருக்கும்! துலாக் கோலைவிட்டு அளவு காட்டும் நடுமுள் விலகியா போய்விட்டது? துலாக் கோலிலிருந்து எளிதில் பிரிக்க முடியாதபடி நடுமுள்

இருக்கிறது. அதுபோல நடுநிலைமை, அறம் என்ற பெயரால் யாரிடமிருந்தும், பிரிந்து ஒதுங்குவது, ஒதுக்குவது என்பது கொள்கையும் அல்ல; கோட்பாடும் அல்ல. அந்த உறவுகள் நன்மையை அறத்தை அறிந்து சொல்லுவதில் தடையாக இருக்கக் கூடாது. புவியீர்ப்பு ஆற்றலை வெற்றிகண்டு உயிர்க்குலம் வாழ்வதுபோலச் சார்புகளின் காரணமாக நடுநிலை பிறழாமல் நாம் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். நம்மைச் சார்ந்தோரையும் இம்முறையில் பழக்கி விட்டால் சார்புகள் காரணமாக நடுநிலை பிறழ வேண்டிய இன்றியமையாமை வராது. அதுமட்டு மன்று, நடுவுநிலை யுடையோர் அணி வலிமை பெறும்.

3. சொல், வாயோடு மட்டும் உறவுடையது அன்று. மனத்தின் மாட்சிக்கு - நடுவுநிலைப் பண்புக்கு ஏற்பவே சொல் அமையும். பயன் தரும்.

'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்.'
120

பிறர் பொருளையும் தம் பொருள்போல் பேணி வாணிகம் செய்வார்க்கு வாணிகம் நன்றாக அமையும்.

1. தன்னயப்பு மிகவும் கொடுமையான நஞ்சு. தன்னயப்பு பிறர் பொருளையும் தம் பொருளாக்கிக் கொள்ளத் தூண்டும். இத்தூண்டுதல் இயக்கும் உணர்வுக்கே பேராசை என்று பெயர். பேராசை கூடாது.

2. "பிறர் பொருள்" என்பது ஆழ்ந்தகன்ற பொருளுடையது. இன்றைய உலகியலில் உள்ள வழக்கின்படி "சட்டங்களின் அடிப்படையில் உடைமையாகப் பெற்றிடுதலே" என்பதை உரிமைக்குச் சான்று என்று கொள்ளக்கூடாது. முறை கேடான வழிகளில் கூட,

பிறர் பொருளைத் தம்பொருள் போலவே ஆக்கிக் கொள்பவர்கள் இருக்கிறார்கள்; இதுவும் கூடாது.

3. காலம், உழைப்பு, பொருள் ஆகிய அனைத்திலும் எடுத்துக் கொள்வதற்கு ஏற்ப, திரும்பக் கொடுக்கத் தவறுதல் வாணிகம் அன்று. நெறிமுறை தவறிய வாழ்க்கையுமாகும். ஆதலால், இந்த வாழ்வியலில் நாம் துய்த்து மகிழும் பொருள்களையும் அனுபவங்களையும் வழங்கும் இயற்கை உலகிற்கும், சமூதாயத்திற்கும் நாம் திரும்பக் கொடுக்கும்படி சிறந்த வாழ்க்கை, - அற வாழ்க்கை வாழவேண்டும்.

4. குறிப்பாக வாணிகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் கூடுதல் விலை, குறைந்த எடை - அளவு முதலியன செய்தல் தீது. செல்லாக் காசுகளை வாங்க மறுப்பது போலக் கலப்படப் பொருள்களை விற்கவும் மறுக்க வேண்டும்.

13. அடக்கமுடைமை

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.' 121

அடக்கமுடையராயிருத்தல் பெரும் பயனையும் புகழையும் தரும். மனம், மொழி, மெய் மூன்றாலும், அடக்க முடையராய் வாழ்தலே அடக்கமுடைமையாகும்.

தற்செருக்கின்றி மற்றவர்களை மதிக்கும் மனப் பான்மையுடையோரே அடக்கமுடையராய் வாழ்தல் இயலும்.

1. யார்மாட்டும் அடக்கம் உடையராய் வாழ்தல் வேண்டும்.

2. எல்லாரையும் மதிக்கவும் பெருமைப்படுத்தவும் வேண்டும்.

3. தனக்குத் தெரியாதவை பல மற்றவர்களுக்குத் தெரியும் என்று கருத வேண்டும்.

4. மற்றவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளும், ஆர்வம் வேண்டும்.

5. எந்தச் சூழ்நிலையிலும் தன்னைத்தானே பெருமை யடித்துக் கொள்ளுதல் கூடாது.

6. தற்செருக்கு இல்லாது பழகுதல் வேண்டும்.

7. பிறர், தன்னைப் புகழ அனுமதித்தல் கூடாது.

'காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.' 122

உயிர்களுக்கு அடக்கத்திலும் சிறந்த செல்வம் இல்லை. ஆதலால், அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமல் காக்கவும்.

1. பொருள் ஈட்டவும் அடக்கம் துணை செய்யும்; பொருள் செய்யும் முயற்சியில் தொடர்புடை யாரிடத்திலெல்லாம் அடக்கமாகப் பழகுக.

2. அடக்கமுடையராக இருப்பது, பொருள் காக்கும் முயற்சியிலும் துணைசெய்யும். மற்றவர் இவர் செல்வ முடையாரென்று கருதாவண்ணம் அடங்கி ஒழுகி னால் செல்வத்திற்குக் கேடு இல்லை; காப்புப் பெறும்.

3. அடக்கமுடையராக வாழ்ந்து, செல்வத்தைத் துய்ப்பதில் பலமடங்கு இன்பம் உண்டு. ஆதலால், அடக்கமுடையாராக இரு; செல்வத்தின் மிடுக்கைக் காட்டாதே.

'செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.' 123

ஒருவன், தான் அறியத்தக்க நூல்களை அறிந்து அடங்கி ஒழுகுவானாயின், அவ்வடக்கம் பிறரால் அறியப்பட்டுச் சிறந்த நன்மை பயக்கும்.

1. கற்று அறியவேண்டிய நூல்களைக் கற்று, அறிய வேண்டியவைகளை அறிக.

2. கற்று அறியவேண்டிய நூல்கள் திருக்குறள், திருமுறைகள், திருவாய்மொழி (திவ்வியப் பிரபந்தங்கள்) முதலியன. ஆங்கிலத்தில் சேம்சு ஆலன் எழுதிய வாழ்க்கை நூல்கள்.

3. ஆராய்ந்த அறிவின் முடிவு, அடக்கமுடையவரா யிருத்தல் என்பதறிந்து அடக்கமாக வாழ்க.

4. அறிவுடைமையின் காரணமாக அகந்தை வராமல் அடக்க முடையவராயிருக்கவும். இதனால் மேலும் அறிவு வளரும். பாராட்டப்பெறும்.

'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.' 124

இயற்கையின் ஒழுங்கு பிறழா நிகழ்ச்சிகளுக்குள் நின்று ஒழுகி அடக்கமுடையராய் வாழ்பவரின் உயர்ச்சி, மலையினும் உயர்ந்தது.

வாழ்க்கையின் அமைப்பும் முறையும் இயற்கையோ டிசைந்தது. உயிர்க்குப் புலன்களும், உடற்குப் பொறி களும் இன்ப நுகர்ச்சிக்கும் அவ்வழியே வேட்கைத் தணிவிற்கும் தெளிவிற்குமாகவே அமைந்தவை. ஐம்புலன் நுகர்வு இழிவன்று; தவறன்று; முறையன்று; குற்றமுமன்று. ஆனால் ஐம்புல நுகர்வு தலையாய அன்பையும், அவ்வழியிலான இன்பத்தைக் குறிக்கோ ளாகக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும். நுகர் தலிலும் வெறித்தன்மை கூடாது; அடக்கம் இருத்தல் வேண்டும். நுகர்வில் வெறித்தன்மை தோன்றின்

அகந்தையும், அழுக்காறு முதலிய தீக்குணங்களும், அவ்வழியே பகையும் தோன்றும். ஆதலால், இயல்பான நெறியில் பொறிபுலன்கள் அமைந்தவகையில் வாழ்க்கையை நடத்துதல் அடக்கத்தினைத் தரும். இத்தகையோர் ஆகுலங்கள் - ஆரவாரங்கள் செய்யார். ஆயினும் அவர்தம் பெருமை மலையைவிட உயர்ந்தது. மலையின் உயரம், வளத்தின் சிறப்பு, மலையை அணுகுவோர்க்கே தெரியும். மலை ஆர்ப்பரவம் செய்யாது. ஆனால், முகட்டில் துஞ்சும் முகில் இடித்து ஆர்ப்பரவம் செய்யும். முகிலுக்கு நிலைபேறு இல்லை. மலையே உயர்ந்தது.

1. இயற்கையோடிசைந்த வாழ்வில் ஈடுபடுக.
2. ஐம்புலன்களை வலிந்து அடக்கித் துன்புற வேண்டாம். அவற்றின் இயல்பான இன்பங்களை ஆர்ந்து நுகர்க.
3. ஐம்புலன் அடக்கம் என்பது, நெறிதவறி நுகர ஆசைப்படுதலைத் தவிர்த்தலேயாகும்.
4. புலன் நுகர்விலும் தன்னலமறுப்பு, பிறர்நலம் பேணல், அமைதி கைக்கொள்ளல் முதலியன அமையுமானால் சிறப்புடைய வாழ்க்கையாகும்.
5. காதலின்பம் தன் காதல் மனைவியை இன்புறுத்தலுக் காகவே, காதலித்தல் இயற்கை வழியிலானதென்க. தாம் மட்டும் இன்புறக் காதலித்தல் இயற்கை வழியன்று; அறமும் அன்று. இன்புறுத்துதலுக்காகவும் அஃது அமைந்ததென உணர்தல் வேண்டும்.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.' 125

செருக்கின்றி அடங்கி ஒழுகுதல் எல்லார்க்கும் பொதுவாக நல்லதாகும். ஆயினும் அவ்வெல்லாருள்ளும்

செல்வம் உடையவருக்கு அதுவே வேறொரு செல்வமாய் அமையும்.

பொதுவாகச் செல்வம் செருக்கைத்தரும் இயல்பினது. அதனால், செல்வமுடையார் அடக்கமுடையராயிருத்தல் இயல்பன்று.

> செல்வமுடையார் அடக்கமுடையராக இருந்தால் அச் செல்வம் கேடுறாமல் வளரும்; அதனால் அதனை வேறொரு செல்வம் என்றார்.

1. செல்வத்தின் காரணமாகச் செருக்குக் கொள்ளாமல் அடக்கத்துடன் வாழ்க.
2. செல்வத்தின் துணைகொண்டு நினைத்ததை முடிக்கக் கூடும் என்ற எண்ணத்தில் செருக்குக் கொள்ளுதல் கூடாது. இங்ஙனம் செருக்குக் கொள்ளாது முயன்றால் நினைத்தது எளிதில் - பெரும்பொருள் செலவில்லாமல் கைகூடும்.
3. செல்வமுடையோம் என்ற எண்ணத்தில் ஆடம்பரமாக வாழாதே; ஆடம்பரமான வாழ்வு, மற்றவர் மனத்தில் அழுக்காற்றைத் தூண்டும். அதனால் தீமைகள் செய்வர். செல்வம் அழியும் வாய்ப்புகள் உருவாகும். ஆதலால், எளிய வாழ்க்கையே வாழ்க.

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.'

126

ஆமையானது, தீங்கு வந்துற்றபொழுது பாதுகாப்பாகத் தனது உறுப்புகளை உள்ளடக்கிக் கொள்ளும். அதுபோல, மனிதனும் தீமை வந்து சாராத வண்ணம் தன் பொறிகளை அடக்கிக் கொள்ளும் ஆற்றல் பெறுவானாயின் எழுமையும் பாதுகாப்பாக அமையும்.

ஆமை தன் உறுப்புகளைத் தீமை வந்துற்ற பொழுது அடக்கிக் கொண்டாலும், நேரிய நலம் பயக்கும் இன்பங்களைத் துய்க்கத் தனது உறுப்புகளை வெளியே அமைத்து வாழ்தல் கண்கூடு. அதுபோல ஐம்புலன்களை, பொறிகளை 'அடக்குதல் என்றால் நுகர்தல் கூடாது என்பதோ அழித்து விடுதல் என்பதோ பொருளன்று.

நல்லற நெறியில் வந்து பொருந்தும் இன்பங்களை ஆர்ந்து துய்ப்பதில் தடையில்லை என்பது பெறப்பட்டது.

1. நம்முடைய உழைப்பால் கிடைக்கும் பொருள்களை நுகர்தலில் தவறில்லை.

2. உழைப்பாலும், உறவு முறை அமைப்புகளாலும் தமக்கே உரியவற்றை மட்டும் நுகர விரும்புக.

3. நுகர்தலை ஆசையாக மாற்றிக் கொள்ளாமலும் இன்றியமையாத் தேவையாக ஆக்கிக் கொள்ளாமலும் நுகர்தல் வேண்டும். துய்த்தலோடு துய்ப்பித்தலும் நோக்க மாதல் வேண்டும்.

4. ஆதலால், விரும்பி நுகர்பவைகள், தேவைகளாக மாறிவிடாமல் தடுக்க இடையிலேயே நோன்புகளின் பெயரால் நுகர்வுகளுக்கு ஓய்வு தருதல் நல்லது.

5. ஆகையால் பொறிகளை உள்ளடக்க இயலாது போனால், பொறிகளுக்கு வேறு நல்ல பணிகளைத் தந்து தீமையைத் தவிர்த்திடலாம்.

6. தீயன விளைவித்திடும் நட்பு, சூழல் ஆகியவற்றைத் தவிர்ப்பதும் துணை செய்யும்.

7. அகநிலையில் வளர்ந்தவர்களே தனித்திருக்க இயலும்; தீய எண்ணங்களின்றித் தனித்திருக்க இயலும். ஆதலால் அகநிலையில் போதிய வளர்ச்சி பெறாத மக்கள் தனித்திருப்பதைத் தவிர்த்து நல்லோருடன் எப்போதும் சேர்ந்திருப்பது நல்லது மட்டுமன்று, தேவையுமாகும்.

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.' 127

மக்கள் வேறு எவற்றைக் காவாவிடினும் நாவையாவது காத்துக் கொள்க. நாவைக் காவா விடின் சொற்குற்றப்பட்டுப் பெருந்துன்பம் அடைவர்.

1. பொறிகளையும் புலன்களையும் மற்றவர்க்குத் தீமை செய்யாவண்ணம் அடக்கி ஒழுகுதல் நல்லொழுக்கம்.

2. இங்ஙனம் எல்லாப் பொறிகளையும் புலன்களையும் அடக்காது போனாலும் நாவையாவது அடக்கி அதாவது வாய்ப்பேச்சை அடக்கி ஒழுகுதல் இன்றியமையாதது.

உலகின் எல்லாத் தீமைகளும் வாயினால்தான் தோன்றின. கோள்கூறல், புறங்கூறல், பழிதூற்றல் முதலியன கொடிய எதிர்விளைவுகளை உண்டாக்க வல்லன. ஆதலால், வாயை அடக்கிப் பேசினாலே பல தீமைகளை வெற்றி கொள்ளலாம்.

3. கோள் என்பது ஒருவரைப் பற்றி, மற்றொருவரிடத்தில் இல்லாததைச் சொல்லித் தப்பான எண்ணத்தை உருவாக்கல்; பிரித்தல்; பகை கொள்ளச் செய்தல். இது 'குறளை' என்றும் வழங்கப்படும்.

4. புறங்கூறல் என்பது ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றித் தவறான கருத்து உண்டாகுமாறு செய்திகளைக் கூறல். ஆனால், அவரே நேரில் காணுமிடத்தில் பாராட்டுதலும் செய்தல். இது முறையன்று. அப்பரடிகள் "குற்றங்கள் பேசியும். குணங்களைப் பேசியும்" என்பார்.

5. பழிதூற்றல் என்பது; குற்றம் குறைகளே இல்லாத மனிதர் உலகத்தில் இல்லை; இருத்தல் இயலாது. ஒருவரின் குணங்களை மறைத்து விட்டு, அவரிடம் உள்ள குறைகளையே பலரறியக் கூறுதலால் குற்றங்கள் நீங்காதது மட்டுமின்றிப் பழியும் பகையும் வளரும். குற்றங்களுடையவரிடம்

நட்புணர்வு கொண்டு அவர்தம் குற்றங்களை நேரில் மற்றவர் அறியாவண்ணம் கூறின் குற்றங்கள் நீங்க வாய்ப்புண்டு. ஆதலால், கோள் சொல்லுதல், புறங்கூறுதல், பழி தூற்றுதல் ஆகிய செயல்களைத் தவிர்த்திடுக.

'ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.' 128

ஒருவன் கூறும் தீய சொற்களின் பொருளால் விளையும் துன்பம் ஒன்றேனும் பிறர்க்கு உண்டாயின், அவன் சொன்ன பயனுடைய பிற சொற்களும் நல்லன வல்லவாகி விடும்.

1. சிலர் பாராட்டுவர்; போற்றுவர். அங்ஙனம் பாராட்டும் பொழுதே "ஆனாலும்" என்று போட்டுத் தீமையையும் சொல்லி விடுவர். இங்ஙனம் சொல்வதால் - பயனுடையனவும் பயனற்றனவும் கலந்து கூறுவதால்-பயனுடையன, மகிழ்வு தரத்தக்கன பல கூறினாலும் ஒரு தீச்சொல் நம்பிக்கையைக் கெடுத்து, நல்லெண்ணத்தைக் கெடுத்துத் தீய பயன்களைத் தந்துவிடும். ஆதலால், நல்லனவே சொல்லுக! பேசுக! ஒரு தீச்சொல் பல நன்மைகளைக் கெடுத்து விடும். ஆதலால், சொற்களைத் தேர்ந்து பேச்சுக்குப் பயன்படுத்துக!

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.' 129

ஒருவன், ஒருவனை நெருப்பினால் சுட்ட புண் மருத்துவத்தாலும் காலத்தாலும் ஆறும். ஆயினும் அப்புண்ணினால் ஏற்பட்ட தழும்பு (வடு) மாறாது இருக்கும். ஆனால் ஒருவனை ஒருவன் நாவினால் சுடுதலாகிய கடுஞ் சொல்லையும் பழிச்சொல்லையும் கூறின் அச்சொற்கள்

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.' 127

மக்கள் வேறு எவற்றைக் காவாவிடினும் நாவையாவது காத்துக் கொள்க. நாவைக் காவா விடின் சொற்குற்றப்பட்டுப் பெருந்துன்பம் அடைவர்.

1. பொறிகளையும் புலன்களையும் மற்றவர்க்குத் தீமை செய்யாவண்ணம் அடக்கி ஒழுகுதல் நல்லொழுக்கம்.

2. இங்ஙனம் எல்லாப் பொறிகளையும் புலன்களையும் அடக்காது போனாலும் நாவையாவது அடக்கி அதாவது வாய்ப்பேச்சை அடக்கி ஒழுகுதல் இன்றியமையாதது.

உலகின் எல்லாத் தீமைகளும் வாயினால்தான் தோன்றின. கோள்கூறல், புறங்கூறல், பழிதூற்றல் முதலியன கொடிய எதிர்விளைவுகளை உண்டாக்க வல்லன. ஆதலால், வாயை அடக்கிப் பேசினாலே பல தீமைகளை வெற்றி கொள்ளலாம்.

3. கோள் என்பது ஒருவரைப் பற்றி, மற்றொருவரிடத்தில் இல்லாததைச் சொல்லித் தப்பான எண்ணத்தை உருவாக்கல்; பிரித்தல்; பகை கொள்ளச் செய்தல். இது 'குறளை' என்றும் வழங்கப்படும்.

4. புறங்கூறல் என்பது ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றித் தவறான கருத்து உண்டாகுமாறு செய்திகளைக் கூறல். ஆனால், அவரே நேரில் காணுமிடத்தில் பாராட்டுதலும் செய்தல். இது முறையன்று. அப்பரடிகள் "குற்றங்கள் பேசியும். குணங்களைப் பேசியும்" என்பார்.

5. பழிதூற்றல் என்பது; குற்றம் குறைகளே இல்லாத மனிதர் உலகத்தில் இல்லை; இருத்தல் இயலாது. ஒருவரின் குணங்களை மறைத்து விட்டு, அவரிடம் உள்ள குறைகளையே பலரறியக் கூறுதலால் குற்றங்கள் நீங்காதது மட்டுமின்றிப் பழியும் பகையும் வளரும். குற்றங்களுடையவரிடம்

2. கற்ற அறவழிக் கருத்துகளை அறிவாக்கித் தெளிந்து அவ்வழி நின்று அடங்கி ஒழுகுதல் செய்க.

3. எந்தச் சூழ்நிலையிலும் சினம் வாராமல் தற்காத்து ஒழுகுதல் வேண்டும்.

4. பலர் கண்டு உரையாடி மகிழ்தலுக்குரிய இனிய பொழுதுகளை உருவாக்கிக் கொள்க.

14. ஒழுக்கமுடைமை

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.' 131

ஒழுக்கம் எல்லாருக்கும் சிறப்பைத் தருதலால், அந்த ஒழுக்கம் உயிரினும் சிறப்புடையதாகப் பேணிக் காக்கப்படும்.

ஒழுங்குகளிலிருந்து ஒழுக்கம் தோன்றுகிறது. ஒழுக்கங்கள் ஒழுங்குகளை உறுதிப்படுத்துகின்றன. உலகில் வாழும் எந்த உயிருடனும் தன்னயப்பின் காரணமாக மோதாது செவ்விதாய் வாழும் நிலையே ஒழுக்கமுடைமை யாகும். ஒழுக்கமுடைமைக்கு அளவுகோல் பிறர் நலம் பேணும் பண்பேயாகும். பொறிகளிலும் புலன்களிலும் ஒரு சேரத் தூய்மை காத்தலே ஒழுக்கமுடைமை. இங்குத் தூய்மை என்பது அன்பின் வழி இயங்குதலேயாம்.

1. ஒழுக்கத்துடன் தொடர்பு இல்லாத சிறப்புகள் சிறப்புடையன அல்ல; பெருமைகள் பெருமை யுடையன அல்ல. அவற்றை விரும்பற்க. ஒழுக்கம் உடையராய் வாழ்தலே வாழ்க்கை. உயிரிடத்து உள்ள காதல் போலவே ஒழுக்கத்திலும் ஆர்வம் காட்டுக. ஒழுக்கமுடையராய் வாழ்ந்தாலே வாழ்க்கைக்குப் பயன் உண்டு. அதனால் ஒழுக்கத்தை உயிரினும் பெரிதாகப் போற்றுக.

தி.IV.7.

2. யாருக்கும் (பகைவர் உட்பட) மனத்தினால் தீங்கு எண்ணாதே. தீங்கு எண்ணாதிருத்தல் இயல்பன்று? ஆதலால் யார் மாட்டும் அன்பு செய்யும் எண்ணமே தீமை நினைப்பதைத் தடுக்கும். இது தலையாய ஒழுக்கம்.

3. மற்றவர் வருந்தப் பேசாதே. மற்றவரை வருத்தும் பேச்சுக்களாவன: கோள் கூறுதல், புறங்கூறுதல், இழித்துக் கூறுதல்; பழித்துக் கூறுதல். இவற்றைத் தவிர்த்திடுக. எல்லாரையும் பாராட்டுக.

4. உடலால் யாருக்கும் தீமை செய்யாதே, இது வன்முறை உணர்வில் விஞ்சி அடித்தல் கொல்லுதல் முதலியன வாம். இந்த வன்முறைச் செயல்களைத் தவிர்த்திடுக.

'பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.' 132

ஒழுக்கத்தை எந்த வகையிலும் கெடாதவாறு வருந்தியும் பேணிக் காத்துக் கொள்ள வேண்டும்.

தெரிந்து ஆராய்ந்தாலும் ஒழுக்கமே துணையாக அமைகிறது.

1. நல்லொழுக்கத்திற்கு இடர்ப்பாடுகள் மிகுதி. அந்த இடர்ப்பாடுகளைக் கடந்து ஒழுக்கத்தைக் காப்பாற்ற வேண்டும்.

2. ஒழுக்கத்திற்கு எதிராக நின்று கெடுப்பவை தன்னயப்பு துய்த்தல் வேட்கை முதலியன. இத்தீய இயல்புகளைக், கடிந்து ஒதுக்குதல் வேண்டும். தீயொழுக்கங்களைக் கடிந்து ஒதுக்குதலை விட நல்லொழுக்கங்களை இடை விடாது மேற்கொண்டு ஒழுகுதலே சிறந்த வழி.

'ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.' 133

ஒழுக்கமுடையராய் இருத்தலே குடிமக்களுக்குரிய சிறப்பு. ஒழுக்கமிலராயின் குடிமை நிலையிலிருந்து தாழ்ந்து கீழானவர்களாகிக் குற்ற இயல்பினர் வகையில் சேர்க்கப் படுவர்.

"இழிந்த பிறப்பு" எனின் மானிடப் பிறப்பின்றி மானிட உருவில் உலவும் கொடிய விலங்குகள், நச்சு நோய்களைப் பரப்பும் புழு, பூச்சிகள் பட்டியலில் சேர்த்து எண்ணப்படுவர் என்றும் கூறலாம்.

1. குடிமைப் பண்பு என்பது நாட்டின் பொதுப் பண்புக்கு இசைந்து வாழ்தல். அதாவது நாட்டில் உள்ளோர் அனைவருடனும் ஒத்துப் போகத் தக்க வாழ்க்கை யினை மேற்கொள்ளல்.

2. அதாவது இனம், சாதி, சமயப்பிரிவுகள் பாதிக்கப் படாத பொதுமை உணர்வுடன் பலருடனும் இசைந்து வாழ்தல்.

3. மற்றவர்க்குப் பயன்படும் வாழ்க்கை வாழ்தல்.

4. சமூக உறவுகளைக் கெடுக்கும் செய்திகளைப் பேசாதும், செய்யாதும் வாழ்தல்.

'மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.' 134

கற்றவேதம் மறந்தானாயினும் திரும்பக் கற்றுக் கொள்ளலாம், பார்ப்பான். பார்ப்பான் பிறப்புக்குரிய ஒழுக்கத்தில் கெடுவானாயின் கெட்டுப்போவான்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பது வள்ளுவம். ஆதலால் இங்குப் 'பிறப்பொழுக்கம்' என்பது இரண்டாவது பிறப்பையேயாம். பார்ப்பனர்க்கு இருபிறப்பு உண்டு. முதற்பிறப்பு எல்லாரும்போல. இரண்டாவது பிறப்பு, முப்புரிநூல் அணிந்து காயத்திரி முதலிய மந்திரங்கள்

எண்ணத்தலைப்படுதல். இந்த அடிப்படை ஒழுக்கம் தவறக் கூடாது.

பார்ப்பனர்க்குரிய பிறப்பொழுக்கம் குன்றியவர் களைப் பார்ப்பனர் என்று மதிக்காதே!

பார்ப்பனராவார் வேதம் ஓதுதல், ஓதுவித்தல் என்ற தொழிலையே மேற்கொள்ள வேண்டும். மற்றத் தொழில்கள் பார்ப்பனர்க்குரியன அல்ல. மற்றத் தொழில்கள் செய்வாரா யின் அந்தந்த இனத்திலேயே அவர்களைச் சேர்க்க வேண்டும்.

'அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.' 135

அழுக்காறு உடையவரிடம் வளர்ச்சி இல்லை. அதுபோல ஒழுக்கமில்லாதவனுக்கு உயர்வு இல்லை.

அழுக்காறு கொள்ளும் மனம் வளர்ச்சிக்குரிய நெறிகளை நாடாமல் மற்றவர் வளர்ச்சியைக் கண்டு எரிச்சலுற்று அழிக்கும் செயல்களில் ஈடுபடுவதால், அவர் வளர்ச்சிக்குரிய வழிகள் தடைப்பட்டுப் போகின்றன. ஆதலால், மற்றவர் வளர்ச்சியைப் பார்த்து மகிழ்க! பாராட்டுக! அவர் வளர்ந்த வகைகளை அறிந்து அந்நெறிகளைப் பின்பற்றுக! இதுவே வளர்ச்சிக்குரிய வழி!

ஒழுக்கம் என்பது உயர்வுக்கு வாயில். ஒழுக்கமில்லா தாரிடம் காலம் வீணாகும். அவர்தம் பொறிகளும், புலன்களும் தீயவழியிலான நுகர்ச்சிகளில் ஈடுபடும். அதனால், உயர்வுக்குரிய வாயில்கள் அடைபட்டுத் தாழ்வுற்றுத் துன்புறுவர்.

ஆதலால், ஒழுக்கத்திற்கு வித்தாகக் காலம் போற்றுக. வாழ்க்கையை வளர்க்கும் வள்ளுவத்தைப் போற்றுக; பொறி களுக்கும் புலன்களுக்கும் நற்காட்சிகளையும், நற்கருத்து களையும் விருந்தாகத் தருக.

'ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.' 136

மனவலிமையுடையோர், ஒழுக்கத்தில் நின்றபின் அருமை நோக்கி ஒழுக்கத்தைக் கைவிடார். ஒழுக்கத்தில் வழுவிவிடின் இழிகுலத்தைச்சாரும் குற்றமுண்டாகும்.

ஒழுக்க நெறியில் நிற்றல் சற்று அருமையான முயற்சியே யாகும். தொடக்கநிலையில் ஒழுக்கநெறி நிற்றல் இடர்ப் பாடாக இருக்கும்; ஆயினும், பழகப் பழக ஒழுக்கநெறி இயல்பாக அமைந்துவிடும். எளிதில் எய்த இயலாத ஆக்கத்தையும் பெருமையையும் அடையலாம். ஆதலால், அருமை கருதி அயர்ந்துவிடாமல் தொடர்ந்து ஒழுக்க நெறியில் நிற்றல் வேண்டும்.

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.' 137

ஒழுக்கமுடையவர் மேம்பாட்டை அடைவர். ஒழுக்கம் தவறியவர் அடைதற்குரியதல்லாத பழியை அடைவர்.

ஒருவர் ஒழுக்கம் உடையராயிருந்தால் அவர்க்கு மட்டும் நன்மையன்று. அவரைச் சார்ந்தோர்க்கும் அவர்தம் நாட்டுமக்களுக்கும்கூட நன்மைதருவது. அதனால், எல்லார்க்கும் நன்மைபயக்கும் ஒழுக்க நெறியை அடைதல் நன்மையையும் தரும்; மேன்மையையும் தரும்.

ஒழுக்கத்தினின்றும் இழிதல், தனக்கும் தீமையைத் தரும்; மற்றவர்க்கும் தீமையைத் தரும். பலரால் பழிக்கப்படும் பழியையும் தரும். ஆதலால், ஒழுக்கத்தில் தவறுவதைத் தவிர்த்திடுக. ஒழுக்கத்தில் தவறுவதால் பொதுப்படையாக, "கெட்டவர்" என்று பெயர் வாங்கிவிடுவதால் சில சமயங்களில் தாம் செய்யாத தவறுகளுக்கும் ஆளாக்கப் படுவர் என்பதனால் "எய்தாப்பழி" என்றார்.

'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.' 138

நல்லொழுக்கம் அறத்திற்கு வித்தாகும். தீய ஒழுக்கம் என்றும் துன்பம் தரும்.

நல்லொழுக்கம் அறத்திற்கு வித்தாகும் என்று கூறியதால் இன்பம் வந்தடையும் என்பது உணர்த்தியது. தீயொழுக்கம் என்றும் துன்பம் தரும் என்றதால் இம்மை மறுமை இரண்டிலும் என்பது பெறப்பட்டது.

ஆதலால், அறத்திற்கும் இன்பத்திற்கும் காரணமாக இருக்கும் ஒழுக்கத்தை இடையீடின்றி மேற்கொள்க.

'ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.' 139

ஒழுக்கமுடையவர்கள் மறந்தும் தம் வாயால் தீய சொற்களைச் சொல்லுதல் இயலாது.

ஒழுக்கமுடையவர்கள் மற்றவர்களுக்குத் தீங்குபயக்கும் தீய சொற்களைச் சொல்லமாட்டார்கள். அவர்கள் முயன்றாலும் அவர்களால் சொல்லமுடியாது. அது அவர்கள் தம் ஒழுக்கம்.

நெஞ்சிற் கிடக்கும் சிந்தனை-உணர்வுகளுக்கு ஏற்பவே சொற்கள் அமையும். நெஞ்சத்தில் அல்லது சிந்தனையில் நல்லெண்ணம் இருப்பின் சொற்களும் நல்லனவாக அமையும். ஆதலால், ஒழுக்கம் என்பதை முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமானால் மனம், புத்தி, சிந்தனை, சொல், செயல் அனைத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்றிற் கடைப்பிடித்து மற்றொன்றிற் கடைப்பிடியாது போனாலும் ஒழுக்கம் சிதைவுறும். ஆதலால், வாழ்க்கையில் அனைத்துத் துறையிலும் ஒழுக்க நெறி பேணுக.

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.' 140

உலகத்துக்கு இசைந்த வகையில் ஒழுகக் கற்காதவர்கள் பற்பல கற்றாராயினும் அறிவு இல்லாதார் என்றே கருதப் படுவர்.

திருக்குறளில் இஃதொரு சிறந்த குறள்; உலகம் என்பது மாற்றத்திற்குரியது; மாறிக் கொண்டே வருகிறது. உலகத்தில் மாற்றங்களிருந்தால்தான் வளர்ச்சியிருக்கும். ஒவ்வொரு வரும் அந்தந்தக் காலச் சூழலுக்கேற்ற ஒழுகலாறுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். நடைமுறைக்கு ஒவ்வாத பழைய பழமைகளைத் தொடர்ந்து பின்பற்றுவதில் பயனில்லை. ஆயிரம் கற்றும் உலகியல் நடைமுறைக்கு இசைந்து வாழாது போனால் என்ன பயன்?

சான்றாக, ஒருகாலத்தில் சாதிமுறை இருந்தது. அவற்றிற்கேற்ப அன்றைய நடை முறைகள் கற்பிக்கப் பெற்றன. இன்றைய உலகம் பிரிவுகளை வெறுக்கிறது; உயர்வு தாழ்வுகளை ஒதுக்குகிறது; மனித குல ஒருமைப்பாட்டை விரும்பி நிற்கிறது. இன்னும் பழைய சாத்திரங்களின் பெயரால் சாதிகளைக் காப்பாற்ற நினைப்பவர்கள் உலகத்தோடு ஒட்டஒழுகக் கற்காதவர்கள். ஆதலால், நாடொப்பன செய்க. உலகத்துக்கு இசைந்து வளர்க! வாழ்க!

15. பிறனில் விழையாமை

(காமம் மீதூர்ந்து மற்றொருவனுக்கு வாழ்க்கைத்துணை நலமாக அமைந்திருப்பவளை விழைதல் கூடாது. இங்ஙன மின்றி விழைவதால் சமூக இனங்கள் கெடும். கலகமும், கொலையும் வளரும். மன்பதை இன்பமும், அமைதியும் தழுவிய வாழ்க்கையை இழக்கும்.)

பிறனில் விழைவோர் அறத்தையும் இழக்கின்றனர். பிறர் வீட்டுக் கடைவாயிலில் நின்று, அச்சத்தால் விரும்பிச் சென்ற இன்பத்தையும் இழக்கின்றனர். அதனால் இருந்தும் இறந்தார்போல் ஆகின்றனர். பிறன்மனை விழைவால்

இறந்தார்போலன்றி அவர் மாட்டுப் பகை, பாவம், அச்சம் முதலியனவும் நின்று வருத்தும். பிறன்மனை விழையாமையே அறநெறி, பேராண்மை என்றும், அவரையே நல்லோர் என்றும் பாராட்டவும் செய்கிறார் திருவள்ளுவர். ஆதலால் பிறனில் விழையாமைக்குரிய செயல் முறைகளைக் காண்போம்.

பிறனுக்கு வாழ்க்கைத் துணை நலமாய் அமைந்த பெண்களைத் தாய்போலவும், தமக்கைபோலவும், தங்கை போலவும் எண்ணுதல் வேண்டும்.

ஒருவர் வீட்டிற்குச் செல்லும்பொழுது அவ்வீட்டிற் குரிய குடும்பத்தலைவனும், தலைவியும் இருக்கும் நேரம் அறிந்தே செல்லவேண்டும். குடும்பத்தலைவி தனித்திருக்கும் போது செல்லுதல் கூடாது. தனித்த நிலையில் உரை யாடுதலும் கூடாது.

அதுபோல், தன்னுடைய வாழ்க்கைத் துணையை அழைத்துக் கொண்டன்றித் தான் வெளியில் செல்லுதலும் மற்றவர் வீட்டுக்குச் செல்லுதலும் கூடாது.

நெடிய நாள்கள் தன் வாழ்க்கைத் துணைநலத்தைப் பிரிந்திருத்தலும் கூடாது. ஒரோ வழி வாழ்க்கைத் துணை நலத்தைப் பிரிய நேரிடும்பொழுது வாளா சோம்பி இல்லாமல் சுறுசுறுப்பாக நற்பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

16. பொறையுடைமை

(பொறையுடைமை என்பது, பொறுத்தாற்றுதல் என்பதாகும். அறிந்தோ, அறியாமலோ பிறர் தமக்குச் செய்த தீமைகளை மனம் ஒப்பித் தாங்கிக் கொள்வதோடன்றி, அவர்க்குத் திரும்பத் தீமை செய்யாமை பொறையுடைமை யாகும்.)

பொறுத்தாற்றுதல் என்பது தீமை செய்தார்க்குத் திரும்பத் தீமை செய்யாமை. ஆனால் பிறர் செய்யும்

தீமையால் தாம் அழிந்துபடாமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பொறையுடைமை என்பது தமக்குத் தீமை செய்பவர்க்குத் தீமை செய்யாமையோடு அத்தீமையால் தாம் அழிந்துபோதலுக்கு உடன்படுவதன்று. மேலும், பிறர் செய்யும் தீமைகளால் அழியாமல் பாதுகாத்துக் கொள்வதோடன்றி அத்தீமைகளின் வாயிலாகவே தம்மை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும். அதுமட்டுமின்றித் தமக்குத் தீமை செய்தார்க்கு வாழ்வும் அளிக்க வேண்டும்.

நிலம், தன்னைக் கொத்தியும், வெட்டியும் துன்புறுத்து வாருக்குத் துன்பம் செய்வதில்லை. மாறாகத் தன்னைக் கொத்துதலையும், வெட்டுதலையும் பொறுத்துக் கொண்டு அதுவே வாயிலாகத் தன்னை வளப்படுத்திக் கொண்டு கொத்தியும் வெட்டியும் துன்புறுத்தினார்க்கு வாழ்வளிக் கிறது. அதுபோல வாழுதலே பொறையுடைமை.

அறியாதவர்கள் அகந்தையின் காரணமாகச் செய்யும் துன்பத்தைப் பொறுத்தாற்றுதல் வலிமையின் அடையாளம்; ஆதலால், தமக்குத் தீமை செய்தார்க்குத் தீமை செய்யாமை கோழைத்தனம் ஆகாதோ? என்று வருந்திக் கவலைப்படக் கூடாது. தீமை செய்தார்க்கும் தீமை செய்யாமைதான் வன்மை என்று கருதி மனநிறைவு பெறவேண்டும். இங்ஙனம் பொறுத்தாற்றும் பண்பின் பெருமையை அறியாதார் கோழைத்தனம் என்று பழிதூற்றாது புகழினைச் சேர்ப்பர் என்பதையும் அறிதல் வேண்டும்.

துறவு, தூய்மையானதுதான்; ஆயினும் துறவிலும் தூய்மையுடையது பிறர் சொல்லும் பழிச்சொற்களைத் தாங்கிக் கொள்ளுதல். பெரியவர்கள் உண்ணா நோன்பி ருக்கும்பொழுது சிறு செயல்களைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் வெகுண்டும் பேசுவர். அதனால், நோன்பு பயனற்றுப் போகிறது. பிறரின் பழிச்சொல்லைத் தாங்கிக் கொள்பவர்கள் உண்ணாநோன்பு மேற்கொள்ளும்

பெரியவரினும் சிறந்தவராவர். உண்ணாநோன்பு முதலியன, தீமைகளுக்குக் காரணமாக உடல் அமையும்பொழுது அதை வருத்தித் திருத்துவதற்குத்தான். அதனால் உண்ணா நோன்பிருப்பதில் பயனில்லை. ஆதலால், உடலைப் பழக்கினால் மட்டும் போதாது. உணர்வுகளையும் பழக்கிக் கொள்ள வேண்டும்.

17. அழுக்காறாமை

அழுக்காறாமை என்பது, பிறர் ஆக்கமும் நலமும் கண்டு, மகிழும் பண்பின்றி, அவர் தம் ஆக்கத்தையும், நலத்தையும் கண்டு மனப் புழுக்கமுற்று அந்த ஆக்கத்திற்கும், நலத்திற்கும் இழுக்குக் கற்பித்தல், கேடுசெய்தல் ஆகியன கூடாது என்ற ஒழுகலாறுகளை வற்புறுத்துவது.

அழுக்காறாமையை ஒழுக்க நெறியாக மேற்கொள்ள வேண்டின் எல்லோரிடத்திலும் அன்பு காட்டும் அடிப்படைப் பண்பு தேவை. மற்றவர்கள் ஆக்கத்திற்கும் நலத்திற்கும் உதவியாக இருக்கவேண்டும் என்ற குறிக்கோள் தேவை. இத்தகைய பண்பையும் குறிக்கோளையும் பெற்றவர், ஏனையோர் ஆக்கமும் நலமும் பெறத்துணை செய்வர். அவர்கள் ஆக்கமும் நலமும் அடைந்துழித் தாமே பெற்றது போல மகிழ்வர். அதனால் மற்றவர் ஆக்கமும் நலமும் கண்டு அழுக்காறு கொள்ளாது மகிழும் பண்பு இயல்பாக அமையும்.

அழுக்காறு, ஒருவர் ஆக்கத்திற்கும் உதவி செய்யாது; மாறாகத் துன்பத்தையே தரும். ஆக்கம் என்பது அறிவறிந்த ஆள்வினையாலன்றி ஒரு பொழுதும் கைகூடுவதில்லை. அழுக்காறுடையவர் தமது ஆற்றலைத் தமது ஆக்கத்திற்குச் செலவழிக்காமல், மற்றவர் ஆக்கத்தை அழிக்கப் பயன் படுத்தலால், இவர்தம் ஆக்கமும் கெடுகிறது. மற்றவர் ஆக்கமும் கெடுதலால் அறம் செய்ய இயலாமையும், மற்றவர்

ஆக்கத்திற்குக் கேடு செய்தலால் பாவமும் வந்து அமைகின்றன; அதனால் துன்பம் தழுவிய வாழ்க்கையே அழுக்காறுடைய வர்க்கு அமையும்; ஆதலால் அறமும், ஆக்கமும் வேண்டு வோர் மற்றவர் ஆக்கமும் நலமும் கண்டு புழுங்கற்க! மகிழ்க!

அழுக்காறு உடையாரை அழிக்கப் பகைவர் வேண்டிய தில்லை. அவர்களை அழுக்காறே அழித்து விடும். ஆதலால் எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் மற்றவரின் ஆக்கமும் நலமும் கண்டு மகிழவே கற்றுக் கொள்க. இதுவே வாழும் வழி.

ஒருவர் நலங்கருதிப் பிறிதொருவர் கொடுப்பதை எக்காரணம் கொண்டும் தடுக்காதே. அங்ஙனம் தடுப்பவர் உறையுளும் உண்டியும் இன்றி அல்லற்பட்டு வருந்துவர். அவர் மட்டுமின்றி அவ்வழுக்காற்றுச் செயலுக்குத் துணையாய் அமைந்த சுற்றமும் கூடக் கெடும். ஆதலால் அழுக்காறுடையவராகவும் வாழ வேண்டாம். மற்றவர் களிடத்தில் அழுக்காற்றைத் தூண்டவும் வேண்டாம். எக்காரணத்தைக் கொண்டும் ஒருவர் பிறிதொருவர்க்கு வழங்குவதையோ, தமக்குக் கிடைக்காதது மற்றவர்க்கும் கிடைக்கக் கூடாது என்ற எண்ணத்தாலோ தடுக்க வேண்டாம்.

அழுக்காறு உடையவன் வாழ்க்கையில் திருமகள் ஆட்சி செய்யமாட்டாள். ஏன்? திருமகளுக்கும் அழுக்காற்றுக்கும் நெடுந்தொலைவு. அழுக்காறுடையவன் இடத்தில் திருமகள் தங்கமாட்டாமல் மூதேவியை ஆற்றுப் படுத்தி விட்டு நீங்கிவிடுவாள்.

அழுக்காறுடையவன் பாவி. அழுக்காற்றின் காரண மாக உழைப்பின்றி வாழ்தலால் இம்மையில் செல்வம் வராது. செல்வம் இன்மையால் வறுமையுற்று, அழிதலால் தீயூழ்ப் பட்டு நரகத்தில் வீழ்வர். அதனோடு அழுக்காற்றின் காரண

மாக மற்றவர்க்கும் தீங்கு செய்தலால், பாவத்திற்கும் ஆளாகி நரகத்தில் வீழ்வர். ஆதலால் இம்மை மறுமை நலன்களை விரும்புவோர் அழுக்காற்றினைத் தவிர்த்திடுக.

பொறாமை உடையவனுக்குச் செல்வம் வராது. ஒரோ வழி வந்தாலும் அச்செல்வம் வந்தவழி ஆய்வு செய்யப் பெறும். அது போலவே அழுக்காறு இல்லாத நன்மனம் உடையாருக்குக் கேடும் வருவதில்லை. ஒரோ வழி கேடு வந்தால் இயற்கை நியதிக்கு மாறானது என்பதால் இதுவும் ஆய்வு செய்யப்படும்.

ஒருவர் பெற்றுள்ள ஆக்கம், நலம், புகழ்-இவற்றைப் பார்த்து அழுக்காறு உடையோராக வாழ்ந்தவர், வாழ்க்கையில் பெரியவராய் உயர்ந்ததே இல்லை.

அழுக்காறு இல்லாதவர் ஆக்கம் பெற்று உயர்வது உண்மை. இதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆதலால் பெருமையும், ஆக்கமும் வேண்டுவோர் அழுக்காறு கொள்ளற்க. அனைத்துயிர்களும் வாழ்வது கண்டு இன்புறுக.

1. எல்லாரிடத்திலும் அன்பு காட்டவேண்டும்.

2. எல்லாரும் மகிழ்ந்து இன்புற்றுவாழ வாழ்தலே தம்முடைய வாழ்க்கையின் இலட்சியமெனக் கொள்ள வேண்டும்.

3. மற்றவர் வாழ்க்கைக்குத் துணையாய்த் தம்வாழ்க்கை அமையும்பொழுதே தம்வாழ்க்கை இன்பமாக அமையும், என்ற எண்ணத்தைப் பெறுதல் வேண்டும்.

4. பிறந்த மேனியை ஒத்த தன்னல நயப்பினைத் தவிர்த்திடுதல் வேண்டும்.

5. பிறிதொருவர் நலம் வளர்வதிலேயே தன்னலமும் அடங்கி இருக்கின்றது என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

18. வெஃகாமை

வெஃகல்-விரும்புதல். இயற்கையில் விருப்பம் தவறுடையதன்று. உயிர்களின் விருப்பங்கள்தாம் மனித குலத்திற்குப் புதியன காணும் ஆர்வத்தைத் தருகின்றன. இந்த ஆர்வம் படைப்பாற்றலாய் வளர்ந்து வளர்ந்து புதிய நுகர்வுப் பொருள்களைப் படைத்துத் தரும். ஆதலால், இயற்கையில் வெஃகல் தவறன்று. ஆனால், விருப்பங்கள் தன்னுடைய ஆற்றல், உழைக்கும் தகுதி, சமூகத்தின் இயல்பு ஆகியவைகட்கு ஏற்றனவாக இருக்கவேண்டும். தன்னுடைய ஆற்றலுக்கும் சமூகத்தின் அளவுக்கும் இசைந்தவாறு இல்லாமல் மிகையாக விரும்புதல் ஒழுக்கக் கேடாகும். இப்பண்பின் மிக்க நிலையே இவறல், எனப்படும். இத்தகைய முறைகேடான விருப்பங்களை விலக்குவது 'வெஃகாமை' அதிகாரத்தின் நோக்கம்.

'நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.' 171

நடுவுநிலை பிறழ்ந்து பிறருடைய நற்பொருளிடத்து ஆசை வைத்தால் குடி கெடும்; குற்றமும் உண்டாகும்.

'நன்பொருள்' - என்றது உழைப்பினால் ஈட்டிய பொருளை உணர்த்தற்கு.

தன்னுடைய காலத்தையும் ஆற்றலையும் உழைப்பில் பயன்படுத்தித் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய ஈட்டத்திற்கு மேற்பட்ட வகையில் நுகர்தலை வளர்த்துக் கொள்ளக்கூடாது.

தன்னுடைய உழைப்பில் வாராத எதையும் விரும்புதல் கூடாது. மற்றவர் கொடுத்தாலும் தாம் உழைக்காமல் நுகர்தல் என்னும் பழக்கத்தை ஊக்குவிக்குமாகலால் மறுத்தலே நல்லது. இக்கருத்தைத் திருவள்ளுவர் பிறிதோரிடத்திலும்

"நல்லாறு எனினும் கொளல் தீது" என்றார். எந்தச் சூழ்நிலையிலும் பிறர் பொருளை நஞ்சு எனக் கருதும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவேண்டும். தான் ஈட்டிய பொருளுக்கு எவ்வளவு மதிப்பு, உண்டோ அதே மதிப்பை மற்றவர் பொருளுக்குந் தருதல் வேண்டும்.

நாம் உழைத்து ஈட்டிய பொருளை நம்முடைய உழைப்பில் பங்கு பெறாத ஒருவர் விரும்பிக் கேட்டாலோ, களவுத் தனமாக எடுத்தாலோ நமக்கு எவ்வளவு ஆத்திரம் வருமோ அதே போல் பிறர் பொருளை நம் மனம் விரும்பும் போது நம்மை நாமே ஆத்திரத்தால் தாக்கிக் கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

'படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.' 172

நடுவு நிலை பிறழ்ந்து வாழ்ந்திட அஞ்சி நாணுபவர்கள் பயன் கருதிப் பிறர் பொருளை விரும்பிப் பழிக்கத் தக்க செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

வாழ்க்கை யென்பது பல நோக்குடையது. அறிவு, ஆற்றல், அன்பு, அருள், திறன், ஒழுக்கம், இன்பம் ஆகியன அனைத்தும் அமைந்த வாழ்க்கையே பயனுடைய முழுமை யான வாழ்க்கை. இத்தகைய முழுமையான வாழ்க்கையை உழைத்துப் பொருளீட்டி முறையாக வாழ்ந்தால்தான் அனைத்துப் பயனும் கிடைக்கும். மேற்கூறிய வாழ்க்கைப் பயன்களில் ஒன்றிருந்து ஒன்றில்லையானாலும் வாழ்க்கை முழுமையாகாது. முழுமையான பயன்களை வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ளாமல் ஒன்று அல்லது இரண்டை அதாவது அப்பட்டமான நுகர்வை மட்டுமே விரும்பினால் வாழ்க்கை வளராது; முழுமையுறாது. அது மட்டுமன்று. ஊரார் பணத்தில் "மஞ்சட் குளிப்பவர்" என்று பழிக்கப்படும் நிலையும் ஏற்படும். அதனால் சாதாரணப் பயன்களைக்

கருதிப் பிறர் பொருளை விரும்பாதிருத்தல் நல் வாழ்க்கைக்குத் துணை செய்யும்.

> 'சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
> மற்றின்பம் வேண்டு பவர்.'
>
> 173

அறத்தினால் வரும் இன்ப அன்பினை விரும்புபவர்கள் சிறு பொழுதே அனுபவிக்கும் சாதாரண இன்பத்தை விரும்பி அறமல்லாத செயல்களைச் செய்து பிறர்பொருளை எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

"சிற்றின்பம்" என்றது அளவுகளின் பாற்பட்டதன்று. எளிமைத் தனமான இன்பம் இளிவரவானது. "மற்றை இன்பம்" என்றது உழைப்பு, ஆற்றல், அன்பு, அறம், இன்பம் ஆகியவற்றைக் குறிக்கும்.

"சிற்றின்பம்" என்பது ஆன்மாவுக்கும் அறிவுக்கும் புலன்களுக்கும் தொடர்பின்றிப் பொறிகளால் மட்டுமே துய்ப்பது. பொறிவழிப்பட்ட இன்பம் கொச்சைத் தனமானது. தவிர்த்துப் பழகவேண்டும். தனக்கு இன்பத்தையும் மற்றவர்க்குத் துன்பத்தையும் தரக்கூடியதாக அமையும் இன்பமும் சிற்றின்பமேயாம். ஆதலால், எப்பொழுதும் அறிவாலும் உணர்வாலும் துய்த்து மகிழும் இன்பத்தையே நாடவேண்டும். பொறிகளைத் தனது அறிவாண்மையின் வழி இயக்குதல் வேண்டும்.

"மற்றின்பம்" என்பது ஆன்மாவும் அறிவும், உணர்வும் ஒருங்கிணைந்ததாகவும் தாம் இன்புறும் நோக்கத்தோடு மட்டுமின்றி மற்றவர்களையும் இன்புறுத்தும் தன்மை யுடையதுமாகும்.

நாம் எத்துறை வாழ்க்கையை மேற்கொண்டாலும் அவ் வாழ்க்கையில் ஆளுமையைப் பதித்து, அறிவொடும் உழைத்து வாழும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய உழைப்பு வாழ்க்கையில் இன்பம் காணும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை, இல்லறமா? துறவறமா? என்பதெல்லாம் உரையாடற்குரியதல்ல. எப்படி வாழ்கிறோம் என்ற முறையில்தான் அது சிற்றின்பமாகவோ, பேரின்பமாகவோ இடம் பெறுகிறது.

19. புறங்கூறாமை

புறங்கூறுதல் என்பது ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிய குற்றங்குறைகளைச் சொல்லுதல். பொதுவாகப் புறங்கூறுதலுக்கு இதுவே இலக்கணமானாலும் முழுமையான இலக்கணமன்று. ஒருவரைக் கண்டவிடத்து முகமன் பேசிப் பாராட்டிவிட்டு அவர் இல்லாதவிடத்து அவரைப்பற்றியே குற்றங்குறைகளைச் சொல்லுதல் புறங்கூறலாகும். அதுமட்டுமன்று. ஒருவர்முன்னே அவர் தம் குற்றங்குறைகளை எடுத்துக்கூறி அவரைக் குற்றங்குறை களிலிருந்து விலக்கி நலங்காண வாய்ப்பிருக்குமானால் அவ்வாய்ப்பினைப் பயன்படுத்தாது, புறத்தே-அதாவது அவர் இல்லாத இடத்தே-அவர்தம் குற்றங்குறைகளைக் கூறுதல் புறங்கூறுதலாகும். இத்தகைய புறங்கூறலில் பயனில்லை. மாறாகப் பழியும் பகையும் வரும்.

புறங்கூறல் என்கிற குற்றம் தோன்றும் வாயில்கள்:

1. ஒருவரின் செல்வம், புகழ், தகுதி முதலியவற்றின் பாற்பட்ட சிறப்புகளைத் தாங்கமாட்டாது அழுக்காறு கொள்வதால் தோன்றும்.

2. ஒருவரின் கருத்தை நேரிடையாகப் பேசி மறுக்கும் திறன் இன்றி, அதேபொழுது தன் கருத்தை மிகைப்படுத்தும் பொய்மை வந்துழி புறங்கூறல் தோன்றும்.

3. ஒரே பொருளை இருவர் விரும்புகிறபொழுதும் தோன்றும்.

4. தம் பகைவரை நேரிடையாகச் சந்திக்கும் துணிவு இல்லாத பொழுதும் தோன்றும்.

5. ஒருவரைப் பொய்ம்மையாக வஞ்சக இன்சொல் பேசிப் புகழ்ந்துரைந்து, வாழ விரும்பும்பொழுதும் தோன்றும். சிறப்பாகத் தெளிவு, துணிவு, தறுகண் ஆகிய சிறப்புடைப் பண்புகள் இல்லாதவரிடம் தோன்றும்.

6. ஒருவர் தம்மைவிட மற்றொருவர் செல்வம், புகழ், பெருமை பதவிகள் பெற்றிருப்பதைத் தாங்க மாட்டாமல் அவர் பெற்றிருப்பவை அனைத்தும் தகுதி யில்லாத அறமல்லாத நெறிகளில் அடையப் பெற்றவை என்று கூறுதல்.

7. ஒருவர் தம்மைத்தாமே உயர்த்திக்கொள்வதன் காரண மாகவும் புறங்கூறல் இயல்புதோன்றும். அதாவது மற்றவரினும் தாம் உயர்வு என்று காட்டிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறபோது, உயர்வுக்குரிய காரணங்கள் இன்மையால் மற்றவர்களின் குற்றங் களைச் சொல்லுதல்மூலம் தம்மை உயர்வுடையவ ராகக் கருதும் மனப்போக்கு.

8. ஒருவருடைய உயர்வை ஏற்றுப் பாராட்டக்கூடிய பெருந்தன்மை இல்லாமல், தன்னிகழ்வு மனப்பான்மை இருந்தாலும் புறங்கூறல் தோன்றும்.

9. வறுமொழிகளினால் ஆகிய பேச்சரங்கு நடத்தும் பழக்கம் இருந்தாலும் பேச்சுக்குரிய செய்திகள் கிடைக்காத போது புறங்கூறல் தோன்றும்.

தீ-IV.8.

10. ஒருவர் தம்முடைய பொருந்தாப் பழக்கத்தை மறைத்துக் கொள்ளும் மனப் போக்கிலும் புறங் கூறல் தோன்றும்.

11. தனக்குத் தகுதியில்லாத ஒன்றை அவாவி அது தகுதி யின்மையின் காரணமாக மறுக்கப்படும் பொழுதும் தகுதியின்மையை மறைத்துக் கொள்ளும் நிலையில் புறங்கூறல் தோன்றும்.

12. ஒருவருக்குரியதை ஏமாற்றித் தனது உடைமையாக்கிக் கொள்ளும்போது ஒரோவழி புறங்கூறுதல் தோன்றும்.

13. ஒருவர் முறையாக உழைத்து நல்லின்பத்தை அடைந்து துய்த்தலும் அது போலத் தாம் இன்புறுவதற்குரிய விலையாகிய உழைப்பைக் கொடுக்காமல் வாழ விரும்புகிற போதும் புறங்கூறுதல் தோன்றும்.

14. தன்னுடைய பகைவனை முறையாக வெற்றி கொள்ள முடியாத நிலையிலும் தோன்றும்.

15. ஒருவருடைய குற்றத்தை அவர்முன் சொல்லும் நெஞ்சுர மின்மையின் காரணமாகவும் புறங்கூறல் தோன்றும்.

புறங்கூறல் என்கிற குற்றத்தைத் தவிர்க்கும் செயல்முறைகள்

1. மற்றவர்களை மதிக்கும் மனப்பான்மை வேண்டும்.

2. மற்றவர்கள் மகிழ்ந்து இன்புற்று வாழ்வதைக் கண்டு மகிழும் மனப்பாங்கு வேண்டும்.

3. அழுக்காறு கொள்ளுதல் கூடாது.

4. யாரினும் தாம் அறிந்தவர் உயர்ந்தவர் என்கிற மனப்போக்குக் கூடாது. அடக்கமும் எளிமையும் வேண்டும்.

5. *பயனின்றிப் பேசும் பழக்கம் கூடாது.*

6. *தான் ஒன்றை அடைந்து மகிழ விரும்பினால் அதற்குரிய தகுதியை உழைப்பின்வழியே அடையவேண்டும்.*

7. *ஒன்றினைக் குறுக்கு வழியில் அடைய முயலுதல் கூடாது.*

8. *ஒருவருக்குரியது என்று அறுதியிடப்பட்ட ஒன்றை அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள முயலுதல் கூடாது.*

9. *பொதுவாக யாரோடும் பகை கொள்ளாதிருத்தல் நன்று. ஒரோ வழி அறநெறியில் பகை தோன்றி விட்டால் முறையான வலிமை மூலமே வெற்றி கொள்ள வேண்டும். பகைவரின் வலியைவிடத் தன் வலியைக் கூட்டி வெற்றி கொள்ள வேண்டுமே தவிர, பகைவரின் தகுதியை வலிமையை அழித்தல் கூடாது.*

10. *ஒருவரிடத்தில் தவறுகளைக் காணின் அவரிடத்தில் நேரிலேயே நயம்பட உணரத்தக்க வகையில் தவறு களை எடுத்துக் காட்டித் திருத்தம் காண வேண்டும். ஒரோவழி குற்றங்கள் எடுத்துக் காட்டப்படும் போது கண்ணோட்டமின்றிக் கடுமையாகக் கூட நேரில் சொல்லலாம். இங்ஙனம் கூறுவதால், மனநோவு வரக்கூடும். குற்றமுடையவருக்கும் பழிப்புவராது. பழகினவருக்கும் தூற்றினார் என்ற பழிவராது.*

எந்த வகையாலும் பயத்தின் காரணமாகத் தவற்றை எடுத்துக் காட்ட இயலாதிருப்பின் குற்றமுடையாரின் குற்றம் நிகழும் வாயில்களைக் கண்டு அவர்க்கும் தெரியாமலே அந்த வாயில்களை அடைத்துக் குற்றங் களிலிருந்து விடுதலை பெற உதவி செய்ய முடியும். இதற்கும் வாய்ப்பில்லாது போனால் பழகிய நட்பின் காரணமாகத் திருத்துவதற்குரிய காலம் கருதிக் காத்திருக்க வேண்டும். எந்தக் காரணத்தை

முன்னிட்டும் குற்றங்களைக் கூறுதல் புறங்கூறுதல் பாற்படும்.

புறங்கூறல் என்கிற குற்றம் வளராமல் தவிர்ப்பதற்குரிய வழிகள்:

1. எல்லாரையும் எப்போதும் மதித்துப் பாராட்டி மகிழும் நல்லியல்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

2. யாருடனாவது மாறுபாடுகள் தோன்றினாலும் அம் மாறுபாட்டை மாற்றிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

   மாறுபாடுகளைக் காழ்ப்பாகவும் பகையாகவும் வளர்த்துக் கொள்ளக்கூடாது.

3. உலகில் எல்லாரிடத்திலும் ஏதாவது நல்ல தகுதிகள் இருக்கத்தான் செய்யும். அத்தகைய நல்ல தகுதிகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். காலம் பயனுடையது ஆதலால், எப்போதும் நற்சிந்தனை, நல்ல பேச்சு, நல்ல செயல் ஆகியவைகளில் இடைவிடாது ஈடுபடல் வேண்டும்.

4. எந்த வொன்றையும் அயராத உழைப்பின் மூலமே அடைய வேண்டும்.

20. பயனில சொல்லாமை

"எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே" என்பார் தொல்காப்பியர். பொருள் என்பது வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய எதையும் குறிக்கும். அதாவது நுகர் பொருள்கள், செல்வம், வாழ்க்கைக்குரிய நற்கருத்து, நற்பண்பாடு, மகிழ்ச்சி தரக்கூடிய கலை முதலியவற்றைக் குறிக்கும். எந்த ஒரு பொருளையும் அல்லது பயனையும் தராத சொற்களைச் சொல்லுதல் கூடாது. பயனில்லாத

சொற்களைப் பேசாமை என்பது ஓர் ஒழுக்கம். இந்த ஒழுக்கத்தின் மூலம் மனித ஆற்றல் வீணாக்கப்படாமல் பாதுகாக்கப்பெறும்; தேவையில்லாத வதந்திகள் தவிர்க்கப் பெறும். பகை முதலியனவும் தவிர்க்கப்படும். ஆதலால், காசுகளை எண்ணிச் செலவிடுதலினும் கவனமாகச் சொற்களை எண்ணிச் சொல்லப்பழகுதல் வேண்டும். பயனற்ற சொற்களை 'வறுமொழி' என்று இளங்கோவடிகள் கூறுவார்.

பயனில்லாத சொற்களைப்பேசும் நிலை, காலத்திற்கு அளவான உரிய கடமைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாத வர்க்கு ஏற்படும் சோம்பல் நிலையில்தான் பயனில சொல்லும் பழக்கம் தோன்றும். ஆதலால், சோம்பலைத் தவிர்த்து எப்பொழுதும் ஏதாவதொரு பணியில் ஈடுபட்டுச் செய்து கொண்டேயிருக்கவேண்டும். அடுத்துத் தேவை யில்லாமல் வம்புவளர் அரங்கஞ் செய்யும் பழக்கத்தைத் தவிர்க்கவேண்டும்.

பயனற்ற சொற்கள் இரண்டு வகையின. முதலாவது முற்றாகப் பயனற்ற சொற்கள். இரண்டாவது சிறிதளவு பயன் தந்து பெரிதளவு பயனற்றவை. ஒரு கருத்தை நேரிடையாக விளக்கும் வகையில் குறைந்த சொற்களையே பேசவேண்டும். சுற்றி வளைத்து இசை ஆளத்தி (இராக ஆலாபனம்) போலச் செய்து கொண்டிருக்கக்கூடாது.

நம்முடைய வாழ்நாள் நொடிக்கணக்கில் கணக்கிடப் படுகிறது. இயற்கை வெறுப்பு விருப்பின்றித் துல்லியமாகக் கணக்கிட்டு எந்தக் காரணத்தை முன்னிட்டும் தவணை கொடுக்காமல் வாழ்க்கையை முடித்துவிடுகிறது. ஆதலால் நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டுக் கடமைகளைச் செய்து வாழ்க்கையின் முடிவில் வாழ்க்கை பயனுடையதாக அமைய ஓயாது முயலுதல் வேண்டும். வாழ்க்கையின் உயர்ந்த நோக்கத்தைப் புரிந்து

கொண்டு அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தக்க வகையில் கடமைகளை எடுத்துக்கொண்டு ஓயாது தொடர்ந்து செய்தல்மூலம் பயனற்ற சொற்களைப் பேசும் பழக்கத்தைத் தவிர்க்கலாம்.

சொல்லவேண்டிய ஒன்றை நன்றாக ஆராய்ந்து முடிவெடுத்துச் சொன்னால், குறைந்த சொற்களில் நிறைந்த கருத்தை விளக்க முடியும்.

வாழ்க்கையில் நோக்கமில்லாதவர்கள், யாதொரு கடமையையும் பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளாதவர்கள், எத்தர்களாக வாழ்பவர்கள், நடுநிலைப் பண்பில்லாதவர்கள், விடாப்பிடிக்காரர்கள் ஆகியோரிடம் கூடுமானவரையில் பேசுவதைத் தவிர்த்துவிட வேண்டும். ஒரோவழி பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் சொற்செட்டாக இரண்டொரு சொற்களில் பேசி முடித்துவிட வேண்டும். இத்தகையோரை மனமாற்றம் அடையச்செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் பேசி நம்முடைய காலத்தை வீணாக்கக் கூடாது.

ஆயினும், மேற்கண்ட தீயஇயல்புடையோரை முற்றாக ஒதுக்கினாலும் அவர்கள் தீயநெறியிலேயே மேலும் வளர்வர். இங்ஙனம் கைவிடுதலும் வரவேற்கத்தக்கதன்று. ஆதலால், அவர்களிடத்திலிருக்கிற தொடர்பை முற்றாக நீக்கிவிடாமல், அவர்கள் போக்கிற்கு நாம் போய்விடாமல் தற்காத்துக் கொண்டு, மெல்ல மெல்ல அவர்களையும் கடமையில் கருத்துடையவர்களாக வளர்க்கவேண்டும். இத்தகையோ ரிடத்தில் நாம் பேசும்பொழுது வாழ்க்கையின் நோக்கம் அருமை, கடமை ஆகியன குறித்துப்பேசுதல் பயனற்ற சொற்களைப் பேசுதலாக எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. இத்தகைய பேச்சுகளல்லாதவற்றை ("அரட்டையடித்த"லைத்) தான் நாம் பயனற்ற சொற்கள் என்று கருதுகிறோம்.

நாம் பயனற்ற சொற்களைத் தவிர்க்கவேண்டும் என்று கருதி, முயற்சிகளை மேற்கொள்ளும் பொழுது சிலர் நம்மீது 'பெருமை பாராட்டிக் கொள்கிறோம்' என்று தவறாக எண்ணி வருத்தப்பட நேரிடும். இதனால் சிலருடைய மனத் தொல்லைகளும் பகையுங்கூட வரக்கூடும். இதைத் தவிர்க்க யாரையும் கண்டவுடன் அவர்களை மதிக்கும் உணர்வுடன் மலர்ந்த முகங்காட்டி நலம் முதலியன கேட்பதன் மூலம் இந்தத் தொல்லையைத் தவிர்க்கலாம்.

1. *பயனில சொல்லாமையால் காலம் வீணாவது தவிர்க்கப்படும்.*
2. *பயனில சொல்லாமையால் வதந்தி, கோள், பகை மூட்டும்சொல், பழி தூற்றல் முதலியவற்றைத் தவிர்க்கலாம்.*
3. *பயனில சொல்லாமையின் மூலம் மற்றவர்களுக்குப் பழி தருதலையும், தாம் பழி சுமத்தலையும் தவிர்க்கலாம்.*
4. *பயனுடைய சொற்களைத் தேர்ந்து சொல்லுதல்மூலம் காலம் மிஞ்சும்; வாழ்க்கை பயனுடையதாக அமையும்.*
5. *யோக நெறிப்படி வாணாள் வளரும்.*

பயனில சொல்லாமையாகிய இந்த ஒழுக்கத்தைத் திருக்குறள் அறமாகவும் நயன்மை (நீதி)யாகவும் அறிவுடைமையாகவும் எடுத்துக் காட்டி விளக்குகிறது.

'பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.' 191

பலரும் வெறுக்கத்தக்க வகையில் பயனற்ற சொற்களைச் சொல்வோர் அனைவரும் எல்லாராலும் இழிவாகக் கருதப்படுவர். காலக்கேடு கருதியும் கடமைச் சிதைவுகள் ஏற்படுதல் எண்ணியும் பயனற்ற சொற்களேயாயி னும் அதன் உள்ளடக்கமாகிய எள்ளல், பழி தூற்றல் ஆகிய

சொற்களால் தடைப்படுவோர் தமது செயல் தடுப்புக் கருதியும் வெகுளுவர். பயனற்ற சொற்கள் பேசுதல் இழிவையே தருவதால் இகழ்வாக நினைக்கப்படுவர்.

'பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.' 192

அறிஞர்முன் பயனற்ற சொற்களைச் சொல்லுதல் நண்பர்களிடத்து விரும்பத் தகாத செயல்கள் செய்வதை விடத் தீமையாம். நண்பர்கள் நட்பு நலன் கருதிப் பொறுத் தாலும் பொறுப்பர். ஆனால் யாரும் பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுது போக்குதலை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

'நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.' 193

ஒருவன் நயன்மை (நீதி)யற்றவன் என்பதை அவன் பயனற்ற பொருள்களை விரித்துரைக்கும் உரைகளால் அறியலாம்.

'நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து.' 194

பலரிடத்தும் பயனற்ற-பண்பற்ற சொற்களைச் சொல்பவர், நன்மை, நயன்மை (நீதி) முதலிய நற்குணங்களிலிருந்து நீங்குவர்.

'சீர்மை சிறப்போடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.' 195

இனிய தன்மையுடைய உயர்ந்தோர் சோர்வினாற் பயனற்ற சொற்களைச் சொல்ல நேரிடுமாயின் அவருடைய உயர்வும் மதிப்பும் நீங்கிவிடும்.

இதனால், எவ்வளவு உயர்ந்தோரும் பயனற்ற சொற் களைச் சொல்லக்கூடாது என்ற ஒழுக்கத்தைச் சோர்விலாது காப்பாற்ற வேண்டும்.

*'பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல்.'* 196

பயனற்ற சொற்களை விரும்பிச் சொல்பவன், மனிதனல்லன்; மக்களுள் பதராவான்.

நெல்லில் உள்ளீடில்லையானால் பதர். மனிதரில் அறிவாகிய உள்ளீடில்லையானால் பதர். அறிவற்றவரே பயனற்ற சொற்களைச் சொல்வர்.

*'நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.'* 197

அறிவுடையோர் சோர்வினால் ஒரோவழி நேர்மையற்ற சொற்களைச் சொல்லினும் ஏற்றுக் கொள்ளப்பெறும். ஆனால், எக்காரணத்தை முன்னிட்டும் பயனற்ற சொற்களைச் சொல்லுதல் ஏற்றுக் கொள்ளப் பெறமாட்டாது.

'சொல்லினும் சொல்லுக' என்றமையால் சொல்ல மாட்டார் என்பதே கருத்து. நேர்மையற்ற சொற்கள் ஒரோ வழி எல்லைக்குட்பட்ட தீமையைத் தரும். பயனற்ற சொற்களைச் சொல்லுதல் அங்ஙனமன்று; பல மடங்கு தீமையைத் தரும். அதனால், நேர்மையற்ற சொற்களைவிடப் பயனற்ற சொற்கள் அதிகத் தீமை பயப்பன என்பது பெறப் படுகிறது.

*'அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.'* 198

அறிதற்கரிய பயன்களை ஆராய்ந்தறியும் இயல்புடைய அறிவோர் மிகுபயனற்ற சொற்களை ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

பயனுடைய சொற்களாய் இருத்தல் நன்று. அதனினும் நன்று, அதிகப் பயன் விளைவிக்கும் சொற்கள். அதாவது ஒரோ வழி குறைவான பயன் தருதலைவிட நெடிய

வாழ்க்கைக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் பயன் தரக்கூடிய சொற்கள் மிகுந்த சிறப்புடையதாகும்.

'பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.' 199

ஐயத்திற்கிடமின்றித் தெளிந்த அறிவுடையோர் பயனற்ற சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்கள்.

ஐயம் நீங்கிக் குற்றமற்ற அறிவுடையவர்கள் வளர்ந்தவர்கள், அவர்கள் பயனற்ற சொற்களை ஒரு போதும் சொல்லமாட்டார்கள்.

'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.' 200

பயனுடைய சொற்களையே சொல்க. பயனற்ற சொற்களைச் சொல்லற்க.

உடன்பாட்டு வகையால் பயனுடைய சொற்களைச் சொல்லுக, என்றும் எதிர்மறை வகையால் பயனற்ற சொற்களைச் சொல்லற்க என்றும் சொல்லியது இந்த ஒழுகலாற்றின்மீது திருவள்ளுவருக்கிருந்த அழுத்தத்தை, உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

21. தீவினையச்சம்

அறமல்லாதன பாவங்கள், தீய வினைகள் செய்ய அஞ்சுதல். எண்ணத்தாலும் சொற்களாலும் நிகழும் குற்றங்களை விலக்கிய ஆசிரியர் தீயன செய்தலையும் விலக்குகின்றார்.

தீவினைகள் செய்ய அஞ்சினால் செய்யும் துணிவு ஏற்படாது. தீவினைகள் செய்ய அஞ்சுதல் என்பது ஓர் உயர் பண்பு. எதைச் செய்தாலும் இச்செயலால் மற்ற உயிர்களுக்கு யாதானும் ஒரு துன்பம் உண்டாகிவிடுமோ என்று எண்ணி

ஆய்வு செய்து யாதொரு துன்பமும், யாதோர் உயிர்க்கும் வராது காரியங்களைச் செய்தல் தீவினை அச்சமாகும்.

தீய செயல்களில் அச்சம் ஏற்படுதலுக்குக் காரணம் தீய செயல்களால் வாழ்க்கையில் துன்பங்கள் நிறையத் தோன்றுகின்றன என்பதே. எந்த உயிர்க்குத் துன்பம் செய்யப் பெற்றதோ அந்த உயிர் தனக்குத் துன்பம் செய்தாருக்குத் துன்பம் செய்ய முற்படுதல் இயற்கை. தீயன செய்தமைக்குரிய பயனை மறுமையிலும் துய்த்தாக வேண்டும். இஃதொரு முறை (நியதி). அதுமட்டுமன்று, தீயன செய்வதிலேயே காலமெல்லாம் போனதால் நல்லுலகம் பெறுதற்குரிய நல்வினைகள் செய்யப் பெறவில்லை. ஆக, இம்மை-மறுமையில் ஏற்படும் தீமைகட்காகவே தீவினை அஞ்சப் படுகிறது.

அடுத்து, யாதானும் ஒரு நன்மை செய்தல் என்பது அரிய முயற்சியினால் ஆவது, இஃது எளிதில் கை கூடுவதில்லை. நன்மை செய்யுமாறில்லையாயினும் தீவினையிலிருந்து அஞ்சித் தற்காத்துக் கொள்ளுதல் அறம் என்ற எண்ணம்.

1. தீவினை அஞ்சுதலாகிய நற்பண்பினைக் கடைப் பிடித்தொழுக நம்முடைய பொழுதெல்லாம் நற்பணிகளைக் கடமைகளை வகுத்துக் கொண்டு ஓயாது தொழிற்பட வேண்டும். சோம்பிய மனம் எளிதில் தீய வினைகள் செய்தலில் ஈடுபடும். இஃது இயற்கை.

2. இன்புற்று மகிழ்தலையே ஒவ்வொருவரும் விரும்புகிறோம். ஆதலால், செய்யும் தீய வினைகளால் மற்றவர்கள் பெறக்கூடிய துன்பத்தை எண்ணிப் பார்த்தாலே அச்சம் ஏற்படும்; செய்யும் துணிவு வராது.

3. மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்த்தலாகிய உறவுப் போக்கு, சமநோக்கு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் தீயவினைகள் செய்வதிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு வழி.

4. யார் மாட்டும் நட்பு, பகைமை, நொதுமல் என்ற வேறுபாடின்றி அன்பு காட்டினால் தீய வினைகள் செய்தலினின்றும் எளிதில் மீளலாம்.

அழுக்காறு, பகைமை போன்ற காரணங்களாலேயே தீய வினை செய்யும் சூழ்நிலைகள் வளர்கின்றன. அழுக்காறு, பகைமைகளை மறந்து விட்டால் தீயவினைகள் செய்யும் மனம் தோன்றாது.

யாரும், எவர்க்கும், எதற்கும் நன்மை செய்வதே வாழ்க்கையின் நோக்கம் என்ற உணர்வுகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் தீய வினைகள் செய்யாமை ஏற்படும்.

தீய வினைகள் செய்யாமையை முற்றாகத் தவிர்க்கும் பொழுது 'ஏமாளி,' 'கோழை' என்ற ஏளனப் பேச்சுகள் கிடைக்கும். கவலற்க; இழிவை விரும்பாமை போலவே புகழையும் விரும்பாதிருத்தல் உயர் பண்பாகும்.

அழுக்காற்றையும், பகையையும் தவிர்த்திடுக. தீயவினைகளைச் செய்ய அஞ்சுதல் மூலம் யாண்டும் பயமின்றி வாழலாம்; துன்பமே வாராது; இன்புறும் நலன்கள் பலவும் பெற்று வாழலாம்; உறவுகள் வளரும்.

திருக்குறள் அறநூல்; தீயவினை செய்யாமையாகிய அறத்தினை அறநூல் விளக்கியது.

'தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.' 201

செருக்காகிய தீமையின் பாற்பட்டவர்கள் தீய வினைகள் செய்ய அஞ்சமாட்டார்கள். நல்லவர்கள் தீயவினைகள் செய்ய அஞ்சுவார்கள்.

செருக்கு என்பது எல்லாரையும்விடத் "தாம் உயர்வானவர்," "தம்மால் எதையும் செய்ய இயலும்" என்ற மன எழுச்சியாகும். செருக்கின்மை தீவினை அஞ்சுதலுக்குந் துணை.

'தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.' 202

தீயவினைகள் தீமையையே தரும். ஆதலால் தீமை, தீயைவிட அஞ்சப்படும்.

நெருப்பு, தொடின் தப்பாமல் சுடும். அதுபோலத் தீயவினை தப்பாமல் தீமை செய்யும்.

தீயின் இயல்பு நன்மை செய்தலே; உலகத்தின் ஆக்கமும் வளர்ச்சியும் தீயினாலேயாம். எல்லை இகந்து தொட்டால் சுடும். மற்றபடி தீயினால் விளையும் பயன்கள் ஆயிரம் ஆயிரம்.

தீய வினைகளால் நன்மை சிறிதும் இல்லை; இன்பமே இல்லை. துன்பந்தான் கிடைக்கும். ஆதலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்.

'அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.' 203

தம்மைப் பகைப்பவர்க்கும் தீமையானவற்றைச் செய்யாது விடுதல், அறிவுச் செயல்கள் யாவற்றிலும் சிறந்தது என்பர் அறிவுடையோர்.

நமக்குத் தீமை செய்தாருக்கு நாம் தீமை செய்தாலும் தீமையின் பயன் வாராமல் போகாது. ஆதலால் தீமைக்குத் தீமை என்பது முறையன்று, தீமைக்கு நன்மை என்பதே வாழ்வியல் முறை.

'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.' 204

ஒருவன், மற்றவர்க்குக் கேடு செய்யும் வினையை மறந்தும் எண்ணவேண்டாம். அங்ஙனமின்றிக் கேடு செய்ய எண்ணின் அவனுக்குரிய கேட்டினை அறம் சூழ்ந்து செய்யும் என்பது கருத்து.

கேடு செய்தாருக்கும் தீமை செய்யக் கூடாது என்றால் அறத்திற்கு மட்டும் இது விதி விலக்கா?

அறக்கடவுள் என்பது, முறை (நியதி). அவரவர் செய்த செயல்களின் பயன்களை அவரவர் துய்க்கும்படி செய்வதே அறக்கடவுளின் கடப்பாடு, ஆதலால் அறக்கடவுளுக்கு வேறு பாடுகள் இல்லை. காய்தல், உவத்தல் இல்லை; அறக்கடவுளுக்கு மகிழ்ச்சியும் துன்பமும் இல்லை. சுவையற்ற துலைக்கோல், பொருள்களை நிறுத்துத் தருவது போன்றது அறக்கடவுளின் செயல்.

'இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.' 205

ஒருவன், தான் வறியவன் என்றும் செல்வம் பெறலாம் என்றும் எண்ணித் தீய வினைகளைச் செய்யற்க. அங்ஙன மின்றித் தீயவினைகளைச் செய்யின் மீண்டும் வறியவன் ஆகவே ஆவான்.

வறுமையைத் தீயவினைகளால் நீக்க முற்படுதல் கொள்ளிக் கட்டையைக் கொண்டு சொறிந்து கொண்டது போலத்தான்! தீய வினைகளால் மற்றவர்களுடையதைக் கவர்ந்து கொண்டாலும் வறுமை நீக்கம் நிலைத்து நிற்காது. கவர்ந்த பொருள் செல்லுழி, ஈடு செய்யும் ஆற்றலின்மையின் காரணமாக மீண்டும் வறியராதலே இயற்கை.

'தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.' 206

துன்பங்கள் தன்னை வருத்த வேண்டா என்று எண்ணு கிறவன், மற்றவருக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யாது தவிர்த்திடுக.

தன்னலம் பற்றியாயினும் தீய வினைகளைச் செய்யாதிருக்கவும் என்று கூறியவாறு.

'எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்(று) அடும்.' 207

எத்துணைப் பெரிய பகையைப் பெற்றாரும் தப்புதற்கு இயலும்; தீ வினையாகிய பகையோ நீங்காது செய்தவரைத் தொடர்ந்து சென்று துன்பம் தரும். தப்புதல் இயலாது.

பகையைவிட, தீயவினை செய்தல் துன்பம் தரும். பகைமைக்கு மாற்று, தீயவினை என்று எண்ணும் மனப்போக்குத் தவறு என்பது கருத்து.

'தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.' 208

ஒருவனது நிழல் அவனையே தொடர்ந்து சென்று தங்குதல் போல், தீமை தவறாது தொடர்ந்து தீமை செய்யும்.

ஒருவரை நிழல் தொடர்தல் இயற்கை. இருள் வந்த விடத்து நிழல் தெரியாது மறைந்து போகும். பின் ஒளிவந்த விடத்துப் புலப்படும். நிழல் காணப்படாதது, நிழல் இல்லை என்பதன்று.

ஒரோ வழி செல்வம், செல்வாக்குகள் காரணமாகத் தீய வினைகளின் பயனாகிய துன்பம் தாக்கப்படாமல் இருப்பது போலத் தோன்றும். சூழ்நிலைகள் தளர்வுறும்போது தீவினைகள் துன்பத்தைத் தந்தே தீரும்.

'தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.' 209

ஒருவன், தான் துன்பப் படாமல் இருக்க ஆசைப்படு வானாயின் பிறர்க்கு எத்துணையும் தீமை செய்யாமல் இருத்தல் வேண்டும்.

'அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.' 210

ஒருவன், அறநெறியினின்றும் விலகி மற்றவர்க்குத் தீவினைகளைச் செய்யாமல் இருப்பானாயின் அவன் கேடில்லாதவன் ஆவான்.

22. ஒப்புரவறிதல்

தம்மைச் சார்ந்த பலரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் எண்ணத்தாலும் செயல்களாலும் உதவிகள் செய்யும் பாங்காலும் பயன் விளைத்து வாழ்தல் ஒப்புரவு ஆகும்.

குமுகாயத்தின் ஒருறுப்பு தனி மனிதன். குமுகாயம் இவனை வளர்த்து வாழ்விக்கிறது. அதற்கு ஈடாகக் குழுகாயமும் பயனடைகிறது. குமுகாயத்தில் ஓர் உறுப்பு என்று உணர்ந்து வாழும் பொழுது, ஒப்புரவு என்ற ஒழுக்கம் தவிர்க்க இயலாதது. குமுகாயத்திற்கு ஒத்தது அறிந்து செய்தலும் குமுகாயத்திற்கு இசைந்தவாறு வாழ்தலும் ஆகும்.

1. வளர்ந்து வாழ்வதற்குத் துணையாக அமைந்துள்ள குமுகாயத்திற்குப் பயன் பட வாழவேண்டும் என்ற உணர்வில் ஒப்புரவு தோன்றும்.

2. சிந்தையாலும் செயலாலும் குமுகாயத்திற்குப் பயன்பட வாழ்தல் வேண்டும் என்ற உணர்வே ஒப்புரவு நெறியின் தோற்றம்.

3. தற்சார்பான வாழ்க்கையை விடக் குமுகாயச் சார்பான வாழ்க்கையே அறச்சார்புடையது என்று எண்ணி வாழத் தலைப்படும் பொழுது, ஒப்புரவு நெறி தோன்றுகிறது.

4. வரலாற்று உணர்வோடும் குமுகாயச் சிந்தனை யோடும் வாழத் தலைப்படும் பொழுது, ஒப்புரவு ஒழுக்கம் கால் கொள்ளும்.

5. எந்த ஒன்றையும் குமுகாய உணர்வுடன் சிந்தித்துக் குமுகாயம் பயனுற வேண்டும் என்ற உணர்வுடன் இயற்றுதல் ஒப்புரவறிதலை நடைமுறைப்படுத்தும் வழி.

6. ஒப்புரவறிதல் ஒழுக்க நெறி நிற்கும் பொழுது ஒரோ வழி இடர்ப்பாடுகளும் வரலாம். குமுகாயம், நன்மையைத் தெரிந்து ஏற்காமல் மறுதளிக்கலாம்; தொல்லைகளைத் தரலாம். ஆயினும் ஒப்புரவறிதல் நெறி நிற்றலே சிறப்புடைய வாழ்க்கை. வரலாற்றில் ஒப்புரவறிந்து வாழ்வோர் இடம் பெறுவர். ஏசு, முகம்மது நபி, சாக்ரடீசு, அப்பரடிகள், வள்ளலார், காந்தியடிகள் முதலானோரின் ஒப்புரவு நெறி நின்ற வாழ்க்கை அன்றைய குமுகாயத்தின் முன்னோடிகளால் ஏற்கப்படவில்லை; மாறாக அவர்களுக்குத் தொல்லைகளும் வழங்கின. ஆனால், இன்று உலகம் நினைவு கூர்வது இந்தப் பெருமக்களையேயாம்.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.'

211

மாற்று உதவியை எதிர்பார்க்காது மழை பொழிவதைப் போல, ஒப்புரவாளர்கள் யாதொன்றையும் எதிர் பாராது குமுகாயத்துக்கு நன்மைகளைச் செய்வர்.

1. ஒன்றை எதிர்பார்க்கும் மனநிலையில் உதவிகளைச் செய்தல் வணிக மனப் போக்கினைச் சார்ந்தது. வணிக மனப் போக்கு அன்பு, அறம், அருள் ஆகிய உணர்வுகளுக்கு எதிர் மறையானது. 'அறவிலை வணிகன் ஆய் அலன்' என்பது புறநானூறு.

2. எதிர்பார்த்தது நடவாத போது ஏமாற்றம் ஏற்பட்டு ஒப்புரவுக்கு எதிர்மறையான பகை உணர்வு கால் கொள்ளும். ஆதலால், யாதொன்றையும் எதிர்பாராமல் செய்வதே ஒப்புரவுக்கு நல்லது.

தி. IV. 9.

3. பலசமயங்களில் உதவி பெற்றவர் திரும்பச் செய்ய நினைத்தாலும் இயலாத நிலை நேர்வதுண்டு. அப்போது அவர்; 'உதவி செய்தவர் எதிர்பார்த்தபடி செய்ய முடிய வில்லையே' என்று நினைத்து வருந்துவர்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.' 212

ஒப்புரவாளன் முயன்று ஈட்டிய செல்வம் முழுதும், தக்கவர்களுக்கு உதவி செய்தலுக்கே யாம்.

"தாளாற்றித் தந்த பொருள்": அயரா முயற்சியால் ஈட்டிய பொருள் என்பது கருத்து. தாளாற்றித் தந்த பொருள் என்றதால் வழி வழி வரும் செல்வமும் ஆகூழால் வரும் செல்வமும், பிறர் பங்கைத் திருடுவதால் வரும் செல்வமும் செல்வமாகா என்ற உண்மை பெறப்படுகிறது. உழைப்பின் மூலம் வரும் செல்வமே செல்வம் என்பது வள்ளுவம் காட்டும் உண்மை.

"தக்கார்க்கு வேளாண்மை செய்தல்" என்றதால் தகுதி உடையவர்க்கே உதவி செய்தல் வேண்டும் என்பது கருத்து. இங்குத் தகுதியுடையவர் என்றது, பெற்ற உதவியைக் கொண்டு மேலும் வளர்வதற்குரிய இயல்பினைப் பெற்றவர் என்று பொருள் தரும். ஒழுக்கக் கேடிலாதவர் என்றலும் அமையும்.

1. ஓயாது உழைத்துப் பொருள் ஈட்டுக.

2. உதவி வேண்டியவர்களுக்கும், உதவியின் மூலம் வளர்ந்து வாழக்கூடியவர்களுக்கும் உதவி செய்க.

'புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.' 213

ஒப்புரவு போன்ற நல்ல செயல்களைத் தேவர் உலகத்திலும் பெறுதல் அரிது. இந்த மண்ணுலகிலும் அரிதாகவே காண இயலும்.

தேவருலகத்தில் காமதேனு, கற்பகத்தரு ஆகியன இருப்பதால் ஈவாரும் ஏற்பாரும் இல்லை என்பது புராணக் கருத்து. மேலும், தேவர்கள் தற்சார்பினால் சண்டை போட்டுக் கொள்ளும் இயல்பினர். ஆதலால், அமரருலகில் ஒப்புரவு ஒழுக்கம் இல்லை போலும்.

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.' 214

குமுகாயத்திற்கு ஒத்ததறிந்து செய்பவன் வாழ்கின்ற வனாகின்றான். இங்ஙனம் குமுகாயத்திற்கு ஒத்தது அறிந்து செய்யாதவன் வாழ்கின்றானில்லை; செத்தவனாகின்றான்.

1. குமுகாய நலமறிந்து செய்தல் ஒத்ததறிந்து செய்தலாகும்.

2. உயிர்க்குரிய இயல்பும் பயனும் இன்மையால் செத்தார் என்றார்.

தனக்கு நலம் பயப்பனவெல்லாம் மற்றவர்க்கும் ஆம் என்று அறிந்து செய்தல் ஒத்ததறிதல் என்று கூறலும் அமையும்.

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.' 215

உலகு தழுவிய வாழ்க்கையை விரும்புகின்றவனுடைய செல்வம் ஊரில் உள்ளாரெல்லாம் உண்கின்ற தண்ணீர் நிறைந்த ஊருணி போன்றது.

"ஊருணி" உண்ணும் நீரினையுடைய நீர்நிலை. இன்றும் இந்த வழக்கு உள்ளது.

உலகு தழுவிய வாழ்க்கையை விரும்புகின்றவர்கள் "நான்" "எனது" என்ற உணர்வுகளைக் கடந்தவர்கள். அதன் காரணமாக அவர்தம் செல்வம் ஊருணி போன்றதாயிற்று. ஊருணி ஊராருக்குப் பயன்படுவதன்மூலம் தனது தூய்மை,

ஊற்றுவளன், நிலையாய் அமைதல் ஆகிய பயன்களையும் பெறுகின்றது; அதுபோலப் பிறருக்கும் குமுகாயத்திற்கும் பயன்பட வாழ்பவர்களும் பயனடைதல் இயற்கை என்பதை உணர்த்தியவாறு. "ஊருணி" உதவுவதில் ஊருணிக்கும் பயனுண்டு. ஊருணி ஒத்தவர் வழங்குவதில் உலகறிய வாழ்தல் முதலான பயன் பல விளையும்.

'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.' 216

நேர்மையாளனிடம் உள்ள செல்வம் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்தாற் போன்றது.

நேர்மைப் பாங்குடையவர் செல்வத்தின் பயன் ஈதல் என்பதை உணர்வர். ஆதலால் "நயனுடையான்" என வியந்து கூறினார்.

"பயன்மரம்" உள்ளூர்ப் பழுத்தற்று; விரும்புவார்க்கு எளிதில் பயன்படத் தக்க நிலையில் ஊருக்குள் பழுத்தமரம் என்பது கருத்து. சில செல்வர் உள்ளூரிலேயே இல்லாமல் நெடுந் தொலைவில் உள்ள நகரங்களில் போய் வாழ்வர். இது உள்ளூராரிடமிருந்து தப்பித்தலுக்கே என்று எண்ணுவதில் தவறில்லை.

பயன்படு மரங்கள் பயன்படு நிலையில் உரிமை யுள்ளவை. விருப்பு-வெறுப்பு ஆகியவற்றிற்கு இடமில்லை என்பது உண்மை. அதுபோல நயனுடையார் விருப்பு-வெறுப்புகளுக்கு அப்பால் நின்று வாழ்வர்.

விருப்பு-வெறுப்புகளின்றி அனைவரும் பயனுறத் தக்க வகையில் வாழ்க.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.' 217

பெருந்தகையாளனிடம் சேரும் செல்வம் தப்பாது பயன்படும் மருந்து மரம் அனையது.

"பெருந்தகையார்" தமக்கு வரும் இடர்களையும் ஏற்றுக் கொண்டு குமுகாயம் பயனுற வாழ்பவர்.

மருந்து மரம், தான் இடர்ப்பட்டும் சார்ந்தார் நோய் நீக்கத்திற்குப் பயன்படும்.

இடர்ப்பாடுகளைப்பற்றி எண்ணாது மற்றவர் துன்பத்தை நீக்க முயல வேண்டும்.

'இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.' 218

வாழ்க்கையின் கடப்பாட்டினை அறிந்தவர்கள் வளமான செல்வம் இல்லாத காலத்திலும் ஒப்புரவு நெறி நிற்பதற்குத் தளர்ச்சியடைய மாட்டார்கள் (முந்துவர்).

வளமான செல்வம் உள்ளபோது செய்தலைவிட வறுமையுற்ற நிலையில் ஒப்புரவு நெறி நிற்றலின்மூலம் தன் துன்பம் தாங்கும் உணர்வும் செல்வம் ஈட்டும் முயற்சியும் தோன்றும். ஆதலால் ஒப்புரவறிதலுக்கு வறுமை தடையில்லை. வறுமை நிலையில் ஒப்புரவறிதல் இயலாது என்று கருதி வாளா இருத்தல் கேடு செய்யும். இந்நிலையிலும் முயன்று செய்தலே வாழ்க்கையின் கடப்பாடு.

'நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.' 219

நேர்மையாளனுக்கு வறுமையாவது, ஒப்புரவுப் பண்பை முறையாகச் செய்ய இயலாது போதலேயாகும்.

நேர்மையாளனுக்கு வறுமை, ஒப்புரவு மேற் கொள்ளாமையேயாகும்.

தாம் நுகர்தலைவிட மற்றவர்க்குப் பயன்பட வாழ்தலே பெரிது என்று கருதுதல் ஒப்புரவு நெறிக்குரிய பண்பு.

எந்தச் சூழ்நிலையிலும் ஒப்புரவு நெறி நிற்கத் தவற வேண்டாம்.

'ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.' 220

ஒப்புரவினால் கேடு வரும் எனில் அக்கேடு விலை கொடுத்தாயினும் கொள்ளத் தக்கதேயாம்.

"ஒப்புரவினால் வரும் கேடு எனின்" என்றதால் ஒப்புரவினால் கேடு வராது என்பது திருவள்ளுவரின் முடிபு.

இதனை "வித்தும் இடல் வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்று கூறியதாலும் அறிய முடிகிறது.

ஒப்புரவு நெறி நிற்காதொழியின் பழிவரும், அதனால் பழி நீங்கிய வாழ்க்கை பெற எந்த விலையும் கொடுக்கலாம் என்பது கருத்து.

23. ஈகை

ஈகை என்பது, துய்ப்பன பெறாது வறுமையால் வருந்து வோர்க்குத் துய்க்கும் பொருள்கள் கொடுத்து உதவுதலாகும்.

நமது குமுகாய அமைப்பு, செல்வத்தில் ஏற்றத் தாழ்வுள்ள குமுகாய அமைப்பாகும். ஒரு கோடியில் அடுக்கிய பலவளமும் மற்றொரு கோடியில் வருத்திக் கொல்லும் வறுமையும் இருப்பது நம்முடைய நாடு. இந்த நிலை சங்ககாலந் தொட்டே இருந்து வருகிறது. இத்தகைய சமுதாய அமைப்பில் ஈகை என்பது தவிர்க்க இயலாத அறம்; கடமை. ஏன்? செல்வத்தில் நிறைய ஏற்றத் தாழ்வில்லாத பொது உடைமை நாட்டிலே கூட, துய்ப்பதற்குரிய எல்லாப் பொருளும் எல்லாரிடத்திலும் இருக்காதல்லவா? வறுமை யில்லாது போனாலும் பொருளில்லாமைக் குமுகாயம் ஈகையை அவாவி நிற்கும். அதுமட்டுமன்று. ஒருவர் வாழ்க்கை முழுமையாக வெற்றிபெற எத்தனை தேவைகள் உள்ளன! தேவை யென்றால் பொருள் தேவை மட்டுந்

தானா? அறிவு, அன்பு, ஆற்றல், குணம் முதலியனவும் தேவை தானே! இவற்றை வழங்குவதும் ஒருவகையில் உதவி செய்த லாதலால் ஈகையின் பாற்படுத்தி எண்ணினாலும் தவறன்று.

ஈகை என்ற நல்லொழுக்கம் ஒருவரிடத்தில் தன்னலம் குறைந்து சமுதாய நலம் மிகும்பொழுது தோன்றக் கூடியது. ஒருவர், அன்பிற் சிறந்தவராகவும் செல்வத்தின் பயன் தெரிந்தவராகவும் இருக்கும்பொழுது ஈகைப் பண்பு தோன்றி வளரும்.

மற்றவர்கள் உண்பன. உடுப்பன இன்றி வருந்தும் துன்பமே ஈகை தோன்றுதற்குரிய வாயில்கள்.

மற்றவர்கள் படும் துன்பத்தை மாற்றும் வகையில் வேண்டியன கொடுத்து உதவி செய்ய வேண்டும். அங்ஙனம் கொடுத்து உதவி செய்யும் பொழுது, வறுமையிலிருந்து மீளத் தக்க வகையில் உதவி செய்ய வேண்டும்.

உதவி செய்வதற்குரிய தகுதி, வறுமையில் வருந்துவதைத் தவிர வேறு எந்தக் காரணமும், காரணமாக அமையக் கூடாது.

ஈகை அறம் செய்யும் பொழுது, செல்வ இழப்பு ஏற்படுகிறது. இங்ஙனம், செல்வ இழப்பு ஏற்படாமல் இருக்க தொடர்ச்சியான பொருள் செயல் முயற்சிகளை மேற் கொண்டு பொருள் ஈட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

யாருக்கு உதவி செய்யப்படுகிறதோ அவர் பெற்ற உதவியைக் கொண்டு வளராமையின் காரணமாக வெறுப்புத் தோன்றும். இந்த வெறுப்பை அடக்கிக் கொண்டு அவரைப் பக்குவப்படுத்தி வளர்க்கத் தொடர்ந்து அவருடன் போராட வேண்டும்.

ஈகை அறம் இயற்றும்பொழுது தமது உதவியைப் பெற்றவரிடம் திரும்ப ஓர் உதவியைத் தாம் எதிர்பார்க்கக் கூடாது.

நன்றிக் கடப்பாடு, புகழ் முதலியவற்றைக் கருதியும் ஈகை செய்தல் கூடாது.

சார்புகள் வழிச் சிக்கிய நிலையில் உதவி செய்தல் அல்லது செய்யாமை மேற் கொள்ளுதல் கூடாது.

ஈகை அறம் முறையாக நிகழ்வதன்மூலம் சமுதாயத்தில் வறுமை நீங்கும்; அன்பு பெருகும்; சமுதாய உறவுகள் வளரும்; சமுதாயம் அமைதியான சூழ்நிலையில் நடைபோடும்.

தனிமனிதனுடைய மேம்பாட்டுக்கும் சமுதாயமேம் பாட்டுக்கும் ஒரு சேர ஈகை உதவி செய்வதால் அது சிறந்த அறம்.

'வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.' 221

வறுமையின் வாய்ப்பட்ட ஏழையர்க்குச் செய்வதே ஈகை. இங்ஙனமல்லாது கொடுப்பது எல்லாம் யாதானு மொன்றை-யாதானுமொரு பொருளைத் திரும்ப அடையும் வகையில் வழங்கப்பெறும் கடனேயாம்.

பொருள் இல்லாதார் வாழ்க்கையை மேம்படுத்து வதற்கே ஈகை என்ற அறம். ஆதலால், வறுமையுடையோரைக் கண்டால் அலட்சியப்படுத்தாது அவர்களுக்குக் கொடுப்பது தான் அறம்; இங்ஙனம் கொடுப்பதே இம்மையிலும் மறுமையிலும் பயன்தரும்,

'நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.' 222

பிறரிடத்திலிருந்து வாங்குவது வீட்டுலகத்திற்குச் செல்வதற்குரிய நல்வழியென்று அறநூல் கூறினாலும் பிறரிட மிருந்து கொள்ளுதல் தீயதே. பிறருக்குக் கொடுப்பதால் மேலுலகத்தைப் பெறமுடியாது என்று கூறினாலும் கொடுத்தலே நல்லது.

எந்தச் சூழ்நிலையிலும் கொள்ளுதல் தீது; கொடுப்பதே நன்று.

கொடுத்தலைத் தாழ்த்தியும் கொள்ளுதலை உயர்த்தியும் அறநூல் கூறுமானால் அஃது அறநூலன்று. அது பொய்ம்மையான சாத்திரம் என்று அறிக.

இது பிறர் மதம் மறுத்தது. வாங்குதலின் மூலம் இந்த உலகத்தில் நாட்டுத் தேவராகவும் மறுமை உலகத்தில் தேவராகவும் ஆகி வாழுகின்ற பிறர் மதம் மறுத்துத் தமிழ்மரபு நிலை நிறுத்தியமையை அறிந்து இன்புறுக.

ஈகை அறத்தைச் செய்தல் மூலம் இந்த உலக வாழ்க்கையில் நல்லுறவும் அமைதியும் இருக்கும். இஃது உடனடியான தேவை. ஆதலால், "மேலுலகு இல்லெனினும் ஈதலே நன்று" என்றார்.

இந்த உலக வாழ்க்கை அனைத்துத் துறையிலும் சீருடையதாக அமையின் மேலுலகம் கிடைத்தே தீரும், அதை இல்லை என்று சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது.

'இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.' 223

ஒருவன் தான் ஏழை என்று தனது ஏழ்மையை வெளிப்படையாக மானம் போகிற வகையில் சொல்லிக் கேட்பதற்கு முன்பே அவன் வறுமையினை அறிந்து ஈதல் செய்யும் சிறந்த குணம் உயர்குடிப் பிறப்பாளரிடம் உண்டு.

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்" என்பதற்கு ஒருவருடைய ஏழ்மையை மற்றவர்களிடம் கூறி, மானக்கேட்டிற்கு ஆளாக்காமல் அவர்தம் வறுமையை விளம்பரப் படுத்தாமல் மறைத்து உதவி செய்யும் பெருங்குணம் உயர்குடிப் பிறந்தார் கண்ணே உண்டு என்னும் பொருள் கொள்வர்.

1. வறுமையின் கீழ்மையை உணர்வோர் மானத்திற்கு அஞ்சி எளிதில் சென்று இரக்க மாட்டார். அதனால், வறுமையால் இறத்தலும் நிகழ்தல் கூடும். இதனைத் தவிர்க்க வறுமையுற்றோர் இரந்து கேட்கட்டும் என்று எதிர்பார்க்காமல் வலியச் சென்று உதவி செய்தலே உயர்குடிப் பிறப்பின் இலக்கணம்.

2. ஒருவரின் வறுமையை மற்றவர்களிடம் எடுத்துக் கூறி இழிவை உண்டாக்காமல் வறுமையுற்றோர் தகுதி குறைவுபடாமல் கொடுத்து உதவும் பண்பு உயர்குடிப் பிறந்தார்களிடம் உண்டு.

3. வறுமை வாய்ப்பட்டு வருந்துவோரின் வறுமைத் துன்பத்தை முற்றாக நீக்கக் கூடிய வகையில் உதவி செய்வதே ஈதல். இங்ஙனம் ஈதல் மேற்கொள்ளும் பண்பு. உயர்குடிப் பிறந்தாருக்கே உண்டு.

4. ஒருவரின் துன்பத்தை - வறுமைத் துன்பத்தை முற்றாக நீக்கப் பயன்படாத ஈகை, வறுமையொடுபட்ட ஈகையாகும். இத்தகு வறுமையொடுபட்ட ஈகை யாற்றலால் பயன் இல்லை.

5. "எவ்வம் உரையாமை ஈதல்" என்றதால் வறுமைக்குக் காரணம் குமுகாய நடைமுறையின் குறைபாடுகளே என்ற கருத்து உய்த்துணரக் கூடியது.

6. "குலனுடையான் கண்ணேயுள" என்றதால் உயர் குடிப் பிறப்பின் தன்மை ஈகை ஒன்றாலேயே அறியப்படும்.

வேறு காரணங்களால் உயர்குடிப் பிறப்புரிமை கொண்டாடுதல் அறமன்று.

'இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.'

224

உயர்குடிப் பிறந்தார்க்குத், தம்மிடம் இரந்தவரின் இன்முகம் காணும் அளவுக்கு வழங்க இயலாத பொழுது இரக்கப்படும் நிலையில் இருத்தலும் துன்பமேயாம்.

இந்தக் குறள் பட்டறிவில் பிறந்த குறள். இந்தக் குறள், நம்மில் பலருடைய வாழ்க்கையில் அன்றாட நடைமுறை. இரப்போன் பேராசையுடையோனாக இருந்தாலும், இரப் போனின் மனம் நிறைவு பெறத்தக்க வகையில் வழங்கு வதற்குப் பொருளில்லாது போயினும் இரக்கப்படுதல் துன்பந் தானே!

இத்துன்பத்திலிருந்து தப்பிப்பதற்கான வழிகளாவன:

1. வறுமையுற்றோர்க்குத் துய்ப்பனவாகிய பொருள் களையே வழங்காமல், அந்தப் பொருள்களை அவர்கள் பெறுவதற்குரிய வாயில்களை அமைத்து 'முதலை' மட்டும் தருதல் ஒரு வழி.

2. ஈகை அறம் மேற்கொண்டால் அந்த அறம் வளரும் தன்மையது. அதனால் ஈகை அறத்தினை முழுமையாகச் செய்யவும், இடையறவு படாமல் இயற்றவும் தொடர்ந்து அறிவறிந்த ஆள்வினையை மேற்கொண்டு பொருளீட்டுதல் இன்றியமையாதது.

'ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.' 225

தவத்தின் ஆற்றலால் பசியைப் பொறுத்துக் கொள்ளும் தவத்தோரின் ஆற்றல், உயிர்களை வருத்தும் பசியை உணவு முதலியன கொடுத்துத் தீர்த்து வைப்போரின் ஆற்றலுக்குப் பின்னதேயாம்.

உயிர்க்குலத்தை வருத்தும் பசியை, உணவு முதலியன வழங்கி நீக்குபவர்களின் ஆற்றலுக்கு அடுத்துத்தான் தவத்தின் வலிமையால் பசியைப் பொறுத்துக் கொள்வோரின் ஆற்றல் வைத்தெண்ணப்படும்.

தவத்தோராலும் பசியைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்றும் பொருள் கொள்வர்.

தவத்தோர் பசியைப் பொறுத்தல் என்பது தன்னளவி லேயாம். ஈகை அறம் மேற்கொண்டான் தன்னளவில் மட்டு மன்றி, மற்றவர் பசியையும் மாற்றுகின்றான். அதனால் பின்னது சிறப்புடையது.

பசியை அடக்குதல் முதலிய நோன்புகளில் உடம்பை வருத்துவதை விட உடம்பை வருத்திப் பசித் துன்பத்தை நீக்குதல் அறம் என்பதறிக. இந்த அறம் தவத்தினும் சிறந்த தாகும்.

> 'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
> பெற்றான் பொருள்வைப் புழி.' 226

ஒருவன் தான் ஈட்டிய பொருள் வறிதே வீணாகாமல் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக்கூடிய வகையில் சேமித்து வைக்கும் வழி, வறியவரின் கடும்பசியைத் தீர்த்தலே யாம்.

வறுமையுடையோரை அழிக்கும் பசியை நீக்க உதவுதலே ஒருவன் தான் பொருளைப் பத்திரமாகச் சேமித்து வைக்கும் இடம்.

'பசி' உயர் குணங்களையும், அறிவையும், ஆற்றலையும் அழிப்பதாலும் ஒரோவழி உயிரையே அழித்தலாலும் 'அழிபசி' என்றார்.

"பொருள் வைப்பு" - சேமவைப்பு, பின் தேவைக்கு உதவத் தக்கவகையில் சேமித்துவைக்கும் முறை.

இன்னும், வங்கியில் சேமித்தல் மூலம் பொருள், வட்டியால் பெருகி வளர்ந்து நமக்குத் தேவை ஏற்படும் பொழுது வந்து சேர்கிறது. வங்கிகள், வறுமையுற்றோருக்கு தமது முதலைக் கடனாகக் கொடுத்துத் தொழில் செய்யச் செய்து, வறுமையை மாற்றுகின்றன. இது முதலை இழக்காதது

மட்டுமன்று; வளர்த்துக் கொண்டு அறம் செய்யும் முறை. ஆதலால் தேசிய சேமிப்புப் பத்திரங்களில் இடுக.

'பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.' 227

பகுத்து உண்ணப் பயின்றவனைப் பசியென்னும் தீப்பிணி தீண்டுதல் இல்லை.

ஒருவரிடத்தில் உள்ள எல்லா நன்மைகளையும் கொன்று தீமையைச் செய்து பிணி முதலியவற்றை வரவழைத்துத் தருதலால் "தீப்பிணி" என்றார்.

பலரோடும் பகுத்துண்க; அங்ஙனம் பகுத்துண்பதால் இவரோடு பலர் பகுத்துண்ணக் காத்திருப்பர். ஆதலால், பசிப்பிணி தீண்டல் அரிது; அணுகாது.

'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.' 228

உடைமைகளை வைத்து இழக்கும் அருளிலாதார், வறியார்க்கு ஒன்று ஈத்துவக்கும் இன்பத்தினை அறியமாட்டா தார் போலும்!

வறுமையுடையோர் வறுமைத் துன்பத்தை நீக்கிக் கொண்டு மகிழ்ச்சியாக வாழும்பொழுது அவர்தம் மலர்ந்த முகத்தைக்கண்டு உவத்தலே சான்றோர் செயல்.

'இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.' 229

ஒருவருக்குப் பிறர்பால் சென்று இரத்தல் துன்பமானது; ஆனால், இதனினும் துன்பம் தருவது வறுமையுடையோருக்கு உதவாது தாமே தனியே உண்டல்.

1. இரத்தல் துன்பமானது, இத்துன்பம் வரும் வாழ்க்கையில் வாழற்க! அதாவது பொருள் செயல் முயற்சியில், ஈடுபட்டுப் பொருள் ஈட்டுக.

2. "தமியர் உணல்" என்றதால் தனியே உண்டல் கூடாது; பலரோடு கூடி உண்க என்பதாகும்.

'சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.' 230

ஒருவருக்குச் சாதல் போலத் துன்பமானது இல்லை. ஆனால், வறியோர்க்கு உதவி செய்ய இயலாதபொழுது சாதலும் இன்பம் தரும்.

பயன்படாது வாழ்தலின் சாதல் நன்று என்பது கருத்து.

24. புகழ்

புகழ் மானிட வாழ்க்கையின் இம்மைப்பயன். ஒருவனுடைய வாழ்க்கை மூலம் பயன் அடைந்தவர்கள் பாராட்டிக் கூறுவது புகழ். இன்று புகழ் என்பது விற்பனைப் பொருளாகவும் விளம்பரப் பொருளாகவும் ஆகிவிட்டது. திருவள்ளுவர் கூறும் புகழ், வாழ்க்கையில் விளைவது; வாழ்க்கையின் பயன். அறத்துப் பாலில் இல்லறவியல் முடிவில் புகழ் அதிகாரம் வைக்கப் பெற்றுள்ளது. ஏன்? ஒருவருடைய இல்வாழ்க்கை அறஞ்சார்ந்த வாழ்க்கை என்பதை அவரை மற்றவர்கள் புகழ்ந்துரைக்கும் உரைகளின் வாயிலாகவே அறியமுடியும் என்பதை உணர்த்தவேயாம். அடுத்து, துறவறம் தொடங்குகிறது. துறவுக்குப் புகழ் உரிய தன்று. துறவு, புகழ், பழிகளைக் கடந்தது. ஆனால், இன்றோ இல்லறத்தாரை விடத் துறவிகளே புகழ் வேட்டையாடு கின்றனர். துறவிகளிடத்தில் புகழ் வேட்கை தலை யெடுத்ததுடன் விளம்பர மனநிலையும், பொய்யும் நடிப்பும் மிகுந்து வளர்ந்து வருகின்றன.

பொதுவாக, இல்லற வாழ்க்கை இறுக்கமான பாசத்தை பொருட்பற்றை உருவாக்கும் என்பது உலகியல் நடைமுறை. இதன் காரணமாகத் தன்பெண்டு - தன்பிள்ளை என்ற

உணர்வில் உடன் பிறந்தாரைக்கூட, குருதிக் கலப்புடைய சுற்றத்தாரைக்கூட அந்நியராக்கும் கொடுமையை நாள் தோறும் காண்கின்றோம். பழைய வரலாறுகளும் குடும்பப் பாசத்தின் அதிக வளர்ச்சியால் ஏற்பட்ட தீமையை எடுத்துக் காட்டத் தவறவில்லை. நமது திருவள்ளுவர் குடும்பத்தையே அறமனையாக்கும் புதுமை செய்கிறார். மற்றவர்க்கு உதவி செய்வதால் குடும்பம் கெடாது வளரும் என்ற நம்பிக்கையைத் தருகின்றார். புகழ் ஓர் ஊக்குவிக்கும் வலிவு ஆகும். ஆதலால், புகழ் மேலும் மேலும் பொருள் ஈட்டத்தில் ஆற்றுப்படுத்தும், ஈத்துவந்து புகழுடன் வாழும் வாழ்க்கை உணர்வை வளர்க்கும் என்பது வள்ளுவத்தின் முடிவு.

1. அறநெறி வாழ்க்கை மேற்கொள்வதன் மூலம் புகழ் பெறலாம்.

2. எந்தச் சூழ்நிலையிலும் அறமல்லாதனவற்றை – பிறரால் பழிக்கப்படுதற்குரியனவற்றைச் செய்யா திருத்தல் புகழைத் தரும்.

3. தாம் இடர்ப்பாடுற்றுத் துன்புறும் பொழுதும் அறநெறி பிறழாது வாழ்ந்தால் புகழ்வரும்.

4. மகவெனப் பல்லுயிரும் ஒக்க நோக்கி அன்பு செய்து வாழ்தல்வழி புகழ் தோன்றும்.

5. செய்தற்கரிது என்று கருதி மற்றவரால் கைவிடப் பெறும் கடமைகளை எடுத்து அரிதின் முயன்று செய்து முடிப்பதன் மூலம் புகழ் பெறலாம்.

புகழ்பெற முற்றிலும் தற்சார்பான வாழ்க்கையைத் தவிர்த்தல் வேண்டும். (முற்றிலும் தற்சார்பானது என்பது அப்பட்டமான தன்னலம்-மற்றவர்க்கு இம்மியும் நலம் பயந்து விடக்கூடாது என்ற எண்ணம்).

கடமைகளை விருப்பார்வத்துடன் செய்யவேண்டும். மற்றவர்க்கு உதவி செய்யும் வாழ்க்கையை ஆர்வத்துடன் செய்யவேண்டும்.

புகழ் விரும்பிய வாழ்க்கையில் பழிவருதல் தவிர்க்க இயலாதது. அதனால், பழிக்கும், வசைக்கும் அஞ்சி, கொண்ட கொள்கையை (இலட்சியத்தை) விடக்கூடாது.

புகழ் விரும்பிய வாழ்க்கையில் சராசரி வாழ்க்கையின் இன்பங்களைக்கூட இழக்க வேண்டிவரும். அதைப் பற்றியும் கவலைப்படக் கூடாது.

பொருளிழப்பு முதலியன நேரிடலாம். கவலைப்படக் கூடாது.

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.' 231

வறியவர்களுக்குரியனவற்றைத் தந்து உதவிசெய்து வாழ்தலே வாழ்க்கை. உயிர்க்கு ஊதியமாகிய புகழும் இதுவேயாம்.

உயிர்க்குரிய ஊதியம் புகழ் என்பது கருத்து.

வறியோரின் துன்பம் நீக்கும் வாயிலாகப் பெறும் புகழே உயிர்க்கு ஊதியம் என்பது கருத்து.

வறுமையுடையோரின் துன்பம் நீக்க உதவி செய்தலைப் பிறர்க்கு உதவி செய்தல் மட்டுமாகக் கருதக் கூடாது. அது ஒருவர்க்கு ஊதியமாகவும் விளங்குகிறது.

உதவி செய்தல் என்பது மற்றவர் உயிர் வாழவும் உயர்வு பெறத் தக்கதாகவும் அமைய வேண்டும்.

உதவி செய்வதன்வழி ஊதியமும் புகழும் கிடைப்பதால் உதவி செய்யப்படுவோரை எள்ளி நகையாடல் கூடாது.

உதவி செய்யப்படுவோரை நொந்து, நோகச் செய்து பின் கொடுத்தல் புகழும் இல்லை; ஊதியமும் ஆகாது.

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.' 232

உலகத்தில் ஒருவரைப் பற்றிச் சிறப்பாகச் சொல்பவர் சொல்வதெல்லாம், வறுமையால் இரப்பவர்க்கு அவர் வேண்டியதொன்றை ஈவார்மேல் நிற்கும் புகழேயாம்.

புகழினைப் பல வாயில்களால் அடையலாம்; எழுத்து பேச்சு வீரம்-இன்ன பிறவற்றாலும் புகழ் வந்துசேரும். ஆனால் வறியவர்க்குக் கொடுத்து அவர்தம் துன்பத்தை நீக்கும் புகழே சிறந்த புகழ்; ஏனைய புகழெல்லாம், அடுத்த நிலையினவே என்பது கருத்து.

1. மற்றவரின் வறுமை நீக்கி அவர் துன்பத்தை மாற்றி வாழ்விக்கப் பயன்படும் அறிவை, ஆற்றலை, செல்வத்தை மற்ற வழிகளில் வரும் புகழ் கருதிச் செலவழித்து விடக் கூடாது.

2. ஒரோவழி வளம் (வசதி) உடையோரும் உதவி நாடி வருவர் அவருக்குக் கொடுத்தாலும் புகழ் கிடைக்கும். ஆனால், இது புகழன்று; புகழ் போலத் தோன்றும் விளம்பரமே! வறுமையுடையோர்க்கு உதவுதலே உண்மையான புகழினைத் தரும். இந்தப் புகழுக்குச் செலாவணி அதிகம் இருக்காது. ஆனால், உயிர்க்கு ஊதியமாக நின்று நிலையான புகழைத் தரும்.

'ஒன்றா உலகத்(து) உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.' 233

இந்த உலகத்தில், உயர்ந்த புகழையல்லாமல் அழியாது நிற்பது வேறொன்றும் இல்லை.

"ஒன்றா உலகத்து" என்பதனை "ஒன்றா உயர்ந்த புகழ்" என்று கொண்டு கூட்டிப் பொருள் கொண்டு, தனக்கு இணையில்லாதவாறு என்று பொருள் கூறுவர். இது தவறில்லை, ஆயினும் சிறந்த நோக்கில்லாதது.

தி·IV·10.

இந்த உலகில் காண்பன, நுகர்வன, அனைத்தும் நம்மை விட்டு நீங்கும்; ஆயினும் பெறுகிற புகழ்மட்டும் அழியாது; மாறாது.

"உயர்ந்த புகழ்" என்றது ஒருயிரை ஒருடம்பிடையில் நிறுத்தி வைத்து வாழவைப்பது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய இறை செய்யும் ஐந்தொழில்களைப் போல அமைந்து விடுதலின் உயர்ந்த புகழாகும்.

பசியால் வருந்தி அழியாது காத்தலால் காத்தலும் படைத்தலுக்கு ஒப்பாகும் இயல்பிலே காத்தல் நிகழ்கிறது.

ஒருவனின் வறுமைத் துன்பமும் இழிவும் மற்றவர்க்குப் புலனாகாமல் உதவி செய்யப் பெறலால் மறைத்தல் நிகழ்கிறது.

மனித குலத்திற்குத் தீமையானவற்றை அழித்தலால் அழித்தல் தொழில் வந்தமைகிறது.

மகவெனப் பல்லுயிரும் ஒக்கப் பார்த்து வேறுபாடு கருதாமல் வாழ்வித்தல் அருளல் ஆகிறது.

'நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.' 234

ஒருவன் இந்நிலவுலகத்தில் புகழ்பட வாழின் தேவருலகம் தேவரைப் போற்றாது.

இம்மண்ணுலக வாழ்க்கையில் புகழ்பட வாழ்தல் என்பது அருமையுடைய வாழ்க்கை. இந்த அருமையுடைய வாழ்க்கை ஒருவரால் ஆற்றப்படுமெனின், புகழ்பட வாழ விருப்பமில்லாது வறிதே வாழும் தேவர்களைத் தேவருலகம் பாராட்டாது.

புகழ் என்பது ஒருவர் புகழ்வதனால் வருவதன்று; நிலைத்த செயல்களைச் செய்தலின் மூலம் வருவதே புகழ்.

ஆதலால் விளம்பர வேட்டை ஆடற்க! செய்தித்தாள் களில் பெயர்களைத் தேடி அலைய வேண்டாம்; விழாக்கள் எடுத்து விளம்பரம் தேடவேண்டாம்; மானிட சாதியை வருத்தும் துன்பங்களை மாற்றுதற்குரிய நிலையான அரிய முயற்சிகளையும் செயல்களையும் மேற்கொள்க! அச்செயல் களே புகழ்!

'நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.' 235

ஆக்கம் போல் கேடும், வாழும் சாக்காடும் திறப்பாடுடையவர்க்கே உண்டு; மற்றவர்க்கு இல்லை.

தவறான முறையில் வரும் ஆக்கம் அல்லது வளர்ச்சி ஆக்கம்போலக் காட்டிக் கேட்டினைச் செய்யும், இதைத் தவிர்த்திடுக.

சாக்காடு, வரக்கூடிய ஒன்றே; சாக்காட்டிற்கு அஞ்சிப் பயன் என்ன? செத்தும் சாகாமல் வாழ்தல் அருமைப் பாடுடைய வாழ்க்கை. நல்லறச் செயல்கள் பல செய்து புகழ்பெறும் வித்தகர்களுக்கே இந்நிலை அமையும்; ஆதலால், வித்தகராக முயல்க!

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.' 236

ஒருவர் மற்றவர் காண வெளிப்பட்டுத் தோன்றும் நிலை ஏற்படின் புகழோடு தோன்றுக. அங்ஙனம் மற்றவர்முன் புகழொடு தோன்ற இயலாதார் தோன்றாது மறைந்தொழிதல் நன்று.

புகழுக்கு ஏதுவான குணத்தோடு பிறக்கவேண்டும் என்றும் உரை கூறுவர். பிறந்தபின் தேடுவதே குணம். ஆதலால், இவ்வுரை பொருந்தாது.

நல்லறச் செயல்களைச் செய்து புகழுடன் விளங்கு! அதன்பின் அரங்கிற்கு வா!

நாலுபேர் அடக்கம், எளிமை, சொல்லும் முயற்சியை விடக் கேட்டல் ஆகிய நற்பண்புகளிருந்தால் விளங்கித் தோன்றலாம். இப்பண்புகளைப் பெற்றுப் பலர்முன் தோன்றுக! அவ்வாறு வெளிப்படுதற்கு இயலவில்லை யெனில் வெளிவராதிருத்தலே நன்று.

புகழ்பட வாழத் தெரியாதார், பலர் முன் தோன்றுதல் வசையைக் கைக்கொள்ளலாகும். இதனால் யாருக்கும் பயனில்லை. மேலும், ஒருவரின் வசைப்பட்ட வாழ்க்கை பலருடைய இசை பொருந்திய வாழ்க்கையைக் கெடுக்கும். அதனால் தோன்றுதலைத் தவிர்த்திடுக என்றார்.

'புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ(து) எவன்.' 237

தமக்குப் புகழ் உண்டாகும்படி வாழாதவர்கள் தமது இழிவினை நோக்கித் தம்மையே நொந்து கொள்வதில்லை. ஆனால், பிறர் தம்மை இகழ்ந்து கூறினால் உடனே நொந்து வேதனைப்படுவர். இது ஏன்?

புகழ் என்பது ஒருவருடைய வாழும் முறையால் பெறுவது. ஒருவருடைய புகழுக்கும் இகழுக்கும் அவரே பொறுப்பு. இங்ஙனம் புகழ்பட வாழ முயற்சி செய்யாத வர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொண்டு திருத்தங் களைக் கண்டு புகழ்பட வாழ்தல் முறை. அங்ஙனம் வாழ முயற்சி செய்யாதவர்கள் மற்றவர் இகழும்பொழுது வருந்திப் பயனில்லை.

'வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.' 238

ஒருவன் தனக்குப் பின்னும் தன்புகழ் விளங்கி நிற்குமாறு வாழாமற் போனால் அவன் வாழ்க்கை மக்களால் பழிக்கத் தக்கதாகும்.

ஒருவன் ஈட்டும் பொருள் முதலியன அவனுக்குப் பின் அவன் பெயரில் நிற்பனவல்ல. ஆனால் அவனீட்டிய புகழ் அவனுக்கே சொந்தமாகத் தொடர்ந்து நிலைத்து நிற்கும். அவனைச் சார்ந்தோருக்கும் உதவி செய்யும்.

ஆதலால், நாள்தோறும் புகழ்பெறத் தக்க நிலையான செயல்களைச் செய்திடுக.

'வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.' 239

புகழைச் செய்யாத உடம்பைச் சுமந்த நிலத்தில் பழிப்பில்லாத வளமுள்ள விளைச்சல் குறையும்.

நிலத்திற்கும் உயிருண்டு போலும்; நிலம் புகழத்தக்க செயல்களைச் செய்வாரோடு உறவு கொள்ளும்போது பழிப்பில்லாத வளமுள்ள பயனை வழங்குகிறது. அங்ஙன மின்றிப் புகழற்ற உடம்புகளை நிலம் தாங்கும் பொழுது புழுக்கத்தினால் வெப்பமடைந்து வளம் குன்றிப் பயனற்றுப் போகிறது.

ஆதலால், புகழ்பெறும் வாழ்க்கையே வாழ்க! இயலா தொழியின் வசை பெறாமலாவது வாழக் கற்றுக் கொள்க!

'வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.' 240

தமக்குப் பழிப்பில்லாமல் வாழ்பவரே உயிர்வாழ்பவ ராவர்; புகழின்றி வாழ்பவரே உயிரோடிருந்தும் இறந்தவராவர்.

வாழ்தலுக்கும் சாதலுக்கும் இடையிலுள்ள வேறுபாடு உண்ணல், உறங்கல் அல்ல; புகழும் இகழுமேயாம்.

நாள்தோறும் புகழினைத் தரும் புண்ணியச் செயல்களைப் போற்றிச் செய்திடுக; மறந்தும் வசையினைத்

தரக்கூடிய செயல்களைச் செய்யற்க! என்று திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

வாழ்க்கைப் பிணைப்புகளைத் துறந்து அறம் பேணுதல் துறவறம். தமிழர் வாழ்வியலில் இல்லறமும் உண்டு; துறவறமும் உண்டு. இல்லறத்தில் நின்று வளர்ந்து துறவறத்தைச் சார்தல் தமிழர் மரபு. இல்லறஞ் சாராமலேயே துறத்தல் என்ற மரபும் இருந்து வருகிறது. இம்மரபு பௌத்த, சமண சமயங்களின் தொடர்பு தமிழகத்திற்குக் கிடைத்த பிறகு வந்திருக்கலாம் என்று எண்ண முடிகிறது. தமிழரின் துறவற வாழ்க்கையைத் தொல்காப்பியம்,

'காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

(தொல். கற்பியல்–51)

என்று கூறி விளக்குகிறது. திருவள்ளுவரின் திருக்குறள் இயல் வைப்பும் இல்லறவியலை அடுத்துத் துறவறவியல் பேசப்படு வதாலும் இஃது உய்த்துணர முடிகிறது. புகழ் அதிகாரத் திற்குப் பின் துறவறவியல் தொடங்குகிறது. இல்லறவியலின் பயன் புகழ், புகழின் பயன் துறத்தல். தமிழர்தம் சமய நெறியில் வழிபடுந் தெய்வத்தை அம்மையப்பனாகக் கருதி வணங்குவதால் இல்லறத்தை வெறுத்த துறவு தமிழர்க்கு இல்லையென்பது துணிவு. இல்லறம் ஆசைகளுக்கு உட் பட்டது; துறவறம் ஆசைகளுக்கு அப்பாற்பட்டது என்பதும் முற்றான விளக்கமன்று. அறுபான் மும்மை நாயன்மார் வரலாற்றில் வரும் இல்லறத்தில் வாழ்ந்த சான்றோர்கள் துறவியரும் தொழும் சான்றோர்களாக, பற்றற்றவர்களாக விளங்கியதைக் காண்கின்றோம்.

தவம், இல்லறத்திற்கு இல்லையென்பது தமிழக வழக்கமன்று. "மேருவரையின் மேம்பட்ட தவத்தான்" என்று

நம்பியாரூரரை, இறைவன் வாயிலாகச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறுவதை அறிக! இல்லறத்தில் வாழ்ந்தவர்கள் பக்குவம் அடைந்த நிலையில் அடுத்த தலை முறையினரிடம் தமது வழித்தோன்றல்களிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, முழுமையாக இறைவனை எண்ணவும் தொண்டு செய்யவும் மேற்கொள்ளும் வாழ்க்கை, துறவு வாழ்க்கை.

25. அருளுடைமை

அருளுடைமையாவது மகவெனப் பல்லுயிர்களிடத்தும் அன்பு பாராட்டுதல். யார் மாட்டும் பாய்ந்து செல்லும் அன்புடைமையே எல்லை கடந்தமையால் அருளுடைமை என்று போற்றப்படுகிறது.

'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.'
241

பெறத்தக்க செல்வங்களுள் சிறந்தது அருளுடைமை. அருள் உள்ளத்தைப் பெறுதற்கு யாண்டும் எப்போதும் சம நோக்கே கொள்க.

எந்த வகையிலேனும் வந்து பற்றும் சார்புகளை நினைந்து பொருட்படுத்தாது, சார்புகளைக் கடந்து எல்லா வுயிர்களிடத்திலும் அன்பைப் பொழிக! இரக்கத்தைக் காட்டுக:

எந்தச் சூழ்நிலையிலும் யார் மாட்டும் மனவருத்தம் கொள்ளற்க. மனவருத்தம் பிணக்கைத் தோற்றுவிக்கும்; பகையைத் தரும்; அருளுடைமையைக் கெடுக்கும்; அதனால், உற்றாரும் இல்லை, பகைவரும் இல்லை என்று ஒழுகுவதே அருள் ஒழுக்கத்தைப் பேணும் வழி.

26. புலால் மறுத்தல்

புலாலை உண்ணாமல் விடுதல். அருளுடைய நெஞ்சு உயிர்க் கொலைக்கு அஞ்சுதல் இயற்கை. அதனால் அருளுடைமையை அடுத்துப் புலால் மறுத்தல் கூறப்படுகிறது.

'தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.' 251

தன் உடம்பைப் பெரிதாக்குவதற்காகத் தான் வேறோர் உயிரின் உடம்பைக் கொன்று தின்பவன் எங்ஙனம் அருளைக் கையாள முடியும்?

"ஊன் பெருக்கம் உயிர்ப் பெருக்கமாகாது" என்பதுணர்த்த ஊன் பெருக்கம் என்றார்.

ஊன் பெருத்தல் பயனற்றது மட்டுமின்றி நோயும் தரும். பயனற்ற ஊனைப் பெருக்க யாதொரு குற்றமும் செய்யாத உயிரினங்களைக் கொல்லலாகாது என்று எண்ணுக.

ஊன் பெருத்தால் எளிதில் நகரமுடியாது; பணிகளைச் செய்ய இயலாது என்பதை எண்ணுக.

ஊன் பெருத்ததாலேயே பண்டு வாழ்ந்த உயிரினங்கள் இறந்து பட்டுப் போயின என்ற வரலாற்றை எண்ணுக.

நிலைத்து நிற்கும் இயல்பின வல்லாத உடலின் ஊனினை வளர்க்க, நிலையானதும் என்றும் உயிர்க்கு ஆக்கம் தருவதுமான அருளுடைமையைத் துறக்க வேண்டுமா? எண்ணுக! எண்ணுக! எண்ணுக! புலாலைத் தவிர்த்திடுக!

'பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.' 252

பொருளைப் போற்றிப் பாதுகாக்காதவர் பொருளுடையராதல் இல்லை. அதுபோல ஊனைத் தின்பவர்களுக்கு அருளை உடையராகிச் செலுத்துதல் இல்லை.

1. புலாலை உண்ணும் பொழுது - அறுக்கப்படும் பொழுது உயிர்கள் துடித்து வருந்துதலை நினைந்து பார்த்திடுக. அதனால், ஊன் உண்ணும் வேட்கை எழாது; தடைப்பட்டுப் போகும்.

2. புலாலை உண்ணுவதற்காக ஒருயிரை வருத்தி அறுக்கும் பொழுது அதனை ஒத்த துன்பம் நமக்கு வந்தால் நாமுறும் பாட்டை நினைந்து பார்த்திடுக. அதனால் உயிர்க் கொலை தவிர்க்கும் வாய்ப்பு மிகும்.

3. உடலியக்கத்திற்குத் தேவையான ஆற்றல், காய், கனிகளிலும் கிடைக்கும். அவை ஓரறிவுயிர். அறிவு மிக மிக இனவளர்ச்சி குறைதலை மனங் கொள்க. அதனால் புலால் உண்ணல் தவிர்க்க முடியாதது என்று கருத வேண்டாம்.

4. பொருளின் இன்றியமையாமை கருதி அருளுடைமையும் கூறினார். பொருள் வருந்தித் தேட வேண்டும். தேடிய பொருளை வீணாகச் செலவழிக்காமல் போற்றிப்பாதுகாக்க வேண்டும். அதாவது, சிக்கனமாய் வாழ்தல். சிக்கனமென்பது இவறுந் (உலோபத்) தன்மையன்று. சிக்கனம் பொருள் வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

'படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல் சுவை உண்டார் மனம்.' 253

கொலை செய்யும் கருவியைத் தம் கையில் கொண்டவரின் மனம் கொலையையே நோக்கும்; அருளை நோக்காது.

படையைக் கையிலெடுக்கத் துணிந்தவர்கள் கொலையையே குறிக்கோளாகக் கொள்வர். படை கொண்டார் மனம் அமைதி, சமாதானம், நட்புறவு இவைகளைப் பற்றிக் கருதாது; பிறிதோர் உயிரின் துன்பம் பற்றிக் கருதாது கொலை செய்த உடலைச் சுவைத்து உண்டவர்களின் மனம் அருளை நோக்காது.

புலால் உணவு கொலைத் தொடர்புடையது. ஆதலாலும் அதனுடன் சேர்க்கப் பெற்ற உணர்வு வகையாலும் புலால் உண்டவர் மனம் நன்மையைக் கருதாது; நன்மையின்பாற் செல்லாது.

1. எந்தச் சூழ்நிலையிலும் படைக்கருவிகளைத் தொடக் கூடாது.

2. ஏமாற்றங்கள் - கோபங்கள் ஏற்படும் போது படைக் கருவியைக் கட்டாயம் தொடக் கூடாது.

3. படைக் கருவியைக் கையில் எடுத்தல் கொலை செய்வதில் கொண்டுபோய் விடும். ஆதலால், மறந்தும் படைக் கருவிகளை எடுத்தல் கூடாது.

4. கையில் தாங்கும் கருவிகள், நெஞ்சத்தை இயக்கும் தகுதியை உடையன. விழிப்புணர்வுடன் இருந்து நெஞ்சத்தினைப் பேணுக.

5. உணவு முறையால் நெஞ்சத்தின் இயல்புகள் மாறுவதை அறிந்து நெஞ்சத்தினை நன்னெறியில் செலுத்தாத உணவைத் தவிர்த்திடுக.

அருளல்லது யாதெனில் கொல்லாமை; கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். 254

அருள் யாதெனில் கொல்லாமை; அருளல்லது யாதெனில் கொல்லுதல். கொலையின் வழி கிடைத்த புலாலைத் தின்னுதல் பொருளல்லாத செயல்.

"பொருள்" - நிலையான வாழ்வளிக்கும் பயனைப் பொருள் என்றார்.

அருளுடைமை என்பதே கொல்லாமை என்று வலியுறுத்தியது.

1. தட்டில் இட்டுண்ணும் புலால் கொலையினால் வந்தது என்பதை எண்ணுக; உணர்க! அப்போது

அருளுணர்வு கால்கொள்ளும்; புலாலைத் தவிர்க்கும் துணிவு தோன்றும்.

2. வாழ்க்கை நிலையான பயனை - இன்பத்தினைக் குறிக்கோளாகக் கொண்டது. இக்குறிக்கோளிலிருந்து வழுவித் துன்பத்தினை அணைத்துக் கொள்ளுதல் போலாகும் புலாலுண்ணல் என்பதனை எண்ணுக. அவ்வழி புலால் உணவில் வெறுப்புத் தோன்றும்.

'உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.' 255

ஊன் உண்ணாமையால் உள்ளது உயிர்நிலை. ஊனை உண்டால் நரகத்திற்குச் செல்ல நேரிடும். அந்நரகமும் தன்னிடம் அகப்பட்டவரை வாயில் திறந்து வெளியே விடாது.

ஊனுண்டோர் மீளாத் துன்பம் அடைவர் என்பது கருத்து.

அருளுடையோரே உயிருடன் வாழ்வோர்; என்றும் மதிக்கப்படுபவர். அதனால், "ஊன் உண்ணாமை உயிர் நிலை" என்றார்.

1. நரகத்தில் அனுபவிக்க வேண்டிய துன்பத்தினை எண்ணிப் பார்த்தால் புலால் உணவில் அச்சம் தோன்றும்; இந்த அச்சம் அருளுணர்வைத் தந்து புலால் உணவைத் தவிர்த்திடும் நெறியில் உய்த்துச் செலுத்தும்.

'தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.' 256

ஊனினைத் தின்பதற்காக உயிர்களை உலகத்தார் கொல்லாரெனின், விலைக்கு ஊனைத் தருவாரும் இல்லை. ஊனினை உண்பார் யாரும் இல்லையாயின் ஊன்வாணிகம் இல்லை; அதனால் கொலையும் இல்லை என்பது கருத்து.

1. தாம் கொல்லாது விலைக்கு வாங்கிய ஊனை உண்ணுதல் பாவமில்லை என்ற பௌத்த சமயக் கருத்தை மறுத்து மொழிந்தது இது.

ஊன் கொள்வார் இல்லையாயின் ஊனை விற்பாரும் இல்லை; கொலைஞரும் இல்லை என்பது கருத்து.

2. ஊனினை உண்ணும் பொழுதெல்லாம் கொலை நிகழ்வதை உன்னுக. ஊன் உண்ணும் ஆசை, பிறிதொரு மனிதனைக் கொலைஞனாக்குவதை உணர்க! அதனால் ஊன் உண்ணும் அவா தடைப்படும். 'கொள்ளாது' என்ற பாடவேறுபாடும் சிறப்பானதே.

'உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின்.' 257

புலால் என்பது வேறோர் உடம்பின் புண்ணே என்ற உண்மையை உணர்ந்தால் ஊனை உண்ணா திருத்தல் வேண்டும்.

"புண்" - நோய்வாய்ப்பட்டது; அருவருப்பானது என்று உணர்ந்தால் புலால் உண்ணும் ஆவல் அற்றுப் போகும் என்பது கருத்து.

1. ஊன் உணவு, பிறிதோருடம்பின் நோயுற்றபுண்; நோயினைத் தரும்புண் என்று உணர்க.

2. புலாலின் தீமைகளை அறிந்தால் போதாது. உணர்தல் வேண்டும்.

'செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.' 258

மயக்கம் நீங்கிய தெளிந்த அறிவினை உடையவர் உயிர் நீங்கிய பிணத்தை உண்ணார்.

1. உயிர் நீங்கிய உடம்பு, பிணம் என்பதை அறிக; அதனை உண்ணற்க.

2. ஊன் உண்டலால் கொலை முதலிய குற்றங்கள் வரும் என்பதை அறிந்து தெளிக.

3. ஊன் உண்ணும் ஆசையால் அறிவை இழக்கக் கூடாது.

'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.' 259

தீயின்கண் நெய்முதலிய பொருள்களைச் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலினும் ஒரு விலங்கின் உயிரைப் போக்கி அதன் உடம்பைத் தின்னாமை நன்றாம்.

வேள்விகளிலும் கொலை வேள்விகள் உண்டு. இத்தகு கொலை வேள்விகளைத் தவிர்த்திட வேண்டும் என்று கூறியது.

1. அருளின்மைக்குக் காரணமாகிய, கொலையைத் தவிர்த்திடாமல் வேள்வி முதலியன செய்தல் பயனற்றது என்றறிக.

'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.' 260

ஒருயிரையும் கொல்லாதவனாய், புலாலையும் உண்ணாதவனை எல்லா உயிர்களும் கைகுவித்து வணங்கும்.

கொல்லாதவன் புலால் உண்பவனாக இருக்கலாம். புலால் உண்ணாதவன் கொல்பவனாகவும் இருக்கலாம் என்பதை உணர்த்தியது.

இன்று புலால் உண்பவர்களில் வாங்கி உண்பவரே மிகுதி. அதனால் இவர்கள் கொல்வதில்லை. இன்று புலால் உண்ணா மரபினைச் சார்ந்தவர்கள் துமுக்கியை (துப்பாக்கியை)க் கொலைக் கருவியைத் தாங்குவதைப் பார்க்கின்றோம்.

1. அருளுடைமையால் உயிர்கள் பேணிக் காக்கப் பெறுதலால் காக்கப் பெற்ற உயிர்கள்-மக்களைத் தொழுது வாழ்த்துகின்றன.

2. புலால் உண்ணாமையால் விலங்கு முதலிய உயிரினங்களும் கொல்லாமையால் மக்களும் பயனடைகின்றனர் என்பதறிக.

3. எல்லா உயிர்களும் மகிழ்ந்து தொழுது வாழ்த்துவதனை எண்ணிப் பார்த்துக் கொலையைத் தவிர்த்திடுக! ஊன் உணவினைத் தவிர்த்திடுக!

27. தவம்

தவம் - பொறிகள் வழி உணர்வு செல்லாது நோன்பு முதலியவற்றை ஏற்று ஒழுகுதல். மேலான செயல் என்ற பொருள் தரும் 'தவ' என்ற உரிச்சொல்லடியாகப் பிறந்த சொல் இது.

புலன்கள், அழுக்காற்று நெறியில் செல்லாமல் அருள் நெறியில் செல்லப்-பக்குவப்படுத்த, நன்னெறியினை எண்ணுதல்-சிந்தித்தல்.

தற்சார்பான உணர்வுகளிலிருந்து விடுதலைபெற, பிறர் நலம் பேணும் தொண்டுகளில் ஈடுபடுதல்.

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.' 261

தனக்கு வந்த பசி, பிணி இன்ன பிறவற்றைத் தாங்கிக் கொள்ளுதல்; பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை என்ற அளவினதே தவம்.

பசி முதலியனவற்றைத் தாமே நீக்கிக்கொள்ளும் திறனோ, அவற்றைத் தாங்கிக்கொள்ளும் திறனோ இல்லாதவர்கள் மற்றவர்களுக்குத் தீங்குசெய்தாவது தீர்த்துக் கொள்ள எண்ணுவது தவமாகாது.

1. உடலுக்கோ-உணர்வுக்கோ ஊறு, இயற்கையின் வழியோ அல்லது மற்றவர்கள் மூலமோ வந்தால் அதனைப் பொறுத்தாற்ற வேண்டும்.

2. ஊறு செய்தவர்களுக்குத் திரும்ப ஊறு செய்ய நினைக்கக் கூடாது.

'தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.' 262

தவம்-தவத்தையே உடைமையாகக் கொண்டவர்க்கே யாகும். தவத்தையே உடைமையாகக் கொள்ளாதவர்கள் பிற நோக்கத்திற்காகத் தவம் மேற்கொள்ளுதல் அவமாகும்.

1. தவம் செய்ய முனைவோர் தவத்தையே உடைமையாகக் கொள்ளுதல் வேண்டும்.
2. தவம் செய்வார் காதற்ற ஊசியும் உடைமையாகக் கொள்ளுதல் சாலாது.
3. துவரத் துறக்கும் முயற்சியின் முடிவிலேயே தவம் செய்யும் முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.' 263

யாதொரு பற்றுக் கோடுமின்றி முழுவதும் துறந்தவர்க்கு, உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாதனவாகிய உண்டி முதலியன வழங்குவதற்காகத் துறந்தாரல்லாத மற்றவர்கள் தவநெறியை மறந்தார்கள் போலும்.

1. தவம் செய்வார்க்கு இன்றியமையாதனவாகிய பொருள்களை வழங்குதல் தவம் உடையாரைத் தவத்தில் ஈடுபடுத்தியதாகும்.
2. தவம் மேற்கொள்ளாது வாழ்பவரின் கடமை, தவம் செய்வாரைப் பேணுதல்.

2

திருவள்ளுவர் காட்டும் அரசு

நம்முடைய மொழி காலத்தோடு கலந்து வளர்ந்திருக் கிறதா? வளரவில்லையே! அது வளர வேண்டாமா? இவை நம் முன் உள்ள வினாக்கள்!

இன்னமும் நாம் "தமிழிலே அறிவியலைக் கொண்டு வர முடியுமா? முடியாதா?' என்று திருவுளச்சீட்டுப் போட்டுக்கொண்டு இருக்கின்ற நிலையில் இருந்து கொண்டி ருக்கிறோம். ஆனால் தத்துவங்களைப்பற்றி- மெய்யியல் தத்துவங்களைப் பற்றி-கட்புலன்களுக்கு வாராத தத்துவங் களைப்பற்றி, மிக எளிய நடையில் பேசிய மொழியை, பருப்புலனுக்கு வரக்கூடிய பொருளுக்கு ஆய்ந்து, அதைப் பற்றிச் சொல்வதிலே அந்த மொழிக்கு ஆற்றல் இருக்காது என்று சொன்னால் நாம் எங்ஙனம் நம்புவது?

இல்லாத ஒன்றை, வெற்றுக் கற்பனையாகத் தமிழில் சில உண்டு என்று சொன்னால் நாம் நம்ப வேண்டாம். ஆனால் சில தமிழிலே உண்டு என்பதை நாம் கருதாது போனால் நமக்கு ஒரு தன்னம்பிக்கை இருக்காது.

ஆனால் தமிழில் இவை உண்டு என்று இருக்கின்ற வற்றைக் கருதாதுபோனால் நமக்கு மேலே தாண்டிப் பறக்க

முடியும் என்ற நம்பிக்கை தோன்றாது. ஆதலினாலே பழந்தமிழ் இலக்கியத்திலே சில இருக்கின்றன என்று கருதிப் பெருமை கொள்வதிலே 'இடம், பொருள் கருதி' தவறா சரியா என்று கொள்ள வேண்டுமே தவிர ஒட்டு மொத்தமாகக் கொள்ள முடியாது. பழந்தமிழ் இலக்கியங்களிலே அறிவியல் செய்திகள் உண்டு.

மாணிக்கவாசகர் திருவாசகம் பாடுகிறார். பக்திப் பண் ஒலிக்கிறது.

அதிலே இரும்பைக் காந்தம் இழுக்கிறது என்ற விஞ்ஞானத் தகவல் கிடைக்கிறது. இதை அழகாகப் பாடுகிறார்;

'இரும்பு தரு மனத்தேனை
ஈர்த்து ஈர்த்து என் என்புருக்கி'

என்று.

இழுத்தல் என்றால் கைபோட்டு இழுப்பது. ஈர்த்தல் என்றால் கண்ணுக்குப் புலனாகாத ஒரு ஆற்றல் இழுப்பதற்கு ஈர்த்தல் என்று பெயர்.

இரும்பு காந்தத்தை இழுக்கும். இரும்பை இழுக்கக் கூடியது காந்தம் ஒன்றுதான்.

அது இழுக்கிற பொழுதுகூட ஈர்த்தல் என்றார்.

இதிலிருந்து, காந்தம்–காந்தத்தினுடைய ஆற்றல் இவற்றை ஆராய்ந்து இருந்தால் இந்த நாடு இந்நேரம் கொஞ்சம் முன்னுக்குப் போயிருக்கும்.

திருத்தக்கத்தேவர் மயிற்பொறி பற்றிப் பாடினார். மயிற்பொறி என்று ஒன்று இருந்தது. அது வானிற் சென்றது. சீவகன் இயக்கினான். ஆனால் இலக்கிய உலகம் அதற்குப் பதவுரை, பொழிப்புரை, இலக்கணக் குறிப்பு, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் கண்டது.

விண்வெளியில் பறந்து இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு போனான் என்று கம்பன் பாடினான்.

ஆனால் நாம் அந்தப் பாட்டுக்குக்கூடப் பதவுரை பொழிப்புரைதான் கண்டோம். இன்னும் இடைக் காலத்தில் சமய உலகு ஒரு தவறு செய்தது.

தவறு என்றுதான் கருதுகிறேன். மற்றவர்களுக்குத் தெரியாதிருந்தால் உடன்பட வேண்டாம். கடவுளுக்கு நிரம்பப் பெருமை தரவேண்டும் என்பதற்காக, இந்த மனிதனை முடமாக்க வேண்டும் என்று இடைக்காலத்திலே சமயம் கொஞ்சம் வேலை செய்தது.

அதாவது, கடவுளுக்குப் பெருமை இருக்க வேண்டு மென்றால் மனிதன் கொஞ்சம் குறை உடையவனாக இருந்தால்தான் நல்லது என்று சமயம் கருதியது.

எனவே, மனிதனிடத்திலே கடவுளால் கொடுக்கப் பெற்ற-அவனுடைய அருளாகக் கிடைக்கப்பெற்ற அறிவைக் கூட அவன் இயக்கி வேலை செய்தால்தான் அது, பயன்தரும். ஆனால் அவனுடைய அறிவை இயங்கச் செய்தவனுக்குப் பெருமை சேர்க்காமல் கடவுளிடம் வரம் வாங்கினான். அதனால் செய்கிறான் என்றவுடன், அதைப் படிக்கின்றவன் கூட கடவுளிடம் சென்று வரம் வாங்க முடியுமா? என்ற எண்ணம் மேலோங்கி அவநம்பிக்கை தோன்றலாயிற்று.

இராவணன் வான் வழியாகப் போனதற்குச் 'சிவ பெருமானிடம் வாங்கிய வரம்' என்று ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள். இராவணனிடத்திலே இருந்த அறிவு தவறாகப் பயன்பட்டிருக்கலாம்.

அதை விமரிசனம் செய்வது வேறு; ஆனால் அவனிட மிருந்த அறிவை ஒத்துக்கொள்ளுகிற மனப்பான்மை இல்லை. ஆதலினாலே, அதை அந்தத் துறையிலே ஆய்வதற்குப் பதிலாக, அதை 'வரம்' என்று போட்டவுடனே, கேட்பவர்கள் வியப்பாகச் "சிவ பெருமானைப் பார்த்து, வரம் வாங்கி

நாமாவது, வானில் போவதாவது; முடியாத காரியம்” என்று முடித்துவிட்டார்கள்.

இந்த இரண்டு தலைமுறையை அடுத்துப் பகுத்தறிவுத் தலைமுறை நமது நாட்டில் தோன்றியது. அவர்கள் கொஞ்சம் ஆராய்ந்தார்கள். சிந்தனை செய்யத் தொடங்கினார்கள்.

அவர்களும் அங்கே இருந்த தட்டுமுட்டுப் பாடல்களை வைத்துக்கொண்டு, இது சரியா தவறா என்று ஆராய்ந்தார்களே தவிர, அதிலேயிருந்த அறிவியல் கருத்துக்குரிய பாடலை எடுத்து, “விண்ணிலே பறப்பது எப்படி” என்று ஆராய்ந்து இருந்தால், அவர்கள் முன்னுக்குப் போயிருப்பார்கள்.

அவர்கள் எல்லாப் பாட்டையும் ஒன்றாக ஆக்கி, எதையும் ஆராயாமல், எல்லாம் பொய் என்றும், புளுகு என்றும், மூட்டை கட்டி அவற்றிற்குத் தீ வைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள்.

ஒருவர் படித்து மகிழ்ந்தார்; இன்னொருவர் செய்யலாமென்றார்; மற்றவர், “ஒன்றும் முடியாது, சிவ பெருமானிடம் வரம் வாங்க வேண்டும்” என்றார்.

இப்படி இருந்தால் தமிழ் எப்படி வளரும்? ஆகையினாலே அதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்திய அரசியல் சட்டம் பற்றி நமக்குத் தெரியும். அது, கிட்டத்தட்ட உலக நாடுகளிலே உள்ள அரசியல் சட்டத்தைப் படித்து, பார்த்து, தொகுக்கப்பட்ட அருமையான சட்டமாகும். அதற்கு நாம் எவ்வளவு பெரிய பெருமை கொடுக்கிறோம் என்பது நமக்குத் தெரியும்.

ஆனால் டாக்டர் அம்பேத்கார் போன்ற பெரிய மேதைகள், அந்த வேலையைச் செய்திருந்தாலும்கூட அவர்களுக்கு ஓர் அடித்தளம் இருந்தது. அமெரிக்க நாட்டு அரசியல் சட்டம் இருந்தது. இங்கிலாந்து நாட்டு அரசியல் சட்டம் இருந்தது. வேறு பல நாடுகளின் அரசியல் சட்டங்கள்

இருந்தன. அவற்றை ஆராய்ந்து அதிலிருந்து இதைச் செய்தார்கள்.

திருவள்ளுவர் ஓர் அரசியலைப்பற்றிப் பேசும் பொழுது இந்த உலக அரசியல் சட்டங்களையெல்லாம் கருதவோ படிக்கவோ எண்ணவோ அவர்க்கு வாய்ப்பில்லை. அவருடைய அரசியல்சட்டம் சுய சிந்தனையிலே இந்நாட்டினுடைய மண்ணுக்கு ஏற்றவாறு-நிலத்திற்கேற்ற வாறு- தகுதிக்கேற்றவாறு- தரப்பாட்டிற்கேற்றவாறு அமைந்த ஒரு சட்டம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

நீதிமன்றங்கள், குற்ற இயல் நீதி வழங்குகின்ற மன்றங்கள், இவற்றைக் கேட்டால்கூட நம்முடைய குறள் நெறி அமைப்பு, சட்டத்திற்கு ஒத்து இருக்கிறது என்று நிர்ணயம் செய்து சொல்லும்.

அவ்வளவு தெளிவாக இந்த அரசியல் சட்டத்தை-வாழ்க்கைச் சட்டத்தை ஆக்கியிருக்கிறார் வள்ளுவர்.

திருவள்ளுவர் தனி மனிதனை நம்பி அவனை அணுகு கிறார். தனி மனிதன்மீது அவருக்கு இருந்த கங்கு கரையற்ற-அளவு கடந்த நம்பிக்கை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது.

மனிதனை வெறும் சோளக் கொல்லை பொம்மை போல் அவர் கருதாமல், அவன் எல்லாச் சக்திகளும் படைத்தவன். அவன் நினைத்தால்-விரும்பினால், எண்ணிய எண்ணியாங்கு எய்த முடியும் என்று மிக நன்றாக நம்பி அவனை அணுகுகிறார். அவனைக் குடும்பத்தோடு கொண்டு போய்ச் சேர்க்கிறார்; அதற்குப் பிறகு சமுதாயத்திற்கு அழைத்துச் செல்லுகிறார். இந்த அமைப்பிற்கு வந்த பிறகு, அவன் எங்கேயாவது வழுக்கி விழுந்துவிட்டால் அவனுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக அரசு என்ற ஒன்றையும் அமைக்கிறார். அவன் காவலுக்கும், நலனுக்கும் அரசே தவிர, அவனைக் கட்டி வைப்பதற்கு அரசு அல்ல.

திருவள்ளுவர் அரசைக் காட்டுகிறார். அந்த அரசு ஒரு உச்ச வரம்பு உடையது அன்று. அந்த அரசு மக்களைக் கட்டி மேய்க்கின்ற அமைப்பு அன்று. அவனுக்கு ஏவல் செய்து, நலம்செய்ய வல்ல ஒரு சேம வைப்பு. இன்னும் சொல்லப் போனால், கடவுளிடத்தே நேரிடையாகச் சென்று முறை யிட்டுக் கொள்ள முடியாததினால் அதை அரசனிடம் முறையிட்டுக் கடவுளின் பிரதிநிதியாக நினைக்கச் செய்கின்ற இடம்.

இங்கே திருவள்ளுவருக்குரிய அரசியல் அமைப்பிலே, 2000 ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைக்கு மிகப் பெரிய நாடுகளாகக் கருதப்பெறுகின்ற இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன் எப்படி இருந்தன, எங்கு இருந்தன, அவற்றில் என்ன அரசு இருந்தது என்பவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்மோடு ஒத்துவரக் கூடிய, கிட்டத்தட்ட கொஞ்சம் நாகரிக அமைப்பிலே, தகுதியிலே, ஒரு நாடு இருக்குமானால், அது கிரேக்க நாடு ஒன்றுதான். அது அந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கிறது. அந்த அரசு கூடத் திருவள்ளுவர் காண்கின்ற அரசு அன்று.

சாக்கரட்டீஸ்கூட ஏதன்ஸ் நகர அரசைத்தான் அரசு என்கிறார். ஒரு சின்ன நகராட்சி அமைப்புத்தான் அங்கே அரசாகக் காணப்படுகிறது.

இப்படி நாடுகளைக் கடந்து, மொழிகளைக் கடந்து, இனங்களைக் கடந்து ஒரு ஒப்பற்ற பேரரசை உருவாக்கு கின்ற சக்தி அதற்குரிய அமைப்புக்கூட பிளாட்டோவின் அரசியலுக்குக் கிடையாது.

சிறு சிறு நகரங்களாக அமைகின்ற சிறு அமைப்புகள்-நகராட்சி எவ்வளவு சுலபமானது என்பது நமக்குத் தெரியும். நாட்டாட்சியைவிட நகராட்சி சுலபமானதுதான். ஆனால்

2000 ஆண்டுகளுக்கு முன் விரிந்த, பரந்த ஒரு பேரரசுக்கு அடித்தளமிடுகிறார்.

முடியாட்சி எங்கு பார்த்தாலும் கோலோச்சுகின்ற காலத்தில், அரசன் தெய்விக உரிமையுடையவன் என்பது உலக நாடுகளின் கருத்தாக இருந்தது.

இங்கிலாந்து நாட்டுச் சரித்திரத்திலும், மற்ற நாட்டுச் சரித்திரத்திலும், இதற்காகவே மனிதர்கள் போராடியிருக்கிறார்கள்.

அரசன் தெய்விக உரிமையுடையவன். அவன் தெய்வத்தினாலே அதிகாரத்தைப் பெற்றிருக்கிறான். அவன் தவறே செய்யமாட்டான். அரசன் தவறு செய்வான் என்று கருதுவதே பாபம். இது நாம் இன்றைக்குப் பெரிதாகப் பாராட்டுகின்ற ஆங்கிலேயரின் கருத்து; ஆங்கில நாட்டினுடைய நாகரிகம்.

நமக்கு மொழியின்மீது வேண்டுமானால் பற்று இருக்கலாம். மொழியை ஒட்டியிருக்கின்ற கருத்திலே நமக்கு ஒன்றும் பற்று வாராது என்று நினைக்கிறேன். இது நாட்டினுடைய மரபு.

ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டில் நல்ல முடியாட்சி இருக்கின்ற காலத்தில் திருவள்ளுவர், முடியாட்சியிலே குடியாட்சி தழுவிய ஒரு மரபை நினைவு படுத்துகிறார்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்' 388

என்றார்.

அரசனுக்குச் சொல்லுகின்றபோது இலக்கணம் சொல்லுகின்றார். நீ அரசு கட்டிலே வந்ததினால் அரசு அல்ல; உனக்கு வழி வழியினாலோ, வேறு காரணத்தில் வந்ததினாலோ அரசு அல்ல. நீ முறை செய்து

காப்பாற்றினால், தகுதியறிந்து கடமையறிந்து இந்த இரண்டையும் அறிந்து நீ முறை செய்தால் உன்னை இறை என்று வைப்பர். 'இறை என்று வைக்கப்படும்' என்பது, என் தகப்பனார் மாதிரி கருதுகிறேன் என்றால், கருதுகிறாரே தவிர, தகப்பன் அல்ல என்பது தெரிகிறது.

"நீ கடவுள் போல" என்றால் கடவுள் அல்ல, ஆனால் கடவுள் போலக் கருதுகிறேன் என்று பொருள் ஆக, தெய்விக உரிமை என்று அரசுக்கு உரிமையிருந்த காலத்தில் ஒன்றே முக்கால் அடியிலே இந்த நாட்டிலே நல்ல கொடிகட்டி ஆண்ட பேரரசுகள் இருக்கின்ற பொழுதுகூட திருவள்ளுவர் புரட்சி செய்கிறார்.

இதே கருத்தைப் பிரெஞ்சுப் புரட்சி வருகின்ற பொழுது, சொல்வதற்கு ரூஸோ பட்ட அல்லல் நமக்குத் தெரியும். அந்த நாடு அதை ஏற்றுக்கொள்வதற்கு எவ்வளவு அல்லல்பட்டது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் எளிய புரட்சியாகத் திருவள்ளுவர்,

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்' 388

என்றார்.

இறை என்று சொன்னால் மட்டும் போதுமா? குடிகளை நன்றாகத் தழுவி ஆட்சி செய்ய வேண்டும்.

புறநானூற்றுக் கவிஞன் இவருக்கு அடி எடுத்துக் கொடுக்கிறான். புறநானூற்றுக் கவிஞன் அரசனைப் பார்த்துச் சொல்லுகிறான்; 'நீ நாட்டு மக்களை எப்படிக் காப்பாற்றவேண்டும், தெரியுமா? ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பாற்றுவதுபோல் காப்பாற்ற வேண்டும்."

நம்முடைய நாட்டிலே உயர்ந்த அன்பிற்குச் சொல்லுவ தெல்லாம் தாயன்பைத்தான்.

அந்த அன்புகூடக் காலப்போக்கிலே, நமது நாட்டிலே, நவீன உலகத்தின் காரணமாகப் பூரணமாகச் செழித்து வளருமோ வளராதோ என்ற ஐயப்பாடு தோன்றியிருக்கிறது.

'பால் நினைந்தூட்டும் தாயினும்
சாலப் பரிந்து'

என்றார் மாணிக்கவாசகர். அவருக்கு அதிலே நிறைய இன்பம். அந்த வார்த்தைகளைச் சொல்லுகின்றபோதே அவருடைய நாவினிக்கின்றது.

'நினைந்தூட்டும் தாயினும்
சாலப் பரிந்து.'

என்ற வாக்கியத்திற்கு நீண்ட நாட்களாக எனக்கு உரை விளக்கம் கிடைக்கவில்லை.

நினைந்து ஊட்டுகிற தாய் என்பதைக் கேட்டிருக் கிறோம்.

நினைந்து ஊட்டுகின்ற தாய் மிகவும் பெருமை மிக்கவள் அல்லவா? நினைந்து ஊட்டுவதைவிடச் சிறப்பு என்ன இருக்கிறது?

சாதாரணமாக அழுதும் ஊட்டாத தாயை உலகத்தில் நாம் பார்க்கத்தான் செய்கின்றோம்!

அழுத பிறகு ஊட்டுகின்ற தாயையும் பார்க்கின்றோம்.

சில பேர் காலம் அறிந்து நினைந்து ஊட்டுவார்கள்.

மாணிக்கவாசகர் இந்த மூன்று தாயையும் பற்றிச் சொல்லுகிறார்.

'நினைந்து ஊட்டுகிற தாயைவிடச் சிறந்தவன்'

என்பதற்குத் திருவள்ளுவர்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

அவர் இன்பத்துப்பாலிலே, தலைமகன் ஒருவன் தலைவியைப் பிரிந்து, பொருளீட்டும் பொருட்டுச் சென்றிருந்தவன், மீண்டும் வந்து தலைவியைப் பார்த்த போது, "நான் பிரிந்திருந்தபொழுது உன்னை நினைத்துப் பார்த்தேன்" என்று தலைவியிடத்திலே சொன்னவுடன், தலைவி அழுகிறாள். சொல்லுகின்ற ஆளுக்குத் திண்டாட்ட மாகப் போய்விடுகின்றது. என்ன சொல்வது என்பது தெரியவில்லை!

'பிரிந்த நேரத்திலே உன்மேல் கொண்டுள்ள பாசத்தால் உன்னை நினைத்துப் பார்த்தேன் என்று சொன்னேன். இதற்குப்போய் அழுகிறாயே?" என்றுதான் கவலைப்பட்டுச் சொல்கிறான்.

அவள் சொல்லுகிறாள்: 'நீங்கள் நினைத்துப் பார்த்தீர்கள் என்றால் என்னை மறந்துதானே நினைத்தீர்கள். அப்பொழுது நீங்கள், என்னை ஒருபொழுது மறந்து விட்டீர்கள் என்றுதானே அர்த்தம்' என்கிறாள்.

இறைவன் நினைந்து ஊட்டுகிறதாயென்றால், அப்பொழுது இறைவன் ஒருபொழுது உயிர்களை மறந்தானோ என்ற கேள்வி வருகிறது. ஆனால், உயிர்களை இறைவன் எப்பொழுதும் மறப்பதே இல்லையென்பதை,

'நினைந்தூட்டும் தாயினும்
சாலப் பரிந்து'

என்று சொல்லுகிறார்.

நமது செந்தமிழ்க் குமரகுருபர அடிகள் இதற்கு ஓர் அழகான உவமை சொன்னார்.

நம்முடைய தில்லையம்பலவாணனுடைய திரு மேனியைப் பார்த்தால் அவனுக்குப் பக்கலில் நமது சிவகாமி அம்மை, பெருமானின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பது போல அந்த மூர்த்தி வைக்கப்பட்டிருப்பதை

அறியலாம். அது சில கோவில்களில் முறை தவறி வைக்கப் பட்டிருக்கும். அது தவறு. ஏன், அந்தப் பேரின்பக் கூத்தை அந்த அம்மை பார்த்துக்கொண்டு இருக்கிறாள் என்று குமர குருபரர் வினா எழுப்பி விடை சொல்லுகிறார்.

அம்மையார் கூத்தைப் பார்க்கவேண்டும் என்ற அனுபவத்தோடு அல்லது பெருமானுடைய அழகைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அவ்வாறு இருக்க வில்லை. அந்தக் கூத்து ஒரு பேரின்பக்கூத்து. நிறைய நாள் வரட்சியிலே இருக்கிற உயிர்களுக்கு அந்தக் கூத்தினுடைய பேரின்பத்தைப் பார்ப்பதுடன், வாரி விழுங்கவும் ஆசை வரும்.

'வாரி விழுங்கினேன், விக்கினேன்,
விதியின்மையால்'

அப்படிக் கண்டபடி வாரி விழுங்கினால், உண்ணத் துவங்கினால், அவர்கள் விக்கிச் சாவார்கள்.

ஆகையினால் தகுதியறிந்து ஊட்ட வேண்டும் என்பதற் காக அந்தக் கூத்திலே விளைகின்ற இன்பத்தையெல்லாம் அவள் வாங்கி, உயிர்களினுடைய தரம் அறிந்து பக்குவமாக ஊட்டுகிறாள் என்று சொன்னார்.

அது எப்படி என்று குமரகுருபரர் சொல்லுகிறார். குழந்தைக்கு நோய் என்றால் தாய்தான் மருந்து உண்பாளே தவிர, குழந்தை மருந்துண்பதில்லை.

குழந்தையின் நோயின் மருந்துக்குத் தாய்தான் பத்தியம் பிடிப்பாளே தவிர, குழந்தை பத்தியம் பிடிக்காது. அது போல, உயிர்களுடைய துன்பத்திற்கு இறைவன்தான் பத்தியம் பிடிக்கிறான்.

இதைத் திருக்கோவையாரிலே மாணிக்கவாசகர் இன்னும் நுணுக்கமாகக் கேட்கிறார். திருநீறு அணிந்தால்

வினை போகும் என்று சொல்லுகிறார்கள். சரி, நாம் எல்லாம் அணிகிறோம்.

சிவபெருமானும் அணிந்திருக்கிறானே?

அப்படியென்றால் சிவனுக்கு ஏதாவது வினையுண்டா? என்று கேட்பது போல மாணிக்கவாசகர் கேட்கிறார்.

சிவனுக்கு வினை இல்லை!

'தொழுதெழுவார் வினைவளம்
நீறெழ நீறு அம்பலவன்'

மற்றவர்கள் நோய் நீங்க வேண்டும் என்பதற்காக அவன் நீறு அணிகின்றான்.

புறநானூற்றுக் கவிஞன் சொல்லுகிறான், குழந்தைகளைத் தாய் காப்பாற்றுவது போல, குடிமக்களைக் காப்பாற்றுவது மன்னன் கடமை என்று.

திருவள்ளுவர் இதை ரொம்ப அழகாகக் கூறுகிறார்.

'குடிதழீஇ கோலோச்சும் மாநில மன்னன்'

என்றார்.

தழுவப்படுகின்ற பொருள் எப்படியும் நம்மிலும் உயர்ந்தது என்று நாம் கருதவேண்டும். சில சமயம் நம்மிலும் தாழ்ந்ததையும் தழுவுவது உண்டு. ஆனால் இங்கே நம்மை விட உயர்வரம்பாக இருக்கின்ற அதிகார வரம்புடைய-ஆட்சிப் பொறுப்புடைய ஒரு அரசு குடி மக்களைத் தழுவுகிறது என்று சொன்னால், அங்கே குடிமக்களுக்குரிய தரத்தை, தகுதியை, பெருமையை, உரிமையைத் திருவள்ளுவர் பெரிதுபடுத்துகிறார்.

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு' (544)

என்றார்.

ஆக, முடியாட்சிக் காலத்திலேயே குடியாட்சியைப் பற்றி-குடியாட்சிக்குரிய இயல்புகளையெல்லாம் பற்றித் தெளிவாகத் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

இது அவருடைய அரசியலிலே மிக முக்கியமான ஒரு செய்தி. இப்பொழுது அரசு என்றால் ஒரு அதிகார அமைப்புடையதாகக் கருதப்படுகின்ற மனப்போக்கு வளர்ந்திருக்கிறது. அதற்கு உள்ளே போகவேண்டும். இல்லை யெனில் அவர்கள் கண்ணிலாவது படவேண்டும் என்ற ஒரு பேரவா மனத்திலே உந்திக்கொண்டு இருப்பதாலே நமது அரசியல் உலகம் சழக்குகளாக - சேறாகப் போவதைப் பார்க்கிறோம். அஃதோடு சில கடமைகள் உடைய பணிமனையாக மட்டும் இருக்குமானால் இவ்வளவு பெரிய போட்டி, பொறாமை, சூது, காய்ச்சல் பாடு அதிலே தோன்றா.

திருவள்ளுவர் இதை நினைவிலே வைத்துக்கொண்டு சொல்கிறார். 'நீ குடிகளைத் தழுவி ஆட்சி செய்ய வேண்டும். நீ குடிகளுக்குச் சில நன்மைகள் செய்கிறாய் என்றால் அது உனது கடமை, உன்னுடைய பொறுப்பு' என்று கருதினார். இது அவருடைய ஆட்சியிலே இருக்கின்ற அரசியல் சிறப்பு என்பதை மறந்துவிடக் கூடாது.

கிட்டத்தட்ட இன்றைய மக்களாட்சி மரபு அரசும் இதுவும் ஒத்து இருக்கிறது. அடுத்து, இந்த அரசுக்குப் பொருள் என்ன என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார்.

இன்றைய தினம் பத்திரிகையில் தலைப்புச் செய்தியில் வரி இல்லை என்று செய்தி வந்துள்ளது. அரசு வரவு செலவுத் திட்டத்திலே வரி விதிக்கவில்லை.

நம்முடைய திருவள்ளுவர், அரசுக்குப் பொருள் வருவாய் எப்படி, என்ன என்பதைச் சொல்லுகிறார், பொருள் இயலிலே.

உலகத்திலே இந்தப் பொருளாதாரம் என்பது ஒரு பெரிய சித்தாந்தமாக–தத்துவமாக வளர்ந்திருக்கிறது.

கிட்டத்தட்ட திருவள்ளுவர் நல்ல பொருளியல் நுட்பங்களை அறிந்தே பேசியிருக்கிறார். அந்த நுட்பங்களை யெல்லாம் அறிந்தால்கூட நமது நாட்டிலே செல்வம் செழிக்கும்.

திருவள்ளுவர் பொருளை ஈட்டுவதைப்பற்றிச் சொல்லும்பொழுது,

> 'இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு.' 385

என்று சொன்னார். இயற்றல் என்பது மிக நுட்பமான சொல். நமக்கு இயற்றுகிற குணமும் இப்பொழுது கிடையாது.

கோடி வீட்டுக்காரர் ஒரு கடை வைத்தார். நல்ல வியாபாரம் நடந்தது என்றால் பக்கத்து வீட்டுக்காரரும் அதே வியாபாரம் நடத்த எண்ணுகிறார். அவருக்கு இன்னொரு புதுத் தொழில் காண்பதற்கு விருப்பமே கிடையாது. அவருக்கு அதிலே லாபம் வந்ததா? நாமும் அதைச் செய்வோம் என்கின்ற எண்ணம் வருகின்றது.

நம்முடைய நாடு இப்பொழுது போய்க்கொண்டு இருப்பதைப் பார்த்தால், உலகப் பொருளியல் நிபுணர்கள், சாக்ரட்டீஸ் போன்ற சிறந்த அரசியல் மேதைகள் "ஒரு நாட்டிலே வியாபாரம் அதிகம் பெருகினால் அந்த நாடு அழியும்" என்று கூறியது உண்மையாகி விடுமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

அந்த நாட்டிலே வர்த்தகங்கள் இருக்கலாம். அவன் வியாபாரத்திற்கும் வர்த்தகத்துக்கும் இடையே வேற்றுமை பிரிக்கிறான். நெடிய தொலைவிலிருந்து, இல்லாத பொருளைக் கொண்டுவந்து கொடுப்பது வர்த்தகம்.

இங்கே இருக்கின்ற அல்லது உற்பத்தியாகின்ற பொருட்களை நெடிய தொலைவில் விற்பது வர்த்தகம்.

மாம்பலத்திலே உள்ள பொருளை மயிலாப்பூரிலே விற்பதும், மயிலாப்பூரிலே இருக்கின்ற பொருளை மாம்பலத்திலே விற்பதும் வர்த்தகமாகாது; வியாபாரமாகும்.

இதில் பெரும்பாலும், புதுப் பணம் உற்பத்தியாகாமல், கையிலே இருக்கின்ற பணம் சுழன்றுகொண்டிருக்கும். இயற்றலும் என்று வள்ளுவர் கருதுகின்றபோது, புதுப் பொருளாதாரச் சித்தாந்தப்படி, புதிய தொழிற் புரட்சிகளை–புதிய தொழில் அமைப்புகளை-உருவாக்கிப் புதிய வழியிலே பொருளீட்ட வேண்டும்.

பொருள் வருவதற்குப் புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அரசுக்கு அதுதான் வேலை என்று திருவள்ளுவர் நினைக்கிறார்.

ஏதோ வந்து கொண்டிருக்கின்ற ஒரே துறையிலே வருவாய் வந்தால் போதாது. ஆக புதிய வழிகளிலே புதிய புதிய தொழில்களிலே செல்வம் வந்து குவியும்படியாகச் செய்யவேண்டும்.

'ஈட்டல்'-அவற்றை ஒழுங்காகக் கொண்டுவந்து சேர்த்தல்.

'காத்தல்'-கொஞ்ச நாளைக்குக் காக்கவேண்டும்.

செல்வம் வர வர உருண்டுகொண்டு இருந்தால், திரும்பச் செல்வம் வருகின்ற வழியை இழந்துவிடுகின்றது.

ஒரு நூறு ரூபாய் ஒருவரிடத்திலே இல்லாமல் நூறு பேரிடம் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் இருந்தால், அந்தச் செல்வத்திற்குத் திரும்பி வரும் சக்தி இல்லாமல் போய்விடுகிறது.

அதற்கு ஒரு மூலதனம் என்று பெயர் வராது. ஆனால் இந்த நூறு பேரும் அரசின் வங்கியிலே இட்டால், இந்த நூறு பேரும் ஒரு சிறு சேமிப்பிலே இட்டால், நூறு ரூபாயும் ஒரு இடத்திலே சேருகிறது. அது ஒரு பெரிய பொருளைச் சேர்க்கின்ற சக்தியைப் பெறுகின்றது.

சாதாரணமாக உதிரி உதிரியாக வருகின்ற பணத்தை, சில்லறையாக வந்து சேருகின்றதைத் தயவு செய்து உடனுக்குடன் அழித்துவிடாதீர்கள். அதை ஒரு மூலதனமாக உருவாகிற வரையில் அந்தப் பொருளைப் பத்திரமாகச் சேமித்து வையுங்கள்.

மூலதனத்தின் திரட்சி தேவை என்பதை, பொருளியல் நூல்கள் கருதுவதை, வள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எவ்வளவு தெளிவாகவும், நுட்பமாகவும், சொல்லி யிருக்கிறார்.

புதிய துறைகளில் பொருள் வருவாய்க்காகச் செய்ய வேண்டும். அவற்றை முறையாக ஈட்டிக்கொண்டு வர வேண்டும். அவற்றைக் கொண்டுவந்து பிறிதொரு மூல தனத்தைப் பெறுதற்குரிய இன்னொரு செல்வத்தை, தகுதி பெறுகின்ற காலம் வரையில் காக்க வேண்டும்.

ஆனால் நெடிய நாட்களுக்கு அந்தப் பணம் தூங்கி விட்டாலும் ஆபத்து. அதற்குப் பிறகு அதை வகுத்து முறைப் படுத்த வேண்டும்.

வகுத்தல் என்றால் விநியோகம் என்றோ, வேறு மாதிரியாகவோ நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டிலே விநியோகம் என்பது ஒழுக்கமில்லாத ஒன்று. அதனாலே விளைகின்ற இன்னல்கள் ஏராளம்.

உதாரணமாக, நம் நாட்டிலே வழிபாட்டு நிலையங்கள், பஜனை மடங்களுக்குச் சென்றால், கடைசியாக எல்லோ ருக்கும் சுண்டல் கிடைப்பது தெரிந்ததே!

வழிபாட்டு நிலையங்களுக்கு நம் நாட்டிலே இது ஒரு முத்திரையாயிற்று. ஒருநாள் வழிபாட்டு நிலையத்திலே வழிபாடுகள் எல்லாம் முடிந்த பிறகு, சுண்டல் கொடுக்கின்ற காலக் கட்டம் வந்தது; அன்று கூட்டம் கொஞ்சம் அதிகம். ஆனால் சுண்டல் கொஞ்சம் குறைவாக இருந்தது.

அதை எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தபொழுது, அங்கு இருந்த ஒரு பெரியவர் சட்டியைப் பார்த்தார். 'கூட்டம் அதிகமாக இருக்கிறது. சுண்டலோ குறைவாக இருக்கிறதே! எல்லோருக்கும் கிடைக்குமா?" என்று பெரியவர் சுண்டல் கொடுக்கிறவரைப் பார்த்துக் கேட்டார். 'சுண்டல் கொஞ்சம் குறைவாக இருக்கிறது, எல்லோருக்கும் கிடைக்கும்படியாக நிரவிக்கொடு' என்று சொன்னார்.

சுண்டல் கொடுப்பவர் நிரவிக் கொடுக்க ஆரம்பிக் கையில், கூட்டத்திற்குப் பின்னால் ஒருவன் உட்கார்ந்திருந் தான். அவன் பஜனைக்குக்கூட வரவில்லை சுண்டலுக்காக வந்தவன்.

இத்துணை பேருக்கும் கொடுத்துக்கொண்டு வந்தால் நமக்கு வராதோ என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டதோடு மட்டுமின்றி, அச்சம் வேறு வந்துவிட்டது. ஆகையினாலே, முன்னால் இருந்தவர்களைத் தள்ளிக்கொண்டு சென்று பத்துப் பேருக்குரிய சுண்டலைக் கைபோட்டு எடுத்துச் சென்றுவிட்டான். அந்த இடத்திலே நிகழ்ந்த அச்சம்பவத்தை, அந்த இடத்திலே இருந்த யார் பார்த்தாலும் பொறுமையாக இருக்க மாட்டார்கள்.

எவ்வளவு பெரிய பொறுமைசாலியாக இருந்தாலும், 'என்னப்பா! பத்துப் பேர் சுண்டலை ஒரு ஆள் அள்ளிக் கொண்டு போகிறாயே!' என்று கேட்டுத்தான் கோபிப்பார்கள்.

பஜனை மடத்திலே பத்துப் பேருக்கு விநியோகிக்க வேண்டிய சுண்டலை ஒரு ஆள் அள்ளிக்கொண்டால்,

அதற்கு நமக்குப் பொறுமை கிடையாது, தாங்குகிற சக்தி நமக்குக் கிடையாது.

ஆனால் நாட்டிலே, நிலத்திலே, சுரங்கங்களிலே, மலைகளிலே, காடுகளிலே விளைகின்ற ஏராளமான செல்வங்களை, பத்துப் பேர் சாப்பிடக்கூடியவற்றை ஒரு ஆள் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டால், "அவன் கொடுத்து வைத்தவன்" என்று சொல்லுகிறார்கள்.

இதே ஆட்கள்-சுண்டலுக்கு மனம் வருந்தியவர்கள், ஏராளமான நாட்டினுடைய இயற்கைச் செல்வங்கள் முறை யாக விநியோகப்படாமல், முறையாகப் பகிர்ந்து கொடுக்கப் படாமல், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற இயல்புக்கு ஏற்பச் செய்யப்படாமல் அவை எங்கோ சென்று குவிவதைப் பார்த்தால், அதை ஏன் என்று கேட்கத் தைரியம் கொள்ள மாட்டார்கள். தைரியம் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம், ஏதோ கடவுள் ஒரு நீதியை ஏற்படுத்திவிட்டான் என்ற ஒரு பாறைக்கல், ஒரு சுமை நம் மூளைமீது ஏற்றப்பட்டி ருப்பதால் நாம் அதைத் தட்டிக் கேட்பதற்கு அச்சப்படுகின் றோம்.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' 1062

என்று வள்ளுவர் குரல் கொடுக்கிறார்.

ஆக, திருவள்ளுவர் காத்தலுக்குப் பிறகு 'வகுத்தலும் வல்லது அரசு' என்று சொன்னார்.

ஆக, ஒரு பொருளியல் என்று சொன்னால், அது எப்படி இருக்கவேண்டும்; ஒரு அரசு பொருளை எப்படி நிர்வாகம் செய்யவேண்டும் என்பதை மிகத் தெளிவாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு புதிய வழிப் பொருளியல், பொருள் ஈட்டல், பொருளைப் பாதுகாத்தல்,

வகுத்தல் என்ற அமைப்பிலே சொன்ன அழகை நாம் பார்க்கின்றோம்.

அடுத்து, நம்முடைய அமைப்பிலே அவருக்கு இருப்பது நாட்டின் நில வருவாய். இப்பொழுது பெரும்பாலும் நாட்டிலே நில வருவாய்தான் அதிகம். நம்முடைய நாட்டின் ஆட்சித் துறையிலேகூட வேளாண்மைத்துறை மிக முக்கிய மான உயிர் நாடி என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

திருவள்ளுவர் "வாரி பெருக்கி" என்பதை அரசைப் பார்த்துச் சொன்னார். நல்ல நீர் மராமத்து, குடி மராமத்துக் களைச் செய்து, தண்ணீர் வளத்தைப் பெருக்கும்படியான காரியங்களைச் செய் என்பதைத்தான் வள்ளுவர்,

"வாரி பெருக்கி வளம்படுத்து"

என்றார்.

இந்த வேளாண்மை என்ற தொழில் இருக்கிறதே அதிலே மழைக்கு-தண்ணீர் வளத்திற்கு வாரி என்று, பெயர். இந்த வாரி வேலைகளை-கால்வாய் வேலைகளைக் காலா காலத்திலே முறையாகச் செய்து, அவைகளைத் தூய்மைப் படுத்தித் தண்ணீரை நிறையக் கொண்டுவந்து சேர்த்து, வளம்படுத்த வேண்டும். நிலங்களை வளப்படுத்த வேண்டும். போதுமா? அதற்குப் பிறகு பூச்சிபொட்டு அழிவு வருகிறதே! அதற்கு? உற்றதை ஆராய்ந்து, உரியதைச் செய்து, நீர்வளம் பெருக்கி நிலவளம் காக்க வேண்டும்.

இதற்குப் பிறகு, பயிர் அழிந்துவிடாமல் இருப்பதற் குரிய காவலும் வேண்டும். ஆகவே, ஒரு நீர்ப் பாசனத்துறை, விவசாயத்துறை, வேளாண்மைத்துறை அமைச்சர் அலுவல கத்தில் இந்தக் குறள் இருந்தால்-இந்த மூன்று வேலை களையும் ஒழுங்காகச் செய்தால், வேளாண்மைத்துறையில் நிச்சயமாக உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும். இப்பொழுது வாரி பெருக்குவது என்பதே கிடையாது.

பழங்காலத்திலே நமது சிற்றரசர்களிலே மூவேந்தர் காலங்களிலேகூடக் குடிக்கு ஒரு மரக்கால் என்று நெல் எடுத்து, தன்னுடைய வாய்க்கால் வருகின்ற வரப்புக் கால்களை எல்லாம் பழுது பார்த்துச் சீர்செய்து முறைப் படுத்தி வைப்பார்கள். ஒரு சொட்டுத் தண்ணீர் பெய்தால் கூட அது கண்மாய்களுக்கும், ஏரிகளுக்கும்தான் வந்து சேரும்.

இப்பொழுது ஒரு சொட்டுத்தண்ணீர் பெய்தால் இடையிலே இருக்கின்ற திட்டுமுட்டுகளிலே தங்கி வருவதற்குள்ளாக வீணாகிவிடுகிறது.

ஆக, 'வாரி பெருக்குதல்' என்ற ஒரு கடமையை அரசுக்கு வற்புறுத்துகிறார்.

வாரித் தீர்வை என்றே தமிழக அரசு ஒரு தீர்வை வாங்கி, இந்த வாரி, கால்வாய்களை எல்லாம் பழுது பார்த்திருக்கிறது!

ஆனால் இப்பொழுது அது 'வாரி பெருக்குதல்' என்கிற ஒரு வேலையை முற்றிலும் செய்வது இல்லை.

அது திருவள்ளுவர் கண்ட அரசிலே மிகச் சிறந்த சிறப்பு.

நிலத்தை வளப்படுத்த வேண்டும் என்று சொன்னார்.

பெரும்பாலும் நம்முடைய நிலம் எய்த்துப் போய்க் கிடக்கிறது.

ஒரு சாண் மண், இரண்டு சாண் மண், கிண்டிக் கிண்டி பத்து நூறு ஆண்டு அவன் எடுத்துக்கொண்டு இருந் திருக்கிறான்.

நீ எவ்வளவு எடுத்தாயோ, அதிலே பத்தில் ஒரு பங்காவது நிலத்திற்குத் திரும்பக்கொடுக்க வேண்டாமா?

கொடுக்க வேண்டும். அதைத்தான் வள்ளுவர், நிலத்திற்கு வனம் இட வேண்டும் என்கிறார். பின்னால் எரு இடுதல் என்றே சொல்லுகிறார்.

ஆழ உழ வேண்டும்; அகல உழுவதைவிட எரு இடுதல் சிறந்தது என்று கூறுகின்றார் திருவள்ளுவர். எரு இடுதல், புழுதிகூட எப்படி உழ வேண்டும், எப்படிப்பட்ட புழுதி இருக்கவேண்டும், என்றும் சொல்லுகிறார்.

எனவே, வேளாண்மைத் துறைக்கு ஒரு சிறந்த பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அது அதனுடைய கடமைகளிலே மிகச் சிறந்தது என்றே சொன்னார். அதற்குப் பயிர் பச்சைகளையெல்லாம் காப்பாற்றவேண்டும் என்று சொன்னார்.

சரி, அப்பொழுது நான் வரியே இல்லை என்று சொன்னேனே, வரியில்லாமல் அரசு எப்படி நடந்தது? அரசுக்கு வரி எப்படி வந்தது? ஆனால், இப்போது எல்லாரும், எல்லா இடங்களிலும், பல வாசற்படிகளில் வரி கொடுக்கிறோம். ஒரு வாசற்படியிலே, ஒரு ஆளிடம் மட்டுமல்ல, பல இடங்களிலே-பல கட்டடங்களிலே, பல வடிவங்களிலே-பல பெயர்களிலே வரி கொடுக்கிறோம்.

சிலர் நாம் வரி கொடுக்கிறோம் என்பதுகூடத் தெரியாமல் இன்னொருவர் மூலமாகக் கொடுக்கிறோம். இதெல்லாம் இப்பொழுது முதலாளித்துவத்தின் அரசில். அரசு வேறு; மக்கள் வேறு என்கிற இடத்தில் இருக்கின்ற வரி அமைப்பு முறைகள்.

ஆனால் திருவள்ளுவருடைய அரசு அமைப்பு முறையிலே ஆளப்படுகிறவர்களும், ஆளுகின்றவர்களும் நெருங்கிய உறவினர்கள். அங்கே, ஒருவனை ஒருவன் ஏமாற்ற வேண்டும் என்றோ, நல்லது கெட்டதைச் சொல்லிச் செய்ய வேண்டுமென்றோ அவசியமில்லை.

அரசுக்குத் தேவை என்றால், 'இறை ஒருங்கு நேர்வது நாடு' என்றார் வள்ளுவர். அரசுக்கு இன்று ஒரு ஆபத்து ஏற்பட்டுவிட்டது. அந்நியப் படையெடுப்பு வந்திருக்கிறது. இன்ன நாட்டிலிருந்து ஐயாயிரம் அகதிகள் வந்திருக்கிறார்கள். இதற்கு இவ்வளவு ரூபாய் தேவை என்று எவ்வளவு திட்டமிட்டுச் சொல்கிறானோ அந்தத் திட்டமிடுகிற தொகையை 'இறை ஒருங்கு நேர்வது நாடு' என்றார்.

அரசு அறிவித்த 24 மணி நேரத்திற்குள்ளாக, அந்த அரசு கேட்கின்ற தொகை முழுவதும் கொடுக்கின்ற நாடு சிறந்த நாடு என்று சொன்னார். அது எப்பொழுது என்றால்,

'பொறை ஒருங்கு மேல்வருங்கால்'

நாட்டின் மேலே படையெடுப்பு வருகின்ற காலத்திலும், வேறு அல்லல் வருகின்ற காலத்திலும் அரசு திட்டமிட்டு இவ்வளவு தொகை வேண்டும் என்று கேட்கும். கேட்ட 24 மணி நேரத்தில் அது அரசனுடைய கருவூலத்திற்கு வந்து சேரும்.

'ஒருங்கு நேர்வது நாடு'

இன்று கொஞ்சம், நாளை கொஞ்சங்கூட அல்ல! ஒரு தேதியில் அதைக் கொடுத்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள் அந்த நாட்டுக் குடிமக்கள். இது இயல்பு என்று வள்ளுவர் சொன்னார். இது இங்கிலாந்து நாட்டுச் சரித்திரத்தைப் பார்க்கையிலே, சர்ச்சிலினுடைய உதாரணம் என்று சொல்லுவார்கள். ஆனால் இப்பொழுது நம் நாட்டிலே அரசுக்குக் கடன் வழங்குவது என்று சொன்னால் அந்த அதிகாரிகள் படுகின்றபாடு, ஆண்டவனுக்குத்தான் தெரியும். ஒரு கடன் என்று அரசு ஒரு மின்சாரக் கழகத்திற்கு அறிவித்துவிட்டால்-ஒரு சிறு சேமிப்பு என்று அறிவித்து விட்டால் அதை 24 மணி நேரத்துக்குள்ளாக முறையாகத்

தேசபக்தியோடு கொண்டுபோய் அங்கு நின்று கொடுப்பது இல்லை.

நாம் 2 லட்ச ரூபாய் அல்லது கோடி ரூபாய் வசூல் செய்தால் அதில் கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் செலவாகும்போல் தெரிகிறது. அதிலே இருக்கின்ற முயற்சி களைப் பார்த்தால் ஐந்து லட்ச ரூபாய் செலவுமட்டு மல்லா மல், அந்த ஒரு மாதத்தில் அந்த அலுவலர்கள் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் விடுபட்டு, 'அது ஏன் வரவில்லை' என்று கேட்டால், 'அது அந்த வேலையாகப் போய்விட்டது, இனிமேல்தான் எடுக்கவேண்டும் என அலுவலர்கள் கூற நேரிடும்.

அரசுக்குரிய கடன்களை–அரசுக்குத் தேவையான பொருட்களை, 'இறை ஒருங்கு நேரவேண்டும்' என்று சொன்னார்.

இது எப்படியாவது வரி விதிக்கப்படுகின்ற முறை. ஆனால் நிரந்தரமான வரி என்ன இருந்தது அரசுக்கு?

'உறுபொருள் உல்கு பொருள்'

என்று இரண்டு பொருள் சொல்கிறார்.

'உறுபொருள்' என்பதற்கு உரை ஆசிரியர்களே பல இடங்களில் மாறுபடுகிறார்கள்.

பரிமேலழகர் புதையல் என்று பொருள் செய்கிறார். நிலத்திற்குள்ளாக யாருக்கும் உரிமை இல்லாமல் கிடைக் கின்ற புதையல் உறுபொருள். தன்னிச்சையாகக் கிடைக்கின்ற பொருள் அரசுக்குச் சொந்தம்தான்.

இதுவரையில் அது அரசுக்குச் சொந்தம்தான்.

இப்பொழுதும்கூட நமக்குப் பூமிக்குள் இருந்து தங்கப் பாறை கிடைக்கிறது என்றாலுங்கூட, அது அரசுக்குத்தான் சொந்தமே தவிர நமக்கல்ல! அது யார் வீட்டுத் தோட்டத்தில் இருக்கிறதோ அவருக்குச் சொந்தமல்ல. ஆனால், 'உறு

பொருள்' புதையல் மட்டுமல்ல. வழிவழி வாரிசு இன்றிப் போனால், அந்தச் சொத்தும் அரசுக்குச் சேரும்.

இப்பொழுது யாரும் அரசுக்கு வழிவழிச் சொத்துக் களை விடுவதில்லை என்று நான் நினைக்கிறேன். ஏன் என்றால், அரசு மீது அவர்களுக்கு மிகவும் நம்பிக்கை இல்லாது போனதினாலேயே, வழிவழிச் சொத்தை அரசிடம் தர அவர்கள் தயாராக இல்லை.

யாராவது இறக்கின்ற நேரத்தில், சொத்து அரசுக்குப் போய்விடக்கூடாதே என்று 'ஸ்வீகாரம்' செய்ய எண்ணு கிறான். அவன் அவ்வாறு செய்யவில்லை என்றால் கூட, அந்தச் சொத்துக்கு ஆசைப்பட்டவன் அந்த இறந்தவனுடைய கட்டை விரலை மை தடவி உருட்டியாவது, பொய்ப்பத்திரம் தயார் செய்துவிடுகிறான்.

ஆனால் திருவள்ளுவர் காலத்தில் வாரிசு இல்லாதவர் களுடைய பொருள், மக்கட்பேறு இல்லாதவர்களுடைய பொருள், அரசுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது.

ஆக, உறுபொருள் என்று சொல்லுகிறபொழுது, நிலத்திலே புதைந்து கிடக்கின்ற புதையல்கள் வாரிசு இல்லாமல் போகின்ற பொருள்கள் ஆக இரண்டு பொருளும் அரசுக்குச் சொந்தம்.

'உல்குபொருள்' என்று சொல்லுகிறார். திருவள்ளு வருக்கு இந்த நாட்டினுடைய சுயதேவையைப் பற்றி எவ்வளவு அக்கறை!

உள்நாட்டுப் பொருள் எதற்கும் அவர் வரி போட வில்லை. அயல் நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் பொருள்களுக்குச் சுங்க வரி என்று இப்பொழுது போடுகிறார் களே அதை வள்ளுவர் 'உல்குபொருள்' என்று அப்போதே சொல்லியிருக்கிறார்.

அந்தப் பொருட்களுக்கு வரி விதித்ததன் காரணம் என்ன? அயல் நாட்டின் பொருள்கள் நம் நாட்டிலே செலா

வணி ஆகிக்கொண்டிருப்பின், அதையே நமது மக்கள் வாங்கிப் பயன்படுத்திக்கொண்டு ஏழையாகப் போய் விடுவார்கள். ஆகவே அப்பொருட்களின் மீது வரியைப் போட்டால், பொருளின் விலை கூடும். விலை கூடினால் வியாபாரம் சுருங்கும். நம் நாட்டிலே செல்வம் செழிக்கும் என்ற கருத்திலே வள்ளுவர் 'உல்குபொருள்' அரசுக்குரிய பொருள் என்று சொன்னார்.

பிறகு 'ஒன்னார்த்தெறும் பொருளும்' பகைக்குலத் திலே மாற்றாருடன் போராடி அந்த நாட்டில் இருந்து கொண்டு வருகின்ற பொருள்.

இந்தப் புதையல், வாரிசு இல்லாமல் இருக்கும் சொத்துக்கள், வெளிநாட்டில் போராடிக் கொண்டுவரும் பொருட்கள், ஆகிய மூன்றும் அரசுக்குச் சொந்தம் என்கிறார்.

இதற்குப் பிறகு வேண்டியபொழுது விதித்து வாங்குகிற வரிப்பொருள், இதைத் தவிர அரசுக்கு வேறு வரி என்ற அமைப்பு திருவள்ளுவர் குறிப்பிடவில்லை.

ஆனால், தமிழ்நாட்டினுடைய வரலாற்றைப் பார்த்தால், அரசியல் அமைப்பைப் பார்த்தால், நமக்கு ஒரு ஐயப்பாடு தோன்றுகிறது. அது நீண்ட நெடிய அளவுக்கு உரியது.

நிலங்கள், செல்வத்தினுடைய உற்பத்திக் கேந்திரங்கள், இவைகள் எல்லாம் அரசுக்குச் சொந்தமாக இருந்தனவாகத் தெரிகிறதே தவிர, தனி மனிதனுக்குச் சொந்தமாக இருந்தன வாகத் தெரியவில்லை.

காரணம், பாரி முந்நூறு ஊரும் கொடுத்தான். இவ்வளவு ஊரும் கொடுத்தானென்றால், இடையிலே கருப்புச் சாமிக்கும், சிவப்புச் சாமிக்கும் அங்கே பட்டா இருந்திருக்குமானால், அவன் எப்படி கொடுத்திருக்க முடியும்?

நம்முடைய பேரரசுகள்-சேர, சோழ, பாண்டியர்கள் பல கோயில்களுக்கு, பல இடங்களை, பல கிராமங்களை இனாமாக வழங்கி இருக்கிறார்கள்.

அப்பொழுது நிலத்தை உழுகின்றவனுக்கு உழுகின்ற உரிமை தவிர, நிலத்திலே வேறு விதமான உரிமை இல்லாமல் அரசுக்கு நிலம் சொந்தமாக இருந்தது.

ஆகையினாலேதான் அரசர்கள் நிலத்தைத் தம்முடைய விருப்பம் போல் வழங்கியிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலத்திலே, வழங்கப்பட்ட நிலம் போக, யாரும் பயன்படுத்தாத, பட்டா வாங்காமல் இருக்கிற நிலம் போக மற்ற நிலங்களில் வருகின்ற பொருள் இருந்திருக்கலாம். அது அவனுக்குச் சொந்த உடைமையாகவே இருந்திருக்கிறது.

"நிலம் பொதுவெனப் பொறான்"

என்பது புறநானூற்றுப் பாட்டு. நிலத்தைப் பொது என்று சொல்வதைத் தாங்கிக்கொள்ள மாட்டான். அது அரசுக்குள்ளேயே என்று வந்தாலுங்கூட!

அரசுக்கு நிலம் சொந்தமாகவே இருந்து வந்திருக்கிறது. இது நமக்கு வழக்கிலேகூடத் தெரிந்து வந்திருக்கிறது.

அரசன் இனாமாகக் கொடுத்தானேயானால், எப்படி மற்றவர்க்குச் சொந்தம் ஆக இருந்திருக்கமுடியும்? ஆகையினால் அரசுதான் நிலத்தின் உடைமைக் கர்த்தாவாக இருந்திருக்க முடியும்.

இனி மனிதர்களைப்பற்றிப் பேசுகின்றபோது, வள்ளுவர் வேறு உடைமைகளைப்பற்றிப் பேசாமல், 'ஊக்கமுடைமை உடைமை" என்று சொல்லுகின்ற பொழுதில் எல்லாம், உள்ள ஊக்கந்தான் உடைமையே தவிர, காணி, பூமி உடைமை என்று சொல்லவே இல்லை.

ஆகையினாலே, வள்ளுவர் பின்னாலே வந்த மார்க்ஸ் முனிவருடைய சித்தாந்தப்படி உற்பத்திக் கேந்திரங்கள்

எல்லாம் அரசுக்குச் சொந்தமாக இருந்தால் தேவையானவர்கள், தகுதியானவர்கள், உழைப்பாளிகள் எடுத்துப் பயன்படுத்துவார்கள். அது நாட்டிலே செல்வச் செழிப்புக்குத் துணை செய்யும்.

தனி மனிதனுக்கு உடைமைகள் இருப்பதினாலே அதிலே பற்றுகளும், பாசங்களும் பெருகி, காலப் போக்கிலே அவன் ஒழுக்கக்கேடு உடையவனாகப் போய்விடுகிறான்.

ஆகவே திருவள்ளுவர், "உள்ளம் உடைமை உடைமை, ஊக்கமுடைமை உடைமை" என்று சொன்னார். இது ஆய்வுக்கு உரியது. நிலம் அரசுக்குச் சொந்தமாக இருந்திருக்கிறது. இது வள்ளுவருடைய அரசுக்குரிய பொருளியல் அமைப்பிலே நாம் காணுகின்ற சிறந்த சாட்சி.

அரசு தவறு செய்கிறது அல்லது மக்கள் தவறு செய்கிறார்கள் என்றால் திருவள்ளுவருடைய ஆராய்ச்சியே தனிப் போக்கு.

நம்முடைய நாட்டிலே பழங்காலந்தொட்டு இயற்கை கெட்டால், விரிசுடர் வீழ்ந்தால், மழை பொய்த்தால் அரசைத்தான் குறை சொல்லுவார்கள். அரசு ஒழுக்க நம்பிக்கையாக இல்லையென்றால் மழை பெய்யாது; கற்பு முதற்கொண்டு இருக்காது; அறம் இருக்காது. ஆக, அரசின் பேரில் அவ்வளவு நம்பிக்கை இருந்தது.

காரணம், எல்லா விதமான அதிகாரங்களும் அரசுக்கு இருக்கின்றன அல்லவா?

தனி மனிதன் முயன்று முயன்று செய்தாலும் சிறு தவறுகள் பண்ணுவானே தவிர பெரிய தவறுகள் செய்து நாட்டினுடைய வரலாற்றைக் கெடுத்துவிட முடியாது.

அரசு என்பது எல்லா விதமான அதிகாரங்களும் குவிந்திருக்கின்ற இடமானமையின் காரணமாகத் தவறு பெரிதாகப் படுகிறது.

மலையிலே ஏற்றி வைக்கப்படுகின்ற விளக்கைப் போன்றது அரசு. வீட்டிற்குள்ளே ஏற்றிவைக்கப்பட்ட விளக்கைப் போன்றவை தனி மனிதனின் தவறுகள். ஆக, மலையிலே ஏற்றிவைக்கப்பட்ட அந்த விளக்கு அணைந்து விட்டால், ஊர் முழுவதிலும் இருள் சூழ்கிறது. வீட்டினுள்ளே விளக்கு அணைந்துவிட்டால் குறிப்பிட்ட இடத்தில் மட்டுந் தான் இருட்டு. அரசு என்பது நடுவூரிலே ஏற்றிவைக்கப்பட்ட விளக்கைப் போன்றது. அது அணைந்தால், நாட்டிலே-நகரத்திலே இருக்கின்ற மக்கள் அனைவரும் அல்லல் படுவார்களே என்பதினாலே அரசினுடைய ஒழுக்கத்திலே திருவள்ளுவருக்கு நிறைந்த நம்பிக்கை.

ஆதலினாலே அவர் சொல்லுகிறார்,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம்
காண்கிற்பின்'

என்று.

ஒருவன் தவறு செய்கிறான். தவற்றுக்குத் தண்டனை உண்டு. ஆனால் அரசு முதலில் யோசிக்க வேண்டும், 'இந்தத் தவறுகளைச் செய்யக்கூடிய சூழ்நிலையில் நம்முடைய ஆட்சியும் அரசும், அமைந்திருக்கின்றனவா?" என்று.

அந்த ஆட்சியினுடைய அமைப்பு, சமூகத்தினுடைய அமைப்பு, நல்லவையாக இருக்க வேண்டும்.

அவனுக்கு நல்ல காவல் வேண்டும். எல்லாவற்றையும் விட உத்தரவாதம் வேண்டும். வள்ளுவருக்கு அதிலே அசைக்க முடியாத நம்பிக்கை.

நான் இந்த நாட்டிலே பிறந்திருக்கிறேன். எனக்கு வாழ்வதற்கு உத்தரவாதம் இந்தச் சமூகமும், இந்த அரசும் கொடுக்க வேண்டும். பெரும்பாலும் உத்தரவாதம் கொடுப்ப தென்பது அருமையான செய்கை.

சில நாட்களுக்கு முன்பு புயல் வந்தது. இருந்ததோ ஒரு சிறு குடிசை. குடிசையும் காற்றில் போய்விட்டது. கட்டியிருந்த மனை இன்னொருவருக்குச் சொந்தம். புயலிலே நட்டமானவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு அதிகாரிகள் வருகிறார்கள். கடன் கொடுக்க விரும்புகிறார்கள். அரசு சட்டப்படி, 'உனக்குச் சொத்து இருக்கிறதா?' என்று கேட்கிறார்கள். அவன் 'அந்தக் குடிசைதான் எனக்குச் சொத்து. அதுவும் காற்றில் போய்விட்டது. மனை எனக்குச் சொந்தமில்லை' என்று சொல்ல, அதிகாரி, 'உனக்குக் கடன் கொடுக்க இயலாது' என்று சொல்கிறார். இது எப்படி உத்தரவாதமுள்ள அரசாக இருக்க முடியும்?

21 வயது ஆகிவிட்டால், இல்லை, இந்த நாட்டிலே-இந்த மண்ணிலே பிறந்துவிட்டானானால், அவனுக்குரிய வாழ்க்கையை வேறு எதை வைத்தும் கொடுக்காமல் இந்த நாட்டுக் குடிமகன் என்கிற அமைப்பில் கொடுக்கிற-வழங்குகிற அரசுதான் உத்தரவாதமுள்ள அரசு.

அரசு குடிமகனுக்குக் கடன் கொடுத்தால், அதை எப்படி வசூலிப்பது? வசூலிப்பதற்கு நிறைய வழிகள் உண்டு. நெடுஞ்சாலைத் துறை இருக்கிறது. பொதுப்பணித்துறை இருக்கிறது. நான் உழைப்புச் சக்தி உடையவன் என்று சொன்னால் அரசாங்கம் பதிவு செய்துகொள்கிறது. 'இன்ன மாவட்டத்திலே-இன்ன தாலூகாவிலே-நீ உன்னுடைய உழைப்பால் ஆகிய வேலையைச் செய்; பாதி ஊதியத்தை வாங்கிக்கொள்; பாதியைக் கடனுக்கு அடை' என்றால், அடைத்து விட்டுப் போய்விடுகிறான். அவனுக்குச் சொத்து இருந்தால்தான் கடன் தருவேன் என்றால், சொத்து இருக்கிறவன்தான் கடன் வாங்கிக்கொண்டிருப்பான். சொத்து இல்லாதவன் என்றைக்கும் கடன் வாங்க முடியாது. அவன் முன்னுக்கு வர வாய்ப்பே இல்லை. நான் கடன் வாங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு இதனைச் சொல்ல வில்லை. கடன் வாங்குவது என்பது இப்பொழுது நாகரிகம்.

உலகம்–அதாவது, இப்பொழுது புது உலகத்திலே, மேல் தட்டிலே இருக்கிறவர்கள் கடன் வாங்கவில்லையென்றால் அது கேவலம் என்று கருதுகிற காலம். பழங்காலத்திலே கடன் வாங்குவது கௌரவக் குறைச்சல்.

இப்பொழுதெல்லாம் 'எனக்கு அந்த பாங்கிலே ஓவர் டிராப்ட்' என்று சொன்னால், ஓஹோ! இரண்டு மூன்று பாங்கிலே ஓவர் டிராப்ட் வைத்திருப்பதனாலே பெருமை யான ஆளே தவிர சிறுமையான மனிதர்கள் அல்ல!

ஆதலினாலே வள்ளுவர் சொன்னார்,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு' 436

என்று. எப்பொழுதும் நாட்டிலே நடக்கின்ற குற்றங்களுக்குத் தன்னுடைய அரசு, தன்னுடைய ஆட்சி சார்பாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

'வேந்தனும் அல்லவை செய்யான்'

இது புறநானூற்றுப் பாடல்.

ஒருவருக்கு எழுபது ஆண்டுகள் கழித்தும் தலை நரைக்கவில்லையாம். பெரிய அதிசயம் அந்தக் காலத்திலே! இப்பொழுது நமக்கு அதிசயமே இல்லை ஏன் எனில் இளமையிலேயே நிறையப் பேர் கிழவர்களாகி விடுகிறார்கள். அவர்களுக்கு நரை, திரை, மூப்பு வந்து விடுகின்றன. அந்தக் காலக் கிழவன் ஒருவனுக்கு எழுபது ஆண்டுகள் ஆகியும் நரை தோன்றவில்லை.

'யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்காகியர்'

என்று கேள்வி கேட்கிறார்.

சில வீடுகளில் மிகவும் பரபரப்பே இருக்கும். அரிசிப் பானையிலே உலை கொதிப்பது போல் பரபரப்பும் இருக்கும்.

அது வீட்டு வாழ்க்கை என்று சொல்ல முடியாது. மிகவும் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும்.

'மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்'

அவனுடைய வீட்டிலே நல்ல மனைவி, நல்ல மக்கள், அவனுக்கு உயர்ந்த நண்பர்கள், அவன் நினைத்ததைச் செய்யும் ஏவலர்கள். இப்பொழுது சொன்னதைச் செய்தாலே போதும் என்ற காலம். வேலைக்குச் சேர்க்கும்போதே, நான் சொன்னதைச் செய்தால் போதும், நீயாக ஒன்றும் செய்ய வேண்டாம், என்று சொல்லி வேலையாளைச் சேர்க்கின்ற காலம் இது!

'வேந்தனும் அல்லவை செய்யான்'

அவன் படுத்தால் நிம்மதியாகத் தூங்க வேண்டும். இதுவும் அரசனது பொறுப்பு.

என்னுடைய கைகளிலே உள்ள பொருட்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது, போட்டா போட்டிகள் நிறைந்த ஒரு விலங்கு உலகம் ஆகும்.

'உங்களுடைய கைகளிலே உள்ளவைகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள்!' கோயில்களிலே திருவிழாவிற்குச் சென்றால், அடிக்கடி ஒலி பெருக்கியிலே சொல்லுவார்கள். 'சங்கிலிகளைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்! கைகளிலே உள்ள 'பர்சை' பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்!' என்று சொல்லுவார்கள்.

பத்திரப்படுத்துவது யாருடைய பொறுப்பு என்று வள்ளுவர் கருதுகிறார்? ஒருவன் பொருளைத் தமது பொருள் போல் பாதுகாத்துக் கொடுக்கவேண்டும்.

இப்பொழுது நமக்கு அந்த ஒழுக்க இயல்பு இல்லை. வள்ளுவர் நமக்கு அந்தக் குறிப்பைச் சொல்கிறார்.

நீ மற்றவருடைய ஒழுக்கத்தை வளர்க்க வேண்டு மென்றால், உன்னுடைய அரசு ஒழுக்கச்சார்பு உடையதாக இருக்கவேண்டும். ஆதலினாலே,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்'

என்றார்.

முதலிலே குற்றங்கள் நிகழ்வதற்கு உரிய காரணமாக இருக்கிற, உன்னுடைய அரசின் குற்றத்தை நீக்கு! ஏழ்மையும், வறுமையும், பகையும், உட்பகையும் இருக்குமானால், மக்களும் குற்றம் செய்துகொண்டே இருப்பார்கள்.

அவர்களை மேய்ப்பதே அரசுக்கு ஒரு வேலையாக இருக்குமே தவிர, ஆட்சி வேலைகளைச் செய்ய முடியாது என்ற குறிப்பை மிகத் தெளிவாக நினைவுபடுத்துகிற காட்சியைப் பார்க்கிறோம்.

அடுத்து, தண்டனைக்கு வருவோம். முதலில் அரசுக்குச் சொன்னார். தண்டனை கொடுக்காமல் இருக்கலாமா?

தண்டனை கொடுப்பதை மேலை நாட்டு அறிஞர்கள் மிக வேடிக்கையாகச் சொல்கிறார்கள்.

'கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல்'

கொலையினும் கொடியவனாக இருக்கிறவனை வேந்தன் ஒதுக்கத்தான் வேண்டும். அதை ஏன் என்று ரூஸோ தன் சமுதாய ஒப்பந்தத்தில் ஒரு அழகான உவமை சொல்லி விளக்குகிறான்.

ராமன் என்கிறவன் கோவிந்தனைக் கொன்று விட்டான். கோவிந்தன் இறந்துபோனான். ராமன் பேரிலே 'கோவிந்தனைக் கொன்றுவிட்டானே' என்று கோவிந்தனின் நண்பனுக்குக் கோபம் வரும். பிறகு அவன் என்ன செய்வான்? ராமனைக் கொல்ல வருவான். அப்போது, ராமன் இறந்துபட்டான் என்றால், ராமனுடைய நண்பன் அவனைக் கொல்ல வருவான். இது சங்கிலித் தொடர்

போலப் பெருகிக்கொண்டே இருக்கும். ஆதலினாலே, யார் ஏமாற்றப்பட்டானோ அவனுக்கு ஆறுதல் கொடுத்து, அவனுக்குரிய ஈட்டை அரசு கொடுத்துவிட்டால், சங்கிலித் தொடர் போலத் தீமைகள் தொடரா.

அந்தத் தண்டனை கொடுக்காது போனால், அவர் களுக்குள்ளே ஆத்திரம் மிகுந்து, தண்டனையை அவர்களே கொடுக்கின்ற நிலைமை ஏற்படும். நாட்டிலே கொலையே பெருகும்.

ஆகவே, தண்டனை கொடுப்பதுகூட மேலும் கொலை பெருகாமல் இருப்பதற்கு ஒரு தூக்குத் தண்டனையோடு முடித்துவிடுகிறார்கள். அப்படிக் கொடுக்காதுபோனால், மேலும் பல கொலைகள் பெருகும் என்று அவர்கள் சொல்லு கிறார்கள்.

பெரும்பாலும் பார்க்கிறோம். ஒருவனை மற்றொருவன் வஞ்சித்து ஏமாற்றிவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு அரசு தண்டனை கொடுத்துவிட்டது என்றால், அவனுக்கு ஒரு மன திருப்தி வந்துவிடுகிறது. அவன் திரும்பி வந்துவிட்டான், தண்டனை இல்லாமல் என்று சொன்னால், அவனுக்குத் திரும்பவும் ஏமாற்றம் ஏற்பட்டு, திட்டமிட்டு மற்றொருவனுக்குத் தண்டனையைத் தருகிறான். ஆக,

> 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்' 550

என்று சொன்னார்.

நீ பயிரைச் சாகுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், களை பிடுங்க வேண்டியது அவசியம். ஆனால் நம்முடைய நாட்டிலே இப்போது களை எது, பயிர் எது என்று கண்டுபிடிப்பதே ஒரு பெரிய வேலையாகப் போய் விட்டது.

பெர்னார்ட் ஷா ஒரு தடவை வேடிக்கையாகச் சொன்னார். 'சமயத்தை எல்லோரும் திருத்த முயல்கிறார்கள். சமய உலகத்தையே களை பிடுங்க நினைக்கிறார்கள். எனக்கு ஒரே ஒரு கவலை. களை பிடுங்க வேண்டும் என்று நினைப்பவர்கள், இறங்குவதற்கு முன்னாலே களை எது, பயிர் எது என்று தெரிந்து கொண்டு இறங்கினால், அவர்கள் பயிரைக் களை என்று நினைத்துக்கொண்டு பிடுங்காமல் இருக்கலாம். ஒருகால் பயிரைப் போய்க் களை என்று நினைத்துப் பிடுங்கி விட்டால், சாகுபடிக்காரருக்கு ஒன்றும் மிச்சமில்லாமல் போய்விட்டால், என்ன பண்ணுவது?' என்றார்.

அதுபோலத் தண்டனை எங்கே, எப்போது, எதற்கு, யாருக்கு என்று இல்லை. "வாச்சான், போச்சா"னாகச் சிலருக்குத் தண்டனை கிடைத்துவிடுகிறது. சிலர் தப்பித்துக் கொண்டுவிடுவார்கள். நன்கு கண்ணுக்குத் தெரிந்து கொலை செய்தவர்கள், வெளியே திரும்பி வந்து விடுவார்கள். ஒன்றும் செய்யாத-அறியாதவர்கள் உள்ளே போய் மாட்டிக் கொள்வார்கள்.

இது, ஆட்சித் திறமையிலே, நல்ல நுணுக்கமான அறிவினாலே பார்க்க வேண்டிய இடங்கள்.

ஆக, "கொலையின் கொடியாரை வேந்து ஒறுக்க வேண்டும்." அது சாகுபடிக்கு-வேளாண்மைத் தொழிலுக்குக் களை பிடுங்குவது எவ்வளவு இன்றியமையாத தொழிலோ, அது போலச் சமுதாயத்திற்கு. ஆனால் மீண்டும் புதிய அரசியல் பாதையிலே பார்த்தால், இந்தத் தண்டனை என்பதுகூடத் திருத்துவது. அதை இன்னொரு முறையில் சிறப்பாகச் சொல்லுவார்கள். இந்தத் தண்டனைகள் கொடுக்கிறபோதெல்லாம், அரசு கொடுக்கிற தண்டனைகூட, அது உயிருக்கு அல்ல; அது உடம்புக்குத்தான்! இந்த உடம்பு இந்தத் தப்புப் பண்ணிவிட்டது. அவனுடைய மனத்தை

மாற்றினால், திரும்ப அவன் புது மனிதனாக வந்து நல்லது செய்தாலும் செய்யலாம் என்ற நம்பிக்கையோடு அவனுடைய மனதை மாற்றிக்கொடுப்பது என்று தத்துவ நம்பிக்கையோடு கருதுகிறார்கள்.

சிறைக்கு அனுப்புகிறோம் ஒரு மனிதனை. சிறை தண்டனை என்று நம் பிற்கால வழக்கிலே சொல்லுவது கிடையாது.

முற்கால வழக்கிலேதான் இருந்தது சிறை தண்டனை. சிறையிலே அவனுடைய மனத்தை மாற்றுதல்-சூழ்நிலையி லிருந்து அவனுடைய மனத்தை மாற்றுதல்.

ஆனால் இப்பொழுது அந்த முயற்சி பல சிறைக் கூடங்களிலே செய்யப்படுவதில்லை. நியாயமாகப் பார்த்தால், நல்ல மனோதத்துவ நிபுணர்களைச் சிறையில் நியமித்து, தண்டனை பெற்று வந்தவர்கள் ஏன் தவறு செய்கிறார்கள்? எப்படித் திருத்துவது? என்று பார்க்கச் செய்யவேண்டும்.

சில பேரைப் பார்த்தால் தவறு செய்யாமல், உள்ளே இருப்பவர்கள் போல் தெரிகிறது. உள்ளே ஒரு நாளல்ல, ஒரு ஆண்டல்ல, ஆயுள் முழுவதும் இருக்கவேண்டிய ஆளெல் லாங்கூட வெளியே இருந்துகொண்டிருப்பர்.

நமக்கு வித்தியாசமாக இருக்கும். ஆக, திருவள்ளுவர் நினைவுபடுத்துகிறார். குற்றத்தைத்தான் கடிய வேண்டும். குற்றம் நீக்குதல், குற்றத்தைக் கடிதல், வழுவு அன்று; வேந்தன் தொழில் என்றார்.

குற்றங்கடிதல், இப்போது குற்றமுடையான்மீது நமக்கு வெகுளி வந்துவிடுகிறது. சமயத்தில் ஆத்திரத்திலே குற்றத்தின் மீது நமக்கு வெகுளி வரக்கூடாது.

பானையிலே இருக்கின்ற தண்ணீர் நன்றாக இல்லை யென்றால், தண்ணீரை ஊற்றலாமே தவிர, பானையை

உடைக்கக் கூடாது. அதைத்தான் இளங்கோவடிகள் "கருணை மறவன்" என்று சிறப்பித்தார்.

மனிதனுக்குத் தேவையான ஒழுக்கம் எல்லா வற்றையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு நல்ல குணம்கூட இல்லாத ஆள் உலகத்திலேயே கிடையாது. 1330 குறளிலேயும் 80 ஒழுக்க நெறிகள் வள்ளுவர் சொல்லுகிறார். இந்த 80 ஒழுக்க நெறியிலும் 5 குறளாவது தெரியாத மனிதன் இருப்பான் என்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது.

சில பேர் அன்புடையவராக இருக்கலாம். அழுக்காறு இல்லாதவராக எத்தனையோ பேர் இருக்கலாம். 'அது சரி, அவன் கொடுத்து வைத்தது, அனுபவிக்கிறான்; நமக்கு எதற்கு அது' என்று சொல்லுகிற ஆளையும் பார்க்கிறோம். ஆகவே, மனிதனுக்கு ஒரு ஒழுக்கம், இரண்டு ஒழுக்கம் இருப்பதி னாலே அவன் முழு மனிதனாக வந்து விடுவதில்லை.

ஒரு செங்கல், இரண்டு செங்கல் மாளிகை ஆகிவிட முடியாது. மனிதனுக்குத் தேவையானவை ஏராளமான உயர் குணங்கள். அவற்றிலே வள்ளுவர் 70, 80 ஒழுக்கங்களை முறைப்படுத்திச் சொல்லுகிறார். இந்த எண்பதிலே, நாற்பதுக்கு மேற்பட்ட ஒழுக்கங்களாவது இருந்தால்தான், மனிதன் முழுமனிதனாக இருக்க முடியும். ஏதாவது கொஞ்சமாவது என்று சொன்னால், மிகச் சுலபமாகத் தப்பித்துக்கொள்வார்கள். ஒருவன், எப்போதுமே சிரித்த முகமாகவே இருக்கிறான்.

> 'முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
> இன்சொ லினதே அறம்' 93

அவனது முகம் எப்போதும் சிரித்த முகந்தான். எப்போதும் இனிய சொற்கள்தான் சொல்வதுண்டு. கடுஞ் சொல் சொல்வதே இல்லை. அவன் முறைப்படியான

ஆள்தான். ஆனால் முகம் சிரிப்பாய் இருக்கும்; இனிய வார்த்தை இருக்கும். அவன் என்றைக்காவது திட்டமிட்டுச் செய்தானே ஆயின், ஆள் தலையே தப்பாது. அந்த ஆள் மனத்திற்குள்ளே மாசு.

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' 278

அந்த இலக்கணம் வருகிறபோது அடிபட்டுப் போய் விடுகிறான்.

தாயம் விளையாடும்போது காய் தப்பித்துக் கொண்டே போகும். இரண்டு மூன்று தடவை தப்பித்துக் கொண்டே வரும். பின்பு இன்னொரு காய் குறுக்கே வந்து அடித்துவிடும். ஆக,

'முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்' 93

என்ற இலக்கணத்திலே வெற்றி பெற்றுவிட்டான். பிறகு அகத்தாலே அந்த ஒழுக்கம் இல்லாமையினாலே,

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' 278

என்ற இடத்திலே அந்தக் காய் அடிபட்டுப் போய்விடுகிறது. பிறகு அறிவுடையவன் என்று வளர்ந்து வருவான். அறி வினால் ஆவது உண்டோ? என்று கேள்வி கேட்கிறபோது, அது அடிபட்டுப் போய்விடுகிறது.

ஆகையினாலே வாழ்க்கையிலே பல்வேறு இயல்புகள் உண்டு.

அந்தப் பரமபதத்திலே காயாடும்போதிலே மேலே போய்ப் பாம்பின் வாய் கடிபட்டவுடன், கீழே காய் வேகமாக வந்துவிடுகிறதே, அதே போல மனிதனுடைய வாழ்க்கை ஒரு செங்குத்துப் பாறைபோல ஏற வேண்டிய ஒன்று. அதிலே

ஒன்றா, இரண்டா, மூன்றா, நான்கா என்று வைத்துக்கொள்ள முடியாது.

நிறைந்த ஒழுக்கங்கள் பல தேவை. ஆகையினாலே திருவள்ளுவர் 'குற்றமுடையான்கண்வெகுளி" காட்டாமல் குற்றத்தின்மீது வெகுளி காட்டுகிறார்.

அதை நம்முடைய திருஞானசம்பந்தர், வெகு அற்புதமாகத் தேவாரத்தில் சொன்னார்.

'ஆழ்க தீயதெல்லாம்
அரன் நாமமே சூழ்க'

சமணர்களையோ, மற்றவர்களையோ, தீயவர்களையோ, அவர் ஆழவேண்டும் என்று சொல்லவில்லை. "ஆழ்க தீயது." தீமை ஒழிய வேண்டுமே தவிர, தீமை உடையவர்கள் ஒழியக் கூடாது.

தீமை உடையவர்மீது நமக்குப் பற்றிருக்க வேண்டும். ஆனால் அவனுடைய தீமையை மாற்றவேண்டும். அதனால் தான் நாத்திகர்களைப்பற்றி மாணிக்கவாசகர் சொல்லுகிற போது "ஆத்தமானார்" என்றார். கடவுள் நம்பிக்கை இல்லாத வர்களைப் பார்த்தால் மாணிக்கவாசகருக்கு மிகவும் அச்சம். இருந்தாலும் ரொம்ப ஆத்தமானவர்களாயிற்றே!

'ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்'

என்றார்.

அவர் அப்படி அணைக்கிறார், அயலவர்கள் ஆத்த மானார் என்று. காரணம், அவர்கள் மீது பகை இருக்கக் கூடாது என்பதனாலேயே.

ஆக திருவள்ளுவர்,

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்' 549

என்றார். குற்றத்தைக் கடிய வேண்டுமே தவிர, குற்ற முடையானை வெறுக்கக் கூடாது.

இது திருவள்ளுவருடைய அரசிலே இருந்த மிகச் சிறந்த அமைப்பு. இன்னும் சிறந்த அமைப்பு, தண்டிக்கவும் வேண்டும்; ஆள் உடம்பும் வலிக்கக்கூடாது. எவ்வளவு நாகரிகமாகப் பேசுகிறார்.

நாட்டிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள், "கோலும் ஒடியக் கூடாது, பாம்பும் சாகக்கூடாது" என்று. கருணை மறவன் என்று இளங்கோவடிகள் கோவலனைச் சிறப்பிக் கிறார். மணிமேகலையின் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். முதிய பார்ப்பனர் ஒருவர் தானம் வாங்க வருகிறார். அரசு யானை கட்டிலிருந்து அறுத்துக் கொண்டு மதம் பிடித்துத் தன்னிச்சையாக வருகிறது. அது வழியிலே வருகிற முதிய பார்ப்பனரை மிதித்துவிடும் போலத் தெரிகிறது. இந்த முதிய பார்ப்பனர் ஓட முடியாமல் அந்த யானையினுடைய பிடிக்குள்ளே அகப்பட்டுவிட்டார். தூரத்திலிருந்து கோவலன் பார்க்கிறான். அந்த முதிய பார்ப்பனரைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம்-கருணை கோவலன் நெஞ்சிலே வருகிறது.

அவரைக் காக்க வேண்டும் என்று எண்ணும் பொழுதே, வேலை எடுத்து வீசி, யானையைக் கொன்று, அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்ச்சி வரும். பார்ப்பனர் காப்பாற்றப்பட வேண்டும், யானையும் சாகக் கூடாது, தானும் சாகக்கூடாது. இது கோவலனுடைய விருப்பம்.

ஆக, மூவரும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற குறிப்பிலே யானைக்கு அருகில் சென்று யானையையும் கொல்லாமல், பார்ப்பனரை விடுதலைசெய்து, யானையி னுடைய கரத்தைப் பிடித்து, யானையின்மீது ஏறி அதை அடக்குகிறான்.

இதைப் பார்த்தபொழுது இளங்கோவடிகளுக்கு நினைவு வருகிறது, கருணை மறவன் என்று. வீரத்தில் கருணை! மதம் பிடித்த யானை அருகில் செல்லும் செயல் வீரம்.

ஆனால், யானையையும் கொல்லாமல், பார்ப்பனரும் சாகாமல், தன்னையும் பலியிட்டுக்கொள்ளாமல், காப்பாற்றிய திறத்தைப் பார்க்கும்பொழுது, "கருணை மறவன்" என்று சொன்னார்.

ஆதலினாலே, "கடிதோச்சி மெல்ல எறிக," என்றார் வள்ளுவர்.

கை மேலே ஓங்குகிறபோது, என்னவோ ஓங்குவது போல் தெரியவேண்டுமே தவிர, முதுகிலே விழுகிறபோது, அடி பலமாக விழுந்துவிடக் கூடாது. சில பேர் அடித்தால் எட்டு நாளைக்கு அந்த அடியின் வலி நிலைத்து நிற்கும். சில குழந்தைகள் கனவிலேகூட பயந்து அழுதுவிடும்.

இரவில் அவன் பெயரைச் சொன்னாலே பயப்படும். அவ்வளவு பயங்கரமாக அடித்து இருப்பான்.

"கடிதோச்சி மெல்ல எறிக"

இதை அப்பரடிகள் சிவபெருமானுடைய கருணையிலே வைத்துக் காஞ்சிபுரத் தேவாரத்திலே பேசுகிறார்.

இறைவன் புளியம் விளாரினாலே அடிக்கிறார். அடித்தவுடன், "வலிக்கிறதா மகனே? வாடா, தம்பி!' என்று அணைத்துக்கொள்ளுகிறாராம். அணைத்து முத்தம் கொடுக்கிறாராம்.

'புளியம் விளாரினால் மோதுவிப்பாய்
பின்னை உகப்பாய் கச்சிஏகம்பனே!'

விளாரினாலே அடிக்க ஓங்குகிறாராம். அடிபடு முன்னே கை முன்னாடி விழுந்துவிடுகிறதாம். பின் அணைத்து முத்தமிட்டு, 'வலிக்கிறதா? நீ தவறு செய்யாமல்

இருந்தால் நான் உன்னை இப்படி அடிப்பேனா? நீ நல்ல பிள்ளை" என்று சொன்னாராம் சிவபெருமான்.

அப்பரடிகளுக்கும், பெருமானுக்கும் இருந்த உறவைப் பார்க்கிறோம்.

'புளியம் விளாரினால் மோதுவிப்பாய்
பின்னை உகப்பாய் கச்சிஏகம்பனே!'

என்று பாடுகிறார் அப்பரடிகள்.

அதே போல இங்கே நமது வள்ளுவர்,

"கடிதோச்சி மெல்ல எறிக"

என்கிறார். ஆட்சியைப் பார்த்துப் பயம் இருக்க வேண்டும். ஆட்சியினிடம் ஓர் அச்சம் இருக்கவேண்டும். ஆனால் அது பேயைக் கண்டு அச்சப்படுவது போல் அமைந்துவிடக் கூடாது. ஆக, கடிதோச்ச வேண்டும். மெல்ல எறிய வேண்டும்.

இதைவிட அரசுக்கு, அரசனுக்கு என்ன புத்தி சொல்ல முடியும்? நம்முடைய நாட்டிலே கடிதோச்சியவர்கள், மெல்ல எறிந்தவர்கள், ஏராளமானவர்களை வரலாற்றிலே பார்க் கிறோம்.

கடிதோச்சி தன் அரசையே இழந்து ஊரைவிட்டு ஓடியிருக்கின்ற நிலையையும் பெரும்பாலும் நம்முடைய நாட்டிலே, மூவேந்தர்களது ஆட்சியிலே காணலாம். பெருமைக்குரிய செய்தி, குடிகளால் அரசு துறந்துபோன மன்னர்களே கிடையாது.

நீ இந்த ஆட்சிக்குத் தகுதியில்லாதவன் என்று எந்த மன்னனையும், மக்கள் அரசிலிருந்து விரட்டியதே கிடையாது.

பிரான்ஸ் தேசத்து சரித்திரத்திலேயே ஏராளமான அரசர்கள், சில சமயங்களில் நாயைவிட மிகக் கேவலமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய நாட்டிலே, பகைப்புலத்தினாலே வந்த கேடுகளினாலே அரசர்கள் சிலர் போனதுண்டு.

இந்த நாட்டு மக்கள் இந்த அரசு சரியில்லை என்று கிளர்ச்சி செய்து, அரசை முடி துறக்கச் செய்ததாக இல்லை. காரணம், அரசன் அவன் உயிரையே அரச நீதியிலே வைத்திருந்தான்.

ஆக, அரசனுடைய இயல்பிலே அவனுக்குப் பார்க்கிற பொழுது, அவன் கடிது ஓச்சினான், ஆனால் மெல்ல எறிந்தான். அவனுடைய வாழ்க்கையிலே அந்த அமைப்பு இருந்தது என்பதைப் பார்க்கிறோம்.

இதுவரையில் மூன்று அமைப்புகள். அரசியல் அமைப்பிலே முக்கியமானவற்றைச் சொல்லிவிட்டோம்.

இப்போது ஜனநாயக உலகம், மக்களாட்சித் தலை முறை. மிகச் சிறப்பான உரிமை. விமர்சன உலகம். யாரும் பேசவேண்டும். எதையும் பேசலாம். அரசு என்ன செய்கிறது என்பதைப் பேச உரிமை.

அமைச்சர் எங்கு போனார், என்ன சாப்பிட்டார், என்பதைப் பேசக்கூட உரிமை.

இதையெல்லாம் அரசியல் நாகரிகம் என்று நினைக்கத் தயாராக இல்லை.

அரசியல் மேதைகள் தரம் உயர்ந்தவர்களாக இருந்தால்தான் நாட்டு மக்களுடைய தரம் உயரும்.

ஏன் எனில் அரசியல், நாட்டு மக்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற ஓர் இயக்கம்.

இந்த நாட்டிலே மக்களாட்சித் தலைமுறை தோன்றி 20 ஆண்டுகள் ஆகியிருப்பதினால், இன்னும் 20 ஆண்டுகள் கழித்தால், நிச்சயமாக அரசியல் மேடைக்கு மக்கள் ஆர்வமாகப் போகமாட்டார்கள். தேர்தல்கள் மிகச்

சாதாரணமாக நடைபெறும். இந்த நாட்டு மக்கள் தகுதி பெற்றவர்கள் ஆகிவிடுவார்கள்.

ஆனால், இன்றைக்கு மக்களாட்சித் தலைமுறை தோன்றி வளர்ந்து கொண்டிருக்கின்ற காலமானதால், அவர்கள் வரி செலுத்துகின்ற பொறுப்பு, அரசியல் நண்பர்களுக்கும், அரசியல் மேதைகளுக்கும் இருப்பதனால், அவர்கள் விமர்சனம் செய்துகொள்ள உரிமை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், தரம் குறைந்து விமரிசனம் செய்தால், அதை நாடு தாங்காது.

திருவள்ளுவர் விமரிசனத்தை ஒப்புக்கொள்ளுகிறார். விமரிசனத்தைத் தாங்கிக்கொள்ளுகிற சக்தி அரசுக்கு வேண்டுமென்று சொல்கிறார்.

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்'

என்கிறார். காதாலே கேட்க முடியாத சொற்களைச் சொன்னால்கூட நீ கவலைப்படாமல் தாங்கிக்கொள்ள வேண்டும்.

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.' 389

நீ அரசை நீண்ட நாட்களுக்கு நடத்த வேண்டு மென்றால், தரம் குறைந்த வார்த்தைகளினாலே, செவிக்குக் கேட்கும்படியாகச் சொன்னால்கூடக் கவலைப்படாதே!

சீன நாட்டிலே இதற்கொரு வரலாறு சொல்வார்கள்.

ஓர் அரசன் ஆட்சி உரிமையுடையவன். ஆட்சி மனையிலிருந்து அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்குக் கொடிய பகைவன் ஒருவன் தெருவிலே நின்று திட்டிக்கொண்டிருந்தான். பகல் முழுதும் திட்டிக்கொண்டே இருக்கிறான். அரசன் அவனுடைய வேலையைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான். மாலையிலே அவன் வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு, அரண்மனைக்கு வருகிறபோது

அவன் பின்னால் அந்தப் பகைவன் திட்டிக்கொண்டே வந்திருக்கிறான். அரசனும் கேட்டுக்கொண்டே வந்தானாம். அவன் வீட்டுக்குள்ளே போகிறபோது, காவலரை அழைத்து திட்டுகின்ற பகைவனுடன் 'அவனுக்குக் காவலாய் வீடுவரை சென்று திரும்பிவா' என்று ஒரு விளக்கையும் கொடுத்து அவனை அனுப்பினானாம்.

நாள் முழுவதும் கங்கணம் கட்டிக்கொண்டு, தன்னைத் திட்டிய மனிதனைக் கடமை முடிந்த பிறகு அவனைப் பத்திரமாக வீட்டிலே கொண்டுபோய் விட்டு வா என்று சொன்னது, 'தத்தா, நமர்!' என்று சொல்லியதற்கு ஒப்பானதாக இருக்கிறது.

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்"

என்றார் திருவள்ளுவர்.

அவ்வளவு பெரிய பண்பு அரசுக்கு இருக்கவேண்டும் என்று சொன்னார். அதற்குப் பிறகு அரசனுக்கு சொல்லுகிற பொழுது, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் இவைகளையெல்லாம் பெறுவது அரசு என்று சொன்னால் கூட, 'உன்னை இடித்துப் பேசுகிற ஆள் இல்லை என்று சொன்னால், அது அரசு இல்லை' என்று சொல்லுகிறார்.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்' 448

என்றார்.

அரசு தனக்கு அரணைப் போல், படையைப் போல, பாதுகாப்பைப் போல, இடித்துப் பேசுகின்ற மனிதனை நட்பாக வைத்துக்கொள்ள விரும்ப வேண்டும்.

காரணம், அவனுடைய தொல்லை வேண்டாம் என்பதற்காகவாவது, ஒழுங்காய்ச் செய்வாய் அல்லவா? காடுகளில் எல்லாம் ஏன் விலங்குகள் இருக்கின்றன என்று ஒருவர் அதிசயமாக ஆராய்ச்சி செய்தார்.

இந்தக் காடுகளில் எல்லாம் புலி, சிங்கம் போன்ற மிருகங்கள் இருக்கும். ஏன் எனில், காடுகள் மனிதனுக்கு காற்றுக்கும், மழைக்கும் அவசியமானவை. இவன் பசியினால் எல்லாவற்றையும் வெட்டிச் சாப்பிட்டு விடுவான். ஆதலினாலே காட்டிற்குள்ளே புகுந்து, வெட்டாமல் இருக்க வேண்டும் என்று அச்சுறுத்துவதற்காக விலங்குகளை அங்கு வைத்தானாம். அவன் எண்ணியதைப் போலக் காட்டை வெட்டாமல் இரு என்று. இப்பொழுது விலங்கையும் வேட்டையாடி விட்டு, காட்டையும் வெட்டிவிடுகிறான். ஆதலினாலே,

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்' 448

'உனக்குப் பகை அரசன் வேண்டுமென்று அவசியமில்லை. உன் குற்றத்தை இடித்துச் சொல்லுகின்ற அறிஞனோ, கவிஞனோ, ஒரு குடிமகனோ இல்லாமையாலும் உன்னுடைய அரசு கெடும்' என்று சொல்லுகிறார். ஆக,

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு' 389

என்பதன் மூலமும்,

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்' 448

என்பதன் மூலமும், வள்ளுவருக்கு அரசியல் விமரிசனத்திலே எவ்வளவு நம்பிக்கை இருந்தது என்பதை அறியலாம்.

விமரிசனம் செய்து செய்து வளர வேண்டும் என்ற பெருவிருப்பம் இருந்தது.

இன்றைய மக்களாட்சித் தலைமுறையிலே, நாட்டினுடைய அமைப்பிலே பல்வேறு செய்தியினைப்

பார்க்கிறோம். இப்பொழுது, நாம் நம்முடைய நாட்டு அரசை "க்ஷேமநல அரசு" என்று சொல்லுகிறோம்.

க்ஷேம நல அரசு (Welfare State) என்று சொன்னால், திருவள்ளுவர் அதற்கு ஓர் இலக்கணமே சொல்லுகிறார். என்ன மாதிரி அரசு? எல்லோருக்கும் எல்லா நலன்களும் நாடுகின்ற அரசு. "க்ஷேம நல அரசு" என்று பொருள்.

இந்திய அரசியல் நோக்கம், தமிழக அரசியல் நோக்கம் இது என்றுகூட, நாம் அடித்துக் கூறிவிடலாம் போலத் தெரிகிறது.

ஒரு நாடு என்றால், மக்களுக்குப் பிணி இருக்கக் கூடாது. கொடிய மனம் படைத்த சிலரை மருத்துவ மனையைச் சுற்றி அழைத்துச் சென்றால், அவர்கள் திருந்தி விடுவார்கள். அத்துணைக் கொடிய பிணிகள்.

பட்டினத்தார், தாயுமானவர் முதலியவர்களுடைய பாட்டுக்களையெல்லாம் சொல்லிக்கொண்டு இருப்பதற்குப் பதிலாக, மருத்துவமனைக்குள்ளே ஒருவனை அழைத்துச் சென்று, ஆப்பரேஷன் செய்கின்ற இடத்தைக் காட்டினால், அவன் மனம் நொந்து, நல்லவனாக மாறினாலும் மாறுவான்.

எத்தனை எண்ணத் தொலையாத வியாதிகள்! மனிதன் துய்த்து, மகிழ்ந்து, அனுபவித்து, இறப்பதற்காக இங்கே வந்தான்.

பொங்கல் பானையிலே பால் பொங்குவது என்பது ஒரு சடங்கு. பால் எப்படிப் பொங்குகிறதோ அதைப் போல மனிதனுடைய மனத்திலே மகிழ்ச்சி பொங்க வேண்டும்.

மகிழ்ச்சி பொங்கி, உயிர் துய்த்து மகிழ்ந்து இன்ப ஊற்றிலே இருந்தால்தான் அது மேலும் உலகத்திற்கு மேலான கருத்துக்களை எண்ண முடியும். அது அல்லல் பட்டு அழுதால், அவர்களது வாழ்க்கை எந்த நோக்கத்தோடு இந்தப்

பிறப்புக் கிடைத்ததோ அதைக்கூடத் துய்க்க முடியாமல் போகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், உயிர்களது இன்பத் திற்கு இடையூறாக இருந்தால் அவன் கடவுள் பணிக்குக் குறுக்கே நிற்கிறான் என்று ஒருவன் சொன்னான்.

உயிர்களுடைய இன்பத்திற்கு இடையூறாக நின்றால்– உயிர்களுக்கு இன்பத்திற்கு மாறாகத் துன்பத்தைத் தருவானே யானால் அவன் எல்லாம் வல்ல கடவுளுக்கே குறுக்கே நிற்கிறவனாம்.

கடவுள் இந்த வாழ்க்கையை அவனுக்குக் கொடுத்தது, அவன், மேலும் நல்ல அனுபவங்களை அனுபவித்து மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்பதற்காக. அதில் இவன் போய்க் குறுக்கே நின்று தடை செய்கிறான்.

ஆக, நம்முடைய குறிக்கோள், திருவள்ளுவர் கருத்துப்படி பிணியின்மையாகும். நோயைக் கண்டால் தூரப் போ! நோயின்றி வாழ வேண்டும். சிலருக்கு நோய் வந்து விட்டால், 'போன ஜென்மத்தில் செய்த பாபம், வந்து விட்டது' என்று சொல்லுவார்கள். போன ஜென்மத்தில் என்ன செய்துவிட்டோம் என்கிற கவலை ஒரு பொது வியாதியாகப் போய்விட்டது.

இந்தக் கவலையைத்தான் "நெஞ்சிற் கவலை நித்தம் பயிராக்கி' என்றான் பாரதி.

நெஞ்சிற் கவலையால் சில பேர் வாழ்க்கை செம்மை இல்லாமல் இருக்கிறது.

"என்னங்க சௌக்யமா?" என்று கேட்டால், "என்னமோ, இருக்கிறேன்!" என்று சொல்லுகிறபோது செத்து விடுவான் போலத் தெரிகிறது.

அவன் மகிழ்ந்து, சிரித்து, கன்னம் எல்லாம் பூரிக்க அவன் மகிழ்ச்சியாக இருந்ததில்லை. காரணம், அவன் வாழ்க்கையில் அல்லல்படுகிறான்.

நான் காரிலே சென்றுகொண்டிருக்கும்பொழுது, ஒரு மனிதன் தூக்க முடியாத சுமையை வண்டியில் வைத்து இழுத்துக்கொண்டு இருக்கிறான். அதை ஒரு மனிதன் தலையை முட்டுக் கொடுத்துத் தள்ளிக்கொண்டிருந்தான்.

அதை என்னுடைய கார் டிரைவர் அவசரமாக முந்திக் கொண்டு முன்னே போவதற்குப் பார்த்தார். 'அவன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறான். அவனை முந்திக் கொண்டு போக எண்ணலாமா? இது நியாயமா?' என்று என் டிரைவரிடம் கேட்டுவிட்டு, 'அவனைப் போக விடு' என்று சொன்னேன். ஆனால் பார்த்தபிறகு, அவன் ஒன்றும் ஆன்ம ஞானத்திற்குப் போக முடியாது. அவன் திருவாசகம், தேவாரம் படிக்க முடியாது. திருக்குறள் படிக்க முடியாது.

ஆன்ம அநுபவம் போயிற்று. வெற்று வயிற்றுச் சோற்றுக்காக உடம்பை இப்படி நாறாகப் பிழிகிறான். இதை நம் நாட்டிலே பார்த்துக்கொண்டு மனச்சான்று இல்லாமல் இருக்கிறோம்.

திருவள்ளுவருக்கு 2000 ஆண்டு வரப்போகிறது. இந்த, ஆள் இழுக்கிற கொடுமையையாவது இந்த ஈராயிரம் ஆண்டு நினைவாக, தமிழக அரசு தன்னுடைய அரசின் எல்லையில் ஒழித்துவிட வேண்டும்.

உழைப்பை அதிகமாகச் செலவழிக்காமல் இருக்க, சைக்கிள், மோட்டார் போன்ற நவீன இயந்திரங்களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்வாறு நாள்பூராவும் இழுத்துக்கொண்டு அலுத்து, சலித்து வீட்டிற்குப் போகும் அவனிடம் சாமி கும்பிடு என்றால் எப்படிக் கும்பிடுவான்?

அவன் வீட்டிற்குப் போகும்போதே அவன் உடம்பு வலி எடுத்துத் தூக்கம் வருமே.

காட்சிகளைப் பார்க்கின்றபோது பிணியின்மை இல்லாதிருத்தல் வேண்டும்.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவார்" என்றார் திருமூலர். நமக்கு இடைக்காலத்திலே பௌத்த, சமண மாயாவாதம் வந்த பிறகு, இந்த உடம்பைப் பற்றிய அக்கறையே போய்விட்டது. அந்தப் பௌத்த, சமண மாயா வாதங்கள் எல்லாம் இந்த உடம்பை ரொம்ப இழித்தும், பழித்தும், அது, இது என்று சொல்லியும், 'அழிகின்ற உடம்புக்குப் பாதுகாப்பு எதற்கு?' என்று சொல்லியும், கலைத்துவிட்டன.

ஆனால் திருமூலர் அதனைப் பார்த்துப் புரட்சி எழுப்பினார். "உடம்பை வளர்த்தேன், உயிரை வளர்த்தேனே" என்றார்.

நிலத்தை வளர்த்தால்தான் பயிரை வளர்க்கலாம்; அது போல நம்முடைய உடலைக் கருவியாகக்கொண்டுதான் இந்த உயிர் வாழ்க்கை நிகழ்கிறது.

அதனால்தான் நாட்டிலே ஒரு பழமொழிகூட உண்டு. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்று. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றால், நல்ல நேரம், சந்தர்ப்பம், வேண்டிய மனிதர்கள் இருக்கின்ற போதே நம்முடைய காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்பது இப்பொழுது உள்ள அர்த்தம்!

ஆனால் இதன் பொருள் மிகவும் உயர்ந்தது.

இந்த உடம்புக்கும் உயிருக்கும் இடையே இருக்கும் கூட்டு இருக்கிறபோதே பாவத்தைத் தூற்றிவிட்டு, புண்ணியத்தை எடுத்துக்கொள். இந்த உடம்புக்கும் உயிருக்கும் இடையே இருக்கிற கூட்டை உறுதிப்படுத்துகிற அடையாளம்,

நாம் விடுகின்ற மூச்சுக் காற்று ஆகும். அது நின்றுவிட்டால் ஆள் நின்றுவிட்டான் என்று அர்த்தம்!

அதற்குப்பின் பேச வராது, எழுத வராது; சிரிக்கவும், சிந்திக்கவும், அன்பு செய்யவும் முடியாது. ஆகவே உடம்பில் உயிர் தங்கியிருக்கிற அடையாளக் காற்று இருக்கிறபோதே பாவத்தைத் தூற்றிவிட்டு, புண்ணியத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசுக்குரிய பொருளைப்பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது, நம்முடைய திருவள்ளுவர் காட்டுகின்ற அரசில் வரி விதிக்கின்ற, அதாவது சில குறிப்பிட்ட துறைகளைத் தவிர, பொதுப்படையாக மனிதனுக்கு வரி விதிக்கின்ற மரபைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசுக்கு வருகின்ற பொருள்கள் உறுபொருள், உல்கு பொருள், ஒன்னார்த் தெறு பொருள் ஆகும். ஒன்னார்த் தெறு பொருள்-பகைவனுடைய பொருளைக் கொண்டு வருவது ஒரு கொள்ளை அல்லவா? அது அறத்தின் பாற்பட்ட தாகுமா?

அப்படிக் கேட்கும்போது, பகைப்புலத்திற்கு வரும் பொழுது அதற்கு நியாயம் வேறு.

மருத்துவமனையில் ஒருவன் “அய்யோ! அப்பா! குத்தினால் வலிக்கிறதே” என்று சொல்லலாமா? குத்துதலும் அவனுடைய நோய் நீங்குவதற்குத்தான். ஆக, நியாயம் எல்லா இடத்திலும் ஒரு மாதிரியாகாது.

ஆனால் வலியச் சென்று, சாவதானமாக, அமைதியாக இருக்கின்ற ஓர் அரசை, அமைதியாக இருக்கின்ற ஒரு நாட்டை, படை எடுத்துப் போர் தொடுத்து அழிப்பது என்பது பாபம்.

ஆனால், தற்செயலாகப் போர் நிகழ்ந்துவிடுகிறது என்று சொன்னால் போர் முனையிலே ஒரு நாட்டினுடைய மானத்தை, மரியாதையைக் காப்பதற்காக ஏற்படுகின்ற

த·IV·14.

செயல்களை நம்முடைய அறநூல்கள் ஏற்றுக் கொண்டிருக் கின்றன.

ஒருகால் உலக சமாதானம் ஏற்பட்டு, உலகத்தில் எல்லா நாடுகளும் படைகளை வைத்துக் கொள்வதில்லை என்ற நிலைமை ஏற்பட்டு, அந்த நிலைமை ஏற்பட்ட பிறகு பகை வழியாகக் கொள்ளுகின்ற பொருள் தவறு என்று சொன்னால், திருவள்ளுவருக்குப் பிறகு அவர் மற்ற அதிகாரங்களில் காட்டிய அன்பு, அருள், நாகரிகம், முற்றி முதிர்ந்து இந்தச் செயற்பாட்டுக்கு அவசியம் இல்லை என்று ஆகிவிட்டது என்று பொருள் கொள்ளலாம்.

இலக்கிய உலகத்தில் நம்முடைய கையில் இருந்த கருத்துகள், அரசியல் அன்பர்கள், அமைச்சர்கள் கை களுக்குச் சென்றிருப்பதால், திருக்குறள் விரைவில் நாட்டு இலக்கியமாகும் என்ற நம்பிக்கையை நாம் பெறுகின்றோம்.

அது இந்திய நாட்டு இலக்கியமாக மாறுவதற்கு முன்பு தமிழ் நாட்டிலே, எந்தத் துறைக் கல்லூரியாக இருந்தாலும், எந்தத் துறைப் படிப்பாக இருந்தாலும், எல்லாப் பள்ளிக் கூடங்களிலும், எல்லாக் கூட்டங்களிலும், எல்லாக் கல்லூரி களிலும், மருத்துவக் கல்லூரியாயினும்கூட, ஒரு குறிப்பிட்ட பகுதி திருக்குறளைப் பாடமாக வைத்து, எல்லோரும் பயிலுதல் என்கிற முறையை முதலில் உண்டாக்கினால் அது இந்திய நாடு முழுவதும் பரவுவதற்குரிய முதல் வாய்ப்பைப் பெறும்.

3

திருவள்ளுவர் உணர்த்தும் இறையுணர்வு

அன்புக்கும் போற்றுதலுக்குமுரிய தலைவர் அவர்களே! பெரியோர்களே! நண்பர்களே! சகோதரர்களே! சகோதரிகளே! பொதுவாக, நம் அனைவரையும் மீண்டும் மீண்டும் கூடிச் சிந்திப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற திருவருளுக்கும், நண்பர்களுக்கும் நன்றி! வாழ்த்துக்கள்.

சாதாரண சாலைவழிப் பயணத்திலும் நிகழ்ச்சி அமைப்பிலும் கூட, நாம் பல தவறுகளைச் செய்கிறோம். இந்த மாதிரி தவறுகள் நிறைந்த வாழ்க்கை சமுகத்திற்கும், தனிப்பட்ட வாழ்க்கைக்கும் பெரிய பயனைத் தருவதில்லை. அதனால்தான் இன்றைக்கும் பேச்சு இருக்கிறது, நாளைக்கும் பேச்சு இருக்கிறது என்று என்னுடைய செயலாளர் சொன்னார். நான் இன்றைக்குத் திருவள்ளுவரைப் பற்றியும், நாளைக்குச் சேக்கிழாரைப் பற்றியும் பேசலாம் என்று இருந்தேன். இன்றைக்குக் கடைசிப் பேச்சு என்று சொல்கிறார்கள். ஆகவே இன்றைக்கு என்னுடைய பேச்சை எப்படி அமைத்துக் கொள்வது என்று காரிலே ஏறிய பின்புதான் கலந்து பேசினேன். இன்னும் எத்தனை நாள் மாரியம்மன்

கோவிலில் பேச வேண்டும் என்று கேட்டதற்கு 'இன்றும், நாளையும்' என்ற செய்தி கிடைத்தது. அறிவிப்பாளர் இன்றோடு கடைசிப் பேச்சு என்று சொல்லுகிறார். நான் இப்போது திருவள்ளுவரைப் பற்றிப் பேசுவதா, சேக்கிழாரைப் பற்றிப் பேசுவதா என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்று சேக்கிழாரில் பேச்சை முடிக்கலாம் இந்தக் கூட்டத்திலே என்று இருந்தேன். இருந்தாலும் இன்றைக்கு நான் சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் எடுத்துக் கொண்ட தலைப்பு, திருவள்ளுவரைப் பற்றிக் கடவுள் நெறி, கொள்கை, வாழ்க்கைப் போக்கு என்ற நிலையிலே எடுத்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். அந்தத் துறையிலேயே சிந்திக்கலாம். நான் கீழ்த்திசை நாடுகளுக்குப் போய் வந்த பின்பு ஒருநாள் பேசப் போவதாகச் சொல்கிறார்கள். அல்லது திருமுறை மாநாடு வருகிறது. பன்னிரு திருமுறைகளிலே சேக்கிழார் புராணமும் ஒன்று. எனவே, அப்பொழுது பெரிய புராணத்தைப் பற்றி உங்களுக்கு நினைவூட்டலாம். காரணம், எந்தச் சொற் பொழிவாக இருந்தாலும் பெரிய புராணத்தில் நின்று சில கருத்துக்களை நாம் நினைவூட்டத் தவறினால், நம்முடைய சான்றோர்கள், முன்னோர்கள் செய்த மாற்றங்கள், எழுச்சிகள் மறந்து போகும். எனவே எந்த ஒரு சமயச் சொற்பொழிவானாலும், சேக்கிழாருடைய அடிச்சுவட்டை வைத்துச் சிந்திப்பது நல்ல பழக்கம். அன்றைக்குத் திருமுறை மாநாட்டில் நான் பெரிய புராணத்தைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

திருவள்ளுவர் முதன் முதல் மானிடராகப் பிறந்த முறையில், மனிதர்கள் பேசுகிற முறையில், மனிதர்களுக்காக, அவர்களுடைய வாழ்க்கைக் கட்டுமானம் எப்படி இருக்க வேண்டும் என்ற நிலையில்; முதல் முதலாகச் சிந்தித்து ஒரு நூலைச் செய்கிறார். அது தமிழில் தோன்றியதால் தமிழ் மறையாகவும், அது உலகத்திற்கே பொது மறையாக

இருப்பதால் உலகப் பொதுமறையாகவும் விளங்குகிறது. திருக்குறள் சமயச் சார்பற்ற நூல் என்று எல்லோராலும் வலியுறுத்தப்படுகிறது. அதிலே ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால், சமயச் சார்பற்றது என்று சொன்னால், சமய நம்பிக்கை இல்லாத நூல் என்று பொருள் கொள்ளக் கூடாது. சார்பற்றது என்பதற்குப் பொருள் ஒன்றை வலிந்து வற்புறுத்தி, திணிக்காத நூல் என்றுதான் பொருள். கல்லாடர் என்ற ஆசிரியர், 'சமயக் கணக்கர் மதிவழி செல்லாது' என்று கூறுகிறார். இந்தச் சமயக் கணக்கர் யார் என்று சொன்னால், அவர்கள் கடவுளைக் கூட வழிபட மாட்டார்கள். தன் கடவுள்தான் உயர்ந்தது என்று சண்டை போடுவார்கள். மதத்தினுடைய கொள்கை கோட்பாடுகளை வாழ்க்கையில் பின்பற்ற மாட்டார்கள். ஆனால், தம்முடைய மதம் உயர்ந்தது என்று சண்டை போடுவார்கள். பலர், இந்த நாட்டில் மட்டுமல்ல, உலக சமுதாயத்திலேயே போராடுகிறவர்கள் இருக்கிறார்கள். எழுதுகிறவர்கள் இருக்கிறார்கள்; பேசுகிற வர்கள் இருக்கிறார்கள். ஆனால், மதத்தை அனுட்டித்து வாழ்க்கையில் வெற்றி பெற முயற்சிப்பவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு என்பதை உலக வரலாறு, நமக்கு நினை வூட்டுகிறது. அதனால்தான் மதம் சம்பந்தப்பட்ட அமைப்பு களிடத்தில் கூட சண்டைகள், கலவரங்கள் தோன்றுகின்றன. திருவள்ளுவர், உலகப் பொதுமறையாக ஆக்கித் தந்ததின் காரணமாக இவர் இன்னார் என்று தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பொதுவாக மனித இயல்புக்குரிய அறங்களை யெல்லாம் சொல்லியிருக்கிறார்.

ஓர் ஐந்தாறு குறள்களை இன்றைக்கு நாம் சிந்திக்கலாம். அடிப்படையிலிருந்து ஆதார சுருதியிலிருந்து என்னுடைய இந்தப் பேச்சு விலகிப் போகாது. அப்படி விலகிப் போனால் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருப்பது போலத் தெரியும். மாணிக்கவாசகர் என்ன வற்புறுத்தி னாரோ, நாவுக்கரசர் என்ன வற்புறுத்தினாரோ, அதையே

தான் வேறு வார்த்தைகளில், வேறு முறையில் திருவள்ளுவர் நமக்கு நினைவூட்டுகிறார். திருவள்ளுவருக்கும் உயிர் உண்டு என்ற நம்பிக்கை உண்டு. அதற்குப் பல்வேறு சான்றுகள் நாம் நினைப்பூட்டலாம். அவருடைய குறள்வழி பார்த்தால், ஒரு கூட்டுக்குள் ஒரு பறவை இருக்கிறது. அந்தப் பறவை அந்தக் கூட்டுக்குள் இருந்து பறந்து போய் விடுகிறது.

'குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே'

என்பார். தூக்கணாங் குருவிக் கூடு பார்த்திருப்பீர்கள். அதிலே பறவை குடி இருக்கிறது. அது பறந்து போகிறது. அதேபோல, ஓர் உடம்பில் உயிர் தங்கி இருக்கிறது. இதுவும் பறந்து போகிறது. மூச்சு விட மறந்துவிட்டார் என்று சொல்கிறோம். நாகரிகமாகச் சொல்பவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். இறந்துவிட்டார் என்று சொல்லாமல், மூச்சு விட மறந்து விட்டார் என்று சொல்லுவோம். ஆக உயிர், என்று ஒன்று உண்டு. அந்த உயிருக்கு இன்ப துன்பங்கள் உண்டு. அதற்குத் துய்ப்பும், மகிழ்வும் உண்டு; அதற்குப் பொறிகள், புலன்கள் உண்டு. அது வாழ்க்கையில் வாழ்கிறது. அது ஏழு பிறப்புகள் பிறக்கிறது. அது ஈட்டுகிற ஈட்டங்கள் ஏழு பிறப்பும் தொடரும், என்றெல்லாம் பல்வேறு செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்லுகிறார். ஆக உயிர் உண்டு என்பதால் 'மன்னுயிர்' என்று சொல்லுகிறார். 'மன்னுயிர்' என்று சொன்னால் நிலைபெற்ற உயிர். நிலைபெற்ற உயிர் என்று சொன்னால் தோற்றமும் அழிவும் இல்லாத உயிர் என்று பொருள். இவ் உயிரை வாழ்க்கையிலே இப்படியெல்லாம் இயக்குவது எது என்பதற்கு, கடவுள் வாழ்த்திலே திருவள்ளுவர் நாம் செய்கிற வினைகளை, செயல்களைச் சொல்லுகிறார். மீண்டும், மீண்டும் கூறுகிறேன், ஒன்றைத் தயவு செய்து மறந்துவிடக் கூடாது. வினை, விதி என்று சொன்னால், ஏதோ நமது மூளையிலே ஒரு பயங்கரமான பீதி உண்டாக்கி இருக்கிறார்களே, அதுபோன்ற

ஒரு பீதியை நாம் கொள்ளக் கூடாது. 'வினை' என்றாலே செயல் என்றுதான் பொருள். 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்று தமிழ் இலக்கியம் பேசும். ஓர் ஆண் மகன் என்று சொன்னால், செயல் செய்வதுதான் அவனுக்கு இயற்கை. செய்வதுதான் அவனது உயிர் இயற்கை. செய்யாமல் இருந்தால்தான் தவறு. எனவே, செயல்கள் செய்யாமல் சோம்பி இருப்பது வாழ்க்கையன்று.

செயல்களின் பயன்களைவிட, செயல்கள் செய்வதற் குரிய நோக்கத்தின் பயன்தான் விளையும். ஆக வினை துன்பமாக மாறுவது, அல்லது வினை இன்பமாக மாறுவது, எந்த நோக்கத்தில், எதற்காக ஏன் செய்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. இப்பொழுது நான் கோயில் ஒன்று கட்டுகிறேன். கோயில் கட்டுகிற செயல் நல்ல செயல். அதிலே புண்ணியம் கிடைக்க வேண்டும்; கிடைக்கலாம். ஆனால் நான் கோயில் கட்டுகிறபொழுது வேறு யாரையாவது ஏமாற்றி முதலடிப்பதற்காகக் கோயில் கட்டினால், பணம் பெட்டியிலே நிறையும்; ஆனால் புண்ணியம் வந்து சேராது. செய்கிற செயல்களைவிட, செய்வதற்குரிய நோக்கம் என்ன? அதனால்தான் பொறுத்தார் ஓர் இடத்தில் பாராட்டப் பெறுகிறார் சேக்கிழாரால். வெகுண்டு தாக்குவார் ஓர் இடத்தில் பாராட்டப் பெறுகிறார். சேக்கிழாரையும் நாம் இன்றைக்குக் கூடவே சேர்ந்து பார்க்கலாம். ஓர் இடத்திலே ஒருவன் மிகப் பெரிய பொறுமைசாலியாக இருக்கிறான். பகைவன் வருகிறான்.

திருவள்ளுவரே,

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' 278

என்று சொன்னார்.

'மனத்தது மாசாக' மனத்திலே ஏகப்பட்ட குப்பை. நகராட்சிக் குப்பைத் தொட்டிகளைவிட மோசமான

குப்பைத் தொட்டி. அதை நம்முடைய பாரதி ஓரிடத்தில் நகைச்சுவையாகக் கிண்டல் - கேலியாகச் சொல்வார். யாழ்ப்பாணத்துச் சாமியார் என்று ஒருவரைச் சந்திக்கிறார் பாரதி. அந்த யாழ்ப்பாணத்துச் சாமியாரைத் தெருவிலே நடமாட விடுகிறார். அவர் ஒரு கிறுக்கர். பைத்தியம் மாதிரி தலையிலே கந்தைத் துணியெல்லாம் கட்டிக் கொண்டு போகிறார். சின்னப் பிள்ளைகளுக்குப் பொதுவாக சாமியாரைப் பார்த்தாலே, ஒரே மாதிரியாகப் பார்க்கின்ற பார்வை தோன்றும். அதிலும் ஒரு கந்தலையும் கிழிசலையும் தலையிலே கட்டிக் கொண்டு போனதால், ஏளனமாகப் பார்த்துப் பரிகாசம் செய்திருக்கிறார்கள். உடனே இந்த யாழ்ப்பாணத்துச் சாமியார் அவர்களை யெல்லாம் பார்த்து 'கந்தலும், கிழிசலும் என் தலைமீது தான் இருக்கின்றன. நான் இப்படி ஆட்டினால் கீழே விழுந்துவிடும். ஆனால், நீ தூக்க முடியாத அழுக்கு மூட்டையை உள்ளத்தில் சுமந்து கொண்டிருக்கிறாயே' என்று கேட்டார். தாங்க முடியாத அழுக்கு மூட்டையைச் சிலபேர் சுமந்து கொண்டிருப் பார்கள். இந்த அழுக்கு மூட்டைகளை யெல்லாம் நீக்குவது என்பது தான் செயலினுடைய நோக்கம். ஆக எதற்காகச் செய்கிறோம்? கோயில் கட்டியதனாலேயே கோயில் என்று வந்துவிடாது. 'மனத்தது மாசாக மாண்டார் நீராடி' அதாவது, 'மிகப் பெருமைக் குரியவர்களுடைய கோலத்தையும், மிகப் பெரியவர்களுக்குரிய தன்மையையும் தான் பெற்றிருப்பதாகக் காட்டி' என்பர்.

மாணிக்கவாசகர் இதிலும் கேலி செய்வார்,

'நாடகத்தால் உன்னடியார்
போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்'

என்பார்.

சமய வாழ்க்கையில் கொஞ்ச நாளைக்கு நடிப்பது நல்லதுதான். கண்ணை மூடி இருப்பது போலக் கொஞ்ச நாளைக்கு மூடினால்தான் மூடுகின்ற பழக்கம் வரும். ஆனால் நடிப்பதற்காக அப்படி மூடக் கூடாது. மூடிப் பழகுவதற்காக மூடலாம்; நடிப்பதற்காக மூடக் கூடாது. மாணிக்கவாசகர் சொல்கிறார். அடியார் எல்லாம் நின்று கொண்டிருக்கிறார்கள். இவர் அப்பொழுதுதான் முதன் முறையாக வந்திருக்கிறார் அந்த வரிசைக்கு. ஏனென்றால் மாணிக்கவாசகருக்கு இந்த அனுபவமெல்லாம் அதிகம். இன்னோர் இடத்திலே இரக்கப் பட்டு, உரிமையோடு கேட்பார்;

'பழஅடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்
தாட்கொண்டாற் பொல்லாதோ'

என்று. இந்து மதத்திலே பழைய அடியராக இருப்பவர்கள், புதிய அடியார் வந்தால் அவ்வளவு சீக்கிரம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இப்பொழுது நான் கூட மலேயாவிற்குப் புது அடியா ராகப் போய்விட்டேன். இவர்கள் கூட என்னை அவ்வளவு சீக்கிரமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் இவர் இங்குப் பரம்பரையாக இருக்கின்ற அடியாராக இருக்கின் றார் என்று. ஆகவே, 'பழ அடியீர்! பாங்குடையீர்! புத்தடியோம்! புன்மை தீர்த்தாட் கொண்டால் பொல்லாதோ' என்கிறார். மிகவும் மாற்றுப் பார்ப்பார்கள்; தரம் பார்ப்பார்கள். இந்த அடியார்கள் சீக்கிரம் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்கிறார்.

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்'

278

என்றார். அப்படி ஒருவன் இருந்தான். மெய்ப்பொருள் நாயனார் என்ற ஒரு சான்றோரிடத்துப் பகை கொண்டான். அந்தப் பகையை முடிப்பதற்காக நல்ல சிவனடியார் போலக் கோலம் கொண்டான். கோலம் கொண்டு, ஆகம ஏடு வைத்திருப்பதாகச் சொல்லி வந்து, பாடம் சொல்லப் போவதாகச் சொன்னான். அந்தப்புரத்திலே இருந்த மெய்ப்பொருள் நாயனார் தன்னுடன் இருந்த அரசியை வெளியே அனுப்பிவிட்டு, அவர் பணிவோடு அன்போடு பாடம் கேட்பதற்காகக் குனிகிறார்.

'தான் நினைத்த அப்பரிசே செய்ய'

என்கிறார் சேக்கிழார். 'குத்தி விட்டான்' என்று சேக்கிழார் சொல்லப் பயப்படுகிறார். அவ்வளவு கொடுமை செய்தவனை வெட்ட வரும் தத்தனைப் பார்த்து மெய்ப் பொருளார் தாம் கீழே விழுகிற பொழுது, 'தத்தா நமர்' என்கிறார். அங்கே பொறுத்தாற்றுகின்ற பண்பு பாராட்டப் பெறுகிறது. ஆனால், சண்டேசுவர நாயனார் புராணத்தில் தன்னை ஈன்ற தந்தையின் காலையே தடிந்து, கோடரியால் வெட்டுகிறார். அங்கு வெகுளியைச் சேக்கிழார் வாழ்த்து கிறார். ஓர் இடத்தில் பொறையுடைமையை வாழ்த்து வானேன்? ஓர் இடத்தில் வெகுளியை வாழ்த்துவானேன்? என்று சொன்னால், மெய்ப்பொருளாருக்கு வந்தது அவரைப் பற்றிய சொந்த, தன் சார்பான கேடு. எனவே, தற்சார்பாக வருகின்ற கேடுகளையெல்லாம் மனிதன் தாங்கிக் கொள்ள வேண்டும்; பொறுத்தாற்ற வேண்டும். ஆனால், சண்டேசுவர நாயனார் வரலாற்றில் வருகின்ற கேடு, பரம்பரையாக வருகின்ற ஓர் இனத்தினுடைய பண்பாட்டு நாகரிகத்தைக் கெடுக்கின்ற கேடு. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக வழிபாட்டுக்கென்று பயன்படுகிற மூர்த்தியை, அந்த வழிபாட்டுச் சடங்கை, அந்த வழிபாட்டு முறைகளை அலட்சியப்படுத்தியதனாலே கோபம் வருகிறது.

இப்பொழுது நம்முடைய நிலை அப்படி இல்லை. தலை கீழாக மாறி இருக்கிறோம். இப்பொழுது யாராவது நம்மைத் திட்டினால், நமக்குக் கோபம் வந்துவிடும். நம்முடைய மொழியை, நம்முடைய மதத்தை, நம்முடைய சமூகத்தை, யாராவது பேசினால் கோபம் வராது; 'அதெல்லாம் கடவுள் இருக்கிறார் பார்த்துக் கொள்வார்' என்று சொல்லி விடுவோம். பழங்காலத் தமிழ் மக்கள் தங்களைவிடத் தங்களுடைய கலை, மொழி, நாகரிகம், சமயம் இவைகளை முன்னிலைப்படுத்தித் தாங்கள் பின்னே நின்று கொண்டார்கள். இன்று நம்முடைய வாழ்க்கையில் நாம் முன்னே நின்று கொண்டு, நம்முடைய மொழி, கலை, சமயம், நாகரிகம், பண்பாட்டைப் பின்னே வைக்கிறோம். தெளிவாகச் சொன்னால், நமக்குத்தான் எல்லாம் இருப்ப தாகச் சொல்கிறோமே தவிர, அவைகளுக்காக நாம் இல்லை. இந்தப் போக்கை அந்தச் சண்டேசுவர நாயனார் வரலாற்றில் பார்க்கலாம். எனவே,

'மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்' 278

என்று சொல்வதைப் போல, காரியங்கள் செய்வது மட்டும் முக்கியமல்ல. காரியங்கள் செய்வதற்குரிய நோக்கம் என்ன என்பதே முக்கியம். எந்தக் கோலம் கொண்டிருக்கிறோம் என்பது முக்கியமல்ல. நம்முடைய மனம் எங்கே தங்கி யிருக்கிறது என்பது முக்கியம்.

'எக்கோலம் கொண்டால் என்ன?
ஏதவத்தைப் பட்டால் என்ன?
முத்தர் மனமிருக்கும் மோனத்தே'

என்று சொன்னார்கள். நீ இருப்பது உப்பரிகையாக இருக்கலாம். நீ இருப்பது கோயிலாக இருக்கலாம். ஆனால் உன்னுடைய மனம் கோயிலில் இருக்கிறதா? உப்பரிகையில் இருக்கிறதா? அல்லது குப்பை மேட்டில் இருக்கிறதா என்று

கண்டுபிடித்துக் கொள்ள வேண்டும். இந்த மனம் எங்கிருக் கிறது. எந்த நோக்கத்தில் செயல்படுகிறது என்பதுதான் முக்கியம். எனவே வினை என்பதற்குச் செயல் என்ற பொருள் எடுத்துக் கொண்டு, அது இருள் சார்புடையதாக இருக்கின்றதா? ஒளிச் சார்புடையதாக இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். இரண்டு வினையும் அப்படித்தான். திருவள்ளுவர்தான் முதன் முதலில் உலகத்தில் ஒரு புதுநெறி வகுக்கிறார்.

> 'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை' 76

என்றார். ஒரு தவறுக்குக் கூட, ஒறுத்தலுக்குக் கூட அறம் துணை செய்யும்; அன்பு துணை செய்யும். மருத்துவர் ஒருவரை அறுத்துச் சுடுகிறார். 'வாளால் அறுத்துச் சுடினும் மாளாத காதல்' வைத்தியரிடத்திலே. நம்முடைய உடல் நோய்வாய்ப்பட்டிருக்கிற போது ஓர் அறுவை வைத்தியர், அறுத்து வைத்தியம் செய்கிறார். அவரிடத்திலே காதல் வருமா? வெறுப்பு வருமா? ஆகவே நம் நாட்டினுடைய நாகரி கத்தின்படி - பண்பாட்டின்படி, தண்டித்துக் கண்டித்துத் திருத்துவதும் நல்லது. அது அன்பினால் செய்யப்படுகின்ற காரியம். இந்த அடிப்படையிலே செயலை வைத்து நன்மையா, தீமையா என்று முடிவெடுக்கக் கூடாது. அதனுடைய விளைவு என்ன? பயன் என்ன? சில பேர் நல்வினை செய்யலாம்; தீவினை செய்யக் கூடாது என்பார்கள். நல்வினை செய்யலாம். செய்கின்ற பொழுது கூட, தனக்காக என்று செய்தால் அது பொன்விலங்கு.

நான் நல்வினை செய்தால் கூட, அது நான் செய்கிறேன் என்று செய்தால் நமக்குப் பயன் கருதிச் செய்தால், அந்தக் கணக்குப்படி. இலாபம் நமக்குத்தான். தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்தால் தெரியும். தஞ்சைப் பெருவுடையார் கோயில் யார் கட்டினார் என்பது,

மக்களாகச் சொல்லுகின்ற பெயரே தவிர, அங்கு இராஜராஜன் கட்டினான் என்று ஒரு கல்வெட்டு இல்லை. அவன் காலத்திலேயே அவன் தனக்கு ஒரு சிலை வேண்டுமென்றால், அவன் வைத்திருக்க முடியும். ஆனால், அவர்கள் தங்களையா முன்னிருத்திக் கொண்டார்கள். இல்லை! அவர்கள் தங்களைப் பின்னிருத்திக் கொண்டார்கள். கலைகளை முன்னே வைத்தார்கள்; கோயில்களை முன்னே வைத்தார்கள்.

அதனால்தான், நான் நகரத்தார் கோயிலிலே பேசுகிற பொழுது சொன்னேன், 'தன்னுடைய தலையைக் காப்பாற்றிக் கொள்வதைவிட, காளையார்கோவில், கோவிலைக் காப்பாற்றுவது பெரிது' என்று மருது சகோதரர்கள் நினைத்தார்கள். ஆக, தான் வாழ்வதைவிட, தன்னுடைய நாடும், தன்னுடைய மொழியும், தன்னுடைய கலையும், தன்னுடைய நாகரிகமும் வாழ்வது பெரிது என்று நினைத்தார்கள். எனவே, 'இருள் சேர் இருவினையும் சேரா' என்று சொன்னால் இந்த உயிர்களை இரண்டு வினைகளும் வந்த சேரக் கூடாது. சேரக் கூடாது என்று சொன்னால், இரண்டு வினைகளாலும் இருக்கின்ற பயன் வந்து சேரக் கூடாது. வேறு வார்த்தைகளில் சொன்னால், மனிதன் என்றைக்கும் தன்னுடைய கணக்கை நேராக முடித்து, பற்று வரவைக் குறைத்து, இறுதியில் அவன் என்றைக்கும் கணக்கை நேராக ஒத்து வைத்துக் கொள்வது நல்லது. இந்தக் கணக்கு நேராக ஒத்துப் போகாது போனால், அதனால் வருகிற விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டிவரும். ஆக, 'இருள் சேர் இருவினையாக இருப்பதால்' சரியாகச் செயல்களைச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் அவை நமக்கு இன்பத்தை, துன்பத்தைத் தருவதாக வரக்கூடாது. இன்னொன்றை மறந்து விடக்கூடாது. இன்பமாக இருந்தாலும் மருந்துதான்; துன்பமாக இருந்தாலும் மருந்துதான். இந்த அடிப்படை உணர்வு நமக்கு வராது போனால், நம் வாழ்க்கையில் வெற்றி

பெற மாட்டோம். திடீரென இன்றைக்கு ஒரு துன்பமே வருவதாக வைத்துக் கொள்ளுங்கள். இந்தத் துன்பத்தையும் நாம் சிரித்த, மகிழ்ந்த, மலர்ந்த முகத்தோடு வரவேற்று அனுபவித்தால் தான் நமக்கு இவற்றினால் உள்ள துன்பம் நீங்கும். நமக்குத் துன்பம் என்றால் உடனே துவண்டு போகிற பழக்கங்கள். கசப்பான மருந்தாக இருந்தாலும் எப்படியாவது மூக்கைப் பிடித்துச் சாப்பிட்டுத்தானே ஆக வேண்டும். அந்த நோய்க்கு அது மருந்து என்று சொன்னால், மருந்து சாப்பிட முடியாவிட்டால், அப்புறம் நோய் எப்படிப் போகும்? அதே மாதிரி ஒரு நல்ல மருந்து மருந்துதான். அது இனிப்பாக இருக்கிறது. ஓர் அவுன்ஸ்தான் குடிக்கச் சொல்லுகிறார் மருத்துவர். யாராவது இரண்டு அவுன்ஸ் குடிப்பார்களா? மருந்து என்று சொல்லிவிட்டால், அது இனிப்பாக இருக்கிறது, சுவையாக இருக்கிறது என்று சொல்லி, கூடுதலாகக் கொஞ்சம் குடிப்பார்களா? மாட்டார்கள். அதேபோல, வாழ்க்கையில் இறைவனுடைய கருணை யினாலேயோ, நம்முடைய முயற்சியினாலேயோ, நாம் அடைகின்ற இன்பமும் மருந்துதான்; துன்பமும் மருந்துதான். எது மிகினும் துன்பம்தான். நமக்கே தெரியும், இன்பம் மிகுந்தாலும், சுவையாக இருக்கிறது என்று மிகுத்து உண்டாலும் துன்பம்தான். கசப்பாக இருக்கிறது என்று சொல்லி, கசப்புப் பண்டங்களை, உவர்ப்புப் பண்டங்களை சேர்த்துக் கொள்ளாமல் போனாலும் துன்பம்தான். எனவே இந்த அடிப்படையில் இருள்சேர் இருவினையும் நம்மைப் பற்றாது இருக்க வேண்டும் என்று சொன்னால், திருவள்ளுவர் நமக்குச் சில வழிகள் சொல்லுகிறார். அன்றைக்கு நான் சிலவற்றைக் குறிப்பாகச் சொல்லி உணர்த்தி யிருக்கிறேன். இன்றும் சிலவற்றைத் திருவள்ளுவரை மையமாக வைத்து உணர்த்துகிறேன்.

'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்' 6

என்கிறார். 'நீடு வாழ்வார்' என்பதற்கு இந்த நிலவுலகத்திலே நீண்ட நாள் வாழவேண்டும். மீண்டும் கொஞ்சம் வலியுறுத்துகிறேன். நூற்றிருபத்தைந்து ஆண்டுகள் என்று சராசரி வயதாக இப்போது வரையறை செய்கிறார்கள். மனிதர்கள் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறைவில்லாமல் வாழ வேண்டும். அதற்கு ஒரு நாள் குறைந்தால் கூட ஏதோ பெரிய இழப்பு என்று நாம் கருதவேண்டும், கடவுள் நமக்குக் கொடுத்ததில் ஒன்றைக் குறையச் செய்து விட்டோம் என்று. அப்படி வாழ வேண்டும் என்று சொன்னால் 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' – நம்முடைய ஐம்பொறிகள் இருக்கின்றனவே, இவை பற்றி அன்றைக்கே குறிப்பில் சொன்னேன்; இவைகளெல்லாம் வரத்து மடைகளே தவிர, போக்கு மடைகள் அல்ல. நம்முடைய உடலில் தங்கியிருக்கிற உயிரையும், உடம்பினுடைய ஆற்றலையும், வளர்த்துப் பெருக்கக் கூடிய வாயில்கள்தான் நம்முடைய கண்ணும் காதும் போன்ற கருவிகள். இவைகள் நம்முடைய பலத்தை வளர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்ட கருவிகளே தவிர, இவைகள் நம்முடைய பலத்தைக் குறைக்கக் கூடியன அல்ல. இன்றைக்கு நம்முடைய கொச்சைத் தனமான வாழ்க்கையின் மூலமாக, கொச்சைத்தனமான திரைப்படங்கள், கொச்சைத்தனமான தகவல்கள், கொச்சைத்தனமான செய்திகள், எழுச்சி வசப்பட்ட செயல்கள், உணர்ச்சி வசப்பட்ட செயல்கள் இவைகளாலே இந்தப் பொறிகளெல்லாம் கிட்டத்தட்ட போக்கு மடைகளாகவே இருக்கின்றன.

நான் தினந்தோறும் எவ்வளவு ஈட்டிக் கொண்டேன் என்பதைவிட, நான் எவ்வளவு செலவழித்தேன் என்று சொல்வதைப் போலத்தான் நம்முடைய வாழ்க்கைப் போக்கு அமைந்திருக்கின்றது. எனவேதான் 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' என்கிறார். 'அவித்தான்' என்று சொன்னால் மீண்டும் தயவு செய்து மறந்துவிடாதீர்கள் 'அழித்தல்' என்ற சொல் பொருள் அல்ல. நிரம்பப் பேர் 'அழித்தல்' அல்லது

'அடக்குதல்' என்று பொருள் கொள்ளுகிறார்கள். 'அழித்தல்' பொறிகளை அழிக்க முடியாது. அழித்தலும் கடவுளுக்கு விரோதமானது. இயற்கைக்கு விரோதமானது. கடவுள் கொடுத்த பரிசை, கடவுள் கொடுத்த கொடையை, முறை யாகத் துய்த்து மகிழ்ந்து வாழாமல், அவற்றை அழிப்பதிலே நமக்கு என்ன உரிமை இருக்கிறது. ஆகையினால்தான் காலையிலே நான் படித்த ஒன்றிலே கூட 'விரதங்கள் எல்லாம் வேண்டாம்' என்று ஞானசம்பந்தரே சொல்லு கின்றார். நீ விரதங்கள் இருந்து உடம்பை வருத்த வேண்டாம்.

பௌத்த, சமண சமயங்கள் வந்த பொழுது, அன்றைய நாயன்மார்கள் அதற்கு உடன்படாமல் எதிர்த்ததற்குக் காரணம், அவைகள் இந்த நாட்டினுடைய வாழ்வியலுக்கு முரணாக இருந்தன. இவன் பாட்டும், இசையும், கூத்தும் கேட்டு மகிழ விரும்புகிறான். மகிழ்ந்து கூத்தாட விரும்புகிறான். அவர்கள் 'பண்ணொடு இசை கேளார்' என்று சொன்னார்கள். இவர்கள் இயற்கையோடு இசைந்து வாழ ஆரம்பித்தார்கள். இவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. குறிஞ்சி நிலத்தை ஒட்டியும், முல்லை நிலத்தை ஒட்டியும், மருத நிலத்தை ஒட்டியும், பாலை நிலங்களை ஒட்டியும், இயற்கையை ஒட்டியும் ஒழுகலாறுகளை அமைத்து மிகச் செழிப்பாக வாழ்ந்தார்கள். 'மலரிடை மணம் நுகரார்' என்று சொன்னார்கள். இவர்கள் பழங்காலத்திலிருந்து ஐந்திணை, அகத்திணை வழியாக, அவனும் அவளுமாகச் சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கைப் பேற்றில் வளர்ந்தவர்கள். அவர்கள் பெண்ணைக் கீழ்மைப் படுத்தி, 'பெண் என்பது பாவமான பிறப்பு, வீடு பேறு இல்லை' என்றெல்லாம் கீழ்மைப் படுத்தியதைப் பார்த்து, நம்முடைய நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் பிடிக்குப் பிடி 'நமச்சிவாய' என்று சொல்வதைப் போல இறைவனை அம்மையப்பராகவே சொல்லி, நாடு முழுதும் சுற்றிச் சுற்றிப் பரப்பினார்கள். 'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்தது' என்று

கேட்டார்கள். 'ஆதிபகவன்' என்ற சொல்லுக்குக் கூட அப்படித்தான் பொருள் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆக நாம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்கிறவர்கள். 'ஐந்து அவித்தான்' என்ற சொல்லுக்குப் பொருள், நான் அவற்றை மற்றவர்களுக்குக் கேடு செய்யாவண்ணம் பக்குவப்படுத்துதல் என்பதுதான். சிலபேர் சிலரைப் பார்க்கிறபொழுதே மனது சங்கடமாக இருக்கிறது. பயந்து ஓடி விடுவார்கள் போலத் தெரிகிறது. அப்படியெல்லாம் இல்லாமல் குளிர்ந்த கண், யார் சொல்வதையும் கேட்கிற பாங்கு, நல்ல இனிய வார்த்தைகளைச் சொல்லுதல் வேண்டும்.

அதனால்தான்

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' 100

என்று கூறினார். இனிய சொற்களை வழங்க வேண்டும் என்றார். 'காய் கவர்ந்தற்று' என்றார். இனிய உளவாக - அதுவும் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று என்றார். கனி இருப்ப என்று சொன்னால் இவன் கையில் ஏற்கனவே நல்ல பழம் இருக்கிறது. இதைத் தின்று சுவைத்து மகிழாமல் கீழே போட்டு விட்டு அடுத்த வீட்டுத் தோட்டத்திலே இருக்கிற காயைப் போய்த் திருடப் போகிறான்.

'கனி இருப்பக் காய் கவர்ந்தற்று'

என்று சொன்னார். 'கவர்ந்தற்று' என்று சொன்னால் திருடுதல். அது தனக்கு உரிமை உடையது அல்ல. உரிமை உடையது அல்லாததை, இல்லாத ஒன்றை, இன்னொரு வரிடத்தில் இருப்பதை, இன்னொருவருக்கு உரிமை யானதைத் திருடப் போகிறான். ஆனால், அது பயனற்றது. இவனிடத்தில் கனி இருக்கிறது. இது ஒரு பைத்தியக்காரத் தனமான வாழ்க்கை. இப்படிச் சிலபேர் இருக்கிறார்கள்.

தி·IV·15.

இவர்களுக்கு இக்கரைக்கு அக்கரை பச்சை! இப்படி வாழ்கின்ற மனப் போக்கு உடையவர்கள் இருக்கிறார்கள். ஆதலாலே 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்று சொன்னால் நான் அன்று சொன்னதைப்போல நல்ல வீணை ஒன்றை அவன் நன்கு வாசித்தால் அவனுக்கும் மகிழ்ச்சி. வீணைக்கும் பெருமை. கேட்பவர்களுக்கும் மகிழ்ச்சி. அதேபோல ஒருவன் வள்ளுவர் வழியில், நம்முடைய சமயநெறியில் வாழ்ந்தால் அவனுக்கும் பெருமை; அவனுடைய வீட்டுக்கும் பெருமை; அவனுடைய நாட்டுக்கும் பெருமை. சுற்றத்தார்கள் எல்லாம் மகிழ்வார்கள். சுற்றமாக உலகம் அவனைச் சுற்றும். சில பேர் 'என்னை யாருமே அங்கீகரிக்க மாட்டேன் என்கிறார்கள்; ஆதரிக்க மாட்டேன் என்கிறார்கள்' என்று சொல்லுவார்கள். அதற்குக் காரணம் இவர்களுக்கு என்று இவர்கள் சில குணப்போக்குகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

> 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடுவாழ் வார்' 6

என்று சொன்னார் திருவள்ளுவர். இதற்கு ஏதாவது பயிற்சி வேண்டுமே. இறைவனின் துணை நமக்கு வேண்டுமே. இந்த இறைவனை எங்கே தேடுவது? அவர் சொல்கிறார், 'நீ கூப்பிடு, கூடவே வந்து விடுவார்' என்று இவன் கூப்பிடுவது இல்லை.

> 'பன்னாள் அரன்தன்னை அர்ச்சிக்க
> மெய்ஞ்ஞானம் கூடும்
> பன்னாள் இவன்அழைத்தால் அழைப்
> பொழியான்என்று எதிர்ப்படும்'

என்றார், தேவார ஆசிரியர். பன்னாள் அழைக்க வேண்டு மென்று சொன்னார்கள். ஆனால் திருவள்ளுவர் சொல்லு கிறார், 'நினைத்தவுடனே உன்னுடைய மனத் தாமரையில் வந்து குடி புகுந்து விடுவார்' என்று.

'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்' 3

என்றார். 'மலர்மிசை ஏகினான்' என்றார். 'ஏகினான் என்றே சொன்னார். நினைத்தது முந்தியா, அவன் மனதில் வந்து குடி புகுந்தது முந்தியா என்று கேட்டால், நினைப்பதைவிட முந்தியே வந்து குடிபுகுந்து விடுகிறான் என்று சொன்னார். அவ்வளவு விரைவாக, யார் கூப்பிடுவார்கள் என்று இறைவன் காத்துக் கொண்டிருப்பான் போலத் தெரிகிறது. இவன் கூப்பிடுவதுதான் அவனுக்குத் தேவை. 'மலர்மிசை ஏகினான்' என்று கூறுகிறார்.

பரிமேலழகர் பல இடங்களில் நல்ல உரை எழுதவில்லை என்ற குறை இருந்தாலும், சில இடங்களில் அவருடைய உரைக்கு மிகப் பெருமை உண்டு. இந்த உரை மிகவும் பொருத்தமானது. 'யார், யார் எந்த வடிவத்தோடு நினைக்கிறார்களோ, அந்தந்த வடிவத்திலேயே வந்து சேருகிறான்' என்றார் பரிமேலழகர். இப்பொழுது நம்முடைய நாட்டில் ஒரே சாமிக்கு இவ்வளவு திருவுருவம் வந்தது இப்படித்தான். கடவுள் ஒருவர் தான்; கருத்து வேற்றுமை இல்லை. விநாயகர் ஒரு கடவுள்; அம்மை ஒரு கடவுள்; சிவன் ஒரு கடவுள்; திருமால் ஒரு கடவுள்; எல்லாம் ஒன்றுதான். யார் யார் எப்படி நினைத்தார்களோ, அவரவர்கள் நினைத்த வடிவத்தில் இறைவன் வந்து சேர்ந்து விட்டான். ஆக, அவரவர்கள் எந்த வடிவத்தை நினைத்தார்களோ, அந்த வடிவத்தைக் கொடுத்து விட்டார்கள். ஆக, கடவுள் ஒருவர்தான். அதில் யாரும் இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, பத்து என்று நினைக்காதீர்கள். ஆனால் நமக்கு மட்டும் ஏனோ அந்தப்பேத உணர்ச்சி போகவில்லை. இந்தச் சாமியைக் கும்பிடாமல் அந்தச் சாமியைக் கும்பிட்டால், ஏதாவது குறை வந்துவிடுமோ என்று பயப்படுகிறோம். பயப்படவே பயப்படாதீர்கள். எந்தச் சாமியைக்

கும்பிட்டாலும் - சத்தியமாகச் சொல்லுகிறேன் - அந்தக் கடவுளுக்குப் போய்ச் சேரும். இந்த வேற்றுமை வந்ததற்குக் காரணம், யார் யார் எந்தெந்த வடிவத்தை நினைக்கிறார்களோ, அந்தந்த வடிவத்தோடு - ஏனென்றால் அவன் பயப்படக் கூடாதே என்று வருகிறான்.

மதுரையிலே பன்றிக்குட்டி ஒன்று பட்டினி கிடக்கிறது; காப்பாற்ற வேண்டும். காப்பாற்ற வேண்டு மென்றால், அந்தப் பன்றிக்குட்டிக்குப் பாலை நக்கிக் குடிக்கின்ற சக்தி இன்னும் வரவில்லை. ஆகப் பாலாடையினால் ஊட்டவும் முடியாது. தாய்ப் பன்றிதான் ஊட்ட வேண்டும். தாய்ப் பன்றி செத்துப் போய்விட்டது. என்ன செய்வது? சிவபெருமான் தாய்ப் பன்றியாகவே வடிவெடுத்து, அந்தப் பன்றிக் குட்டி, தன்னைக் கண்டு மிரளாதவாறு தன் மடியைப் பிடித்துத் தன்னை அணுகுகின்றவாறு தன்னை ஆக்கிக் கொண்டு, பாலை ஊட்டி வளர்த்த சமயம் நம்முடைய சமயம். ஆக, யார் என்ன வடிவம் என்பது பிரச்சனை யல்ல. யாருக்காக இரங்குவது, யாருக்கு அருள் செய்ய வேண்டும் என்பதுதான்.

நிரம்ப உயிர்ப்புள்ள உயிரோட்டமுள்ள ஒரு சமயமாக நமது சமயம் இருந்தது. காலப் போக்கில் நாம் அதைக் கொண்டுபோய்க் கடவுளை முன்னிட்டு வைத்தோம். கடவுளே தானாகப் பன்றியாக வருகிறார். பன்றிக்கு வந்து பாலூட்டிக் காப்பாற்ற வேண்டுமென்றால், அவன் தேவனாக இருந்தால் முடியுமா? திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டும்போது அம்மையப்பராக வரலாம்; அது பிள்ளை. அதற்குப் புத்திசாலித்தனம் இருக்கிறது; தெரிகிறது; ‘தோடுடைய செவியன்’ என்று பாடுகிறது. பன்றிக்குட்டி என்ன செய்யும். இவர் மான், மழுவோடு இங்கு நின்றார் என்றால், அதற்குப் பயந்து உடனே மூச்சு நின்று போய் விடும். ஆதலால், என்ன செய்தார்? தாய்ப் பன்றியாகவே வடிவமெடுத்தார். ஆக, அவருக்குள்ள வடிவம், அவருடைய தென்பதல்ல. அவருக்கு அந்த வடிவம்தான்

பெரிது என்பதும் அல்ல. யார், எந்த வடிவத்தை நினைத்தார்களோ அந்த வடிவம்.

பிரெஞ்சில் அந்த மாதிரி ஒரு பழமொழியே உண்டு. ஒரு நாயைப் போய், கடவுளைக் கற்பனை செய் என்றால், அதனுடைய கற்பனா சக்தி எப்படிப் போகும்? தன்னைப் போல அது ஒரு நாயாக இருக்கும் என்று அது கற்பனை செய்யும். அதற்குமேல் அதற்குச் சக்தி போதாது. அதனால் தான், நம்முடைய நாட்டிலே கூட, கடவுளுக்குச் சாதம் படைக்கிறோம்; உடை உடுத்துகிறோம். அணிகலன் போடுகிறோம்; அதற்குக் கல்யாணம் செய்து வைக்கிறோம். உடனே பகுத்தறிவுவாதிகள் இதெல்லாம் சுவாமிக்கு வேண்டுமா என்று கேட்பார்கள். ஆனால் இந்த மனிதன் இருக்கிறானே, அவன் தன்னில் கடவுளை வேறாகப் பார்க்க வில்லை; அவன் உண்ணாத கடவுள் என்று இவனுக்குத் தெரியும். உண்பிப்பதில் இவனுக்கு ஒரு மன ஆறுதல். அது உறங்காத கடவுள் என்று இவனுக்குத் தெரியும். ஆனால் உறங்க வைக்கிறான். ஒன்பது மணிக்கு வழிபாடு முடித்துப் பள்ளியறைக்குச் சுவாமியை எடுத்துக் கொண்டு போய், அதைப் படுக்க வைத்து, ஊஞ்சல் ஆட்டிப் பார்க்கிறான். அவன் கடவுளை ஓர் உயிர்ப்புள்ள பொருளாக - தன் வாழ்க்கையில் பங்காளியாகக் கருதுகிறான்.

அது ஒரு சிலை; கண்ணுக்கு அப்பாற்பட்டது; கருத்துக்கு அப்பாற்பட்டது; கற்பனைப் பொருள் என்ற நம்பிக்கை இவனுக்குக் கிடையாது. உலகத்தில் மற்ற மதமெல்லாம் அப்படித்தான் சொன்னது. பயத்திலிருந்து மதம் பிறந்தது என்றே சிலபேர் சொல்லுகிறார்கள். பயத்திலிருந்து நமது மதம் பிறக்கவில்லை.

கேட்டால், கல்லை இடித்துக் கொண்டான். காலில் இரத்தம் வந்தது. உடனே கும்பிட ஆரம்பித்து விட்டான் என்கிறார்கள். இவ்வளவு பைத்தியக்காரனாக நம்முடைய

ஆள் இருக்க மாட்டான். இவனுக்கு மதம் பிறந்த களம் நன்றிப் பெருக்கு, அன்புப் பெருக்கு; அன்பு வெள்ளம்! அவன் இந்த உலகத்தைப் பார்க்கிறான். இதில் ஏதோ வியத்தகு ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஓர் ஒருங்கிணைப்புகள் இருக்கின்றன; ஒழுகலாறுகள் இருக்கின்றன என்று சொல்லி அந்த அடிப்படையிலேதான் உண்ணாத கடவுளை உண்பிக்கிறான். அரசன் ஒருத்தன். ஒரே காலைத் தூக்கி, வலக் காலைத் தூக்கி இவர் ஆடிக் கொண்டிருக்கிறார். 'வலிக்காதா? கொஞ்சம் கால் மாற்றி ஆடேன்' என்று கேட்டான். கால் மாற்றி ஆடினார் மதுரையில். கண்ணப்பர் கடவுளை எப்படிப் பார்த்தார். 'உனக்குப் பசிக்குமே! சாப்பிட முடியவில்லையே!' என்று கேட்டார். 'கண்ணில் இரத்தம் வருகிறதே' என்று கேட்டார். அவர்கள் கடவுளை அந்நியமாகப் பார்க்கவில்லை. ஊனாக உயிராக, உடைமையாக, உணர்வாக, தானும் அதுவும் அந்நியம் அல்லாததாகப் பார்க்கின்ற பார்வை இருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது.

அதனால்தான், யார் எந்த வடிவத்தோடு நினைக்கிறார்களோ, அந்த வடிவத்தில் பார்க்கிறார்கள். தாய்மார்கள் பொங்கலன்று சாணத்தை எடுத்துப் பிள்ளையார் பிடிப்பார்கள். இந்த நாட்டில் இருக்கிறதோ, இல்லையோ தெரியவில்லை. மாட்டுச் சாணத்தை எடுத்துப் பிள்ளையார் பிடித்து அருகம்புல்லை வைத்துப் பொட்டு இடுவார்கள், அந்தப் பிள்ளையார் பிடிப்பதற்காக, சின்னப்பாப்பா சாணம் கொண்டு வந்தது. ஒரு பிடியை எடுத்துப் பிள்ளையாராகப் பிடித்து வைத்தாகி விட்டது. மீதிச் சாணத்தைப் பக்கத்திலே போட்டது. தாய் சொல்கிறாள் தன் மகளிடம், 'சீ! அந்தச் சாணத்தைத் தூக்கி வெளியே போடு' என்று. அதைப் பிடித்து எடுத்துப் பிள்ளையாராக வைத்த பிறகு பிள்ளையார். பிள்ளையாராகப் பிடிக்காமல் வெளியே போட்டது சாணம் தான். 'அதைத் தூக்கி வெளியில் போடு' என்கிறார். ஆக

இவர்கள் பிள்ளையாராகப் பிடித்தால் தான் பிள்ளையாரே தவிர, சாணத்தைப் பிள்ளையாராகச் சொல்லவில்லை. ஆதலால்தான் பழைய காலச் சித்தர் சொன்னார்,

'நட்ட கல்லும் தெய்வமாமோ, நாதன் உள்ளிருக்கையில்'

என்று! கடவுளை அந்தத் திருவுருவத்தில் எழுந்தருளச் செய்வது என்பது ஒரு கலை. அது ஓர் அருள் ஞானக்கலை; யோகக் கலை. எங்கோ வானாக, மண்ணாக, வளியாக, ஒளியாக, உயிராக, ஊனாக, உண்மையுமாய் இன்மையுமாய் இருக்கிற பரம்பொருளை நினைந்து, நினைந்து, உருகி, உருகி, கொஞ்ச நேரம் இதிலே இருக்க வேண்டும் என்று எழுந்தருளச் செய்கிறான். அவனுக்குப் பேச, உறவாட ஒரு துணை வேண்டும். பக்கத்தில் இருக்கும் மனிதனுடன் பேசினால் சேர்ந்தாற்போல் பேச மாட்டேன் என்கிறானே. நேற்றுப் பேசினான்; இன்றைக்குச் சண்டை போட்டுக் கொள்கிறான். நான்கு நாட்களில் சண்டை வந்து விடுகிறது. அவனுக்கு யாரை நம்புவது என்றே புரிய வில்லையே. அவனுக்கு நம்பிக்கைக்கு உரியவனாக வேறு யாரையும் - மனிதனையே பிடிக்க முடியவில்லையே. இதிலாவது அந்தக் காலத்தில் கொஞ்சம் மத நம்பிக்கை இருந்தது; இப்பொழுது வரவரப் பொய்யாகப் போகிறது.

ஆதலாலே, அவனுக்கு நம்பிக்கையாகப் பேச உறவாட வேண்டும். அதனால்தான் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் சேக்கிழார், கடவுளை வாழ்வுப் பொருளாக ஆக்கிக் காட்டுகிறார். அவர் காலத்திலேயே கடவுளை வாழ்த்துப் பொருளாக்கி, கோயில் பொருளாக்கி, குருக்கள் பொரு ளாக்கி, அதை மேட்டுக் குடியினருக்குரிய பொருளாக்கி அதற்கு ஒரு சிறைக்கூடமே அமைத்து விட்டார்கள். சேக்கிழார் அதை உடைத்து, அதை வாழ்க்கைப் பொரு ளாக்கி, 'உனக்குப் பொன் வேண்டுமா? கடவுளிடத்திலே கேள்! உனக்குப் பொருள் வேண்டுமா? கேள்! திருமணம்

வேண்டுமா கேள்; ஏச வேண்டுமானால் ஏசு! பேச வேண்டுமானால் பேசு' என்று செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனைத் திட்டியதுபோல ஒருவரும் திட்டியிருக்க மாட்டார்கள். 'மகத்திற் புக்கதோர் சனி எனக்கானாய்' என்றார். ஓரிடத்தில் 'சனியனே' என்று திட்டுவோமே, அதைப்போல இறைவனை 'மகத்திற் புக்கதோர் சனி எனக்கானாய்' என்று சொன்னார். என்ன தைரியமாக, 'உன்னுடைய அலுவலகத்தை விட்டுச் சிறிது நேரம் வெளியில் போய் இருந்து கொள். நான் ஒரு சத்தியம் செய்யப் போகிறேன்; இந்த சத்தியத்தை உன் முன்னால் செய்தால் மிகவும் தவறு. எனவே சத்தியம் செய்யும் வரை சிறிது நேரம் வெளியில் போய் இரு' என்று சொல்லுகிறார். காரணம் வாழ்க்கையின் நெளிவு சுழிவுகள்! மனிதன் என்று சொன்னால் அவனுக்குச் சில ஆவல்கள் இருக்கின்றன; ஆர்வங்கள் இருக்கின்றன. அந்த ஆர்வங்களைத் தணிக்கா மலும் அவனுடைய ஆன்மா ஈடேற முடியாது. தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்ற தாகம் இருக்குமானால் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும். அவனுடைய தாகம் தீராதபோது ஆன்மாவை எப்படி ஈர்க்க முடியும்? ஆகவே தான் பட்டினத்தார், 'வினைப்போகமே ஒரு வேகம் கண்டாய்; வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்' என்றார். ஆகக் குறிக்கோள்வழி நமக்குச் சில துய்ப்புகள், மகிழ்வுகள் இருக்கின்றன. அவைகளை அடைகிற காலம்வரை இவனுடைய கற்பனை இருக்கும் என்று சொல்லக் கூடாது. கடவுளாகப் பார்த்தான்; அவன் எந்த வடிவத்தில் நினைத்தானோ, அந்த வடிவத்தில் சேர்ந்து விட்டான். பின்னாலே சிலபேர் கத்தி, சூலம் எல்லாம் வைத்திருப்பவனைக் காட்டேறி, முனீசுவரன் என்று வைத்து விட்டார்கள். அவர்கள் மனதில் அப்படி வந்து சேர்ந்து விட்டார்! பாவம்.

இப்பொழுது சிறிது 'நாகரிகமாக நினை' என்று சொல்ல முயற்சி செய்து பார்க்கலாம். அந்தக் காலத்தில் அவனுடைய வாழ்க்கைச் சூழல் அப்படி. சிலபேர் கள் குடிக்கும் சாமியாகவே கடவுளை நினைத்துப் பார்த்திருக்கிறார்கள்! அவன் கள் குடிக்கிறான்; அதனால் கள் குடிக்கும் சாமியாக இருந்தால் தேவலாம் என்று நினைக்கிறான். அவனுடைய கற்பனையை அவனாலே தட்ட முடியவில்லை, பாவம்! இவரும் வந்து கள்ளையும் குடித்து விட்டு, ஒரு தண்டாவையும் வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார் பாவம்! இப்பொழுது நாம் கற்பனையை வேறு மாதிரி செய்து, இப்படிச் செய்தாலும் கடவுள் வருவார் என்று நாம் நம்பிக்கை தர வேண்டும். அந்த நம்பிக்கை கொடுப்பதற்கு உயர்ந்த ஜாதியினர், உயர்ந்த சமூகத்தினர் வர மாட்டேன் என்கிறார்கள்.

எனவே 'இது அவனது திருவுரு' என்று சொல்வது போல, 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்' என்று எழுதிக் காட்டுவதைப் போல, எழுதிக் காட்ட முடியாத கடவுள் இவன் என்ன நினைக்கிறானோ, அந்த வடிவத்தோடு வந்து சேருகிறான். அந்த வடிவங்கள் எல்லாம் மனிதன் நினைப்பதற்கும், ஆர்வத்திற்கும், கற்பனைக்கும் ஏற்றவாறு கடவுள் எடுத்துக் கொண்டனவே தவிர, அது இவனுடைய படைப்பும் அல்ல.

ஆக, இரண்டு பேரும் சேர்ந்து செய்த ஒரு காரியம். அந்த 'இதயத் தாமரையிலே இறைவனை எழுந்தருளச் செய்த பிறகு, அவனுடைய ஒளியை நீ வேண்டிய அளவு தூண்டிக் கொள்'. இது திருநாவுக்கரசருடைய தேவாரம்; விளக்கை ஏற்றினால் மட்டும் போதாது. அது ஒளியை வேண்டிய அளவு தரும் வரை தூண்டி விட்டுக் கொள்ள வேண்டும். பெருமான் நம்முடைய நெஞ்சத்திலே வந்துவிட்டால் மட்டும் போதாது. அவனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிற வாழ்க்கை முறை தேவை. அதனால்தான்,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

1

என்பதிலே கூட அழகான சுவையான ஒரு கற்பனை இருக்கிறது. இந்த 'அ' என்கிற வரிவடிவத்தைப் பாருங்கள். வரிவடிவம், மேலே ஒரு புள்ளியில் ஆரம்பிக்கும். பழைய காலத்து 'அ' வில் கொஞ்சம் தொந்தி தொப்பை யெல்லாம் விழுந்திருந்தது. இப்பொழுது சிறிது இளைத்திருப்பது போல் தெரிகிறது. அது என்ன காரணம் என்று தெரியவில்லை. பழைய காலத்து 'அ' வில் கீழே வந்து தொந்தி விழுந்து பின் மேலே போய் நேர்கோட்டில் சென்று முடியும். 'அ' என்ற வரிவடிவத்தில் மேலே இருக்கின்ற புள்ளி இறைவன். அவன்தான் பரிபூரணன். உயர்புள்ளியாக இருக்கிறான். அவன் உயிர்களை ஆட்கொண்டு அருள் வழங்க வேண்டும் என்பதற்காக இறங்கி வருகிறான். இறங்கி வரும் பொழுது மனிதன் அவன் முன்னால் நிற்கிறான். அவன் தனியனாய்த் தருக்கித் தலையால் நிற்கிறான். அவன் கடவுளை மதிக்க மாட்டேன் என்கிறான். என்ன சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறான். கடவுள் அவன் பின்னால் கெஞ்சிக் கொண்டே வருகிறார்.

இவன் முன்னால் போகிறான்; பின்னாலேயே வருகிறார். அது தொந்தி விழுந்த பகுதி. மனிதன் முன்னேயும் கடவுள் பின்னேயும் வந்த பகுதி. இவன் கொஞ்ச தூரம் போய் அடிபட்டு, உதைபட்டு சங்கடப்பட்டுத் தொல்லை பட்ட பிறகு, இவன் 'இந்த ஆள் என்னதால் சொன்னாலும் விட மாட்டேன் என்கிறாரே, இவர் என்னதான் சொல்கிறார், என்று கேட்போமே' என்று திருப்பிப் பார்க்கிறான். அவர் 'நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். நான் முன்னால் போகிறேன். நீ பின்னால் வா! சரியாகப் போய்விடும்' என்கிறார். அதுதான் இந்த 'அ' வந்து கீழே இருந்து மேலே ஏறுகிற இடம். மேலே ஏறிய உடனே கடவுள் முன்னால்

போக ஆரம்பிக்கிறார்; மனிதன் பின்னால் போகிறான். கீழே 'அ'வுக்கு இருந்த வளைவு மேலே வராது. அது நேராக இருக்கும். நேராக இருப்பது மட்டும் மல்ல; வளைவுகளைக் கடந்து ஒரு நேர்க்கோட்டில் போய் முடிகிறது.

வாழ்க்கையில் அடிக்கடி எல்லாரும் சொல்வார்கள். 'நேர்மையாக இரு; நேர்மையாக இரு' என்பார்கள். நேர்மை என்றால் என்னவென்று நிறையப் பேருக்குப் பொருள் சொல்லத் தெரியாது. 'நேர்மை, நேர்மை' என்பார்கள். நேர்மை என்றால் வேறொன்னும் இல்லை. இரண்டு புள்ளிகளை இணைக்கிற நேர்கோட்டைப் போல, ஒருவருடைய நலம், இன்னொருவருடைய நலத்தையும் இணைக்குமானால் அதற்கு நேர்மை என்று பொருள். எனக்கு நலமாக இருப்பதெல்லாம் இன்னொருவருக்கும் நலமாக இருக்க வேண்டும். எனக்கு மட்டும் நலமாக இருந்து அஃது இன்னொருவருக்கு நலமாக இல்லையென்றால் அது குறையுடைய நலம் நேர்மையுமல்ல; நீதியுமல்ல. ஆக இரண்டு புள்ளிகளை இணைக்கின்ற நேர்கோட்டைப் போல உலகத்தில் எல்லா உயிர்களுக்கும் இருக்கின்ற நலனையும், என்னுடைய நலனையும் ஒத்ததாக அமைக்கின்ற ஓர் இணைப்பு, ஒரு சூழ்நிலை, ஒரு சிந்தனைப் போக்கு இருக்குமானால் அதற்கு நேர்மை என்று பெயர். அந்த நேர்மை வாழ்க்கையில் வருகிறபொழுதுதான், கடவுள் நமக்கு அருள் செய்வார். உயர்ந்த சமய வாழ்க்கை வாழ்கிறார்கள் என்று சொன்னால் பொருள், முதலில் மற்றவர்களின் நலன் தனக்கு உகந்ததாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

எங்கே தன்னலம் இருக்கிறதோ, எங்கே பொது நலனுக்கு விரோதமான தன்னலம் இருக்கிறதோ எங்கே மற்றவர்களுக்குக் கேடு செய்தும், தனக்கு நன்மை செய்தும் கொள்ளுகின்ற மனப்போக்கு இருக்கிறதோ, அங்கே கடவுள் இருக்க மாட்டார்; பேய்தான் இருக்கும்; சைத்தான் தான்

இருக்கும். ஆனால் நம்முடைய மனப்போக்கில் இன்றைக்குக் கடவுளையும் கூட நம்முடைய சாட்சிக்கு அழைத்துக் கொள் கிறோம். இந்த முயற்சியை நாம் தவறாகப் பயன் படுத்தக் கூடாது. கடவுளை நம்முடைய வாழ்க்கைக்குத் துணையாக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, நம்முடைய துன்மார்க்கமான வாழ்க்கைக்குத் துணையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று எழுத்துக்களுக்கு அகரம் முதலாக இருப்பதைப் போல, உலகத்திற்கு இறைவன் முதலாக இருக்கிறான். அவன்தான் முதற் பொருளாக இருக்கிறான் என்பதுதான் பொருள். இந்த அடிப்படையில் உலகத்திற்கு முதலாகவும், வாழ்க்கைக்கு முதலாகவும் இருக்கின்ற கடவுளை, நினைந்து வாழ்த்தி, அந்தக் கடவுளை நாம் நினைந்த வடிவத்தோடு, நமக்கு எந்த மூர்த்தி, எந்தத் திருமேனி, எந்தப் பெயர் நமக்கு உவப்பாக இருக்கிறதோ, அந்த உவப்பான திருப்பெயரில் எது என்று நான் உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசிய மில்லை. உங்களுடைய வாழ்க்கையில், நீங்கள் வழிபாடு செய்கின்ற பொழுது, இத்தனை நாட்கள் நீங்கள் உண்மையாகவும், முறையாகவும் வழிபட்டிருந்தால், உங் களுக்குச் சில பெயர்களைக் கேட்கின்ற பொழுது, நம்மை அறியாமல் 'உழுவலன்பு' பெருக்கெடுக்கும். அது திரு முருகனாக இருந்தால் நல்ல மூர்த்தி எந்தப் பெயராக இருந்தாலும் பெயரைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்; திருவுருவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். கோலத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஏதோ ஒன்று நாம் சிந்திப் பதற்குப் பற்றுக் கோடாகத் தேவைப்படுகிறது.

வானவெளியில் உலா வருகின்ற ஒலி அலையை வாங்கிக் கொடுக்க ஒரு வானொலிப் பெட்டி தேவைப் படுகிறது. அதுபோல இறைவனோடு நம்மை இணைப்பதற்கு ஏதோ ஒரு கருவி ஏதோ ஒரு செயல்முறை நமக்குத் தேவைப்படுகிறது. அந்தச் செயல்முறை நாம் இன்னும்

தெளிவாகவும் சீக்கிரமாகவும் உய்தி பெறுவதற்காகத் தேவைப்படுகிறது. எனவே அந்தத் திருமூர்த்தியை அந்தப் பெயரை, அந்த உருவத்தை, உங்களுடைய மனத்திலே எழுந்தருள வைத்துக் கொண்டு, நினைந்து நினைந்து வழிபடுவதன் மூலமாக, செயல்களைச் செய்கின்ற பொழுதெல்லாம் அந்த ஞானப் பேரொளி எப்படிச் சொல்லுகிறதோ, அதை உணர்ந்து, அது சொல்வதைக் கேட்டு, அறநெறியில் வாழ்ந்து, தீவினைகள் செய்யாது - நல்வினைகள் செய்து - பற்றற்றுச் செய்து, நல் நோக்கத்தோடு செய்து, வாழ்ந்து நம்முடைய பொறிகளையும், புலன்களையும் பக்குவப்படுத்தி, நம்முடைய கண்ணோ, காதோ, வாயோ இன்னொருவருக்குத் தீங்கு செய்யாது, மற்றவர்கள் எளிதாக நம்மிடத்திலே அணுகி, பழகி, மேவி, உறவு கொண்டாடவும், நம்மிடத்திலே ஒன்றைக் கேட்டுப் பெறவும், நாம் இன்னொருவரிடத்திலே கேட்டுப் பெறவும், எளிதாக வாழ்க்கைச் சமுதாயம் அமைக்கின்ற அமைப்பு இருக்கின்றதே, அதுதான் சிறந்த சமய வாழ்க்கை. அந்தச் சமய வாழ்க்கைக்குத் தீமை என்பது கூடவே கூடாது.

உலகத்திலே தீமை என ஒன்று நிலவுகிற வரையில் சமுதாயத்திலே நிச்சயமாக நன்மை வளர முடியாது. எனவே, தீமைகளுக்கு மாற்றாக நன்மைதான் இருக்க முடியும். நன்மைக்கு மாற்றாகச் சமயநெறிதான் இருக்க முடியும். சமயநெறி வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், நம்முடைய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பொறிகள் பக்குவமடைந்து அன்பினாலே புடம் போடப்பட்டு அவை தூய்மையுடையனவாக இருக்க வேண்டும். தூய்மையுடையதற்கு அடையாளம் மற்றவர்கள் மகிழ்வதுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. நம்முடைய மனநிறைவோ, நம்முடைய மனமகிழ்வோ தூய்மைக்கு அடையாளம் அல்ல. மற்றவர்களுடைய மனநிறைவும், மற்றவர்களுடைய மன மகிழ்வும் தான் தூய்மைக்கு அடையாளம். அந்தத்

தூய்மையைப் பெற வேண்டுமென்றால், நாம் தீமை செய்யவே கூடாது; தவிர்த்துவிட வேண்டும். நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். செய்கின்ற பொழுது; மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டுமே செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நமது இதயக் கமலத்திற்குள்ளாக, நெஞ்சத் தாமரைக் குள்ளாக, நாம் நினைக்கிற ஒரு மூர்த்தியை எழுந்தருளச் செய்து, குறித்த நேரத்தில் அதனுடன் பேசிப் பழகி, உறவெடுத்துக் கொண்டு, ஆசிரியனாக ஏற்றுக் கொண்டு அது உணர்த்துகிற முறையை வள்ளுவம் காட்டுகிறது; வள்ளுவம் தோன்றிய காலத்தி லிருந்து இந்த மனித உலகத்தை வாழ்விப்பதற்காகவே தோன்றிய ஒரு மாமறை; பொது மறை; அந்தப் பொது மறை நம்முடைய வாழ்க்கையின் மறையாக விளங்கட்டும் என்று வாழ்த்துக் கூறி விடை பெறுகிறேன்.

4

பொங்கல் பரிசு

பொருளியல் நூல்

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். ஒரு முழு அறநூல். தனி மனித வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை, அரசியல் ஆகியவற்றில் மிகவும் முற்போக்கான கருத்துக்களை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உணர்த்திய பெருமை திருவள்ளுவருக்கு உண்டு. திருக்குறள் எல்லாரும் எல்லா நலன்களும் பெற்று வாழும் சமநிலைச் சமுதாய அமைப்பை வலியுறுத்துகிறது. இன்றையச் சமுதாய அமைப்பில் நிறையப் பொருளாதாரச் சிக்கல்கள் இருக்கின்றன. இச் சிக்கல்கள் களையப்படுவதற்குச் சிலரின் தான தர்ம உணர்ச்சிகள் மட்டும் போதா; அல்லது தீவிர சட்டங்களும் ஆட்சி முறைகளுமே பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடவும் மாட்டா. அடிப்படையான சில உணர்வு மாற்றங்களும் தேவை. இத்தகைய கருத்துக்களைத் திருக்குறள் வாயிலாகக் காணலாம். பொருளாதார முன்னேற்றத்தை நாடும் ஒரு சமுதாயத்தில், பரம்பரைச் சொத்துரிமை ஒரு முட்டுக் கட்டையேயாகும். பரம்பரைச் சொத்துரிமையின் மூலம் மீண்டும் மீண்டும் முயற்சியால் பொருளீட்ட வேண்டுமென்ற

ஆர்வமும், அதன் வழிப்பட்ட முயற்சிகளும் இளைத்துப் போகின்றன. ஆதலால், திருவள்ளுவர், தன் முயற்சியால் ஈட்டிய பொருளைக்கொண்டு விருந்தோம்பல் முதலிய வற்றைச் செய்ய வேண்டும் என்கிறார். "தாளாற்றித் தந்த பொருளெல்லாம்" என்பது குறள். காதலிருவர் கருத்தொரு மித்துக் கூடி மகிழும் காதல் இன்பத்திற்கு எடுத்துக் காட்டாகத் திருவள்ளுவர் 'தம்மில் இருந்து தமது பாத் துண்டற்றால்' என்ற குறட்பாவைச் செய்துள்ளார்; அதாவது, தான் முயன்று ஈட்டிய பொருளில் தன்னாலேயே கட்டப் பெற்ற சொந்த வீட்டில் தன் முயற்சியால் ஈட்டிய பொருளைக்கொண்டு அறுசுவை உணவாக்கிப் பலரோடு இருந்து கூடி மகிழும் இன்பம் போன்றது காதலின்பம் என்று குறிப்பிடுகிறார். ஆதலால் முயற்சியின் வழி வருவதே செல்வம் என்ற அடிப்படை உணர்வு மக்களிடத்தே பெருகி வளர வேண்டும்.

பொருள் தேடினால் மட்டும் போதாது; தேடக் கூடிய வழிகளிலும் தேட வேண்டும். அறமல்லாத வழிகளில் பொருள் ஈட்டுவதால் தவறுகள் பெருகுவதோடு தாளாண்மையும் குறைகிறது. பொருள் வருவதற்குரிய புதிய புதிய வழிகளைக்கண்டு அவ்வழிப் பொருளீட்ட வேண்டும். ஈட்டுதலைவிடப் பொருள் வருவதற்குரிய புதிய வழிகளைக் காணுதல் அவசியமாகும். அதனாலன்றோ திருவள்ளுவர், 'இயற்றலும்-ஈட்டலும் காத்தலும் காத்து வகுத்தலும் வல்லது அமைச்சு' என்று குறிப்பிடுகின்றார். ஒருவர் ஒரு துறையில் முயன்று பொருள் ஈட்டினால் அவ்வழிகளையே மற்றவர்களும் பின்பற்றக் கூடாது. அப்படிப் பின் பற்றினால் புதிய வாயில்களைக் காணும் ஆர்வம் குன்றும்; முயற்சி தடைப்படும்; மேலும், ஆரோக்கிய மில்லாத போட்டிகள் ஏற்படும். இதனை இன்று நம் நாட்டில் பெருகி வளர்ந்துள்ள வணிகத் தொழில் மூலம் அறியலாம். ஆதலால், பொருள் வருவதற்குரிய வாயில்களைக் கண்டுபிடிக்கும் புதிய

முயற்சியில் பொது மக்களை ஈடுபடுத்தலே பொருளாதாரச் செழிப்புக்கு வழி கோலும்.

பொருள் முயற்சி இருவகைப்படும்; ஒன்று, பொருள்களை உற்பத்திச் செய்யும் முயற்சி; இன்னொன்று பொன் (நாணயம்) பெறும் முயற்சி. அதாவது, பணம் தேடும் முயற்சி, நல்லதன்று. பொருளை உற்பத்தி செய்யும் முயற்சியே வரவேற்கத்தக்கது. வட்டிக் கடை நடத்துதல், வாணிகம் செய்தல் ஆகியன பணம் தேடும் முயற்சியின்பாற்பட்டவை. வேளாண்மைத் தொழில் செய்தல், வேறு பல துறைகளின் மூலம் மக்கள் பொருள்களை உற்பத்தி செய்தல் ஆகியன பொருள் உற்பத்தியைச் சார்ந்தவை. முன்னையது ஒறுக்கத் தக்கது-பின்னையது வரவேற்கத் தக்கது.

ஒரு நாட்டின் பொருளாதாரச் செழிப்பு அந்த நாடு பொருள் உற்பத்தியில் ஈடுபடுவதைப் பொறுத்ததே யாம். பொருள் உற்பத்தி பெருகாமல், சமநிலைச் சமுதாயத்தை எப்படி அமைக்க முடியும்? தரித்திரத்தையா பங்கு போடுவது? அதனாலேயே திருவள்ளுவர் வலிமை நிறைந்த குரலில், "செய்க பொருளை" என்று ஆணையிடுகிறார். செய்க பொருளை என்று ஆணையிட்டமையாலேயே "செய்க பொன்" என்பது விலக்கப் பெறுகிறது. பொருள் எனும் வழக்கு மனித குலம் அனுபவிக்கக் கூடிய பொருள்களையே குறிக்கும். இதனைப் பரிபாடலில் வரும் "சேர்வாராதலின் யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமு மல்ல-நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும் உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே" என்ற பாடலால் உணரலாம்.

பொருள் உற்பத்தி செய்யும் உணர்ச்சியில் பொருள் களுக்கு மதிப்புத் தருகிற உணர்ச்சியில் நம் நாட்டு மக்களின் உணர்வு இப்பொழுது பின் தங்கியே இருக்கிறது. விலை

மதிப்புள்ள மாடுகளை-கால்நடைகளைக் கவனிப்பதில்லை. தானியங்களைப் பாதுகாப்பதில்லை-ஆனால், சிறு காசு களைக் கூட முடிந்து பத்திரமாகக் காப்பாற்றுகிறார்கள். பணம், பொன் இவற்றில் உள்ள பற்றுதல் குறைந்து பொருள் உற்பத்தித் துறையில் நாட்டு மக்களின் ஆர்வம் பெருக வேண்டும்.

பொருள்களை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது. உற்பத்தி செய்த பொருள்களை ஓரிடத்தில் குவியாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். தேவை போக மிஞ்சும் பொருளைத் தன்னியல்பாகவே தேவையுடையவர்களுக்குக் கொடுப்பது ஒரு சிறந்த சமுதாய ஒழுக்கம். இப்படி நாம் சொல்வதானது ஈதல், ஏற்றல் என்ற முறையில் அல்ல. திருவள்ளுவர், கடமை உரிமை என்ற அடிப்படையில் இப்பண்பாட்டை 'ஒப்புரவறிதல்' என்று குறிப்பிடுகிறார். ஒப்புரவறிதல் அதிகாரத்தில் அவர் பயன் மரம்-கனிகளைக் கனித்துத் தரும் மரங்களை எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். மரம் தான் வளர்வதற்காக எரு, தண்ணீர் முதலியவற்றைப் பூமியிலிருந்து எடுத்துக்கொண்டு, உணவாக அதை மாற்றி உண்டு உயிர் வாழ்கிறது. தன்னுடைய தேவை போக எஞ்சிய பொருளைக் காய்களாக-கனிகளாக மாற்றித் தானே தந்து விடுகிறது. அதே போல மனிதனும் தான் உயிர் வாழ்வதற்குத் தான் உற்பத்தி செய்த பொருளில் தேவையானதை எடுத்துக் கொள்ள வேண்டும். எஞ்சியதைச் சமுதாய நியதி-ஒழுங்கு என்ற பெயரால் சமுதாயத்திற்குத் தானே தந்து விட வேண்டும். இந்தக கொள்கைக்குப் பெயர் 'சோஷலிசம்' என்றால் அதில் என்ன தவறிருக்கிறது? இங்ஙனம் சமுதாயக் கொள்கை அமைப்புக் குறித்து மிக முற்போக்கான கருத்துக்களைச் சொல்லுவதால் திருக்குறளை ஒரு சிறந்த சோஷலிசப் பொருளியல் நூல் என்றும் கூறலாம்.

சோஷலிசம்

தமிழ் காலத்தால் மூத்த மொழி. கருத்தாலும் மூத்த மொழி. இன்றைக்குச் சற்றேக்குறைய மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்பு தோன்றியது தொல்காப்பியம். இன்று தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமையானது, தொல்காப்பியமே யாகும். மூவாயிரமாண்டுகளுக்கு முன்பே வாழ்க்கை நெறி முறைகளைப் பற்றித் தமிழர்கள் கவலைப்பட்டிருக்கிறார்கள். வேறு எம்மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழுக்கு உண்டு. தமிழில் எழுத்துக்கும் சொல்லுக்கும் சொல்லோடு தொடர் புடைய பொருளுக்கும் வளர்ந்த இலக்கண மரபுண்டு. ஆரிய மொழியைவிடத் தமிழ் இலக்கண வரம்பிற் சிறந்ததென்று பரஞ்சோதி முனிவர் பாராட்டுகின்றார். எழுத்திலக்கணம் சொல்லிலக்கணம் மட்டுமில்லாமல் வாழ்க்கைக்கும் இலக்கணம் கண்ட மொழி தமிழ். பாட்டுக்குப் பொருள் என்றாலே நல்வாழ்க்கை என்று கருதுவது தமிழ் மரபு. அதனாலன்றோ எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்று இலக்கண நூலை முறைப் படுத்தினார்கள். பொருளதிகாரம் தனிமனிதன், அவனுடைய காதல் வாழ்க்கை, ஆகியவற்றை அகத்திணை என்றும், அதே தனிமனிதன் வெளிப்புற உலகத்தோடு கொள்ளும் தொடர்பு களைப் புறத்திணை என்றும் வகுத்துப் பேசுகின்றது. இங்ஙனம், வழிவழியாக வாழ்க்கையின் நெறி முறைகளைப் பற்றித் தமிழினம் கவலைப்பட்டமையின் காரணத்தால் தமிழில் காலத்திற்கும் காலம் அறநெறி நூல்கள் நிறையத் தோன்றின. இங்ஙனம் தோன்றிய நூல்களுள் மிகமிகச் சிறந்தது திருக்குறள். மக்களாகப் பிறந்தோர் பேசுகின்ற வேறு எம்மொழியிலும், திருக்குறளைப்போல் ஒரு வாழ்க்கை நூல் தோன்றியதில்லை. ஏசு பெருமானுக்கு முற்பட்டவராகிய திருவள்ளுவர், மனித இனத்தின் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து அரியதொரு நூலைச் செய்துள்

ளார். அர்த்த சாஸ்திரத்தை ஆக்கித் தந்த கௌடல்யருக்கும் திருவள்ளுவர் முற்பட்டவர் என்பது வரலாற்றுண்மை.

திருக்குறள் தனிமனிதன், குடும்பம், சமுதாயம், அரசு ஆகிய படிமுறை வளர்ச்சிகள் வளர்ந்திருந்த காலத்திலே தோன்றிற்று. மனித சமுதாய அமைப்பில் மேற்கூறிய படிகளைப்பற்றித் திருக்குறள் தனித்தனியே ஆய்வு செய்து விளக்குகிறது. சமுதாயத்தின் தொடக்கத்தில் தோன்றிய நூலன்று. எனினும், சமுதாய அமைப்பில் பல்வேறு படிகள் தோன்றியிருந்தாலும், அந்தப் படிவளர்ச்சிகள் நிறைவு பெறாமலும், பூரணத்துவம் அடையாமலும் அவல நிலையிலிருந்த பொழுது திருக்குறள் தோன்றிற்று. திருக்குறள், முறையாக சமுதாயத்தின் பல்வேறு படிகளின் வளர்ச்சி முறைகளைப் பற்றியும், அவை அமையவேண்டிய இயல்புகளைப் பற்றியும் தெளிவாக விளக்குகின்றது. தனிமனிதன், குடும்பம், சமுதாயம், அரசு எனும் முறை வைப்பைத் திருக்குறள் ஏற்றுக் கொள்ளுகிறது. சமுதாயத்தின் மேற்கூறிய அமைப்புகளுக்குள் இருக்க வேண்டிய உறவு முறைகளைத் திருவள்ளுவர் வரையறுத்துக் காட்டுகிறார். அறத்துப் பாலில் தனிமனிதனின் வாழ்க்கைக் கடமைகளை வற்புறுத்திக் கூறுவதோடு, தனிமனிதன் சமுதாயத்தோடு உறவு கொண்டு வாழ்வதற்கு இன்றியமையாத நல்லியல்பு களையும் எடுத்துணர்த்துகிறார். பொருட்பாலில் அரசு, குடி மக்கள் இயல்பு ஆகியவைகளை விரிவாக விளக்குகிறார்.

திருக்குறள் ஒரு நல்ல இலக்கியம். இலக்கியத்திலும் சிறந்த அறநூல்; அரசியல் நூலும் கூட. கற்பனைக் காட்டுக்குள் கருத்துக்கள் ஒளிந்து போகாமல் கண்ணாடியின் முன் உருவமென அவை வெள்ளிடை மலையென விளங்கும் வண்ணம் அமைக்கப்பெற்ற நூல். குறைகளைக் காட்டு கின்றார்; ஆனால், அப்பட்ட நிர்வாணமாக அல்ல. குறை களைக் காட்டும் முயற்சியைவிட நிறைவைக் காட்டும் முயற்சியே திருக்குறளில் மேம்பட்டுள்ளது. திருக்குறள் ஒரு

சிறந்த ஒழுக்க நூலாகத் திகழ்கிறது. திருக்குறள் காட்டும் ஒழுக்கம் அதிமானுட (superman)னுக்கு உரியதன்று. சராசரி மனிதன் கடைப்பிடிக்கக்கூடிய ஒழுக்க நெறிகளை வாழ்க்கை யோடு இணைக்க முடியவில்லை என்று யாராவது சொன்னால் அவர்களை ஐந்தறிவுடையவற்றோடு வைத் தெண்ணுவது தவிர வேறு வழியில்லை.

திருக்குறள் பழமை தழுவிய நூல். எனினும், புதுமை நலம் போற்றும் நூல். திருக்குறள் ஒரு முற்போக்கு நூல். அரசியல் மரபுச் சொற்படி கூறுவதென்றால் அது இடதுசாரி நூல். சமநிலைச் சமுதாய அமைப்பிற்குரிய வித்துக்களைப் பன்னூறாண்டுகட்கு முன்பு கண்டு காட்டிய பெருமை திருக்குறளுக்கு உண்டு.

கொம்புகளும் கொப்புகளும் அடர்ந்து நிறைந்து விளங்கும் ஒரு மரம். தோற்றத்திற்குக் கொம்புகளும் கொப்புகளுமே மிகுதியும் வரும். பயனும் அப்படியே. எனினும் கொம்புகள் கொப்புகளின் தோற்றத்திற்கு நிலைக்களனாகவும் அவற்றைத் தாங்கி நிற்பதுவும் ஆகிய அடிமரத்தை மறக்க முடியாது. மறுக்கவும் முடியாது. அடிமரம் இன்றேல் கொம்புகள் இல்லை; கொம்புகளும் கொப்புகளும் இல்லையானால் அடிமரத்திற்கு அழகில்லை; ஆற்றலில்லை. பயன் தரும் வகையிலும் சிறப்புக்குறையும். இதுபோன்றே தனிமனிதன்; சமுதாய அமைப்பு. பரந்துபட்டு, வளர்ந்திருக்கும் சமுதாய அமைப்பில், தனிமனிதன் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறான். தனிமனிதனின் சிந்தனையால்-சீரிய முயற்சியால்-உருவாகியதே சமுதாய அமைப்பு. தனிமனிதனின் உரிமைகள் மதிப்பிற்குரியவை. அவை மதிப்பிற்குரியவை என்ற கொள்கை ஒரு மனிதனுக்கு மட்டுமன்றி சமுதாயத்தில் வாழும் எல்லாத் தனிமனிதனுக் குமே பொருந்தும். ஒவ்வொரு தனிமனிதனும் பிறிதொரு தனிமனிதனின் உரிமையைக் காப்பாற்றிக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். தனிமனிதனிடத்தில் காணப்

பெறும் சிறப்புகள் சமுதாய வாழ்க்கைக்கும் பொருந்தி அமைவனவாகும். தனிமனிதன் கெட்டால் நாடு கெடும். ஆதலால், சமுதாயத்தின் அடித்தளமாக அமைந்துள்ள தனிமனிதனை வளர்க்கும் அரிய முயற்சியில் திருவள்ளுவர் ஈடுபடுகின்றார். முதற்பாலாக விளங்கும் அறத்துப் பால் முழுவதிலும் தனிமனித வாழ்க்கையைப் பற்றியே பேசுகின் றார். ஏன்? பாயிரத்திலே தனிமனிதனை உருவாக்கும் முயற்சியில் திருவள்ளுவர் ஈடுபடுகின்றார்.

காலம் மனிதனின் சிறந்த கருவி. அதை உணர்ந்து பயன்படுத்துகிறவன் வளர்கிறான்; முன்னேறுகிறான். மனிதன் பெறக்கூடிய அறிவு, செல்வம், புகழ் ஆகிய பேறுகள் அனைத்தையும் காலம் என்ற கருவியின் மூலமே மனிதன் அடைகின்றான். ஆதலால் காலத்தே செய்ய வேண்டு மென்பது வள்ளுவ நெறி. செல்வத்தை இழந்தால் திரும்ப ஈட்டலாம். இழந்த புகழையும் கூட திரும்பப் பெறலாம். ஆயினும், இழந்த காலத்தைத் திரும்ப அடைதல் - அல்லது பெறுதல் சாத்தியமில்லை. காலம் விலை மதிப்பற்றது. அதனாலன்றோ 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று அப்பரடிகள் கூறியுள்ளார். ஒரு சோஷலிச சமுதாயத்தி னுடைய அமைப்பின் அடித்தளம் உழைப்பேயாகும். உழைப்பு உருப்பெறுவது காலம் என்னும் அடிப்படை யிலேயே. அதனால் தான் திருவள்ளுவர்,

> 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்கும் கல்' 38

என்கிறார்.

காலத்தை 'வீழ்நாள்' என்று குறிப்பிடுவது அறிவியலின் பாற்பட்ட கருத்து. மனிதன் வேறு எதை நிறுத்தினாலும் நிறுத்தி வைக்க முடியும். ஆனால் காலத்தை வராமலோ போகாமலோ நிறுத்தி வைக்க முடியாது. இயல்பாக நம்முன் வேலைக்கென்று-கடமைகளுக்கென்று வீழ்கின்ற நாட்கள்

என்று பொருள்படும். பிறிதொரு வழியிலும் பொருள் கொள்ளலாம். நன்றாற்றின் நாள் வீழாமல் என்றும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

அதாவது, கடமைகளைச் செய்வதற்காக நம்முன் நாள் என்ற பெயரோடு வந்த காலத்தை வீணாக்காமல் பயன் படுத்தி நல்லன செய்தால் வையக வாழ்வு இன்பமாக அமையும். வையக வாழ்வு இன்பமாக அமையப் பெற்றால் இன்பங் கருதிச் செய்யப்படுகின்ற தீவினைகள் இல்லாமற் போகும். கொலை, களவு, பொய் போன்ற குறைகளில் இருந்து விடுதலை பெறலாம். இந்த விடுதலை கிடைக்கப் பெற்றபின் பிறப்பினின்றும் விடுதலை கிடைக்கும். அதன் காரணமாக மீண்டும் பிறத்தல் தடைப்படும். இதுவே சிறந்த சமயநெறி சமயக் கருத்து. இக்கருத்தையே திருவள்ளுவர் ‘வாழ்நாள் வழியடைக்கும் கல்’ என்று குறிப்பிடுகின்றார். ஈண்டு திருவள்ளுவர் கல் என்று குறிப்பிட்டது மிகமிகச் சிறந்த கருத்து. திருவள்ளுவர் காலத்திலேயே வாழ்நாள் வழி யடைக்கும் முயற்சி - அதாவது பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேறும் முயற்சி நடைபெற்று வந்தது. இம்முயற்சியைப் பலர் பாராட்டினார்கள்—வழிவகை காட்டினார்கள். ஆயினும் பலர் காட்டிய வழி வெள்ளத்திலே கட்டிய மணற் சுவர் போன்றிருந்தது—நெருப்பிடை எழுப்பிய விறகுக் குவியல் போன்றிருந்தது. முன்னது வெள்ளத்தில் கரைந் தழியும்; பின்னையது எரிந்தழியும், அதுபோல, வாழ்நாள் வழியடைக்கும் முயற்சிகளுக்குப் பலர் நெறியல்லா நெறி தன்னைக் காட்டியபோது உண்மை நெறி காட்டுகின்றார் திருவள்ளுவர். அதாவது, உலகியல் வாழ்க்கைக்கு உரியது; வாழ்க்கைக்கு உரிய காலத்தை ஓடி ஒளிதல் மூலமோ உட்கார்ந்து உறங்குதல் மூலமோ பாழ்படுத்தல் பாலைப் பாலைவனத்தில் கொட்டியதற்கொப்பாகும். நன்றாக வாழ்தல் மூலமே விடுதலையே தவிர, வேறு வழியினால் அன்று. பசித் துன்பத்திற்கு விடுதலை, பட்டினியன்று;

உண்பதேயாகும். ஆர்வம் ஆசையினால் துடித்திடும், ஆன்மா அதனைப் பெற்றனுபவித்து அதனினும் மேலான ஒன்றுக்கு இலட்சியத்தை விரிவடையச் செய்து கொள்ளுதலே வாழ்க்கை முறை. குழியில் தலைகாட்டிய கொடியே கொம்பில் படர முடியும். அதுபோல, உலகியல் அனுப வத்திற்குரியன இல்லாமையை வழியின்பாற்படுத்தி வாழாக்கிடக்கச் செய்தலோ அல்லது கிடைக்காமையின் காரணமாக அவை நிலையற்றன—பயனற்றன என்று கூறுதலோ வாழ்க்கையின் முழுநிறை வளர்ச்சிக்குத் துணை நிற்கமாட்டா. அதனால் திருவள்ளுவர் வாழ்க்கையை ஒத்துக் கொள்ளுகின்றார். பொருள் செய்தல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்; வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.; வாழ்வாங்கு வாழ வழியும் காட்டு கின்றார். ஆதலால் தனிமனித வாழ்க்கையின் முன்னேற்றத் திற்கும் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் காரணமாக இருக் கின்ற காலத்தைப் பயன்படுத்திக் கடமைகளைச் செய்தலைத் திருவள்ளுவர் வற்புறுத்துவது மிகவும் முற்போக்கான கருத்து.

ஊக்கமுடைமை

மனித உயிருக்கு இயல்பிலேயே அறிவறியும் ஆற்றல் உண்டு. கிளர்ந்து எழுகின்ற இயல்பும் உண்டு. உயிரின் இந்தக் கிளர்ந்தெழும் ஆற்றல் நல்வழிப் படுத்தப்பெறும்பொழுது சிறந்த பயனைத் தருகின்றது. உயிர் கிளர்ந்தெழுந்து செயல் செய்யும் உணர்வுக்கு ஊக்கமுடைமை என்பது பெயர். ஒப்பற்ற சமநிலைச் சமுதாயத்தை அமைக்க மனிதன் விரும்புவானாயின் அவனுக்கு முதலில் தேவை ஊக்க முடைமை. ஊக்கமுடையவர்கள் முற்பிறப்பு, அவ்வழிவரும் பலாபலன்களை நம்பமாட்டார்கள். அப்படியே ஒருகால் நம்பினாலும் தம்முடைய முயற்சியால் அதை மாற்றியமைக்க முடியும் என்ற உறுதிப்பாடு தோன்றும். திருவள்ளுவர்,

'கூற்றம் குதித்தலும் கைகூடும்' என்று கூறுகின்றார். ஆதலால் மனிதனுடைய ஊக்கம், அவ்வழி சமுதாயத்திற்கு இன்றியமையாத ஒன்று. கைப்பொருள் அழியலாம். ஆனால், உள்ளக் கிளர்ச்சியும் ஊக்கமும் அழியமாட்டா. சமநிலைச் சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்கும் முயற்சியின் முதற்படி மக்களைச் செல்வமுடையோராக்குதல் அல்ல-உழைப்பதற்கு அறிவையும், ஆற்றலையும் தருவதேயாகும். அதனாலன்றோ திருவள்ளுவர்,

'உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோ மற்று' 591

என்கிறார். இன்றைய உலகியலிற்போல நிலவுடைமை - பொருளுடைமை முதலியவற்றை முதன்மைப்படுத்தாமல் அவற்றைப் படைக்கக்கூடிய ஆற்றலையே, அல்லது ஊக்கத்தினையே உடைமை என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது மிகவும் திருந்திய கருத்து. அது மட்டுமா? உள்ளக் கிளர்ச்சியும் ஊக்கமும் இல்லாதார்மாட்டுச் சமுதாய அமைப்பில் உள்ள சீர்கேடுகளின் வழியாகக் குருட்டாம் போக்காகச் செல்வம் கிடைத்துவிட்டாலும் அப் பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும் என்பதும் திருவள்ளுவர் கருத்து.

பொதுவாக, பொருளைத் தேடிச் செல்வோர் பலருண்டு. பொருளைத் தேடிச் செல்வோர் பெருகியுள்ள சமுதாயம் வளர்ச்சியடைந்த ஒரு சமுதாயம் அல்ல. பொருள் மனிதனுடைய ஆற்றல்மிக்க படைப்பினால் படைக்கப் பெறும் ஒன்று. தான் படைத்து அனுபவிக்கக் கூடிய ஒன்றினைத் தேடிச் செல்வது அறிவுடைமையாகாது. பொருள் மனிதனை நோக்கி வரவேண்டும். அது எப்போது நிகழும்? நடுக்கமற்ற நம்பிக்கையுணர்வோடு எவனொருவன் உழைக்கின்றானோ அவனை நோக்கிச் செல்வம் வழிகேட்டுக் கொண்டு வலிய வந்து குடிபுகும்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை"

594

என்கின்றார் திருவள்ளுவர். ஊக்கத்திற்கு அசைவிலா ஊக்கம் என்று அடைமொழி கொடுத்துப் பேசுகின்றார். பலருக்குத் தொடக்க நிலையில் - முதல் தடவையில் கிளர்ச்சியும் ஊக்கமும் தோன்றும். ஆனால் எடுத்த காரியம் கைகூடாது போனாலும் இடையில் இடுக்கண்கள் பல ஏற்பட்டாலும் சோர்வடையாமல் மீண்டும் உழைப்பவனே பொருள் உடையவனாக விளங்க முடியும். பெருங்கதை, "ஊக்கவேந்தன் ஆக்கம்போல்' என்று பேசுகின்றது. ஆதலால் இன்பத்தைக் கண்டு மகிழாமலும், துன்பத்தைக் கண்டு துவண்டு விடாமலும் தொடர்ந்து முயற்சித்தலே வாழ்க்கையை வெற்றி முகமாக்கிக் கொள்ளுதற்கு உரிய வழி. சிறந்த முறையில் எண்ணி ஊக்கத்தோடு செயற்பட்டால் காரியம் கை கூடினாலும் கூடாதுபோனாலும் அந்த எண்ணத்திற்கும் ஊக்கத்திற்கும் பயனுண்டு. **'வாழ்க்கைப் போராட்டங்களில்தான் நற்பண்பு தங்கியிருக்கிறது—வெற்றியிலல்ல'** என்னும் அனுபவ உரை எண்ணி இன்புறத்தக்கது. உலகியல் இயற்கையிலும் செயற்கையிலும் பல்வேறு துன்பங்களால் சூழப் பெற்றது. இச்சூழலை வெற்றிகொண்டு பொருளை உற்பத்தி செய்து குவித்தலின் மூலமே சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க முடியும். தரித்திரத்தைப் பங்கு போடுவதும் மிகச் சிறிதாக இருக்கும் - முடங்கிக் கிடக்கின்ற மூலதனத்தைப் பகிர்ந்து கொள்ளுதலும் சமநிலைச் சமுதாயமல்ல. உழைப்பும் உற்பத்திப் பெருக்கமும் சமநிலைச் சமுதாயத்தின் இரட்டை நாடிகள். பொருள் செய்து குவிக்க வேண்டும் என்ற உள்ளம்— உள்ளத் துடிப்பு— உள்ளக் கிளர்ச்சி—ஊக்கம் இல்லாதவர்கள் செல்வமுடையோர் என்ற செருக்கை ஒரு பொழுதும் பெறமாட்டார்கள் என்று திருவள்ளுவர் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

'உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு' 598

என்பது திருவள்ளுவர் வாக்கு. ஆதலால், வாழ்க்கையின் இன்றியமையாத் தேவையாகிய பொருளை—அப்பொருள் பற்றிய மதிப்பீட்டை—அப்பொருளைப் பெறுதற்குரிய வழியைத் திருவள்ளுவர் விளக்கும் முறை முற்றிலும் விஞ்ஞானப் பார்வையின்பாற் பட்டதாக உள்ளது. மிகவும் முற்போக்கான கருத்து. வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது என்பதை இரு பொருள்படப் பேசாமல் திட்டவட்டமாக ஒத்துக் கொள்ளுகின்றார். அந்தப் பொருள் பரம்பரை வழியாகக் கிடைத்திடுமாயின் அது உடைமை யல்ல என்றும் கூறுகிறார். பொருள் உடைமையைவிடப் பொருளைப் படைக்கின்ற ஆற்றலுடைமையை — ஊக்க முடைமையையே உடைமை எனப் பாராட்டுகின்றார். இஃது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிகமிக வியக்கத்தக்க ஒரு கருத்து. இதனையே இன்றையப் பொருள் முதல் வாதம் சித்தாந்தமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. தனிமனிதன் காலம் என்ற களத்தில் நின்று, ஊக்கமுடையவனாகப் பொருள் செய்து குவிக்க வேண்டும். இதுவே சமநிலைச் சமுதாய அமைப்பிற்குத் தொடக்க நிலையாகும்.

அறிவுடைமை

முற்போக்குச் சமுதாயம் அமையக் காலமும் ஊக்கமும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது அறிவும் ஏன்? காலத்தையும் ஊக்கத்தையும்விட அறிவுடைமை மிகமிக இன்றியமையாதது. அறிவுடைமைதான் காலத்தையும் ஊக்கத்தையும் முறைப்படி பயன்படுத்தத் துணை செய்கின்றது.

சோஷலிச சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டுமானால், மக்களிடத்தில் சரியான அறிவு பரவுதல்

வேண்டும். சென்ற காலத்தில் தனி மனித வாழ்க்கையிலும் சரி, சமுதாய வாழ்க்கையிலும் சரி ஏற்பட்டுள்ள எண்ணற்ற தவறுகளுக்கு அடிப்படை அறியாமையேயாகும். மயக்கத்தின் பாற்பட்ட - முறை பிறழ உணர்ந்த அறிவினாலும் தவறுகள் நிகழ்வதுண்டு.

வாழ்க்கை ஆக்கத்தின் பாற்பட்டது. ஆக்கமும் அறிவினாலாயது. ஆனால், 'ஆக்கம் அறிவினாலும் முயற்சியினாலும் ஆவதில்லை—அது அவன் செயல்' என்று கருதி வாழ்க்கையை இழந்தோர் ஏராளமானவர்கள். இதனை யுணர்ந்த திருவள்ளுவர் அறிவுடைமையின் இன்றியமை யாமையை வற்புறுத்துகின்றார். அவர் காட்டும் அறிவு அமிழ்ந்து கிடக்கும் அறிவு அல்ல; அத்திட்டத்தை எதிர் நோக்கியிருக்கும் அறிவல்ல; ஆண்டவனையே நம்பிக் கிடக்கும் அறிவுமல்ல; 'அறிவுடையார் ஆவதறிவார்' என்று திருவள்ளுவர் கூறுவது மிகச் சிறந்த கருத்து. சோஷலிச சித்தாந்தத்திற்கு உடன்பட்ட கருத்து.

உலகம் தொன்மையானது. சென்ற காலத்திலும் உலகம் நிகழ்ந்தது. இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று வாழும் பலர், அறிவிலும் உணர்ச்சியிலும் சென்ற காலத் திலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். அஃது அறிவின் சின்னமல்ல. இன்றைய உலகம் எங்ஙனம் இயங்குகிறதோ அதன் இயல்புக் கேற்றவாறு தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் அறிவுடைமை. யதார்த்த உலகம், நடைமுறையனுபவம் இவற்றோடு இணைக்கப்பட்ட அறிவே அறிவு என்பது சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படை. இதனைத் திருக்குறள்,

'எவ்வ துறைவ துலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு' 426

என்று பேசுகின்றது.

மேலும், அறிவு என்பது வளர்ந்து கொண்டே இருக்கக் கூடிய ஒன்று. அஃது நிலைபெற்ற தன்மையுடையதல்ல. இன்றைய அறிவு நேற்றைய அறிவைவிட வளர்ச்சியுடையதாக இருக்க வேண்டும். இன்றைய அறிவைவிட நாளைய அறிவு வளர்ச்சியுடையதாக இருக்க வேண்டும். இதுவே உலக நியதி. திருவள்ளுவரும்,

> 'தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
> மன்னுயிர்க் கெல்லாம் இனிது' 68

என்ற குறட்பாவின் மூலமும் இக்கருத்தை வலியுறுத்துகிறார். 'அறிதோ றறியாமை கண்டற்றால்' என்ற சொற்றொடராலும் அறிவின் வளர்ச்சியைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொள்ளுகின்றார்.

1. மனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் ஏற்றத்திற்கும் அறிவு இன்றியமையாதது;

2. அறிவு, உலகியலில் யதார்த்த நடப்புக்கு ஒத்திருக்க வேண்டும்;

3. அறிவு வளர்ச்சி அடையக்கூடியது,

என்னும் மூன்று கருத்துக்களும் சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கைகள். இம்மூன்றையும் 19-ம் நூற்றாண்டின் மக்கள் மன்றத்தில் அறிமுகமான சோஷலிச சித்தாந்த இலக்கியப் படைப்புக்கள் விரிவாக ஆராய்ச்சி செய்கின்றன. அக்கருத்தினையே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர் குறட்பா வடிவில் எடுத்துக் காட்டியுள்ளதை எண்ணுகிற பொழுது பெருமித உணர்ச்சி மேலிடுகிறது. எனினும் பெருமித உணர்ச்சி தோன்றிய கவட்டையும்கூட கண்டு கொள்ள முடியாத வண்ணம் சிறுமை மூடிவிடுகிறது. திருவள்ளுவர் காட்டிய அறிவுப் பார்வை இன்றளவும் தமிழகத்தில் வளரவில்லை. மாறாகத் திரிந்த கருத்துக்கள் கால்கொண்டுள்ளன. இன்று

அறிவு என்றால் புத்தக அறிவு—உலகம் என்றால் உயர்ந்தோர்—நிகழ்கால அறிவைவிடச் சென்றகால அறிவு சிறந்தது என்பன போன்ற கருத்துக்களே பரவி வருகின்றன. அதனாலேயே, தமிழ் இனம் வளர்ந்து வீழ்ந்து இருக்கிறது. இந்த அவல நிலைமைக்குப் பிறகாவது திருவள்ளுவர் இனங்காட்டி எடுத்துக் கொள்ளத் தூண்டிய அறிவை எடுத்துக் கொள்வோமாக!

5

வானொலியில்

அன்புடைமை

மண்ணுக்கு மணமில்லை; மண்ணுக்கு வளமூட்டக் கொட்டப்பெறும் உரத்திலும் மணமில்லை. மாறாகத் துர்நாற்றம் வீசுகிறது. இந்தச் சூழ்நிலையில் அதில் ஒரு மல்லிகைச் செடி நடப்பெறுகிறது. அச்செடிக்கும் மண மில்லை. செடியின் விளைவாக அதனுள்ளிருந்து முகிழ்த்து வெளிவருகிறது மொட்டு. பின், அது மலராகிறது; மணம் வீசுகிறது; மானிடர் முதல் மாதேவன் வரை விரும்பி அணியும் தகுதி பெறுகிறது. மலரின் மணம், மணமற்ற செடியில் முகிழ்த்து வெளி வருகிறது. என்னே அதிசயம்! இந்த எளிய—ஆனால் அரிய காட்சி சிறந்த படிப்பினைக் கற்றுத் தருகின்றது. உடலில் உயிர்ப்பு இல்லை. ஆனால் உடம்புக்கு உயிர் இயக்கம் தருகின்றது. உடலுக்கு வாழ்வு உயிர்நிலை; உயிரின் உயிர்நிலை அன்பே யாகும்.

'அன்பின் வழியது உயிர்நிலை' என்றார் திருவள்ளுவர். தனக்கெனப் பொன்னிலும், பொருளிலும், போகத்திலும் உயிர் ஈடுபடும்பொழுது அவ்வுயிர் நோயுறுகிறது; நொந்து அழிகிறது. பிறர்க்கென முயலும்பொழுது உயிர் உயர்நிலை

பெறுகின்றது. இது வாழ்க்கை முறை. தனக்குவமை இல்லாத தலைவனாகிய கடவுள், அன்பின் வடிவமாக இருக்கின்றான். "அன்பே சிவம்" என்பது திருமந்திரம். அன்புடைய வாழ்க்கையைச் சிறப்பித்து, உலகம் ஒரு குரலாகப் பாராட்டுகிறது. தூய அன்பு வாழ்க்கை எல்லை கடந்தது; வேற்றுமைகளைக் கடந்தது; நாடு, இனம், மொழி, அரசியல், சமயம் ஆகிய எல்லைக் கோடுகள் அன்புக்கு இல்லை. ஏன்? அன்பு, நட்பையும், பகையையும் கூடக் கடந்தது. இத்தகைய ஒப்பற்ற அன்பு நெறியை உலகச் சமயங்கள் அனைத்தும் வற்புறுத்துகின்றன. இறைவன் மக்களிடத்தில் பிட்சாடண மூர்த்தியாக வந்து பிச்சை கேட்கின்றான். அவன் கேட்கும் பிச்சை சோறல்ல—காசல்ல—அன்பேயாகும். அவன் கண்ணப்பர் அன்பினைத் துய்த்து மகிழ்ந்தான். இத்தகைய அன்பு வாழ்க்கை எளிதாகத் தோன்றினாலும் நடைமுறைப் படுத்துதல் கடினமானதாகவே இருக்கிறது. அதனால் அன்பு கடுமையானதென்பதல்ல—விரும்பி முயன்றால், எளிமையில் கைவரக் கூடியதேயாகும். ஆயினும் மனிதனைப் பிடித்தாட்டும் பேய்க்குணங்கள் எளிதில் அவனை விட்டு அகல்வதில்லை.

கண்ணாடித் தொட்டிக்குள் வளர்ந்த மீனைப் போல குறுகிய சார்புகளிலேயே பற்றுக்காட்டுகிறான். அப்படிக் காட்டுதல் கூடத் தவறில்லாமல் போகலாம்; பிறிதொன்றின் மீது பகை கொள்ளாமல் இருப்பானானால். அன்பிலிருந்து அன்பு தோன்றுதல் இயற்கை. அதற்கு அறிவும் ஆற்றலும் தேவையில்லை. அன்பிலிருந்து அன்பு தோன்றுதல் மணமுடைய மலரிலிருந்து நறுமணச் சாந்தும், சாறும் தயாரிப்பதுபோல். மலரிலிருந்து நறுமணச் சாறு எடுப்பதை விடச் செடி நறுமலரைத் தருவதுதான் அருமை. மனிதன் தன்னோடு அன்பாகப் பழகும் நண்பர்களுக்கே அன்பு காட்டக் கடமைப் பட்டிருப்பதாகக் கருதுகின்றான். அஃது அவனுடைய ஒரு சாதாரணக் கடமை. ஆனால் இன்றைய

உலகியலில் நண்பனை நேசிப்பது கூடப் பாராட்டுதலுக்குரியதாகி விட்டது. காதலரிருவர் தம்முள் அன்பு காட்டுதலும்கூட இன்று பாராட்டுக்கு உரியதாக விளங்குகிறது. காரணம் அந்தச் சூழலிலும் கூட சுயநலமும், நம்பிக்கைத் துரோகமும் நடமாடத் துவங்கி விட்டன.

மானிடன் உண்மையாகத் தேவன் ஆவது தன் பகைவனுக்கும் அன்பு காட்டும் பண்பு பெறும்போதுதான். மனித ஆன்மாவாகிய மொட்டு அன்பு காட்டும்போதே மலர்கிறது. அவனால் உலகம் கவர்ச்சிக்கப் பெற்று அவன் சுற்றமாகச் சுற்றுகிறது உலகு. அவனது மனம், மொழி, மெய் ஆகியவற்றால் கூடிய அன்பு வாழ்க்கை ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பினைப் பிலிற்றுகிறது. இந்நிலையிலேயே விண்ணுலகம் உருவாகிறது. சாதாரண மல்லிகைச் செடி அறிவில்லாத—மணமில்லாத மண்ணோடு தொடர்பு கொண்டு மணமில்லாத உணவினைக் கொண்டு மணமுள்ள மலர்களைத் தருகின்றது. நறு நெய்யில்லாத தீஞ்சுவையில்லாத வெறும் வைக்கோலையும், தவிட்டையும் தின்னும் பசு, தீஞ்சுவையான பாலைத் தருகின்றது. பகுத்தறிவுடைய மனிதனோ இனிய பாலைக் குடித்துவிட்டு, இன்னாதனவே செய்கின்றான்.

உயிர் நலம் பெற வேண்டுமாயின், அதன் உயிர்ப்பாக—மூச்சுக் காற்றாக அன்பு அமைதல் வேண்டும். மறந்தும் உயிர் தீமையோடு கூட்டு வைத்துக் கொள்ளக் கூடாது. மனிதன் தீமையோடு கொள்ளும் கூட்டு, மடியில் நெருப்பைக் கட்டிக் கொள்வதைப் போன்றது. மனிதன் அன்பு காட்டுதலுக்கு மாறாகப் பகைகொண்டு தீங்கு செய்யும்பொழுது அவனும் அழிகின்றான் என்ற உண்மையை அவன் உணர்தல் வேண்டும். தன்வினை தன்னைச் சுடும் என்ற அனுபவ மொழி எண்ணத் தக்கது. திருவள்ளுவர் இந்த உண்மையை விளக்குகின்றார். கொடுமையிற் சிறந்தது தீயா? தீமையா? என்று ஆராயத் தூண்டுகின்றார். தீ மிகுந்தால்

எரித்தழிக்கும். அளவோடு பயன்படுத்தினால் சமைக்கப் பயன்படும். குளிர்காயப் பயன்படும். ஆனாலும் கூரையில் வைத்தால் பற்றி எரியும். தீயினால் நன்மையும் உண்டு — தீமையும் உண்டு. ஆனால், தீமையினால் நன்மையே இல்லை. மேற்பரப்பில் ஒருவன் பிறிதொருவனுக்குத் தீமை செய்யும் கருத்தில் தீமை செய்கின்றான். உலகியல் மரபுப்படி ஒன்றில் ஒட்டிச் சாராத ஒன்று இன்னொன்றிலும் சார முடியாது. எடுத்துக்காட்டாக அடுப்பு சூடேறாமல் பானை சூடேறாது: பானை சூடேறாமல், தண்ணீர் சூடேறாது; அதுபோல, பிறருக்குத் தீமை செய்கின்றவனின் மனம், அறிவு, உணர்வு, இரத்தம் ஆகியன கெடாமல் அவன் தீமை செய்ய முடியாது. தீமையை அழிக்கின்ற ஆற்றல், அன்பிற்கே உண்டு.

உயிர் வர்க்கத்தின் இலட்சியமே அன்பு காட்டுவது தான். உலகில் எந்த ஒரு பொருளும் தன்னை வளர்த்துக் கொள்ளுகிறது. வாழ்வித்துக் கொள்ளுகிறது. ஆனாலும் தன்னுடைய வளர்ச்சியையும், வாழ்க்கையையும் பிறிதொன்றின் நலத்தோடு அல்லது பரந்துபட்ட மக்கட் சமுதாயத்தின் நலத்தோடு பொருத்தி—வளர்வதைப் பார்க்கிறோம். தாவர இனம் தழைத்து வளர்ந்து விலங்கினத்திற்கும், மக்களினத் திற்கும் பயன்படுகிறது. விலங்கினம் வளர்ந்து தாவர இனத்தின் நலத்தோடும், மக்கள் இனத்தின் நலத்தோடும் பொருந்தி வாழ்கின்றன. மனிதன் வளர்ந்து வாழ்கிறான். அவனுடைய வாழ்க்கையும் மற்றவர்களின் நலனோடு இணையவேண்டும்; பொருந்த வேண்டும். இஃது ஓரளவு மேற்பரப்பில் தற்காலிகக் காரிய சாதனைக்காக நடைபெறு கிறது எனினும், ஆழமில்லை.

இயற்கை தனி மனிதனிடத்தில் அன்பினைத் தோற்று வித்து வளர்க்கவே இன்பம் நிறைந்த காதல் வாழ்க்கையையும், பிறர்க்கென முயலுவதில் இன்பம் காணும் சீலம் நிறை துறவு வாழ்க்கையையும், கண்டு காட்டியது. இரண்டும் இலட்சியத்தில் ஒன்றாகவும் நடைமுறையில் வெவ்வே

றாகவும் உள்ளன. முன்னையதில் ஈடுபட்டுள்ள காதலர்கள் ஒருவர் தானும் இன்புற்று இன்னொருவருக்கும் இன்பம் தருகின்றார். இந்தக் காதல் ஆன்மக் காதல்; அழியாக் காதல். இத்தகு காதல் வாழ்க்கை காண்பதற்கு அருமையாகி விட்டது.

இன்றைய வீட்டு வாழ்க்கையில் கட்டுப்பாடும் பழக்கமுமே மிகுதியும் ஆட்சி செய்கின்றன. தூய காதல், அன்பு, ஆட்சி செய்யவில்லை. இங்குக் காணும் அன் புடைமை கானல் நீர் போன்றது. பின்னையதாகிய துறவு வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போர் தமக்கு இன்பம் நாடாமல் பிறருக்கு இன்பம் தரும் உழைப்பிலேயே இன்பம் காண்பவர்கள். அவ்வழி அவர்களுக்கு வரும் துன்பமும் கூட இன்பமாகும். இத்தகு சீலத் துறவு இன்று அருகிப் போய்விட்டது. வீட்டில் வாழும் குடும்பத் தலைவனுக்கும், வீடு கடந்த நாட்டில் வாழும் துறவிக்கும் அவனவனுடைய மனத்தில் அன்பு தோன்றாவிடில் பயன் என்ன? அன் பினைத் தோற்றுவித்து வளர்த்துக் கொள்ளுதல் எளிமையில் முடியும். ஆயினும் தொடர்ந்து முயன்று வளர்த்து—பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும். அன்பு பழகப் பழக ஆழமாகிறது. உறுதி பெறுகிறது; உய்தியைத் தருகிறது.

தன்னுடைய தோற்றம், தான் மட்டும் வாழ்தலுக் கல்ல—தனித்து வாழவும் முடியாது. எந்த ஒரு பொருளும் பிறிதொரு பொருளின் சார்பின்றி வளராது; வாழாது; பயன்தராது. ஆதலால், தன்னுடைய வளர்ச்சிக்கும் வாழ்க் கைக்கும் மற்றவரிடத்து அன்பு பாராட்டுதல் அவசியம் என்பதை அறிந்து கொள்ளுதலேயாகும். அன்பினைத் தோற்றுவித்துக் கொள்ளும் முதல் நிலைக்களன் இதுவே. இந்த அறிவிலும், உணர்விலும் அன்பு தோன்றும். அன்பினை, உதவி, தொண்டு ஆகிய செயற்பாடுகளின் வழி செழுமைப் படுத்தி வளர்க்க வேண்டும். தோன்றிய குணம் செயற் பாடின்றி முடங்கிக் கிடக்குமாயின் அது வளர்வதில்லை.

மேலும் தோன்றிய அளவிலேயே அழிந்தும் போகிறது. குணத்தின் உண்மை அக்குணமுடையவனின் செயலினா லேயே உணரப்படும். ஆதலால், பிறருக்கு உதவி செய்யும் வாய்ப்பினை, கதிரவன் ஒளியை வரவேற்று மகிழும் தாமரையைப் போல, மகிழ்வோடு வரவேற்கும் பண்பு தேவை. அதனாலன்றோ எல்லோருக்கும் கொடுக்கும் இறைவன் வாங்கவும் செய்கிறான். அவன் வாங்குவதின் மூலம் சமூதாயத்திற்கு உதவும் பண்பை ஊட்டி வளர்க்கிறான்.

தாய்தான் தன் குழந்தைக்கு மிட்டாய் வாங்கித் தருகிறாள். குழந்தை, தான் கடித்த மிட்டாயைத் தாய்க்குக் கொடுக்கிறது. அப்பொழுது அவள் அதை விரும்பி ஏற்கிறாள். எச்சில் என்றும் பாராமல் ஏற்கிறாள். அன்பு உள்ள இடத்தில் எச்சிலும் தீட்டும் இல்லை. காதல் வாழ்க்கையில் எச்சிலை அமிழ்தம் என்றார் திருவள்ளுவர். பக்தி வாழ்க்கையில் கண்ணப்பரின் எச்சிலைத் தூய கலச நீர் என்றார் சேக்கிழார். குரு சீட வாழ்க்கையில் எச்சிலைப் பிறப்பறுக்கும் மருந்து என்றார் குமரகுருபரர். எதை இழந்தாலும் இழக்கலாம்; பிறருக்கு உதவி செய்யும் வாய்ப்பை இழக்கவே கூடாது. தோன்றி வளரும் அன்பினை அழிக்கும் நோயும் உண்டு. நோய், பகை இரண்டும் அற்ப மனிதனை அழிக்கும்; நல்ல மனிதனை வளர்க்கும். இன்னாதனவே செய்கின்ற மனிதன் சூழலில் அன்பு நெறியில் வளரும் மனிதனின் சால்பு உறுதியுடையதாக இருக்கும்.

இயேசுவின் அன்பும் அப்பரடிகளின் அருளும் சான்றாண்மைக்குச் சான்று. இவர்களின் அன்பு மற்றவர் தந்த துன்பங்களை உரமாகக் கொண்டு வளர்ந்து உறுதி நிலை பெற்றது. அன்புடைமைக்கு வரும் கொடிய நோய் அப்பட்டமான தன்னலம். ஆயினும் பிறர் வாழ்க்கையோடு இணையாத தன் வாழ்க்கை கேடுடையது. அதனினும்

கேடுடையது தன்னலத்திற்காகப் பிறருக்குத் துன்பம் செய்தல். வாழ்வதற்காக உண்ணுகிறோமா? உண்பதற்காக வாழ்கிறோமா? என்று ஒரு வினா உண்டு. உண்ணுதலும் வாழ்தலும் தம்முள் தொடர்புடையன—பிரிக்க முடியாதன. ஒன்றித்து நிகழ வேண்டியதும் கூட. ஆனாலும் எதற்காக வாழ்கிறோம் என்ற வினாவிற்கு உண்பதற்காக என்று யாரும் கூறமாட்டார்கள். மீதூண் விரும்புபவனும் கூட உடன்பட மாட்டான். உண்பதற்காக வாழ்தலைப் போன்றது அளவிற்கு உட்பட்ட தன்னலம். அன்பிற்கு எதிரான நோய், நிர்வாண மான தன்னலமேயாகும். மேலும் அறியாமையை உணராமை, மறவாமை, போன்றவைகளும் நோய்களே. ஒருவன் தீமை செய்யலாம். ஆயினும் அவன் இயற்கையிலேயே வேண்டு மென்றே தீமை செய்கின்றானா அல்லது அறியாமையினால் செய்கின்றானா என்பதை ஆராய்ந்து அறிதல் அவசியம். அறியாமையினால் செய்யப்படுவதை பொறுத்தாற்றி இரக்கம் காட்ட வேண்டும். அவனிடத்தில் இல்லாத அறிவை உருவாக்குதல் வேண்டும். அத்துன்பத்தை மறக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும். அவனிடத்தில் அன்பு காட்டி நன்மை செய்ய வேண்டும். இயேசு பெருமான் 'அறியாமல் செய்கின்றார்கள் மன்னித்து விடுக' என்றார். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க' என்றார் திருவள்ளுவர்.

தனி மனித வாழ்க்கையில், அன்பினைப் படிப்படியாக வளர்த்து விரிவாக்கும் வகையிலேயே மனைவி, மக்கள். சுற்றம், இனம், நாடு, உலகம் என்று முறை வைப்புத் தோன்றி வளர்ந்துள்ளது. மனைவியிடத்து அன்பு காட்டத் தொடங்கு பவன் முறையாக உலக மக்களையே நேசித்து அன்பு காட்டும் அளவிற்குத் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். மனித குலத்தின் வாழ்க்கையை இணைத்து வளப்படுத்தும் ஒழுக்க உணர்வுகள் பலப்பல. எல்லா ஒழுக்க உணர்வுகளுக்கும் தூய்மை நிலை ஒழுக்கம் அன்புடைமை.

தண்ணிலவைப் போல, குளிர் தென்றலைப் போல இன்பம் தருகிற இனிய சாதனம் அன்புடைமை. வாழ்வித்து வாழ்விக்கும் ஆற்றல் அன்புக்கு உண்டு........

தாளாண்மையும் வேளாண்மையும்

மனித வாழ்க்கையின் சிறந்த பண்பு இரக்கப்படுதலே யாம். இரக்கத்தின் வழித் தோன்றும் ஈதற் பண்பு இம்மைக்கும் மறுமைக்கும் நலந்தரத்தக்கது. இரக்க உணர்ச்சி இயல்பான ஒன்றே! இரக்க உணர்ச்சி இல்லாத மனிதர் இருப்பது அரிதே! இரக்க உணர்ச்சி இல்லாதாரை அரக்கர் என்று இலக்கியம் கூறும்.

'இரக்கமென் றொருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்க ரென்றுளர் சிலர்'

என்றார் கம்பர். இரக்க உணர்ச்சி தோன்றலாம். ஆனால் அந்த இரக்கம் உதவியாக உருமாறி வளராது போனால் பயனில்லை. சிலர் உதட்டளவில் இரக்கம் காட்டுவர். அதனால் உலகம் பிழைத்து விடுமா? என்ன? ஐயோ பாவம்! என்ற இரக்கச் சொற்களைக் கூறினால் என்ன பயன்? வறுமையின் கொடுமை பற்றிக் கணக்கிலாத கலிவிருத்தங் களைப் பாடி என்ன பயன்? பட்டி மன்றங்களை நடத்தித்தான் என்ன பயன்? இரக்கம் துன்ப நீக்கத்திற்குரிய செயலாக உருப்பெற வேண்டும். ஈதல் அறமே! கொடை மடம்படுதல் சிறப்பே! வழங்கி வறியராதல் வரவேற்கத் தக்கதே! ஆனால் வாழும் நெறியன்று.

ஈதல் என்ற வேள்வி இடையீடின்றிச் செய்யப் பெறல் வேண்டும். வறுமை மாறும்வரை செய்யப் பெற வேண்டும். பசிக்கு ஒருவேளைச் சோறு போடுதல் ஈதலறம் ஆகிவிடாது. ஏழைக்குக் கஞ்சி வார்த்தல் பேரறமன்று. ஏழ்மையை முற்றாக மாற்றும் வண்கயில் வழங்குதலே ஈதல். அதுவே அறம். இன்றைய இரவலர் நாளைய இரவலராக வாழும் நிலையில்

வழங்குவது பிச்சையே. அஃது ஈதலும் அன்று; கொடையும் அன்று. அறமும் அன்று. அதனாலேயே "இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்" அறம் என்றார் வள்ளுவர். இங்ஙனம் வறுமையை மாற்றும் வகையில் வழங்கி வாழ வேண்டுமென்றால் சற்றும் தளர்வில்லாத தாளாண்மை வேண்டும்.

சங்க காலக் கவிஞன் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி இந்த உலகம் இருந்தது; இருந்து கொண்டிருக் கிறது; ஏன்? என்று வினாக் கேட்டு விடை சொல்கின்றான். தனக்கென முயலாது பிறர்க்கென முயன்று, உழைப்பில் ஈடுபடுகின்ற உழைப்புத் தவம் செய்யும் கண்களை யுடையவர்கள் பலர் வாழ்வதால் உலகம் இருந்தது. இருந்து கொண்டிருக்கிறது, என்று விடை கூறுகின்றான். "உண்டா லம்ம இவ்வுலகம்" என்று தொடங்கும் பாடலில் "தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்று குறிப்பிடுகின்றார். இறைவனின் திருவடிகளையே உயிர்கள் தொழுகின்றன. ஏன்? திருவடிகளே உயிர்களைத் தாங்கித் தண்ணருள் சுரக்கின்றன. வாளில் காட்டும் ஆண்மையிலும் தாளில் காட்டும் ஆண்மை—அதாவது தாளாண்மை பெருமைக்குரியது; பாராட்டுதலுக்குரியது; இன்மையும் மறுமையும் தரத்தக்கது. வாளில் காட்டும் ஆண்மை நெடிய வரலாறல்ல. தாளாண்மையே நெடிய வரலாறு.

உலகம் தோன்றிய நாள் தொட்டு உலகின் வரலாற்றோடு உயிர் வர்க்கத்தின் வாழ்க்கையோடு வாள் மோதித் துன்பம் விளைவித்தது உண்மை. ஆனால் தாளாண்மை அந்த இன்னல்களையெல்லாம் கடந்து உலகத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. இனி தொடர்ந்து மேலும் வாழ்விக்கும்.

தாளாண்மையும், வேளாண்மையும் கணவனும், மனைவியும்போல, அறனும் அன்பும் போல, பண்பும் பயனும் போல. தாளாண்மை என்பது தாள்களோடு தொடர்புடையது. வேளாண்மை இதயத்தோடு தொடர் புடையது. தாளாண்மை என்ற தகைசான்ற பண்பில்லாதவன் வேளாண்மை செய்ய இயலாதவன். ஒரோ வழி செய்தாலும் தொடர்ந்து செய்ய இயலாது. விழுமம் துடைக்கும் அளவுக்குச் செய்ய இயலாது. வேளாண்மையில் செருக்குற்று விளங்க விழுமம் துடைக்கும் அளவுக்கு ஈதல் செய்ய வேண்டும். இல்லையென்ற சொல் வையகத்தில் வழக்கொழியும் வரை வழங்க வேண்டும். அதுவே முழுமையாக வேளாண்மை. இத்தகு வேளாண்மை அறம் இரக்க உணர்ச்சியினால்மட்டும் வரும் அறமன்று. தாளாண் மையில் ஓயாது ஈடுபட வேண்டும். தாளாண்மையில் முழு நிறை வெற்றி கண்டால் வேளாண்மையிலும் வெற்றி காணலாம். தாளாண்மையில் வெற்றி பெறாது வேளாண்மையில் மட்டும் வெற்றி பெற நினைப்பது, காலப் போக்கில் பிறிதொருவரின் வேளாண்மையை எதிர்நோக்கி வாழும் இரவலராக்கிவிடும். ஆதலின் தாளாண்மை பேணுக! தொடர்ந்து பேணுக! எல்லையின்றிப் பேணுக. பொருள் களைச் செய்து குவித்திடுக. வேளாண்மை செய்திடுக. இதுவே வள்ளுவம் தரும் வாழ்க்கைக் கலை.

'தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.' 613

தொடர்ந்து முயல்க!

உடற்குறை துன்பமானது. உடற்குறை யுடையாரும் துன்பமுறுகின்றனர். உடற்குறையுடையாரைச் சார்ந்தோரும் துன்புறுகின்றனர். உடற்குறைறைய விடத் துன்பம் தரத்தக்கது ஒரு செயலை அரைகுறையாகச் செய்வது. அரைகுறையாகச்

செய்யப்படும் செயல் வெந்தும் வேகாமல் இறக்கிய அரிசிச் சோற்றைப் போல அல்லலைத் தரும்.

செயல் செய்வதென்பது ஒரு கலை. அந்தச் செயல் முறையாக முழுமையாகச் செய்யப்பெறின் களை கட்டி விளங்கும்; நிறைந்த பலனைத் தரும். செயலைச் செய்யும் முன்பு அச்செயலோடு ஒன்றாகி உணர்வுடன் கலந்து விட வேண்டும். உணர்வோடு கலந்து செய்யப்பெறாத செயல் சோர்வுபடும். செயலில் ஈடுபட மனத்திற்கு அழுத்தமான உணர்வு இருக்க வேண்டும். முடிந்தால் செய்யலாம். சந்தர்ப்பம் இருந்தால் செய்யலாம் என்பன போன்ற விவாதங்கள் கலைக்கு உதவாதன. செயலைத் தொடங்கி னால், அச்செயலைத் தொடர்ந்து நிறைவேறும் வரை கவனத்துடன் செய்யவேண்டும். ஒரு செயலைத் தொடர்ந்து செய்யின், மனித சக்தியும் கூட மிஞ்சும். செயலை விட்டு விட்டுச் செய்யின், அச் செயல் தொடர்பான செய்திகளை நினைவு கூர்தலில் மனித ஆற்றல் கழியும். இடையீடு பட்டதில் பாதிக்கப் பெற்றுவிடும். எல்லாவற்றிற்கும் மேலாகச் செயல் செய்தற்குரிய ஊக்கம், ஊக்கத்துடன் கூடிய உணர்வு முழுமையாக விளங்காது. ஆதலால் நமது நாட்டில் கட்டிமுடிக்கப் பெறாத வீடுகள் ஏராளம். நிறைவேற்றி முடிக்காத திட்டங்கள் அளப்பில. எழுதி முடிக்கப் பெறாத கற்பனைகள் கணக்கில. வன மகோத்சவத்தில் கன்றுகள் வைத்தும், கணக்கிலேற்றியும் வளர்ந்து பயன் தராது பட்டுப் போன கன்றுகள் ஆயிரம் ஆயிரம். இவையெல்லாம் செயலில் தொடர்ச்சியின்மையின் விளைவுகள். வானொலிக்கு உரிய கட்டணம் காலத்தில் கட்டாது, காலம் கடந்து செலுத்தித் தண்டம் கொடுப்போர் எத்தனை பேர். தாம் வாங்கும் செய்தித் தாளுக்கு உரிய காலத்தில் சந்தா செலுத்தாது பத்திரிகை நின்று, நின்று படிப்போர் எத்தனை பேர்? ஏன்? முடியாமை அல்ல. கூடாது என்பதும் அல்ல. இதற்குப் பெயர்தான் அக்கறையின்மை. செய்யும் பணியில் அக்கறை

யின்மையால் செய்யத் தொடங்கிய பணியைத் தொடர்ந்து செய்ய மாட்டார்கள். எந்த ஒரு பணியையும் அவர்கள் பழக்கப்படுத்திக் கொள்ள மாட்டார்கள்; வழக்கப் படுத்திக் கொள்ள மாட்டார்கள். செயல் செய்தலைப் பழக்க, வழக்கப்படுத்திக் கொண்டாலே நிறையப் பணிகளைச் செய்யலாம். இடையீடின்றிச் செய்யலாம். பணியைத் தொடங்கிய பிறகு இடையில் இல்லாத காரணங்களைச் சொல்லி நிறுத்தி விடுவது நல்லதல்ல. இது பணி செய்யும் பாங்கினையும் கெடுக்கும். நம்பிக்கையைச் சிதைக்கும். உள்ளத்தின் உறுதியைக் குலைக்கும். செயல் செய்யத் தொடங்கி, செயலை முற்றாகச் செய்து முடிக்காது இடையில் விடுவது துன்பத்தைத் தரும். பெருமையைக் குறைக்கும். உலகம் அவர்களை ஒரு பொருளாக மதிக்காது.

எண்ணித் துணிக. துணிந்த பின் தொழிற்படுக; துணிவோடு தொழிற்படுக. வெற்றி தோல்விகளில், ஆசை வலையில் விழாது தொடர்ந்து தொழிற்படுக. செயலினை மூச்சாகக் கொள்க! தொடங்கிய செயலை முடிக்காது வாழ்தல் அறமன்று. அதற்குச் செயற்களத்தில் சாதலே அறங்கூறும் ஆக்கந் தரும்.

ஒரு செயலைத் தொடங்கி, அதை முற்றாக முடிக்காமல் பத்திரமாக வைத்துவிட்டு, வேறு ஒரு செயலைத் தொடங்குதல் நெறியன்று. ஒன்றே செய்க! நன்றே செய்க! இன்றே செய்க! இனிதே செய்க! என்பது ஆன்றோர் வாக்கு. சீவி முடிக்கப் பெறாத தலையும், செயலுக்கு வராத சிந்தனையும், கடவுள் எழுந்தருளாத திருக்கோயிலும். மகப் பேறிலாத மனை வாழ்க்கையும் தொண்டின் துன்பம் தெரியாத துறவு வாழ்க்கையும், பயனுடையதல்ல. அது போல தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்து முடிக்காத வாழ்க்கை வாழ்க்கையன்று. அந்த வாழ்க்கையை இன்றைய உலகமும் மதிக்காது. நாளைய உலகமும் பாராட்டாது.

செயல் செய்திடுக! ஓயாது செய்திடுக; செயல் முடியும் வரை செய்திடுக! அதுவே இன்ப வாழ்க்கை!

> 'வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
> தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு!' 612

முயற்சி, பெருமை தரும்!

உயிர் ஒரு ஊற்றுக்கண்! ஆம்! உயிர் அறிவின் ஊற்றுக் கண்; ஆற்றலின் ஊற்றுக்கண். அறிவு, ஆற்றல் இவ்விரண்டும் மேலும், மேலும் பெருகி வளரத்தக்கன. செயற்பட செயற்பட வளரும். இவ்வளவுதான் என்கிற நியதி, அறிவையும் ஆற்றலையும் பொறுத்தவரை எந்த மனிதனுக்கும் இல்லை. ஆனால் அறிவில் வளர வேண்டும்; ஆற்றலில் வளர வேண்டும் என்ற தாகம் இல்லாது போனால் இவை வளர்வதில்லை. வளராததோடன்றி உள்ளதும் மங்கி மழுங்கிப் போகும். தாகம் இருந்தால் மட்டும் கூடப் போதாது. சிலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் அறிவு ஆற்றல் இவைகளின் வளர்ச்சிக்குரிய வாயிலை அறிந்து தொழிற் படுவதில்லை.

அறிவு, ஆற்றல் இவைகள் பெருகி வளரும் வாயில் "செயற்படுதலேயாம்". அறியாமையைத் தொடர்ந்து அறிவல்ல, அறிவை தொடர்ந்தே அறியாமை. அதாவது அறிவும் வேட்கை இருந்துதான் அறியாமை தெரிகிறது. "அறிதோறும் அறியாமை" என்பார் வள்ளுவர். ஆற்றல் செயற்படச் செயற்படத்தான் அனுபவ வாயிலாக அது வளரும். அறிவு ஆற்றலின் வளர்ச்சிக்குத் தாய். முயற்சி காரியங்கள் நிகழ்வன அல்ல; செய்யப் பெறுபவை. முயற்சியின்றி வாளா இருப்பது, துன்பத்தில் துன்பத்திற்கு ஆட்படுத்தும். முயற்சியுடைய வாழ்க்கை இல்லாதார்க்கு சொர்க்கத்தின் கதவு தாழிடப்பெறும். நரகத்தின் கதவே திறக்கப் பெறும்.

முயற்சியை முயற்சிக்காகவே தொடங்க வேண்டும். முயற்சி யெடுக்கப்பெறும் காரியங்களை நிறைவேற்றி முடிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி அவசியம் இல்லாத அளவுக்கு எண்ணி அலட்டிக் கொள்ளக் கூடாது. முயற்சியின் விளைவுகளைப் பற்றியும். உறும் பயன்களைப் பற்றியும் கற்பனை செய்து கவலையில் ஆழக் கூடாது. முடியுமா? என்ற கேள்வி தோல்வியின் தொடக்கம். முடியுமா? என்று நினைக்கத் தொடங்கும்போதே செயலூக்கம் சிதறி அழிந்து போகும். உலகத்தில் மகத்தான பணிகளைச் செய்து வெற்றி பெற்றவர்கள் முயற்சியி னாலேயே செய்தார்கள். சிலர் சூழ்நிலைகளைச் சார்ந்து வாழத் தலைப்படுவர். சூழ்நிலையை அனுசரித்தல் தவறன்று. ஆனால் சூழ்நிலையை முற்றாக நம்பி சூழ்நிலைக்கு ஆட் படுதல் வளர்ச்சிக்கு வழி செய்யாது. சூழ்நிலையின் விலங்குக்கு ஆட்படுதல் விலங்குகளுக்கே உரியது. மனிதன் சூழ்நிலைகளை வெற்றி காண வேண்டும்.

பணிகளைத் தொடங்கும் முன், பணிகளின் தரம், அப் பணியினால் சமுதாயம் அடையும் நன்மை, ஆகியவை களைப் பற்றியே எண்ண வேண்டும்! அங்ஙனமின்றித் தன்னுடைய அன்றையச் சூழலை நினைந்து முடியுமோ, முடியாதோ என்று ஊசலாடுவது; தன்னுடைய அறிவையும், ஆற்றலையும் நம்பாது ஜோசியத்தை நம்புவது; இராசிப் பலனைப் படித்து மயங்குவது; ஆகிய கெட்ட பழக்கங்கள் ஊக்கக் கிளர்ச்சிக்கு எதிரானவை. ஊக்கக் கிளர்ச்சி குறைந்து போனால் அயற்சியே தலைகாட்டும். தன்னம்பிக்கை தளரும். பயம் குடிகொள்ளும். தோல்வி மனப்பான்மை தலைதூக்கும். உண்மையில் பெருமையில்லாத பெருமையைப் பற்றிக் கவலைப்படும். பெருமை யென்பது வெற்றி தோல்விகளை மையமாகக் கொண்டு நிர்ணயிப்பது அல்ல. எத்தனையோ வெற்றிகள் சிறுமையைத் தந்திருக்கின்றன. எத்தனையோ தோல்விகள் பெருமையைத் தந்திருக்கின்றன. பெருமையை

வெற்றி தோல்விகளோடு இணைத்துச் சிந்திப்பதே சிறுமை. இந்தச் சிறுமைக்கு ஆளாகிவிட்டால் போலித்தனமான, பயன் தராத, வறட்சி தன்மையுடைய கௌரவ உணர்வு களுக்கு அடிமையாக நேரிடும். இந்த வகை உணர்வுக்கு மனிதன் ஆளாகிவிட்டால் அவன் சைத்தானாகிவிடுவான். இது கொடுமை.

உண்மையான பெருமை முயற்சியை மையமாகக் கொண்டே நிர்ணயிக்கப் பெறுகிறது. நல்ல காரியத்திற்கு நல்ல வண்ணம் முயற்சியைத் தொடங்கிக் களத்தில் போராடித் தோற்றாலும் பெருமையே! ஓர் உயர்ந்த பணிக்காக மனிதன் நடந்த வழிநடைப் பயணங்கள் பெருமைக்குரிய அளவு கோல்கள். ஆதலால் பணியைத் தொடங்கும் முன்பே இப்பணி பெரியது. நம்மால் ஆகக்கூடியதில்லை என்று எண்ணற்க! கைவருந்தி உழைக்கும் மனிதன் தெய்வம்! உழைப்பின் முத்திரைகளைக் கைகள் பெறட்டும்! கால்கள் பெறட்டும்! சந்தித்த தோல்விகளின் காயங்கள் முழங்காலிலும் கிடக்கட்டும்! பொய்ம்மையான வீண் பழக்கத்திற்கு அடிமையான சமூகத்தின் வசைகளும் குவியட்டும்! அஞ்சற்க! அயர்ச்சியை விலக்குக! நம்மால் ஆகும் என்று நம்புக! நம்மால்தான் செய்ய முடியும் என்று உறுதி கொள்க! முயற்சியினைத் தொடங்குக! பெருமை வந்து சேரும்.

'அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.' 611

உள்ளத்தை வளர்த்திடுக!

வாழ்க்கை, பார்வைக்கு எளிதாகக் காட்சியளிக்கிறது. அப்படித்தான் பலர் கருதி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையான வாழ்க்கை அருமையானது. ஆனாலும் எளிமையானது. சிக்கல்கள் நிறைந்தது. ஆனாலும்

தீர்வு காணவல்லது. எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பது கேள்வியல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி. அதனாலன்றோ மாணிக்கவாசகர் 'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்று இடித்துரைக்கின்றார். வாழும் வகையில் வாழாத வாழ்க்கை பயனற்றது. ஆதலால் அது வாழ்வன்று. அப்பரடிகளும் "பேசாத நாள் பிறவாத நாள்" என்பார். வாழும் வகையே வளத்திற்கு அடிப்படை. வரலாற்றுக்கு ஊற்றுக் கண். அதனாலன்றோ வள்ளுவம் "வாழ்வாங்கு வாழ்க!" என்ற ஆணையிட்டது.

சுவைத்து உண்கின்றோம். ஆனாலும் சுவைத்து வாழ்வதில்லை. மற்றவர்களிடமிருந்து ஆயிரம் ஆயிரம் எதிர் பார்க்கிறோம். ஆனால் மற்றவர்கள் நம்மிடம் எதிர் பார்ப்பதற்கு உரிமை உண்டு என்பதை மறந்து விடுகிறோம். பசுவைக் காயவைத்துக் கறந்து வாழ்வோரும் உண்டு. அதுபோல அன்புப் பசுவைக் காயவைத்து வாழ முயல்வது வறண்ட பாலைவனத்தில் தளிரைத் தேடியது போலாகும்.

உடைமைகள் இல்லையேயென்று உடைமை யற்றவர்கள் ஏங்குகிறார்கள். உடைமை உடையவர்கள், காப்பதற்கு ஆளில்லையே என்று கலங்குகிறார்கள். இஃது ஒரு விநோதமான வறுமை. அதனாலன்றோ இன்றையச் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாத விழுக்காடு காவலுக்கென்று செலவழிக்கப் பெறுகிறது. எங்கும் எதிலும் அன்பு முத்திரைக்குப் பதில் காவல் முத்திரைகள் இடம் பெற்றுள்ளன. எந்தையும் தாயும் எழுந்தருளியுள்ள கோயிலே இன்று கண்காணிப்புக்கும் காவலுக்கும் ஆளாகியிருக்கிறது. எல்லா நாட்டு அரசுகளும் படைகளுக்கென்று ஒதுக்கும் பொருள்தொகை மனித குலத்தின் பஞ்சத்தை மாற்றவல்ல பெருந்தொகையாகும். ஒரு புறம் படைப் பெருக்கம். பிறிதொரு புறம் பஞ்சத்தின் வளர்ச்சி.

பொதுவாக இன்று, பஞ்சம் உடைமைகளுக்கு அன்று. அன்பு கலந்த உறவுக்கே பஞ்சம். உடைமை உணர்வு பூதாகாரமாக வளர்ந்திருக்கிறது. அஃது உறவுக்குப் பதில் பகையை வளர்த்து வருகிறது. தொன்மைக் காலத்தில், உடைமை, உரிமை, நடைமுறை, நிர்வாக நலன் கருதியே தோன்றிற்று. உடைமை யுரிமையுடையவர்களே அனுபவத் திற்கும் உரியவர்கள் என்பது பொருந்தாத நெறிமுறை. பெரும் பொருள் பெற்று வந்த பெருஞ்சித்திரனார். "ஏற்றுக உலையை ஆக்குக சோறே! என்னோடும் சூழாது எல்லார்க்கும் கொடுமதி மனைகிழவோயே!" என்று கூறினார். ஏன்? செந்தமிழ் உலகம் "செல்வத்தின் பயனே ஈதல்" என்றும், "தாமே துய்ப்பது அன்று" என்றும் முடிவு செய்தது.

எந்த உடைமை இருந்தாலும் அல்லது இல்லாது போனாலும் கவலையில்லை. மனிதன் மகிழ்ச்சியோடு வாழ முடியும். அவனுக்கு ஒன்றின்மீது மட்டும் உரிமையிருக்கு மானால், அந்த ஒன்று யாது? காணியா? இல்லை! காசுகளா? இல்லை! கடைகளா? இல்லை! ஆலைகளா? இல்லை! தொழிற்சாலைகளா! இல்லை! ஆடு மாடுகளா! இல்லை! பொன் மணிகளா? இல்லை! பின் என்னதான் அது? வேறொன்றுமில்லை. நமது உள்ளம்தான். உலகத்தையே உரிமை பெற்றிருந்தாலும், நமது உள்ளத்தினிடத்து நமக்கு உரிமையில்லாது போகுமானால் எந்த உரிமையும் நிலை நிற்காது. அதனாலன்றோ,

'உள்ளம் உடைமை உடைமை'

என்றது வள்ளுவம். இந்த உலகத்திலேற்பட்ட வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும், இன்று நம்முன்னே நிகழ்ந்து கொண் டிருக்கும் நிகழ்ச்சிகளுக்கும், மூலமும் முதலும் உள்ளமே யாகும். நிலத்தின் இயற்கையும் செயற்பாலதேயாம். அறிவுப் புலனும் ஆற்றலுக்குரியதே யாகும். ஏன்? கோயிலில் கடவுளும் மனிதனின் படைப்பேயாம். நமது உள்ளத்தில்

நமக்கு முழு உரிமை இருக்குமானால் முடியாத தொன்றில்லை.

உள்ளமோ, விந்தையான பொருள். அது கைக்கு அகப்படுவதில்லை. விரைவில் பயணம் செய்கிறது; கடிதில் பற்றுகிறது; துன்பத்தை இன்பம் போலக் காட்டுகிறது. தனி உணர்வை வளர்க்கிறது. ஆயினும் உள்ளத்தைக் கெட்டதென்று சொல்ல முடியாது. "நீ நாளும் நினையாய் நன்னெஞ்சே!" என்று திருஞானசம்பந்தரும் நெஞ்சைக் குறிப்பிடுகிறார். அதை முறையாகப் பழக்கப்படுத்தினால் நல்ல வேலை செய்யும்; கைக்கு அடக்கமாக வைத்துக் கொண்டிருந்தால் அதனிற் சிறந்த தோழமை இல்லை. ஆனால், அதை எஜமானன் ஆக்கினால் வந்தது கேடு.

உள்ளத்தை ஒரு பொழுதும் ஓயவிடக் கூடாது. அதற்கு ஒழுங்காக முறைவைத்து வேலை கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அதற்குரிய நல்ல வேலைகளைக் கொடுக்காது, உறங்க வைத்தால் அது உறங்குவதில்லை. ஊர் சுற்றப் புறப்பட்டுவிடும். உள்ளத்திற்கு நல்ல சிந்தனைகளையும், கருத்துக்களையும் உணவாகத் தர வேண்டும். அன்பினை நீராக வார்க்க வேண்டும். இனிய செயலினை, அதன் மூச்சாக ஆக்கவேண்டும். உயர்ந்த பக்தியினை, அதன் உயிர்த் துடிப்பாக ஆக்கவேண்டும். அப்பொழுது உள்ளம் செழித்து வளரும்; வாழ்க்கையும் பூத்துக் குலுங்கும். மனித சமுதாயம் அனைத்தும், உறவு கலந்து, உண்டு களித்து வாழும். எங்கும் இன்ப அன்பு மலர்ந்து மணம் பரப்பும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து."

6

வாக்காளர்களுக்கு வள்ளுவரின் அறிவுரைகள்

மனித சமுதாயத்தில் சொத்துரிமை பற்றிய கருத்து தோன்றிய காலத்திலிருந்து அரசியல் சிந்தனை, ஆட்சி முறை, ஆட்சிக்குரிய விதிமுறைகள் முதலியன தோன்றி வளர்ந்து வந்துள்ளன. இவை காலத்திற்குக் காலம் படிமுறையில் வளர்ந்து வந்துள்ளன. ஆட்சிமுறை, கூட்டாட்சியில் தொடங்கித் தனிமனித ஆட்சிக்குமாறி மீண்டும் கூட்டாட்சிக்கு—மக்களாட்சி முறைக்கு மாறி வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

இன்றைய உலகில் பெரும்பான்மையான நாடுகள் சுதந்தரத் தன்மையுடைய தன்னாட்சி முறையில் இயங்குகின்றன. மக்களாட்சி முறையில் இயங்கும் நாடுகள் பலப்பல. அவற்றுள் நமது நாடும் ஒன்று. 1947ஆம் ஆண்டு அடிமைத் தளையிலிருந்து மீண்ட இந்தியாவில் இப்போது மக்களாட்சி முறை நடைபெறுகிறது. ஆம்; இந்தியா இன்று குடியரசு நாடு. நமது இந்திய நாட்டில் பிறந்தவர்கள் 21 வயதை அடைந்த அனைவரும் சாதி, இன, சமய, பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகிய எந்தவகை வேறுபாடுமின்றி அரசியலில் பங்கு பெறும்

த. IV.18.

உரிமையுடையவர்கள். அவர்களுக்கு ஆள்பவர்களைத் தேர்ந்தெடுக்க உரிமையுண்டு. அவர்களில் எவரும் ஆள்பவராகவும் வர முடியும். குடியுரிமை என்பதை ஒரு தகுதி-உரிமை-கடமை என்றெல்லாம் கூறலாம்.

திருவள்ளுவர் சிறந்த ஓர் அரசியலறிஞர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், அரசியலும் ஆட்சியியலும் வளர்ச்சியடையாதிருந்த காலத்தில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் சிறந்த அரசியலை மானுட உலகத்திற்கு அறிமுகப் படுத்தியது. திருக்குறள் தோன்றிய காலத்தில் மன்னராட்சி முறையே நிலவியது. ஆனால், திருக்குறள் முதல் முதலாக மக்களைத் தழுவிய குடியாட்சி முறையை அறிமுகப் படுத்துகிறது.

> 'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு.'
>
> (544)

இந்தத் திருக்குறளுக்குச் செவ்விதாகப் பொருள் கொள்ளாவிடில் பிழைகள் நேரிட வாய்ப்பிருக்கிறது. அஃதாவது குடிகளைத் தழுவிய அரசு என்றால் குடிகளினுடைய ஆசைகளைத் தழுவிய அரசு என்று பொருள் கொண்டு- குடிகளுக்குத் தீங்கு செய்து விடக்கூடாது. பிரெஞ்சு மொழியில் "Gentleman Corruption to the poor" என்று ஒரு பழமொழி உண்டு. அஃதாவது இலவசம், தானம், தருமம் என்பதெல்லாம் பணக்காரர்கள் ஏழைகளுக்குக் கொடுக்கும் இலஞ்சம் ஆகும். இங்ஙனம் வழங்கப் பெறும் இலஞ்சம் காலப் போக்கில் மனிதனைத் தற்சார்பு இல்லாதவனாக்கி வெறும் பிழைப்பு அஃதாவது நாய்ப் பிழைப்புக்காரனாக ஆக்கிவிடும். எனவே, குடிகளின் நலனைத் தழுவிய அரசு அமைதல் வேண்டும். திருவள்ளுவர் காலத்திலும் மக்கள் நலனுக்கு மாறான அரசுகள் இருந்தன. கொடுங்கோன்மையும் நடந்தது. இதனை விலக்கிச்

செங்கோல் செலுத்தும் அரசைக் காண்பதே திருக்குறளின் குறிக்கோள்.

இன்று நமது நாட்டில் நடப்பது குடியாட்சி. ஆட்சியாளர்கள் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பெறுகிறார்கள். வாக்காளர்களின் அரசியல் அறிவுத் தகுதிக்கேற்ப ஆட்சி அமையும். ஆதலால், வாக்காளர்களுக்கு அரசியல் அறிவும் தெளிவும் தேவை. இவ்வகையில் நமது நாட்டின் வாக்காளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டும் நூல் திருக்குறள் ஆகும்.

மனிதன் நாட்டுக்குச் சொத்து. இதுதான் உண்மை. ஆனால் இன்றுள்ள நிலை வேறு. இன்று நாம் நமது நாட்டை நம் சொத்தாக நினைக்கின்றோம். அதனால் நம்மால் நாட்டுக்கு எட்டுணையும் பயன் இல்லை. நாட்டைச் சுரண்டு கின்றோம். நாடு வறுமையிலும், உள்நாட்டு - வெளி நாட்டுக் கடன்களிலும் மூழ்கித் தவிக்கிறது. இன்றைய சூழ்நிலையில், ரூ. 2,24,180 கோடி கடன் இருப்பதாக அறிகிறோம். நமது நாடு சுரண்டப்படுதலையும் நாட்டின் பொருளாதாரச் சீரழிவு களையும் கடன் சுமைகளையும் நமது வாக்காளர்கள் அறிதல் வேண்டும்; உணர்தல் வேண்டும். நாம் அனைவரும் இந்த நாட்டினுடைய சொத்து. ஆதலால், நாட்டைப் பொருளா தாரச் சீரழிவிலிருந்து மீட்க வேண்டும். மேலும் இந்த நாட்டை வளம் கொழிக்கும் நாடாக மாற்ற வேண்டும். இந்தப் பணியைச் செய்து முடிக்கக்கூடிய ஆட்சியை அமைக்க வேண்டும் என்றெல்லாம்-நாள்தோறும் எண்ண வேண்டும். வாக்களிப்பதற்கு முன் ஒருமுறைக்கு மூன்று முறை எண்ண வேண்டும். நம்முடைய இலட்சியமாக உள்ள நாட்டினை அமைக்கக்கூடிய திறனாளர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும். திருக்குறள் காட்டும் நாடாக நமது நாடு அமையவேண்டும்.

நம்முடைய நாடு எப்படி அமையவேண்டும்? நமது நாட்டில் வெறும் சோற்றுக்குப் பஞ்சம். மக்கள் பசியால்

வருந்துதல் கூடாது. உயிர் இயக்கம் உணவினாலாயது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்றமை உணர்க. பசி வந்திடின் எல்லாவிதமான ஆக்கமும் கெடும்; அவலங்கள் அடுக்கடுக்காக வரும். அதனால், நாட்டின் இயற்கை வளமும் பயனற்றுப் போகும்; மனித வளமும் பயனற்றுப் போகும்.

> 'நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
> துன்பங்கள் சென்று படும்.' (1045)

பசித் துன்பம் இல்லாத நாடே நாடு. மற்றவை யெல்லாம் நாடல்ல; காடே. இன்று தமது நாடு எப்படி இருக்கிறது? வறுமைக் கோட்டிற்குக் கீழ் 27.1 கோடி மக்கள் வாழ்கிறார்கள். வறுமைக்கோடு என்பதன் பொருள் என்ன? ஒரு வேளை கூட வயிறார உண்ண முடியாதவர்கள் என்பதாகும். தமது நாட்டில் 17 விழுக்காட்டுக் குழந்தை களுக்குத்தான் நல்ல சத்துணவு கிடைக்கிறது. இந்த அவலம் தொடரக்கூடாது.

பசிக்கு அடுத்தது பிணி. மனித குலத்திற்குப் பகையாக விளங்கும் பிணிகள் ஒன்றா இரண்டா? பலப்பல! நோய், இயற்கையா? இல்லை, இல்லை. செயற்கை! ஆம்! மானுடம் வாழ்வாங்கு வாழாத போது-வாழ இயலாத போது நோய் வருகிறது. தூய்மையான நல்ல காற்று, குடிக்க நல்ல தண்ணீர், சமநிலைச் சத்துள்ள உணவு ஆகியன கிடைத்துவிட்டால் நோயே வாராமல் வாழலாம். நோயற்ற வாழ்வுக்கு முதல் தேவை, காற்று. தூய்மையான காற்று தேவை. மானுடத்திற்குப் பயன்படும் உயிர்க் காற்றை நல்கி உதவும் இயல்புடைய மரங்கள் அடர்ந்து நிற்கும் காடுகள் உள்ள நாடாக விளங்க வேண்டும். மாசுபடாத காற்றுக் கிடைக்கும் நாடாக விளங்க வேண்டும். ஆலைப்புகை, புழுதி, தூசிகள் முதலியன காற்றோடு கலக்காத பாதுகாப்பு உள்ள நாடாக அமையவேண்டும். இன்று நம்முடைய நாட்டில் காற்று

மாசுபடுத்தப்பட்டுள்ளது; மிகவும் மாசுபடுத்தப்பட்டுள்ளது. நாள்தோறும் மேலும் மேலும் மாசுறுகிறது. காற்றுக்கேடு செய்யும் தீமை முற்றாகத் தடுக்கப் பெறவில்லை. மரங்களும் போதிய அளவு இல்லை. இருந்தவையும் வெட்டப் பட்டுவிட்டன. தூய காற்று வழங்கும் நாடாக நமது நாடு அமையவேண்டும். அடுத்து, வாழ்க்கைக்குத் தேவை குடிதண்ணீர். நாள்தோறும் நாலு குவளை நல்ல தண்ணீர் நாலு காதத்திற்குப் பிணியை விரட்டும். குடிப்பதற்கு ஊற்று நீரே நல்லது. அஃதாவது பாதுகாக்கப் பெற்ற கிணற்று நீர் நல்லது. இத்துறையில் நமது நாடு எவ்வளவோ பணி செய்திருக்கிறது. ஆனாலும் இன்னமும் பற்றாக்குறைதான்.

அடுத்தது உணவு. உணவு கிடைத்தால் மட்டும் போதாது. நல்ல உணவு - சமநிலைச் சத்துணவு கிடைக்க வேண்டும். காய்கள், கனிகள், பால் மற்றும் எல்லாவகையான உணவுப் பண்டங்களும் தாராளமாகக் கிடைக்க வேண்டும். ஒவ்வொருவரும் சராசரித் தேவையான 2400 கலோரி ஆற்றல் கிடைக்கக்கூடிய அளவு உண்டால் நல்லது. அங்ஙனம் நமது நாட்டில் இப்போது கிடைப்பதில்லை. கிடைத்தாலும் உண்ணும் பழக்கம் வரவில்லை. நமது உணவுப் பழக்கம் மாற வேண்டும். அதற்கு உரியவாறு நாட்டில் உணவு வசதிகள் அமையவேண்டும். சராசரி மனிதனும் சீரான உணவு வசதியைப் பெறத்தக்க வகையில் வருவாய் வரவேண்டும். விலைகளும் கட்டுப்படியானதாக அமைய வேண்டும்.

குடிமக்களின் வருவாய்க்கும் அவர்கள் வாங்கி நுகரக் கூடிய உணவுப் பொருள்களின் விலைக்குமிடையே இன்றுள்ள இடைவெளி மிகவும் கூடுதல். நுகர்பொருள்கள் கட்டுபடியான விலையில் மக்களுக்குக் கிடைக்க வேண்டும். மக்கள் நுகர் பொருள்களின் விலைகளை அரசு கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும். நாட்டின் பொருளா தாரப் புழக்கத்தின் காரணமாக உற்பத்திச் செலவு கூடி, விலை கூடவேண்டிய அவசியம் ஏற்பட்டால் மக்களின்

வருவாய் உயர்வுக்கும் உரிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். அதற்கு வாய்ப்பில்லாது போனால் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்குக் கூடுதல் விலைப்படியை வழங்க வேண்டும்.

நல்ல உணவினால் மட்டும் பிணியே வாராமல் போகாது. கெட்ட பழக்கங்கள் காரணமாக நோய் வரும். கள், போதைப் பொருள்கள், பொருந்தா உணவுகள், பகல் நள்ளிரவுக் காட்சிகள் முதலியன தவிர்க்கப்பெறுதல் வேண்டும். இவை நாட்டில் எளிதாகவோ மலிவாகவோ கிடைத்தல் கூடாது. நமக்கு இன்று தேவை, பிணியில்லா மக்கள் வாழுகின்ற நாடு!

மானுட வாழ்வு, முயற்சிகள் நிறைந்த வாழ்வாக அமையவேண்டும். அம்முயற்சிகளும் ஆக்கவழியிலான முயற்சிகளாக அமையவேண்டும். அங்ஙனம் அமைய ஒரு நாடு பகைவர்களின் அச்சுறுத்தலிலிருந்து மீட்கப் பட்டிருக்க வேண்டும். அதாவது பகை இருத்தல் கூடாது. அண்டை நாடுகளுடனும் உலக நாடுகளுடனும் நல்ல வண்ணம் உறவு அமைய வேண்டும். நமது நாட்டின் நிலைக்குப் பாகிஸ்தான் ஒன்றே போதும்! உலகெங்கணும் படைக்கலத்தளங்கள் அமைக்கும் அமெரிக்காவைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நாம் நடுநிலைக் கொள்கை—அணி சேராக் கொள்கை என்றெல்லாம் ஏற்றுக் கொண்டிருந்தாலும் இந்த நாடுகள் நம்மிடம் பகைமை காட்டாமல் இல்லை. அதன் காரணமாக ஏழை நாடாகிய நம்முடைய நாட்டின் வரவு செலவுத் திட்டத்திலும் படைப்பெருக்கத்திற்கு ரூ.13,000 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. எண்ணற்றவர்கள் படைத்துறையில் பணி செய்கின்றனர். இவையெல்லாம் அவசியமானவைதாமா? இவற்றைத் தவிர்க்க நாம் தயாராக இருந்தாலும் நம்மிடம் பகை பாராட்டும் நாடுகள் உடன்பட்டு வருவதில்லை. ஆயினும்

சமாதானமும் அமைதியும் தழுவிய நாடாக அமைதல் வேண்டும் என்ற உணர்வை இழத்தலாகாது.

நமது நாடு பசி, பிணி, செறுபகை ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற்று விளங்கும் நாடாக அமைதல் வேண்டும். இது பொதுவான தன்மை. அதாவது நாடு தழுவிய கொள்கை.

நமது நாட்டின் மனித ஆற்றல் அளப்பரியது. ஆனால் மனித ஆற்றலை முறையாக வளர்த்துப் பயன்பெறவில்லை. அறிவுத் திறனும் செயல்திறனும் உடைய மக்களை நாம் நமது கல்விச் சாலைகளில் உருவாக்க வேண்டும். இதற்குக் கல்வி நிலையங்கள், நூலகம், அறிவியல், ஆய்வகம் (Science Laboratory), தொழில் பயிலுதற்குரிய தொழிலகம் முதலியன அமைத்திடுதல் வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் தரமான கல்வி தர வேண்டும். ஆரம்பப் பாட சாலைகளில் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் 1 : 35 என்றே அமைய வேண்டும்.

தமிழ்நாட்டில் மொழிச் சிக்கல் தீர்ந்தபாடில்லை. அரசியல் கட்சிகள் மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் காலங்கடத்துகின்றன. மொழிப் பிரச்சனையை உணர்ச்சி நிலையில் அணுகுதல் பிழை என்பதை உணரவேண்டும். தமிழ் நாட்டில் அனைத்து மட்டத்திலும் துறைதோறும் தமிழே பயிற்று மொழியாக அமைதல் வேண்டும். தமிழே எல்லாத் துறைகளிலும் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். ஆட்சியிலும் கல்வியிலும் மட்டுமல்லாமல் - வாணிபம், தொழில், கோயில் வழிபாடு, இசை போன்ற அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும்.

ஆங்கிலம் ஒரு மொழியாக மட்டும் வகுப்பில் கற்பிக்கப்பெறுதல் வேண்டும். மற்றும் மாணவர்கள் விரும்பிக் கற்கக்கூடிய நிலையில் விருப்பப்பாடமாக ஒன்பதாவது வகுப்பிலிருந்து இந்தி மொழி, உருசிய மொழி, சமஸ்கிருத

மொழி ஆகியன கற்பிக்கப் பெறலாம். இம்மொழிகளின் பயிற்சி எழுத, படிக்கத் தெரியுமளவுக்கேயாம்.

ஆங்கிலம் மூலமே கற்பிக்கும் பள்ளிகள் தமிழ் நாட்டில் கூடவே கூடா. தமிழகத்தின் அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியான கல்வியைப் பெற வேண்டும். இன்று கல்வித் துறையில் நிலவும் இரண்டு ஜாதி முறை அகற்றப்பட்டாக வேண்டும்.

நம் நாட்டில் பிறந்து வளர்ந்து வாழும் குடிமக்கள், முறைமன்றங்களில் தாம் தொடுக்கும் வழக்குகளிலும் தமக்கு எதிராகத் தொடுக்கப்படும் வழக்குகளிலும் என்ன வாதிடப் படுகின்ற தென்பதே புரியாமல், ஊமையர்களாகவும் செவிடர்களாகவும் நிற்கும் அவலநிலை இன்னும் முற்றிலும் தீர்ந்தபாடில்லை. காரணம் இன்று முறைமன்றங்களில் தமிழில் வழக்காடுதல் இல்லை; தமிழில் ஆணைகள் இடப்படுவதில்லை. இந்த இழிநிலையை உடனடியாக நாம் நீக்க வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள எல்லா முறை மன்றங்களிலும் இனி தமிழ் மொழியில்தான் வழக்கு விசாரனை நடைபெறல் வேண்டும். தமிழ் மொழியில் மட்டுமே ஆணைகள் பிறப்பிக்கவேண்டும்.

அடுத்து, குடிமக்களிடத்தில் நிலவ வேண்டிய நல்லியல்புகள் சில உண்டு.

'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.' (735)

அதாவது, நாட்டு மக்களிடையில் குழு மனப்பான்மை வளரக்கூடாது. சாதிகளின் பெயராலும் மதங்களின் காரணமாகவும் அரசியல் ஆதிக்கப் போட்டிகளின் காரணமாகவும் பல குழுக்கள் தோன்றுகின்றன. அங்ஙனம் தோன்றாமல் தவிர்ப்பது இன்றியமையாக் கடமை. இன்று நாட்டின் நிலை என்ன? எங்கும் குழுக்கள் அமைந்துள்ளன. இந்தக் குழு மனப்பான்மையால் ஒருவரை ஒருவர் முன்னேற

விடாமல் தடை செய்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பல்குழு மனப்பான்மை மாறினாலே நமது நாடு உருப்படும். பல்குழுக்களின் அமைப்பு அந்த அளவோடு நின்று விடுவதில்லை. கண்டால் சிரித்துப் பேசிக் கொள்வர். ஆனால், உட்பகை இருக்கும். இந்த உட்பகையின் காரணமாகப் பலவீனங்களுக்கு வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் கலகம் செய்வர்; ஒருவரை ஒருவர் அடித்துக் கொலை செய்து கொள்வர். இதனால் நாட்டில் உருப்படியான எந்தக் காரியமும் நடக்காது. வெறும் போலீசு அரசே நடக்கும். சிறைச் சாலைகள் நிரம்பி வழியும். இங்ஙனம் விளங்குவது நாடல்ல. நாட்டில் பலகுழுக்கள், குழுக்கள் வழிப்பட்ட கலகங்கள் என்றால் நாட்டில் எப்படி அமைதி நிலவும்? பொழுது விடிந்து பொழுது போனால் கலகங்களை அடக்குவதிலேயே அரசின் ஆற்றல் முழுதும் செலவாகும். அரசு, அதன் பணியைச் செய்ய இயலாது. அதன் காரணமாக வளம் பொருந்திய நாடாக அமைக்கும் முயற்சியில் நாடு பின் தங்கி விடும். இன்று நமது நாட்டின் நிலை, எங்கும் குழுக்கள். வெளிப்படையாக நிலவும் சாதி, மத, இன, அரசியல் வேறுபாட்டுப் பிரிவினைகள் ஒருபுறம். ஓரணிக்குள்ளேயே புறத்தே தோன்றாது அகத்தே முரணிய சிந்தையுடன் கூடிய குழுக்கள் எண்ணற்றவை. இவை பெருங்கேடு விளைவிப்பன. ஒரு நாட்டிற்கு வேண்டாதன என்று திருவள்ளுவர் கூறிய கருத்துக்கள் இவை.

இனி, ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். எதிர்மறையில் கூறியதையே உடன்பாட்டிலும் கூறலாம். திருவள்ளுவர் பிணியின்மையை மட்டும் எதிர் மறையாலும் கூறுகின்றார்; உடன்பாட்டாலும் கூறுகின்றார். ஆம்! நோயற்ற வாழ்வுதானே ஒப்பற்ற செல்வம்! அடுத்து, செல்வம் கொழிக்கும் நாடாக அமைய வேண்டும். செல்வம் சில நாடுகளில் இயற்கையாகவே அமையும். நமது நாட்டில் இயற்கை வளம் உண்டு. ஆனால்

நமது நாட்டின் இயற்கை வளத்தை நாம் முற்றாக இன்னமும் அனுபவத்திற்குக் கொண்டு வரவில்லை. செல்வம் என்று பொதுவாகக் கூறியதால் அனைத்துச் செல்வங்களும் அடங்கும். செல்வம் படைக்கப்படுவதே. அதனால்தான் திருக்குறள், "செய்க பொருளை" என்று கூறியது. நாட்டின் அரசு, செல்வச் செழிப்பிற்குத் திட்டமிட்டு, அத்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை மக்களிடம் தந்து ஓயாது மக்களை உயிர்ப்புடன் இயக்கிக் கொண்டேயிருக்க வேண்டும்; செல்வ வளம் வருதலுக்குரிய வாயில்கள் புதியன புதியனவாகக் காணப்பெறுதல் வேண்டும். இதனைத் திருவள்ளுவர்,

> 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு'
>
> (385)

என்று கூறுவார். செல்வத்தை ஈட்டவேண்டும். ஈட்டிய வெல்வம் தொகுக்கப் பெறுதல் வேண்டும். செல்வம் தொகுக்கப் பெற்றால்தான் அது மூலதன வடிவத்தைப் பெற்றுத் திரும்பவும் செல்வ உற்பத்திக்குரிய முதலீடாக அமையும் தகுதியைப் பெறும். இங்ஙனம் உருப்பெறும் மூலதனம்தான் திட்டங்களுக்குரிய முதலீடாக அமைய முடியும். அங்ஙனமின்றிக் கருவூலத்திற்குச் செல்வம் வருவதற்குமுன்பே கண்டபடி திட்டமில்லாத செலவுகளைச் செய்தால் செல்வம் சேராது. நமது நாட்டில் இயல்பாகத் திட்டம் இல்லாத செலவுகள் அதிகம். தனி மனித வாழ்க்கையிலிருந்து நாட்டு வாழ்க்கை நிலை வளர திட்டமில்லாத செலவுகள் மிகுதி என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த முறை கூடாது. அறவே தவிர்க்கப் பெறுதல் வேண்டும். அவசியமாயின் திட்டமில்லாத செலவுகள் 10 முதல் 20 விழுக்காடு வரை வரலாம். செல்வம் தொகுக்கப் பெற்ற பின்பு நாட்டின் வளர்ச்சிக்கு-மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும். செல்வம் வளர்ந்து நுகர்பொருள்கள் சந்தைக்கு வரத்

தொடங்கிய நிலையில் அந்த நுகர்பொருள்கள் எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். நமது நாட்டில் பலர், நல்ல சத்துணவு வகைகளை நுகர்ந்தறியாதவர்கள். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் நாடாக அமைய வேண்டும். யாரானாலும் அதிகாரத்தாலும் பணத்தாலும் பெறும் சலுகைகளை அறவே நீக்க வேண்டும்.

வாழ்க்கை யென்பது துன்பமானதன்று. பொதிசுமையு மன்று. வாழ்க்கை இன்புறு நலன்கள் கூடியதாக மக்களுக்குக் கிடைத்து, மக்கள் களிப்பாக இன்பமாக வாழ்தல் வேண்டும். இன்புறு நலன்கள் என்று கூறின் அவை ஒன்றா? இரண்டா? பலப்பல; அவை உலக அரங்கில் நாளும் வளர்ந்து வருகின்றன. இவையனைத்தையும் மக்கள் ஆர்ந்து அனுபவிக்கும் நாடே நல்ல நாடு.

அடுத்து, பாதுகாப்பு நிறைந்த நாடாகவும் இருக்க வேண்டும். எங்கே பாதுகாப்பு இல்லையோ, அங்கே உற்பத்தி இல்லை; செல்வம் இல்லை; இன்பம் இல்லை; கடைசியாக ஆட்சியும் இல்லை என்றாகி விடும். நாட்டு மக்களுக்கு அரசு வழங்கவேண்டிய பாதுகாப்பைப் பற்றிச் சேக்கிழார் கூறுவதை அறிந்து கொள்ளுதல் நலம்.

> 'மாநிலம்கா வலனாவான் மன்னுயிர்காக் குங்காலைத்
> தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
> ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
> ஆனபயம் ஐந்தும்தீர்த் தறம்காப்பான் அல்லனோ?'

என்பது சேக்கிழார் வாக்கு.

நாட்டை ஆள்பவர்களால், அவர்களுடைய ஆட்சி யால் மக்களுக்குத் துன்பம் வருதல் கூடாது. ஆட்சியால் மக்களுக்கு நேரிடக்கூடிய துன்பத்தில் தலையாயது பயம். பயத்திற்கு மக்கள் இரையாகக் கூடாது. தாய்ப்பசுவினைக் கன்று அணைந்து செல்லுமாப் போல் மக்கள், ஆட்சியை அணைந்து செல்ல வேண்டும். ஆட்சியினரால் துன்பம்

வருவது ஒருபுறம் இருக்க, அவர்களுடைய படை, பரிவாரங்களால் துன்பம் வரக்கூடாது. இன்று நம்முடைய நாட்டில் இத்தகு துன்பம் மிகுதியாக இருப்பதை நடைமுறையில் அனுபவிக்கிறோம். ஏன்? தன் எதிரியை ஒழித்துக்கட்டவே அரசியல் கட்சிகளில் சேர்கிறார்கள். ஒருவர், தன் பகைவரைக் கூட எளிதாகப் பழிவாங்கக் கூடிய வாய்ப்பு நாட்டில் அமைதல் கூடாது. அத்தகைய பழிவாங்கும் செயல் நிகழாதவாறு அரசு பாதுகாப்பு வழங்கவேண்டும். கள்வரால் வரும் துன்பம் அறவேகூடாது. இன்று கள்வர் எங்கு இல்லை! மற்றும் கொடிய விலங்குகளாலும் நச்சுயிர்களாலும் கூட ஆபத்து வராமல் பாதுகாப்பு வழங்கப் பெறுதல் வேண்டும். இத்தகைய பாதுகாப்பு நிறைந்த நாடே நல்ல நாடு.

அடுத்து, திருவள்ளுவர் தள்ளா விளைநிலம் உள்ள நாட்டை வரவேற்கிறார். நிலம் பொதுவே. நிலம், தள்ளா விளையுளாக மாறவேண்டுமானால் அங்கு நல்ல அறிவறிந்த ஆள்வினையுடைவர்கள், உற்பத்தி சார்ந்த உழைப்புடைய வர்கள் வாழ்தல் வேண்டும். தள்ளா விளையுளை முறையாகப் பயன்படுத்தி, பயன்கொண்டு வையகம் பயனுற வாழ்வோரே தக்கார். ஒரு நாட்டில் செல்வர்கள் வாழ் வார்கள். அந்தச் செல்வர்கள் தாழ்விலாச் செல்வர்களாக விளங்குதல் வேண்டும். வஞ்சனையான வழிகளில் பொருள் செய்வோரும், பிறர் அழக் கொள்பவர்களும், பிறர் பங்கைத் திருடுபவர்களும் சமுதாய விரோதிகள். தாமே உழைத்துப் பொருளீட்டுபவர்கள் தாழ்விலாச் செல்வர்கள். இங்ஙனம் ஒரு நாடு சிறந்து விளங்குதலுக்குரிய இயல்பினைத் திருவள்ளுவர் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு' (731)

இத்தகு நாடாக நமது நாட்டை நாம் உருவாக்க வேண்டும்.

மக்கள் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் இன்று இறுக்கிக் கொண்டுள்ள அதிகாரச் செல்வாக்கு, பணச் செல்வர்க்கு ஆகியவற்றின் பிடி விடுபட்டு, எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கை வழியில் ஆட்சி அமைவதற்குரிய எல்லா முயற்சிகளிலும் மக்கள் ஈடுபடவேண்டும்.

மீண்டும் தொகுத்து இக்கால வழக்கியல் வார்த்தைகளில் ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பார்ப்போம்.

1. நாட்டை வளப்படுத்தி வாழக்கூடிய- நாட்டுக்குச் சொத்தாக இருக்கக்கூடிய குடிமக்கள் வேண்டும்.

2. பல குழுக்களாகப் பிரித்து உட்பகையை வளர்த்துக் கொண்டு நல்லாட்சிக்கு இடையூறு செய்யும் மக்கள் கூடாது. சாதி, மதம், கட்சிகள் பெயரால் சண்டையிட்டுக் கொள்ளாத மக்களாக இருத்தல் வேண்டும். அதாவது, சாதிகள் வளரக் கூடாது. பொது வாழ்க்கையில் மதங்கள் தலையிடக் கூடாது. (இந்தத் தீமையை அரசியல் கட்சிகள் நேரிடையாகவோ மறைமுகமாகவோ வளர்க்கக் கூடாது.)

3. மக்கள் நுகர்வுக்குரிய உணவு, உடை முதலியவற்றின் விலை கட்டுப்படுத்தப் பெறுதல் வேண்டும்.

4. வறுமை இருக்கக் கூடாது. தனி ஒருவர் வருவாய், வாழ்க்கைக்கு ஏற்றதாக அமையவேண்டும். (தனி ஒருவர் வருவாய் பற்றிய இன்றுள்ள கணக்கு முறை தவறானது. அதாவது கோடீசுவரனையும் கூழுக்கு அழுபவனையும் ஓரணியில் நிறுத்திச் சராசரி பார்க்கக்கூடாது.)

5. வேலை வாய்ப்பு வேண்டும். அதாவது உழைப்பதற்கு உரிமையும் வாய்ப்பும் வேண்டும். வேலைக்கு

உத்தரவாதம் தருதல் வேண்டும். வேலை தரும் வரை அரசு, ஒரு வாழ்நிலைப்படி தரவேண்டும்.

6. நல்ல சுகாதார, மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் சராசரி வாழ்நாளைக் கூட்டுதல் வேண்டும்.

7. கற்க இயலும் அளவுக்குக் கல்வி கற்கும் உரிமை அனைவருக்கும் வேண்டும். எந்த நிலையிலும் கல்வி இலவசமாகவே வழங்கப் பெறுதல் வேண்டும்.

8. சமாதானமும் அமைதியும் தழுவிய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இத்தகு வாழ்க்கை வசதி நிறைந்த நாட்டை உருவாக்குவது நமது கடமை. நாட்டுப் பணியில் ஈடுபட எல்லாருக்கும் இயலாது. ஆதலால், நாம் இவற்றை நிறைவேற்றக்கூடிய பிரிதிநிதிகளைத் தேர்வு செய்து அவர்களிடம் நாட்டு ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

நல்லாட்சியை அமைக்க மக்களுக்கு உரிமை வழங்குவதே வாக்குச் சீட்டு. இந்த வாக்குச் சீட்டு ஆற்றல் மிக்கது; புனிதமானது. நாம் ஒவ்வொருவரும் 21 வயது நிறைந்தவுடனேயே வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இது நமது கடமை. தலையாய உரிமையும் கூட. அதுமட்டுமல்ல, வாக்காளரும் ஒரு வகையில் ஒரு பதவியுடையவர் என்று கூடக் கூறலாம்.

நமது நாட்டில் கட்சி ஆட்சி நடைமுறைதான் இருக்கிறது. ஆதலால் தனி ஒருவர் தேர்தலில் கணிப்புக் குரியவர் அல்லர். கட்சியின் அமைப்பு, கட்சியின் கொள்கை, கட்சியின் தலைமை, கட்சியின் சென்ற கால வரலாறு ஆகியனவே கவனத்திற்குரியன; ஆய்வுக்குரியன. அதோடு இந்தக் கட்சிகள் வெளியிடும் தேர்தல் அறிக்கைகள் ஆய்வுக்குரியன. நாம் தேர்ந்தெடுப்பவர்கள் ஆட்சியாளர்

களாக வருபவர்கள். அவர்களுக்கு என்ன தகுதி வேண்டும்? சிறந்த செயல்களைச் செய்வதற்குரிய திறமை வேண்டும். மக்கள் நலனுக்குரியவற்றை நாடிச் செய்யும் அறிவும் தெளிவும் வேண்டும்; உறுதியும் வேண்டும். மக்கள் விரும்புவதைச் செய்து மலிவான விளம்பரத்திற்காகவும் தொடர்ந்து அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் மக்களின் அறிவு பூர்வமில்லாத ஆசாபாசங்களுக்கு இரையாகிக் கெடுதல் செய்யக் கூடாது. சிறந்த பணிகளைச் செய்வதற்குரிய கருவிகளைத் தேடி அமைத்துக் கொள்ளும் திறமை வேண்டும். திறமை மட்டும் போதாது. காலமறிந்தும் செய்ய வேண்டும். அதாவது, ஆட்சியில் அமர்பவர்கள் நோய்க்கு மருந்துபோடும் திறமை யுள்ளவர்களாக இருந்தால் போதாது. நோயின் காரணத்தையே மாற்றும் செயல் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதற்குரிய அகக் கருவிகளாகிய அறிவு, திறன் ஆகியன பெற்றிருக்க வேண்டும். புறக்கருவிகளாக விளங்கக்கூடிய தக்காரைத் துணையாகப் பெறுதல் வேண்டும். எல்லா வற்றையும் உரிய காலத்தில் செய்தல் வேண்டும்.

நாட்டை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும் பொழுதும், நல்லாட்சி நடத்தும் பொழுதும் சில தனி நபர்கள் பாதிக்கப்படலாம். அவர்கள் பெரியவர்களாகவும் கூட இருக்கலாம். ஆயினும் தயக்கம் கூடாது. நாட்டின் நலனுடன் சம்பந்தப்பட்ட காரிய சாதனையே குறிக்கோளாக அமைதல் வேண்டும். அடுத்த தேர்தலிலும் தொடர்ந்து அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதும் குறிக்கோள்களாக இருக்கக் கூடாது. அதனால் எதிர்ப்புக்கு அஞ்சாது எடுத்த பணியைச் செய்து முடிக்கவேண்டும். நாள்தோறும் ஆட்சியியலுக்குரிய அரசியல், குடிமக்களியல், தொழிலியல், பொருளியல், நிதியியல் நூல்களைக் கற்றறிதல் வேண்டும். நாட்டு மக்களின் உள்ளத்து இயல்புகளையும், மனப் போக்குகளையும்

நாள்தோறும் கற்றறிதல் வேண்டும். தொடங்கிய பணியைச் செய்து முடிக்கும் திறனுடைய ஆளுமை வேண்டும்.

அடுத்து, ஆள்பவர்களுக்குத் தமது கட்சி இயற்றும் செயல்முறைகளில் மக்களை ஒத்துழைக்கும்படி செய்து கொள்வதற்குரிய சொல்லாற்றல் இருக்க வேண்டும். ஆளுமைத்திறன் வேண்டும். நன்றாற்றும் பொழுது எதிர்ப்படக்கூடிய இடர்ப்பாடுகளைத் தாங்கிக் கொள்ளவும் தொடர்ந்து செயற்படக்கூடிய ஆற்றலும் உளப்பாங்கும் தேவை. செய்யும் பணிகளில் தூய்மை வேண்டும். திருக்குறளில் நேரிடையாகக் கையூட்டு (இலஞ்சம்) பேசப்பட வில்லை. ஆனாலும் திருக்குறள், கையூட்டைப் பற்றியும் பேசுகிறது. நாடாளும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அமைச்சர்களுக்கு வறுமை வந்துற்றபோதும் அவர்கள் பழிக்கப்படுவனவற்றைச் செய்யக்கூடாது என்று கூறுகிறது.

'ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.' (656)

'பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.' (657)

'கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.' (658)

ஆகிய குறள்கள் கையூட்டைப் பற்றியனவேயாம். நாடாள் வோரின் தாய்க்குப் பசி என்றால் வறுமை என்பதுதானே பெறப்படுகிறது. ஈன்ற தாயின் பசி நீக்க இழிவாயின செய்யக் கூடாது என்றால் கையூட்டு வாங்கக் கூடாது. நாட்டின் நிதியை-மக்களின் நிதியைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பது தானே பொருள்! பழியுடன் கூடியதாகிய கையூட்டு, கள்ளக் கணக்கு முதலியவற்றால் வரும் ஆக்கத்தைவிட, நாட்டை ஆள்பவர்களுக்கு வரும் வறுமையே நல்லது என்று கூறியதனாலும் அரசைப் பயன்படுத்தி, நாட்டை ஆளும்

பொறுப்பிலிருப்பவர்கள் பொருள் சேர்ப்பதை விலக்குகிறது திருக்குறள்.

மற்றும், நீதி நூலோர் ஆகாது என்று கூறிய கள், சூது முதலியவற்றால் பொருளீட்டல், ஆளப்படும் மக்களிடத்தில் அச்சத்தினையும் ஆசையையும் காட்டிப் பொருளீட்டல்–அதாவது பரிசுச் சீட்டுக்கள் மூலம் பொருளீட்டல் முதலியன தவறு என்று திருக்குறள் கூறுகின்றது. ஏன், ஆள்பவர்–ஆளப்படுபவர்களிடம் இரந்து கேட்டு வாங்குதலையும் கூட ஆகாது என்று திருக்குறள் மறுக்கிறது. இரப்பவர் ஆட்சியாளர். அவர் கையில் வேல் இருக்கிறது. அதனால் அது இரத்தல் போலத் தோன்றினாலும் மறைமுகமான கையூட்டேயாகும். இல்லை இது கொள்ளையாகக் கருதப்படும். அரசிடம் ஆளப்படுபவர்கள்-மக்கள் இரந்து உயிர் வாழ்தல் கூடாது—ஆகாது என்பதையும் இந்தக் குறள் வலியுறுத்துகிறது. ஆகவே தகுதியுடையவர்களை ஆள்பவர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

சாதி, மதம், உறவினர் என்ற அடிப்படையில் வாக்களிப்பது நல்ல மரபன்று; நன்மையும் பயவாது; தீமையே வளரும். வாக்களிப்பில் பணம் விளையாடக் கூடாது; வாக்கு விற்கப்படுதல் கூடாது. தேர்தலில் வாக்குகளை வழங்குவதில் பணத்தின் செல்வாக்கு, ஆதிக்கம் செலுத்துமானால் எப்போதும் நல்லாட்சியே வாராது. அடுத்து கூட்டங்களைக் கூட்டிக் காட்டி பிரமிக்க வைத்து இவர்களே வெல்வார்கள் என்ற முடிவை எடுத்துக் கொள்ளச் செய்து தேர்தலில் வெற்றி பெற முயல்பவர்களுக்கு வாக்காளர்கள் வாக்களிக்கின்ற அறியாமை அகல வேண்டும். அதோடு கவர்ச்சி முதலியவற்றினாலும் வாக்குகள் வாங்குவதற்கு முயலக் கூடாது. வாக்காளர்கள் அறிவார்ந்த முறையில் சிந்தித்துத் தெளிவான முடிவை எடுத்துக் கொண்டு வாக்களித்தல் வேண்டும். இத்தகு அறிவார்ந்த செயல்முறைக்கு அரசியல் கட்சிகள் துணை செய்ய வேண்டும்.

தீ·IV·19

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.' (517)

என்ற திருக்குறளின்படி நாட்டின் நலிவை நீக்கி, நல்வளந்தர, மொழி வளர, கல்வி-அறிவு பெருகி வளர, ஆள்வினையும் தொழில் வினையும் பெருகி வளரத் தக்க வகையில் எந்தக் கட்சியால் ஆட்சி செய்ய இயலுமோ அந்தக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும். இது வாக்காளர்கள் கடமை.

7

வாழ்க்கைத் துணைநல வாழ்த்து

1

திருக்குறள், குடும்பத் தலைவியை "வாழ்க்கைத் துணை நலம்" என்று போற்றுகிறது. தலைவனுக்குத் தலைவி இல்லறத்துக்கு வாய்த்த துணை என்று வாளா கூறாமல் அதன் பயனாகவே "துணை நலம்" என்று சொல்லும் பாங்கை உய்த்தறிக.

கற்பு, நுண்ணிய நலமுடையது. அன்பின் ஆக்கம் கற்பு. மனம், வாக்கு, உடலைக் கடந்தது கற்பு. இத்தகு புனிதக் கற்பைச் சிறை காக்க இயலாது. தலைவனாலும் காத்தல் இயலாது. ஆதலால் 'தற்காத்து' என்றார். காமம் ஒரு பசி. பசி தீர்ந்துழியன்றி வேட்கை தீராது. கணவனின் கற்பினைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பும் தலைவியிடமே உள்ளது. ஆம்! தலைவனைப் பரத்தையின் வழிச் செல்லாமல் தடை செய்து காத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு, தலைவியினுடையதேயாம்.

தலைவன்-கணவன் புகழ் பெரியது. அது வழிவழியாக ஈட்டப்பட்டதாகக் கூட அமையலாம். கணவன் பீடுநடை போட வேண்டுமானால், தலைவி-வாழ்க்கைத் துணை நலம்

வளத்திற்குத் தக்க வாழ்வு அமைத்து 'இல்லை' என்ற சொல் இல்லாமல் செய்து, வருகின்ற விருந்தினை உபசரித்து அனுப்புவாளாயின் அவள்தம் குடும்ப நிர்வாகம், அன்பியல் தழுவிய வாழ்வியல் தலைவனுக்கு - கணவனுக்குப் பெருமையைத் தருகிறது. ஒரோவழி இழுக்கு வந்தாலும் அந்த இழுக்கு வழுக்கலாகிவிடாமல் தடுத்து மடை மாற்றி வாழ்வியலைச் செப்பம் செய்து உயர்த்துவதே வாழ்க்கைத் துணை நலம். திருநீலகண்டர் மனைவியும் கண்ணகியும் இதற்கு எடுத்துக்காட்டாவர்.

கண்ணகி தன் கணவனின் புகழை, தன் குடும்பப் புகழைக் காக்கவே பாண்டியனின் அரசவையில் போராடினாள். கணவனின் புகழைக் காத்தல் வேண்டும். குடும்பத் தலைமகள்-வாழ்க்கைத் துணைநலம் சோர்வற்ற வளாகத் திகழ்தல் வேண்டும். வாழ்க்கைத் துணைநலமே இன்பத்திற்கு-அறத்தின் ஆக்கத்திற்கு, புகழுக்கு- அனைத்திற்கும் அடிப்படை.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'. 56

என்பது திருக்குறள்.

2

நாற்றங்காலில் நாற்று வளரும்! பருவம் வந்தவுடன் பறித்துக் கழனியில் நடப்பெறும். அந்த நாற்று பயிராகக் கழனியில்தான் வளர வேண்டும். கதிர் ஈன வேண்டும். கழனி பிடிக்கவில்லை என்று, திரும்ப நாற்றங்காலுக்கும் நாற்றுப் பயிர் வர இயலுமா! அது போலத்தான் பெண்! பெண்ணுக்குப் பிறந்த வீடு நாற்றங்கால்! திருமணம் செய்து கொண்டு புகும் வீடு கழனி. அப்பரடிகளும் தேவாரத்தில் "அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை"; "தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!" என்றார். ஆதலால் நீ

மனைவியாகச் செல்லும் வீடு, ஊர் இவற்றின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வாழக் கற்றுக்கொள்! பழகிக்கொள்! நாம் இங்ஙனம் கூறுவது ஒத்துப்போவதுக்குரியது.

திருமணத்திற்குப் பிறகு இயல்பாகவே கணவனுக்கும் சரி, மனைவிக்கும் சரி பழக்கங்கள் மாறும்! இஃது இயற்கை! ஆம்! தம்முள் மாறி அன்பு காட்டுவதால் சுவை முதலியன கணவனுக்கு மனைவியைச் சார்ந்தும் மனைவிக்குக் கணவனைச் சார்ந்தும் ஏற்படுகின்றன. ஆதலால் கணவன் உவப்பனவற்றை உவந்து ஏற்றுக்கொள்! கணவனின் சுற்றத்தை உன் சுற்றமாக ஏற்றுக்கொள்! தமிழ் மரபில் சுற்றம் பேணல், குடி செயல் போன்ற அறங்கள் இல்லறத்தார் செய்ய வேண்டியவை. அந்த அறங்களை உன் கணவன் செய்வதற்குத் துணையாக இரு. குடும்பத்தின் சூழலில் அமைதி நிலவினால் தான் மகிழ்ச்சியுடன் வாழ முடியும். ஆதலால், எந்தச் சூழ்நிலையிலும் குடும்பத்தின் அமைதியைப் பாதுகாத்துக் கொள்ளத் தவறிவிடாதே!

அன்புள்ள செல்வி!

நீ, படித்த பெண். உனக்கு அதிகம் எழுத வேண்டுமா என்ன? நீ, கணவன் வீட்டுக்குப் போகும் பொழுது திருக் குறளை எடுத்துக் கொண்டு போ! அடிக்கடி திருக்குறளைப் படி! திருக்குறள் காட்டும் நெறியில் வளர்க! வாழ்க!

3

விருந்தோம்பல் என்பது உலகந் தழீஇய பண்பு. நமது நாட்டில் விருந்தோம்பல் பண்பைப் பாராட்டிப் புகழாத இலக்கியம் இல்லை. தொல்காப்பியம் முதல் திருஞான சம்பந்தர் தேவாரம் வரை விருந்தோம்பல் பண்பு பாராட்டப் படுகிறது. பெரியபுராணத்தில் விருந்தோம்பற் பண்பு போற்றப்படுகிறது.

விருந்தினர்கள் - புதியவர்கள்; முன்பின் அறிமுகம் ஆகாதவர்கள். இது மரபுவழிக் கருத்து. வீட்டிற்கு வரும் விருந்தினரை இனிய முகத்துடன் வரவேற்று உணவளித்து உபசரிக்க வேண்டும். உணவைவிட உபசரணை முக்கியம். உபசரணையின் தரம் குறைந்தால் விருந்தினர் வருந்துவர்; விருந்தினரை உபசரிப்பது ஒரு பண்புமட்டுமல்ல; கலையும் கூட; இல்லற வாழ்க்கையின் கடமை வரிசையில் விருந்தோம்பலும் இருக்கிறது.

செல்வி! நீ எப்போதும் விருந்தினரை வரவேற்று உபசரிக்க ஆயத்தமாக இரு! குறைந்த நேரத்தில் சமைக்கக் கூடிய பண்டங்களைச் சேகரித்து வைத்துக்கொள்! கணவன் வீட்டிலிருக்கும் பொழுது விருந்தளிப்பது என்பது முறை. தவறுகள் நிகழாமல் தவிர்க்க இது அவசியம். கூடுமானவரை யில் விருந்தினரை அழைப்பது, குறித்த நாளில் குறித்த நேரத்தில் வரும்படி அழைப்பது ஆகிய நற்பழக்கங்களை நீயும் பழகிக்கொள்; விருந்தினரையும் பழக்கு.

நமது நாட்டில் விருந்தினர் திடீரென்று வந்து விடுவர். கணவனும் வீட்டில் இல்லை. என்ன செய்வது? அறச்சங்கட மாகிவிடும். எனவே, ஒரு மாதத்தில் சில நாட்கள் விருந்தினர் களுடன் இருப்பது, கூடி உண்பது என்ற நல்ல பழக்கத்தை நடைமுறைப்படுத்தலாம். இஃது ஒரு நல்லமுறை. விருந்தோம்புதல் தலைமைப் பண்பு; தலையாய கடமை; விருந்தோம்பல் மூலம் சுற்றம் விரிவடையும்; மன அமைதி யுடன் கூடிய மகிழ்ச்சியுடன் வாழலாம்! விருந்தோம்புக! விருந்தோம்புதலைக் கடமையாகக் கொள்க!

4

நீ, குடும்ப அடிப்படையிலும் சுற்றத்துச் சூழ்நிலை யிலும் பலருடன் கூடி வாழும் நிலை உருவாகியிருக்கிறது.

இங்ஙனம் கூடிவாழ்தல் ஒரு கலை; பண்பு; நாகரிகம். ஆயினும் கூடி வாழ்தல் எளிதான ஒன்றன்று.

கூட்டு வாழ்க்கைக்கு முதற்பகை அழுக்காறு. "அழுக்காறு என ஒருபாவி" என்று திட்டித் தீர்ப்பார் திருவள்ளுவர். ஆம்! மற்றவர்களைப் பார்த்து அழுக்காறு கொள்ளாதே! மற்றவர்களுடைய அழகை நீயும் ஆராதிக்கக் கற்றுக்கொள்! மற்றவர்களுடைய திறமையைப் போற்றிப் பாராட்டி உன்திறமையை வளர்த்துக் கொள்க!

ஆசைப்படாதே! – இது என்ன துறவிக்கு உபதேசமா? இல்லை, இல்லை! இல்லறத்தில் வாழப்போகும் அருமைச் செல்விக்குத்தான் ஆலோசனை! ஆம்! மற்றவர்களிடம் இருப்பதற்காக நீயும் வேண்டும் என்று ஆசைப்படாதே! "தேவைகளின் பெருக்கமே வறுமை" என்று ஓர் அனுபவ வாக்கு உண்டு. ஆதலால், உனது குடும்ப வருவாய் அளவில் அனுபவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களைப் பார்த்து, தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்து ஆசைப்படக் கூடாது. யாரையும் கோபித்துக் கொள்ளாதே! சினம் சேர்ந்தாரைக் கொல்லும்! வேண்டாம் சினம்! எந்தச் சூழ்நிலையிலும் கோபம் வேண்டாம்! கடுஞ்சொல் கழறுதல் தீது. கொடிய சொற்களைக் கூறாதே! இனிமையாகப் பேசக் கற்றுக்கொள்! இனிய சொற்களையே வழங்குக! இந்தப் பண்பியல்புகளை நீ பெற்று விளங்கினால் உன் இல்லறம் சிறக்கும். சுற்றத்தார் சுற்றமாகச் சூழ்வர். வாழ்க்கையில் அமைதி இருக்கும். மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும்!

5

நல்ல வண்ணம் இல்லறம் அமைய இரண்டு பண்புகள் இன்றியமையாதன. ஒன்று, அன்பு; பிறிதொன்று, அறம். அன்புள்ள செல்வி! குடும்பத்தலைவி, அன்பின் பிரதிநிதி.

குடும்பத்தலைவன் அறத்தின் பிரதிநிதி. அன்பு-பண்பு. அறம்-பயன்.

அன்புள்ள செல்வி! அன்பு, அர்ப்பணிப்புத் தன்மையுடையது. நெகிழ்ந்து கொடுப்பது; வாழ்வித்து வாழ்வது. அன்பு, ஒரு பண்பு. அறம், வாழ்க்கையின் இலட்சியம்; குறிக்கோள். அறம் செய்ய உடல் வலிமை தேவை; வண்மை தேவை; துணிவு தேவை. அறத்தில் நெகிழ்ந்து கொடுத்தல் இயலாது. அன்பு என்ற பண்பின் உறைவிடமாகக் குடும்பத் தலைவி விளங்கினால் குடும்பத்தில் இன்பச் சூழல் அமையும்; அமைதி நிலவும்; உண்பன கிடைக்கும்; ஊரவர் கேண்மையும் கிடைக்கும். அன்பு, குடும்பத்திற்கு உயிர். அறம் பலரையும் வாழ்விப்பது. ஈதல், அறம். அறநெறிபேணும் குடும்பத் தலைவன் நாட்டிற்கும் வீட்டிற்கும் அரணாவான். வாழ்க்கையின் பயனே அறம். இல்லற வாழ்க்கையையே அறம் என்பார் திருவள்ளுவர். "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று திருக்குறள் இல்லற வாழ்க்கையைப் போற்றுகிறது. ஆயினும் அந்த இல்லறம் பிறர் பழிக்க இயலாதவாறு அமைதல் வேண்டும். அன்பின் பிரதிநிதியாக வாழ்ந்த கண்ணகி, காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசி யார் முதலிய மாதரசிகளை முன்னுதாரணமாகக் கொள்க. ஆனால் இந்த மாதரசிகளின் வாழ்க்கையில் வாய்த்த கணவன்மார்கள் அறத்தின் பிரதிநிதிகளாக இருக்கத் தவறி விட்டார்கள். ஆயினும் பொறுத்தாற்றும் பண்புடன்-தத்தம் கணவன்மார்களை நெறிப்படுத்திய பெருமை இவர்களுக்கு உண்டு. இளமை மீதூர எளியராகி-ஒழுக்கநெறி தவறிய திருநீலகண்டரை அவர்தம் மனைவி நெறிமுறைப்படுத்திய வரலாறு நுட்பமானது. மனைவியின் ஆணையை ஏற்றுக் கொண்டு மனைவியுடன் ஒரே வீட்டில் வாழ்ந்து இல்லறக் கடமைகளில் வழுவாமல் வாழ்ந்துள்ளார். ஆயினும் புணர்ச்சி இல்லை. இந்த அற்புது புணர்ச்சியின்மை அயலவருக்குத் தெரியாது. சொற்காக்கும் கற்புடைப்

பெண்ணுக்கு இது சான்று. செல்வி உன் இல்லறத்தைத் திட்ப நுட்பத்துடன் இயக்குக. செல்வி! நீ அன்பாக வாழ்! அன்பே ஆகுக! நின் வாழ்க்கைத் துணைவர் அறத்தோடு நிற்கத் தூண்டுக! துணை செய்க!

6

மங்கலமானது மனையறம். ஆம்! மனையறத்தின் சிறப்புக்கள் அனைத்தும் பொருந்திய மனைமாட்சியே மங்கலமாகும். அன்பு நிறைந்த மனைவி. வளமாக வாழச் செல்வம், செல்வச் செழிப்பின் நற்றாயாகிய அறிவு, செல்வச் செழிப்பின் செவிலியாகிய உழைப்பு, மங்கலத்தைச் சிறப்பிக்கும் விருந்தோம்பல், ஒப்புரவு அமைந்த வாழ்க்கை முறை அமையுமாயின் அந்த மனையறம் மாட்சிமைப் பட்டது தானே! மங்கலம் நிறைந்ததுதானே!

மங்கலமாகிய மனைமாட்சியின் பயன்-நன்கலம் நன் மக்கட் பேறு! செல்வி! மனையறம் சிறப்புடையதெனப் போற்றப்படுதலுக்கு முதற்காரணம் ஒருயிர்க்கு உய்தியளிக்கக் கூடிய இந்த வையக வாழ்க்கையை வழங்குவதனால்தான்! மனைவாழ்க்கையின் சிறந்த பயன் இன்பம் மட்டுமல்ல, மக்கட்பேறும் கூட!

செல்வி! உனக்குப் பிறக்கும் நன்மகனும், நன்மகளும் நாட்டுக்கு நலம் சேர்ப்பர். வாழ்க! உன் மனைமங்கலம்! வளர்க, நின் மக்கட் செல்வம்.

7

இல்லறம் அறம் எனப் போற்றப்படுகிறது. நமது நாட்டில் துறவறம் மிகச் சிறப்புடையதெனவும் போற்றப் படுகிறது. ஆனால் துறவறத்தினும் இல்லறமே கடினமானது; பொறுப்பு நிறைந்தது. எப்படி?

பெரும்பாலும் துறவியர் வாழ்க்கை தனிமனித நிலையிலானது; ஒரு ஆள் சைக்கிளில் போவது போன்றது. இல்லறம் இரண்டு பேரையும் அதற்கு மேலும் பலரையும் சார்ந்தது. இரண்டு பேர் சைக்கிளில் போவது போல் ஒருவர் சைக்கிளில் போவதில் விபத்து நடக்க வழியில்லை. அப்படியே விபத்து நடப்பினும் ஆபத்து குறைவு; துன்பம் குறைவு. ஆனால், இல்லறம் என்பது அப்படியல்ல. இரண்டு பேர் சைக்கிளில் சவாரி செய்வது போன்றது. ஓட்டுநர் கணவர். பின்னே உட்கார்ந்திருப்பவர் மனைவி. ஓட்டுநர் ஒழுங்காக ஓட்டாவிட்டாலும் விபத்து ஏற்படும். அல்லது பின்னே உட்கார்ந்திருப்பவர் சரியாக இல்லாமல் ஆடினாலும் விபத்து ஏற்பட்டுவிடும். மேலும் ஒன்றிரண்டு ஆண்டுகளான பின் நபர் எண்ணிக்கை கூடும். ஆதலால் செல்வி, நிதானமாக இல்லறத்தை நடத்தக் கற்றுக்கொள். எந்த ஒரு சிறு பாதிப்பும் ஏற்படாமல் நடத்தக் கற்றுக்கொள்; கணவனையும் நெறிப்படுத்துக.

குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் கடன் கூடாது. "இரவில் வெறும் வயிற்றோடு கூடப் படுக்கலாம்; கடனோடு படுக்கக் கூடாது" என்பர். ஆதலால் குடும்ப வருவாய்க்குத் தக்கபடி குடும்பத்தை நடத்து. நீயும் சோம்பலாக இல்லாமல் பொருளீட்ட முயற்சி செய்ய வேண்டும். வீட்டுக் கொல்லையில் தோட்டம் அமைத்தல் நல்ல முயற்சி. நல்ல பச்சைக் காய்கறிகள் உண்ணக் கிடைக்கும். வீட்டு உபயோகம் போக மீதியை விற்றும் காசாக்கலாம். அடுத்து, வீட்டில் ஒரு பசு இருப்பது அழகு. திருமகள் நலம் வந்து சேரும். வீட்டில் எல்லாருக்கும் பூரண உணவாகிய பால் கிடைக்கும். எஞ்சியதை விற்றுக் காசாக்கலாம். தையல் முதலிய வீட்டுத் தொழில் செய்யலாம். இங்ஙனம் செய்து பொருள் ஈட்டுதல் வருவாய்க்குத் துணை செய்யும். பொழுதும் நல்ல வண்ணம் கழியும். சுறு சுறுப்பாக வாழலாம்.

8

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்,' 56

என்ற திருக்குறளில் "தற்கொண்டாற் பேணி" என்ற தொடருக்குப் பரிமேலழகர், "கணவனை உண்டி, முதலியவற்றால் பேணல்" என்று கூறினார். நல்ல உணவு, உடல் நலத்திற்குத் தேவை. நல்ல உடல் நலம் குடும்ப வாழ்க்கைக்குத் தேவை. ஆதலால், சமவிகிதச் சத்துணவு குடும்பத்தில் எல்லோருக்கும் கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அரிசிச் சோற்றைக் குறை! காய், கனி வகைகளை அதிகப்படுத்து! அளவுக்கு அதிகமாக வேக வைத்து உணவுப் பொருள்களின் சத்தை வீணாக்கிவிடக் கூடாது; அளவோடு வேக வைக்க வேண்டும். காரட் முதலியவற்றை வேக வைக்கக்கூடாது. பச்சையாகவே உண்ண வேண்டும். நெய்யை உருக்கியும் மோரைப் பெருக்கியும் பயன்படுத்த வேண்டும். உடலுக்குத் தேவையான உணவுகளை முதலில் பரிமாறவேண்டும். சுவையானவற்றைக் கடைசியில் பரிமாற வேண்டும். அன்றாட உணவில் பருப்பு, தான்யவகைகள் தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதுபோலவே, முருங்கைக் கீரை முருங்கைக்காய், கருணைக்கிழங்கு முதலியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். தூதுவளைக் கீரை எல்லா வகையிலும் உயர்ந்தது; சுண்டைவற்றல் எத்தனை ஆண்டானாலும் வறுத்தாலும் சத்துக் கெடாது. வாரத்திற்கு ஒரு நாளாவது சுண்டைவற்றல் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்ல உணவு வழங்கும் அன்னபூரணியாக, அட்சய பாத்திரமாக வளர்க!

கூடுமான வரையில் குடும்பத்தில் எல்லோரும் ஒன்றாகக் கூடி உட்கார்ந்து உரையாடிக்கொண்டு உண்பது

நல்ல பழக்கம். நம்மில் சிலர் உண்ணும் பொழுது பேசக் கூடாது என்பர். இது தவறு. "உண்ணும்பொழுது உரையாடா" திருப்பது மரபன்று; "காகம் போல் உறவு கலந்து உண்பதே" நமது மரபு. உரையாடலில்தான் உறவு வளரும். கூடி உண்ணும் பழக்கத்தைக் குடும்பத்தின் நடை முறையாக்குக.

9

நீங்கள் புது வீடு கட்டி அதில் குடியேறியிருக்கிறீர்கள் என்று அறிய மகிழ்ச்சி. ஆம்! பழங்காலத்தில் ஒவ்வொரு தலைமகனும் தானே பொருளீட்டி மகட்கொடை தந்து திருமணம் செய்து கொண்டான். இன்றோ தலைமகன் மணமகள் வீட்டாரிடம் கொடை எதிர்பார்க்கிறான். இது மரபும் அன்று, அறமும் அன்று. அதுமட்டுமா? ஒவ்வொரு குடும்பத்தினரும் அக்குடும்பத்தின் தலைவன் ஈட்டிய பொருளில் வீடு கட்டி வாழ்வர். அந்த வீட்டில் தாமே ஈட்டிச் சேகரித்த பொருள்களைக் கொண்டு சுவையாகச் சமைத்துத் தமது சுற்றத்தாருடன் கூடி உண்பர். இங்ஙனம் வாழ்கின்ற இன்பம் இல்லற இன்பம் மேலானது என்பது திருக்குறள் கருத்து.

> 'தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு' 1107

என்பது குறள்.

தமிழர் மரபில் கூட்டுக் குடும்பம் கிடையாது. கூட்டுக் குடும்ப முறை அயல் வழக்கு. இளங்கோவடிகள் கோவலன் கண்ணகி தனிக்குடித்தனம் தொடங்கியதை மனையறம் படுத்த காதையில் விவரிக்கின்றார். இன்றும் பழந்தமிழ் நாகரிகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு வாழும் நகரத்தார் சமூகத்தில் 'வேறு வைத்தல்' என்ற பெயரில் மகன்–மருமகளுக்குத் தனிக்குடும்பம் அமைத்தல் என்ற நிகழ்ச்சி

முறை இருக்கிறது. கூட்டுக் குடும்பத்தில் வெற்றி காண்பவை மிகச் சில குடும்பங்களே! பல குடும்பங்கள் மன முறிவு களுக்கு ஆளாகின்றன. வாழ்க்கையின் சுவை, நபர்கள் தோறும் மாறுபடும். வாழ்க்கையை அனுபவிக்கும் திறன் களும் முறைகளும் கூட மனிதருக்கு மனிதர் வித்தியாசப் படும். இந்த வித்தியாசத்தை ஒரு சில மூத்தோர்களே தாங்கிக் கொள்வர்; ஒருக்கால் தாங்க இயலாதது எனக் கருதின் இதமாக அறிவுறுத்தி நெறிப்படுத்துவர்! மிகப் பலர் உளப்பாங்கியல் அறியாவண்ணம் இடித்துரைத்துக் காயப் படுத்துவர்; இல்வாழ்க்கையைக் கசப்பாக்கி விடுவர். தலை மகன் பாடு திண்டாட்டம்! தாயின் பக்கமா? தாரத்தின் பக்கமா? இந்தச் சிக்கல்களைத் தவிர்த்து அமைதியான நல் வாழ்க்கைக்கு வழி கோலுவது தனிக்குடும்ப அமைவேயாம்.

அப்படியானால் குடும்பப் பரிவு பாசம் பாதிக்காதா? என்று கேட்கலாம். மாமன் மாமி உறவு பாதிப்புக்குள்ளா காதா? என்று கேட்கலாம். ஒருக்காலும் பாதிப்புக்குள்ளா காது. பிரிவு அன்பைத் தூண்டி வளர்க்கும். அன்பைச் செழுமையாக வளர்க்கப் பிரிவு துணை செய்வது போல வேறொன்றும் துணை செய்யாது. பிரிவு, பிரிந்தவர்களின் அருமைப் பாட்டினை அறிந்துகொள்ள உதவியாக இருக்கும். அதனால்தான் போலும் களவியலில் கூடக் காதலுக்குப் பிறகு பிரிவு வைத்தனர். மாணிக்கவாசகர் இறைவனைக் கண்டு பின் பிரிந்ததால்தான் அன்பின் பிழிவாகிய திருவாசகம் கிடைத்தது. சின்னமனிதர்கள் அல்லது அற்ப மனிதர்கள்தான் பிரிவில் மறப்பர். இத்தகைய மனிதர்கள் ஒன்றாக இருந்தாலும் ஒருமை நலத்துடன் வாழ்வர். குடும்பத்தில் கோள் முதலியவற்றால் கலகம் விளைவிப்பர். வளர்ந்தவர்கள் பிரிவின் பொழுது அன்பினை வளர்த்துக் கொள்வதால் உணர்ச்சி கலந்த நட்புப் பாங்கு வளரும்.

செல்வி, அடிக்கடி மாமனார் மாமியார் வாழும் இல்லத்திற்குச் செல்! அவர்களுக்கு உவப்பான பண்டங்

களை எடுத்துக் கொண்டுபோய் வழங்கு! நலம் கேள்! நலம் செய்! அன்பாகப் பேசு! மாதத்தில் சில நாள் உன் வீட்டுக்கு அழைத்து வா! நல்ல வண்ணம் உபசரணை செய்! அவர்கள் உவப்பன செய்! ஆல் போல் தழைத்துக் குடும்பம் வளரும்; உறவு வளரும்.

குடும்பத்தின் வளர்ச்சிப் படிகளில் ஏறும் பொழுதெல்லாம் அவர்களிடம் ஆலோசனை பெறத் தவறாதே! நல்ல நாள்களில் குடும்பத்துடன் வந்து மாமனார், மாமியாரை வணங்கி வாழ்த்துப் பெறவும் தவறாதே! நல்ல குடும்பப் பாங்குடன் நடந்து கொள்! வெற்றி பெறுவாய்.

10

மகிழ்ச்சியுடன் உன் மனையறம் சென்று கொண்டிருப்பது மன நிறைவைத் தருகிறது. மகிழ்ச்சியைத் தருகிறது. அதுசரி! குடும்ப வரவு-செலவு இருக்கிறது. குடும்பப் பொருளாதாரம் முக்கியமானது. அதனால் வரவு- செலவுத் திட்டமிட்டுக் குடும்பத்தை நடத்துகிறாயா! நமது நாட்டு அரசாங்கங்களைப் போலப் பற்றாக்குறை நிதி நிலையுடன் வாழ்கிறாயா? நாட்டின் அரசுகளுக்குப் பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டம் இருப்பது நல்லதல்ல. ஆயினும் தீமையாகாது. ஏன் எனில் பரந்துபட்ட மக்கள் தொகையுடன் சம்பந்தப்பட்டது, அரசின் வரவு - செலவுத் திட்டம். ஆனால், குடும்பம் வரவுக்குத் தக்க செலவுதான் செய்ய வேண்டும். குடும்பப் பொருளாதாரத்திற்குப் பிறிதொருவரை, நெருங்கின சுற்றத்தாரைக்கூட, தந்தை, தாய், மாமன் மாமியாரைக் கூடச் சார்ந்து வாழ்தல் கூடாது. அதனால் திருவள்ளுவர், குடும்பத் தலைவியை "வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்றார். முன்பு ஒரு கடிதத்தில் இதுபற்றி எழுதியிருப்பதை மீண்டும் படி.

பொருள் நலம் பேணல் குறித்துத் திருவள்ளுவர் அருமையான நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார். தேவைக்கேற்பத் தாமேமுயன்று பொருள் ஈட்டுதல் நன்று. அஃது இயற்கையாகப் பலருக்கு இயலாத ஒன்று. ஆதலால் வருவாய் பெருகி வளரவில்லை யெனில் கவலைப்பட்டு என்னாவது? மற்றவர் கைப் பொருளை எதிர்பார்ப்பதும் கேட்பதும் இழிவானது மட்டுமல்ல. அவர்களுடைய சூழலையும் பாதிக்கும்! மிச்சம் மனத்துன்பமும் பகையும்தான்! எல்லா இடங்களிலுமே எல்லாருடைய வீடுகளிலுமே பொருளியல் சிக்கல் இருக்கும். நாம் மற்றவருக்குத் தொல்லை தரக்கூடாது. ஒரு சிலர் மற்றவர்களுடைய வேதனை புரியாமல் பணம் கேட்டுத் தொல்லைப் படுத்துவர். இது வாழும் இயல்பன்று. வருவாய் பெருகி வளரவில்லை யாயினும் செலவுத்துறை அகலாமல் இருந்தால் செல்வம் பெருகும்; வளரும்.

> 'ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
> போகாறு அகலாக் கடை,' 478

என்பது திருக்குறள். ஆதலால் குடும்ப வரவு-செலவைத் திட்டமிட்டு இயக்கு. வரவுகளை வங்கியில் இட்டு வைத்து எடுத்துச் செலவு செய்! செலவு செய்யும் உணர்வுக்கு வங்கி ஒரு பாதுகாப்பு! கையிலிருந்து காசுகள் செலவாவதைவிட, வங்கியில் இயக்கும் செலவில் சிக்கனம் ஏற்படுகிறது. வங்கி, செலவைக் கண்காணிக்கும் உணர்வைத் தருகிறது. இது நமது அனுபவமும் கூட!

வரவுக்குள் செலவு செய்யத் திட்டமிடு! செலவுத் திட்டத்தில் முதற் செலவு என்ன தெரியுமா? எதிர்வரும் காலத்திற்குச் சேமித்தல்தான் முதற் செலவு! நம்மில் பலர், "வாழ்க்கையை நடத்தவே வரவு போதவில்லை. எங்ஙனம் சேமிப்பது?" என்பர். இது தவறு. உழைத்து ஈட்டும் காலத்தில் சேமிக்கத் தவறிவிட்டால் உழைக்க இயலாத காலத்தில்

என்ன செய்வது? தவறான பொருளியல் நடை முறையினால் தான் குழந்தைகள் பெற்றோரையும், பின் பெற்றோர்கள் பிள்ளைகளையும் சார்ந்து வாழ்கிறார்கள். சார்ந்து வாழ்தல் சுதந்திரமற்றது; மதிப்பு இழந்தது. தன்மானத்திற்கு எதிரானது. குடும்பங்களில் இரண்டு மூன்று சேமிப்புக் கணக்குகள் தொடங்க வேண்டும். குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு சேமிப்புக் கணக்கு அல்லது ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பிரிமியம் கட்ட வேண்டும். அவர்கள் வளர வளர அந்தச் சேமிப்பும் வளர்ந்து அவர்கள் படிப்பு, திருமணம் முதலிய வற்றிற்குப் பயன்படும். அதுபோகக் குடும்பத்திற்கென ஒரு சேமிப்பு எப்படியும் வருவாயில் 10 விழுக்காட்டுக்குக் குறையாமல் 25 விழுக்காடு வரையில் சேமிக்க வேண்டும். இந்தச் சேமிப்புக்குப் பிறகு எஞ்சிய தொகையில்தான் வாழ்க்கையை நடத்த வேண்டும். வாழ்க்கைச் சடங்குகளைக் குறைந்த செலவில் நடத்த வேண்டும். சாமி கும்பிடுவதில் அதிகம் செலவழிக்கக் கூடாது. பொருட் செல்வம் போற்றுவார்கண் உண்டு, என்ற திருக்குறளை மறவற்க.

11

நீ, தாயாகப் போகும் செய்தி செவிக்கினிய செய்தி! தாய்மைப்பேறு தவம் செய்து பெறும் பேறு. "இறைவன் அடிக்கடி உலகத்திற்கு, தான் வர முடியாமையால் தாயைப் படைத்தான்!" என்று கூறுவர். தாய் அற்புதமான வியக்கத்தக்க படைப்பாளி! தாயின் கருப்பையே மானுடத்திற்கு வடிவம் தருகிறது; பொறி, புலன்களை வழங்குகிறது. கருவுற்ற எட்டாவது மாதத்திலிருந்தே குழந்தைக்குப் புலன்கள் இயங்கத் தொடங்கி விடுகின்றன. இந்தக் காலம் தொட்டே தாய்க்கு நல்ல சிந்தனை தேவை. நல்ல நூல்களைப் படித்தல், படிக்கச் செய்து கேட்டல் முதலிய பழக்கங்கள் தேவை. ஒரு குழந்தை கருவுற்ற எட்டாவது மாதத்திலிருந்து அது பிறந்து எட்டு வயது

வரையில் கவனத்துடன் பேணி வளர்த்தால்-அறிவு நலமும் அன்பு நலமும் செழுமிய நிலையில் வளர்த்தால் அந்தக் குழந்தை சிறப்புற வளரும். இந்த உலகை வென்றெடுக்கும் குழந்தையாக விளங்கும்.

குழந்தைகளை வளர்க்க வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர்,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை; அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற' 61

என்றார். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வி வழங்குவதுடன் பண்பாட்டுடன் பழக்கி வளர்க்க வேண்டும். எந்த அவைக்குச் சென்றாலும் முதலில் இருக்கும் நிலைக்குரிய தகுதியுடன் குழந்தையை வளர்க்க வேண்டும். நல்ல தாய், நல்ல தந்தை என்ற பெயரைப் பல்கலைக் கழகம் தர இயலாது. நம்முடைய குழந்தைகளின் வாழ்வியலை மையமாகக் கொண்டு, அளவு கோலாகக் கொண்டு நாடு வழங்குவதாகும்! ஆதலால், செல்வி! உங்களுக்குப் பிறக்கும் குழந்தையை நன்றாக வளர்த்துப் புகழுக்குரியவராக்குக! குழந்தை பிறந்தவுடன் எழுது. வாழ்த்துக்களும் விளை யாட்டுப் பொறிகளும் அனுப்பி வைக்கின்றோம். உங்கள் குடி விளங்க வரும் மக்களுக்கு வரவேற்பு! வாழ்த்துக்கள்.

தி.IV.20

8

திருக்குறள் காட்டும் நீதி

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. ஆயினும் உலகில் தோன்றிய அரசியல், சமூக சமய நூல்கள் பலவற்றுள்ளும் சிறந்து விளங்குவது. கிரேக்க நாட்டுச் சிந்தனையாளன் சாக்ரடீஸின் மறு பிறப்போ என்று எண்ணக்கூடிய அளவுக்குச் சாக்ரடீஸின் சிந்தனையுடன் திருவள்ளுவர் சிந்தனை ஒத்துள்ளது.

அதுமட்டுமல்ல. சாக்ரடீஸ் முடியரசை ஆதரித்தார். முடியரசை அரசின் அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள அரசனுக்கு ஆலோசனை கூறினார்.

மக்களைக் கேளிக்கைகளிலும் திருவிழாக்களிலும் ஈடுபடும்படி செய்து அரசைப் பற்றி, அரசியலைப் பற்றி, அரசின் நடைமுறைகளைப் பற்றிச் சிந்திக்கின்ற வாய்ப்பை வழங்காதிருக்கும்படி ஆலோசனை கூறினார்.

ஆனால், திருவள்ளுவர் முடியாட்சியைச் சார்ந்து எழுதினாலும் அரசனின் ஆட்சி மக்களைத் தழுவியதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

> 'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
> அடிதழீஇ நிற்கும் உலகு' 544

என்பது வள்ளுவம்.

அரசனின் இறையாண்மை, முறை செய்து காப்பாற்று வதாக இருந்தால்தான் இறை என்று வைக்கப்படும் என்றும் கூறினார். இதனால், அரசனின் அதிகாரத்திற்கு எல்லை சுட்டினார். அரசனின் அதிகாரம் குடிகளின் நலன் தழீ இயதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்' 388

என்று கூறினார்.

மேலும், அரசன் நெறிமுறை பிறழின் அரசை இழப்பான் என்றும் எச்சரித்தார். அரசனின் முறை என்ன? நெறிமுறை என்ன?

அரசன் தனது குடிமக்கள் அனைவரையும் சமமாக நடத்தவேண்டும் சாதி, குலம், கோத்திரம், மதம், உற்றார் உறவினர், வேண்டியவர் வேண்டாதவர் என்று பிரிக்கக் கூடாது. மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்க்க வேண்டும். பிறப்பில் அனைத்துயிர்களும் ஒன்றே. பிறப்பில் சாதியும் இல்லை. மதங்களும் இல்லை. பணக்காரனும் இல்லை; ஏழையும் இல்லை. பிறப்பில் வேறுபாடுகளைக் கற்பிப்பது தமிழர் வழக்கல்ல; மரபும் அல்ல!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' (972)

என்பது திருக்குறள்.

அரசு, பிறப்பின் அடிப்படையில் மனிதன் என்ற அடிப்படையில் மக்களை நடத்த வேண்டும்; உரிமைகளை வழங்க வேண்டும். மனித உரிமைகள் இயற்கையா யமைந்தவை. கடவுளால் நியதி செய்யப் பெற்றவை. பிறப்பிலேயே அமைந்த உரிமைகளை யாரும் பறிக்கக்கூடாது.

இன்றைய உலக நாடுகள் சபை கூட, மனித உரிமைகள் சாசனம் கூட, மனித உரிமைகளை உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஒரு அரசு, மனித உரிமைகளை மீறிக் கொடுமைப் படுத்தினால் ஐ.நா. சபை தலையிடலாம். தடா சட்டம் போன்றவை வரவேற்கத்தக்கவையல்ல. தக்க விசாரணை யின்றிச் சிறையில் வைத்தலாகாது.

மனிதனின் உரிமைகள், அவன பிறப்புடன் இயற்கையாகவே அமைந்தவை. நமது அரசியல் சட்டப் பிரிவுகள் பல செயற்பாடே இல்லாது உள்ளன. செயற்பாடில்லாதவற்றைச் செயலிழந்தவை என்று கூறுவதில் தவறு இல்லை. இந்த நிலையில் 100 தடவைக்கு மேல் சட்டம் திருத்தப் பெற்றுள்ளது.

இதில் செய்யப் பெற்ற திருத்தங்களில் மக்கள் நலம் கருதிய திருத்தங்கள் ஒன்றிரண்டுதான். இந்த வகையில் 17ஆவது அரசியல் சட்டத் திருத்தம் மிக முக்கியமானது. 17ஆவது அரசியல் சட்டத் திருத்தம் நில உடைமை பற்றியது. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வரும்பொழுது காங்கிரஸ் ஆட்சி செய்தது.

பிரதமர் ஜவாஹர்லால்நேரு காலத்தில் ஆளுங் கட்சிக்குப் பெரும்பான்மையிருந்தும் இந்த அரசியல் சட்டத் திருத்தம் தோற்றது. அதாவது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களிலே பலர், நிலச் சீர்திருத்தத்திற்கு உடன்பாடு காட்டவில்லை. நவ இந்தியாவின் சிற்பி பண்டித ஜவாஹர்லால் நேருவின் உயிரினை விலையாகக் கொண்டு பிறந்தது 17ஆவது சட்டத் திருத்தம்.

இத்திருத்தம் இந்திய சமுதாயத்தில் நில உடைமை அடிப்படையில் மாற்றங்களைச் செய்யக்கூடியது. ஆயினும், இந்த அரசியல் சட்டத்திருத்தம் கூட இன்னமும் நடை முறையில் வெற்றி பெறவில்லை. இன்றைய சூழ்நிலையில் வெற்றி பெறாது என்று கருத இடமிருக்கிறது.

இந்தியா புகழ்மை பொருந்திய பழைய நாடு. இந்தியா ஒரு நாடாக இருந்ததில்லை. இந்தியாவை ஆண்ட அரசர்கள்

பலர். இந்தியாவை ஒரு நாடாக வெற்றி கொண்டு ஆள விரும்பியவர் பலர்.

அசோக சக்கரவர்த்தி இதில் ஓரளவு வெற்றி பெற்றார். ஆயினும் முழு வெற்றி பெறவில்லை. தமிழகத்தை வெற்றி கொள்ள இயலவில்லை.

பிரிட்டிஷ் அரசுதான் முதன் முதலாக இந்தியாவை ஒரு நாடாக "இந்தியா" என்று ஆக்கியது. இந்தியாவை உருவாக்கிய பெருமை பிரிட்டிஷாருக்கே உண்டு.

பிரிட்டிஷார் உருவாக்கிய இந்தியாவில் கூட ஆங்காங்கு பிரிட்டனின் ஆதிக்க வரம்புக்குக் கட்டுப்பட்ட தன்னாட்சி சமஸ்தானங்கள் இருந்தன. நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான் இந்தியாவின் இரும்பு மனிதர் என்று புகழ் பெற்ற வல்லபாய்படேலின் அரிய வரலாற்றுப் புகழ் மிக்க முயற்சியால் இந்தியா ஒரு நாடாயிற்று.

இன்று இந்தியா ஒரு நாடுதான். ஆயினும் இந்தியாவில் வாழ்கின்றவர்கள் அனைவரும் இந்தியர் ஆகவில்லை. நமது நாட்டு மதங்கள் அனைத்தும் தன்னிலைப் பராமரிப்பு என்ற பெயரில் சாதி, மத உணர்வுகளையே பாதுகாத்து வருவது ஒரு காரணம். இந்து சமயம் இதில் முதல் நிலை வகிக்கிறது.

பிற சமயங்களிலும் சாதி முறைகள் வெளிப்படையாக இல்லையானாலும் அகநிலையில் பேணப்படுகின்றன. பேசப்படுகின்றன என்பதே உண்மை. ஆதலால், இந்தியன் என்ற உணர்வை விட இந்து என்ற உணர்வும், இந்தியன் என்ற உணர்வைவிட கிறிஸ்துவர் என்ற உணர்வும், இந்தியன் என்ற உணர்வைவிட இஸ்லாமியர் என்ற உணர்வுமே மேலோங்கி நிற்கிறது.

இந்த மூன்று சமுதாயத்தினரும் சம நிலையில் ஓரிடத்தில் கூட்டமாகக் கூடி அமர்ந்து சமுதாய நலன்களை நாட்டு நலன்களைப் பற்றிப் பேசும் பழக்கமே உருவாக வில்லை.

அண்மைக் காலமாக மேடைகளில் பேசி வருகிறார்கள். இது போதாது. இந்த வகையில் திருவருட் பேரவை மேலும் விரிவாகவும் விரைவாகவும் பணி செய்ய வேண்டும். எந்த ஒரு சிந்தனையும் நினைப்பும் இந்தியன் என்ற சிந்தனை அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும். அவ்வாறே பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண முயல வேண்டும்.

இந்தியர் எவரும் யாருடனும் எந்தக் காரணத் திற்காகவும் அந்நியராகக் கூடாது. ஒருமையுடையவராகவே வாழ்தல் வேண்டும்.

அடுத்து மொழி; மொழியின் தோற்றம் மனிதர் களுக்குள் உறவு உண்டாக்கவே. காலம், இடம் காரணமாகப் பல மொழிகள் உருவாயின. ஆயினும் எல்லா மொழி களுக்கும் நோக்கம் கருத்துப் பரிமாற்றமும் உணர்வுப் பரிமாற்றமுமேயாம்.

அடுத்து, அறிவு வளர்ச்சி; அறிவு, கருத்து எல்லா மொழிகளுக்கும் பொதுவானவை. ஆதலால், மொழி வேற்றுமை பாராட்டுவதும், மொழி வேற்றுமை அடிப் படையில் இன வேற்றுமைகளைப் படைத்துக் கொண்டு முரண்படுவதும் மோதுவதும் கூடாது. அறவே கூடாது.

ஒவ்வொருவரும் பல மொழிகளையும் விரும்பிக் கற்க வேண்டும். குறைந்தது ஐந்து மொழிகளாவது கற்றால்தான் மனிதன் முழு மனிதனாவான் என்று ரஸ்கின் கூறுகின்றான்.

ஆனால் இந்திய மொழிகளில் செறிவான கலாச்சாரம் மிக்க சமஸ்கிருதம், இந்திய மக்கள் பெரும்பான்மை யினரையும் இணைக்கும் இந்தி மொழி, உலக மொழி ஆங்கிலம் இவற்றைக் கற்க கூச்சப்படக்கூடாது.

தமிழ், நமது தாய்மொழி. எளிதில் கற்கலாம். பிற மொழிகளைக் கற்பது அறிவு வளர்ச்சிக்கும் மற்றவர்களுடன் கலந்து உறவாடிப் பழகுவதற்காகவுமேயாகும். ஆதலால் பிற மொழிப் பயிற்சியால் தாய் மொழியாகிய தமிழ் வளர

வேண்டும். கலப்பு மொழியில் பேசக்கூடாது. எழுதக்கூடாது. தமிழ் மொழியை வடபுலத்தினர் விரும்பி ஏற்றுக் கற்க வேண்டும்.

அதற்குரியவற்றை வடபுலத்தில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் செய்ய வேண்டும். நடுவண் அரசும் தமிழ் நாடு அரசும் செய்ய வேண்டும்.

ஒரு மொழியைப் பேசவும் எழுதவும் ஆறு மாதத்திற்குள் கற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை உண்டாக்க வேண்டும். நாடு முழுவதும் பன்மொழிப் பயிற்சியகங்களை மாலை நேரக் கல்வி நிலையங்களைத் தொடங்க வேண்டும்.

ஒருபுறம் சாதிகளின் தீமைகள் பற்றிப் பேசப்படுகிறது; பிறிதொருபுறம் சாதிகளை இறுக்கமாக்கும் வகையில் நடைமுறைகள் இருந்து வருகின்றன. பகுத்தறிவாளர்கள் சாதிகளின் தோற்றம், வளர்ச்சிக்கு மதங்களே காரணம் என்று கூறுகின்றனர்.

இது முற்றும் உண்மையன்று. வரலாற்று அடிப்படையில் நோக்கினால் நிலப் பிரபுத்துவத்தில் பிறந்து வளர்ந்தது தான் சாதி முறை. இந்தச் சாதிமுறையை நிலப் பிரபுத்துவத்திற்கு அனுசரணையாக அங்கீகரித்த பாவத்தை மதம் செய்தது உண்மை.

ஆனால், சமய நெறியாளர்கள் தொடர்ந்து தீண்டாமையையும் சாதி வைப்புக்களையும் எதிர்த்து வந்துள்ளனர். திருவள்ளுவர், அப்பரடிகள், திருப்பாணாழ்வார், இராமாநுஜர் வள்ளலார், பாரதியார் ஆகியோர் இவர்களில் முன்னணியில் நிற்பவர்கள்.

பழங்காலத்தில் சாதி முறைகள் இருந்தாலும் நெகிழ்ந்து கொடுத்தன. சாதி வேறுபாடுகளின்றிப் பழகினர்; உறவு கொண்டு வாழ்ந்தனர். உறவு கலந்து பழகி ஒன்றாக உண்டு வாழ்ந்தனர். கலப்புத் திருமணங்கள் சந்தடியின்றி நடந்தன.

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எவ்வழி கொல்லோ
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே'

என்ற அகத்திணைப் பாடல் இதற்குச் சான்று.

ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாரூரர், சிவ பெருமான் துணையுடன் குலமரபுத் திருமணம் தவிர்க்கப் பட்டுக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார்.

ஆதலால் சாதி முறைகள், குலம், கோத்திர முறைகள் தவிர்க்க இயலாதவை அல்ல. மனித நேயமே முக்கியம். 'மனிதம்' போற்றலே இன்று தேவை, சாதிகள் பார்க்காமல், மதங்களைப் பார்க்காமல் எல்லாரும் இந்தியராக வேண்டும்.

எல்லாரும் இந்தியராதற்குத் தடையாகவுள்ள எதையும் இந்தியராகிய தாம் சிந்தனை செய்யலாகாது; நடை முறைப்படுத்தவும் கூடாது. இதுவே சமூக நீதி. அரச நீதி.

9

குறளியம் முன்னுரை

"குறள்" திருக்குறளைக் குறிக்கும் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. "இயம்" என்பதற்கு "இயக்கம்" அல்லது "கருவி" என்று பொருள் கொள்ளலாம். கருவி இயக்கத்தின் வழி விளக்கமுறுவது. ஆதலால் இயக்கம் பற்றி ஆராய்ந்தாலே கருவியின் இயல்பும் புலப்படும். திருக்குறள் தோன்றிய பிறகு, தமிழக வரலாற்றை முன்னும் பின்னும் இயக்கும் ஆற்றலை, திருக்குறள் தனக்கே உரிமையாகக் கொண்டது. திருக்குறள் தோன்றிய பிறகு தோன்றிய தமிழகத்து அறிஞர்களின் கருத்து ஊற்றத்திற்கு, சிந்தனைக்குத் துணையாகத் திருக்குறளே அமைந்து விளங்கியிருக்கிறது. திருக்குறளைத் தழுவாத அறிஞர்கள் நீரினின்றும் பிரிந்த மீனைப்போல் சமுதாய வரலாற்றின் நினைவில் இல்லாமலே மறைந்து போயினர். ஒரோ வழி ஒரு சிலர் திருக்குறளின் முகவரியில் ஒவ்வாத கருத்துக்களைச் சொல்லியும் ஊடுருவல் செய்துள்ளனர். ஆயினும் திருக்குறள் தனித் தன்மையுடையதாக இன்றும் விளங்குகிறது.

திருக்குறள் ஓர் இலக்கியம்; சமயநூல்; சமயச் சார்பற்ற நூல்; நீதி நூல் என்றெல்லாம் பலபடப் பாராட்டுவர்.

இப்பாராட்டுரைகள் புனைந்துரையல்ல; ஆனால் முழுமை யான திறனாய்வுமல்ல. மனித குலத்தின் வாழ்க்கை அனைத்தும் முறையாகத் தழுவப் பெற்றுச் செய்யப்பெற்ற ஒரு முழுநூல் திருக்குறள். திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் ஒரு புதிய சமுதாய வாழ்வியலை அறிமுகப் படுத்தியுள்ளார். அது திருக்குறள் தோன்றிய காலத்தில் நிலவிய பல்வேறு வாழ்வியல் நெறிகளை மறுத்திருக்கிறது. சில நெறிகளை உடன்பட்டும் இருக்கிறது. ஆதலால் திருக்குறளே ஒரு வாழ்வியல் நூலாக, மக்கட் சமுதாயத்தின் வாழ்வை இயக்கும் கருவியாக, மக்களின் வாழ்வியக்கமாக இருந்தது—இருக்க வேண்டியது என்ற அடிப்படையில்தான் குறளியம் என்ற இயக்கம் தோன்றியுள்ளது. அவ்வியக்கத்தின் குரலாக 'குறளியம்' ஒலிக்க இருக்கிறது; மனித குலத்தின் இயற்கையைக் குறளியத்தின் வழி இயக்குவதென்பது தலையாய நோக்கம். குறளியம் அனைத்து வாழ்வியல் நெறிகளையும் ஆராயும்; ஒப்புநோக்கும்; ஏற்பனவற்றை ஏற்கும்; மறுப்பனவற்றை மறுக்கும். குறளியத்துக்கு, திருக்குறளை வைதிகமாக்குவது நோக்கமன்று. அங்ஙனம் செய்வதைத் திருவள்ளுவரும் உடன்படார். 'அறி தோறறியாமை' என்பது வள்ளுவம். குறளியத்துக்குப் பின் தோன்றியவைகளிலும் உண்மையில் குறளியத்தைவிடச் சிறந்தவையிருக்குமானால் அவற்றை ஏற்பதில் குறளியம் மகிழ்ச்சியுறும். ஏன்? அந்தக் கருத்துத் தோன்றுமளவுக்குக் குறளியம் அவர்களை அழைத்து வந்திருக்கிறது என்பது பொருள். இது குறளியம் தொடர்ந்து திருக்குறளை வாழ்விய லாக்கும் வழிவகைகளை ஆராயும்.

இன்று நாவலந் தீவில் (இந்திய நாட்டில்) பல்வேறு வாழ்வியற் சட்டங்கள் தோன்றியுள்ளன. அதுபோலவே மனிதகுல வாழ்க்கையை வழிநடத்துவனவாகப் பல்வேறு நூல்களும் விளங்குகின்றன. மார்க்சீயமும் இன்று இந்த

வரிசையில் அணிபெற அமைந்துள்ளது. இச்சூழ்நிலையில் குறளியத்தை மையமாகக் கொண்ட வாழ்வியல் எது? என்று அறிவது வையகத்திற்கு மிகுதியும் பயன்தரும்.

இன்றைய வாழ்வியல் உலகம் தழீஇயதாக வளர்ந்து வருகிறது. ஆயினும் முரண்பாடுகள் நீங்கியபாடில்லை. எங்கும் காழ்ப்பும் கலகமும் தலைவிரித்தாடுகின்றன. எல்லா நாடுகளும் படைகளுக்குரிய செலவைக் கூட்டிக் கொண்டே போகின்றன. சிறைக் கூடங்களும் எண்ணிக்கையில் பெருகி வளர்கின்றன. இந்தச் சூழ்நிலையில் குறளியம் வையகத்திற்கு எத்தகைய வழியைக் காட்டுகிறது? குறளியம் காட்டும் வழி சமயச் சார்புடையதா? இல்லை, சமயச் சார்பற்றது. வள்ளுவத்தின் சமயம் தனித்தன்மையுடையது; சமயக் கணக்கர் வழி சாராதது. குறளியம் நாடு, மொழி, இனங்களைக் கடந்தது. குறளியத்தின் நெறி புது நெறி; பொதுநெறி. குறளியம் உலகந்தழீஇயது; நம்பிக்கைக்குரியது; எளிதில் பின்பற்றத் தக்கது. இதுவரையில் தோன்றியுள்ள அனைத்து நூல்களிலும் திருக்குறள் உயர்ந்தது; வையகத்தை வாழ்வாங்கு வாழ வழிநடத்துவது. குறளியத்தில் தத்துவங்கள் உண்டு; மெய்ப்பொருள் சிந்தனைகள் உண்டு; பொருளியல் கோட்பாடுகள் உண்டு; சமுதாய நெறிகள் உண்டு; அரசியல் கொள்கைகள் உண்டு; காதல் உண்டு; துறவும் உண்டு; ஆக, குறளியம் ஒரு பொது மறை; தமிழ்மறை; குறளியத்தில் அறநெறி அடையாளம் காட்டப்படுகிறது; பொருள்நெறி போற்றப்படுகிறது. குறள்நெறியில் ஆள்வினையாளர்களும் அருளாளர்களும் சமுதாயத்தை வழி நடத்தும் உறுப்புகளாவார். குறள்நெறி நிலமிசை நீடுவாழ வழி காட்டுகிறது; உயர்ந்த உலகத்தையும் உய்த்து உணர்த்துகிறது. குறளியத்தில் அரசியல் உண்டு; ஆனால் அரசியல் வாழ்க்கை ஒரு பகுதியாக உணர்த்தப்படுகிறது. குறளியத்தில் நீதி வற்புறுத்தப்படுகிறது. குறளியம் உணர்த்தும் நீதி

மிக்குயர்ந்தது; பகுதியின் பாற்பட்டொழுகாதது. குறளியம் மனித உலகத்தை அச்சத்திலிருந்து விடுவிக்கிறது. குறளியம் கடவுளை ஒத்துக் கொள்கிறது. ஆனால் பொய்த் தேவர்களை மறுக்கிறது. இது குறளியத்தின் முன்னுரை.

தமிழகத்தின் வாழ்வியக்கமாகக் குறளியம் இடம் பெற்றாக வேண்டும். தமிழினத்தின் வாழ்வியலாகக் குறளியம் இடம் பெறும் பொழுதுதான் சாதி வேற்றுமைகள் நீங்கும். வாழ்க்கை வாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்கும். மனித உலகத்தின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக இருக்கும் வைதீகக் கொள்கைகள் நீங்கும். நாளையும் கோளையும் வழிபடும் மூடப்பழக்கங்கள் தொலையும். மருட்டுகின்ற மதத் தலைவர்களின் கொட்டம் ஒடுங்கும். பொய்யும் கற்பனையும் போயகலும்; வாய்மை வந்தடையும். இத்தகு குறளியத் தினுடைய அருமையை அறிந்த ஆன்றோர்கள் ஏற்றுப் போற்றியுள்ளனர். மெய்கண்ட நூல் “மெய்வைத்த சொல்” என்று போற்றியது. சங்க காலம் ‘அறம்’ என்று போற்றியது. புதிய சிந்தனையாளன் ஆல்பர்ட் சுவைட்சர், “திருக்குறள் போன்ற நீதி நூல் உலக இலக்கியத்திலேயே வேறு இல்லையென்று கூறலாம்” என்று போற்றியுள்ளார்.

தமிழினம் தனது தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருக்கிறது. தமிழினம் தனது தனித்தன்மையைப் பாதகாத்துக் கொள்ளவும், உலகம் தழுவி வாழவும் அதன் வாழ்வியல் வரிச்சட்டமாகக் குறளியமே இடம் பெற வேண்டும். இந்த நோக்கம் நிறைவேறுமானால் குறளியம் வெற்றி பெற்றதாக அமையும். என்றைக்கு மனித குலம் அறிவறிந்த ஆள்வினையுடையதாக, அன்புற்றமர்ந்த வழக்கமுடையதாக, அருளாளும் நெஞ்சினதாக ஒப்புரவு நெறி நின்று ஒழுகுவதாக நயத்தக்க நாகரிகமுடையதாக வாழ்கின்றதோ அன்றே குறளியம் உண்மையில் வெற்றி

பெற்றதாக அமையும். இந்நெடிய பாதையில் குறளியம் சிறப்பாகத் தமிழகத்தை வழிநடத்தும்; பொதுவாக உலகியலை வழிநடத்தும்; கற்றல், கேட்டல் உடைய பெரியோர்களும் குறளிய ஆர்வலர்களும் தொடர்ந்து வரும்படி அழைக்கின்றோம்.

10

சமநிலைச் சமுதாய அமைப்புக்குத் திருக்குறள் முரணாகாது!

திருக்குறள் ஒரு அறநூல்; நீதி நூல்; வாழ்க்கை நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மனித குலத்தின் வாழ்வியல் நிலைகளைக் கணித்து நோக்கின் திருக்குறளின் சிறப்புத் தோன்றும். திருக்குறள் மனித குலத்தை வாழ்வாங்கு வாழத் தூண்டுகிறது; வழி நடத்துகிறது. ஆனால் மனித குலத்தின் நடைப்பயணம் இன்னமும் வள்ளுவர் வழியில் நடைபெறவில்லை. அது தன் போக்கி லேயே பயணம் செய்து கொண்டிருக்கிறது. வள்ளுவம் வாழ்க்கையை வாழ்க்கையாகவே அணுகுகிறது; வாழ்க் கையைப் பயனுடைய தாக்கவே விரும்பி நெறிமுறைகளை வகுக்கிறது.

வள்ளுவம் வாழ்க்கையை அணுகும் முறை அறிவியல் முறை; நம்பிக்கைக்குரிய நெறிமுறை. வள்ளும் மனித குலச் சிக்கல்களுக்குக் காரணமாய் அமைந்துள்ள பல்வேறு உண்மைகளை ஆராய்ந்து அந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டுள்ளது. மனித குலத்தின் அல்லது மனிதர்களின் வாழ்க்கை அவர்கள் சம்பந்தம் உடையதா? அல்லது

அவர்களே விரும்பிப் படைத்துக் கொள்ளக் கூடியதா? அல்லது அவர்கள் அல்லாத அவர்களுக்கும் மேம்பட்ட கடவுளின் செயலா? என்பது முதற்கேள்வி; முதற்சிக்கல்! உயிர், கடவுளின் படைப்பு என்ற கொள்கையில் உயிருக்கும் பயன் இல்லை; கடவுளுக்கும் பயனில்லை. அதுமட்டுமன்று. கடவுளுக்கு இந்தக் கொள்கை குறை கற்பிக்கும். அறியாமையும் குறைகளும் உடைய உயிர்கள் கடவுளால் படைக்கப்பட்டன என்றால் படைப்பாளனின் திறம் ஐயப்பாட்டிற் குரியதாகி விடுகிறது உயிர். கடவுளால் படைக்கப் பெற்றது என்றால் உயிர்களுக்குச் செயற்பாடு இல்லை. அதனால் வளர்ச்சி இல்லை தேக்கம்! வள்ளுவம் 'உயிர்' கடவுளால் படைக்கப்பெற்றதல்ல என்ற கருத் துடையது-உயிர் என்றும் உள்பொருள் என்பது குறளியம்.

மன்னுதல்=நிலைபெறுதல்

'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே!' (புறம்-165)

என்ற புறநானூற்றுச் செய்யுட் கருத்தை அறிக.

'தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'. 68

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.' 244

என்ற குறட்பாக்கள் 'உயிர்' நிலையானது என்றே கூறுகின்றன. இக்கருத்தின் மூலம் 'உயிர்கள் என்றும் உள்ளவை; படைக்கப் பெற்றவையல்ல' என்பது உறுதிப்படுத்தப் பெறுகிறது. இதனால் பல்வேறு சிக்கல்கள் தோன்றாமலே போகின்றன.

'உயிர், கடவுளால் படைக்கப் பெற்றது; உயிர்களின் இன்ப துன்பங்கள் கடவுளால் உயிர்களுக்கு வழங்கப் பெறுகின்றன' என்ற கொள்கைகள் குமுகாய அமைப்பிற்கு ஊறு விளைவிக்கும் கொள்கைகள். இக்கொள்கைகளால்

குழுகாயத்தில் சாதி வேற்றுமைகள் நிலவும், அதனால்தான் குழுகாயப் புதுமையை, பொதுமையை நாடியவர்கள் எல்லாரும் சமயத்தை எதிர்ப்பவர்களானார்கள். இத் துறையில் திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புதிய முறையில் கருத்தை வெளிப்படுத்தியது. உயிர்கள் நிலைபெற்றவை. உயிர்களின் இன்ப துன்பங்கள் அவரவர் வினைவழி வருபவை; "வினை"—செயல், உயிர், உயிர்ப் புள்ளன; ஓயாது தொழிற்படுவது. செயல்கள் செய்வோர் அச்செயல்களுக்குரிய பயனை அடைய வேண்டும் என்பதே இக்கொள்கையின் கருத்து. உழைப்பின் பயன் உரியவர் களுக்கு என்ற கொள்கை அறிவுக் கிசைந்ததுதானே!

ஆயினும் ஓர் ஐயம்! திருக்குறள் மறுபிறப்புக் கொள்கைக்கு உடன்படுகிறது. "எழுபிறப்பு" என்று வள்ளுவம் கூறுகிறது. சமய நூல் மரபில் எழு பிறப்பென்பது.

> 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும்'

என்று பேசப் பெறுகிறது. தொல்காப்பியம் உயிர்களின் பிறப்பினை ஓரறிவுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாக வகுத்துக் கூறுகிறது. ஆறு பிறப்பு வரை மண்ணியல் சார்ந்த வாழ்க்கை. ஏழாவது பிறப்பு கிடையாமல் சார்புடைய இன்ப அன்பியல் வாழ்க்கை என்பது கொள்கை. எல்லையற்ற பிறப்புகள் என்ற கருத்தும் உண்டு. 'எழு' என்பதற்கு இனி எழுகின்ற பிறப்புகள் என்றும், பொருள் கொள்வர். மறு பிறப்பில் நம்பிக்கை யில்லாதவர்கள் "எழு பிறப்பு" என்பதனை வாழ்க்கையின் ஏழு நிலைகளை எழு பிறப்பு என்று கொள்கின்றனர். இதனைச் செகப்பிரியாரும் `The Seven Stages of life" என்று

கூறியுள்ளார். இவற்றில் எந்தக் கருத்தைக் கொண்டாலும் பிழை பெரிதொன்றும் இல்லை.

நேற்றைய தீய குணங்களினின்றும் விடுதலை பெற்றுப் புதிய குணமும் பொறியும், பெற்றால் "புதுப்பிறவி" என்றும், செத்துப் பிறந்துள்ளான் என்றும் கூறுவது வழக்கிலும் உண்டு. பல பிறப்புகள், மறுபிறப்புகள் என்ற கொள்கையின் மையம். உயிர்கள் படி முறையில் வளர்ச்சியடைவது என்பதேயாகும். இங்கு வளர்ச்சி என்பது, உயிர்த் தொடர்பான அறிவும் குணங்களுமேயாம். கல்வி — ஒழுக்கத்தின் பயன்தான் எழுமையும் தொடரும். நிலம், பொன், பொருள் முதலியன உடற்சார்புடையன. இவை உயிரைத் தொடர இயலா. ஆதலால் சமநிலைச் சமுதாய அமைப்புக் கொள்கைக்குத் திருக்குறள் முரணாக இல்லை என்பது கருத்து.

தி.IV.21.

11

பெரியாருக்குப் பிடித்த குறள்!

1969-ஆம் ஆண்டு, ஒரு நாள் தலைவர் தந்தை பெரியார் அவர்களும் நாமும் ஒரே காரில் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று கொண்டிருந்தோம். திருப்பரங் குன்றத்தைக் கடந்தவுடன் ஐயா அவர்கள் தமது சட்டைப் பையில் வைத்திருந்த திருக்குறள் மூலநூல் ஒன்றை எடுத்தார்கள். அதில் "குடிசெயல் வகை" என்ற அதிகாரத்தை நம்மிடம் தந்து படிக்கும்படி சொன்னார்கள். அதில் அவர்கள் படிக்கச் சொன்ன குறள் இன்னும் நம் நினைவில் பசுமையாக இருக்கிறது.

'குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும்.'

(1028)

என்பது அத்திருக்குறள். நாம் குறளைப் படித்துவிட்டு ஐயா அவர்களின் முகத்தைப் பார்த்தோம். ஐயா அவர்கள் அதற்குப் பொருள் கேட்டார்கள். நாம் தயங்கினோம். ஐயா அவர்களிடமிருந்து பொருள் கேட்பதற்காக! அவர் கூறும் பொருள் நடைமுறைப் பட்டறிவிலிருந்து தோன்றி, பகுத்தறிவிற் சிறந்து விளங்குமல்லவா? அதற்காகத்தான்!

ஐயா அவர்கள் சிரித்துக்கொண்டே பொருள் விளக்கம் கொடுத்தார்கள்.

"நமது தமிழ்க்குடியை வளர்க்க வேண்டும்; நாள், நட்சத்திரம் பார்க்காமல் விரைந்து தொண்டு செய்ய வேண்டும். தமிழ்க் குடியைத் தழைக்கச் செய்யும் தொண்டினை "இன்று" "நாளை" என்று ஒத்திப் போட்டுச் சோம்பல் செய்யக் கூடாது. தமிழர்கள் தமக்குள் மானம், அவமானம் என்ற அடிப்படையில் பழகக் கூடாது. மானம், அவமானத்தைக் கடந்ததுதான் தமிழினத்திற்குச் செய்யக்கூடிய பணி. இந்த உணர்வோடு தொண்டு செய்தால்தான் தமிழ்க்குடி வளரும். இதைத்தான் இந்தக் குறள் நமக்குச் சொல்கிறது" என்றார்.

12

அருளும் - துறவும்

மனிதன் பெறக்கூடிய இணையற்ற செல்வம், அருளுடைமையாம். அதாவது, மகவெனப் பல்லுயிரையும் ஒக்கப் பார்த்து ஒழுகும் அருளொழுக்கமாகும். வார்த்தை களால் எளிமை போலத் தோன்றினும் அருளுடையராதல் அரிதினும் அரிது. எளிய சாதனமாகிய அன்பு நெறியிலேயே இன்னமும் மனிதன் தட்டுத் தடுமாறிக் கொண்டே யிருக்கிறான். அதாவது தனக்குப் பயன்படுவோருக்குத் தானும் மீண்டும் அவ்வண்ணமே பயன்படவேண்டும் என்ற உணர்வின்றி, அடித்தும், கெடுத்தும், எடுத்தும் விலங்கினைப் போலத் தின்று வாழ்ந்து கொண்டிருக்கிறான். அன்பிலும் முதிர்ந்தது அருள். அன்பு தாய்; அஃதீன்ற சேய் அருள் என்பர் வள்ளுவர். இந்த உலகில் யார்மாட்டும் எதன் மாட்டும் அன்புகாட்டி வாழ்வித்து வாழும் உணர்ச்சியே அருள் உணர்ச்சி. அருள் உணர்ச்சி உள்ள இடத்தில் தன்னலம் இல்லை; தன்னயம் இல்லை; தன் நுகர்வு இல்லை. அருளுணர்ச்சி யுடையாருக்கு இன்பமென்பதே பிறர் இன்புறுவதேயாகும். இத்தகு அருள் உணர்வு திடீரென ஒருநாளில் தோன்றி விடுவதில்லை; அதற்கு இடையறாத பயிற்சி தேவை.

அருள் உணர்வுக்கு இடர் விளைவிப்பது மனித னுடைய புலன் உணர்வு. எதையாவது ஒன்றைத் துய்த்து மகிழ வேண்டுமென்ற அவா, புலன்களினுடைய இயற்கை. அவ்வியற்கையுணர்வு, முதலில் பெரும்பாலும் தான் துய்த்து மகிழ வேண்டுமென்றே தொடங்கும். அவ்வியற்கை யுணர்வைத் தடுத்து மடை மாற்றிப் பிறரைத் துய்ப்பிக்கச் செய்தல் மூலம் தான் துய்த்ததாகவே கருதி மகிழ்கின்ற உணர்வைத் தோற்றுவித்து வளர்த்துக் கொள்ளவேண்டும். இங்ஙனம் புலன் நுகர்வைப் பக்குவப்படுத்திப் பழக்கும் பொழுது ஒன்றைவிட்டு ஒன்றைப் பக்குவப்படுத்துவதில் பயனில்லை. அதனால், ஆன்ம சக்தியே வீணாகும். ஒரு வீடுபற்றி யெரியும் பொழுது ஒரு பக்கத்தில் மட்டும் தண்ணீர் விட்டு அணைத்து என்ன பயன்? ஆதலால், ஐம்புலன் நுகர்வு வேட்கையைத் தன்வழிப்படுத்திக் கொள்ளாமல் பிறர் வழிப்படுத்தும் பொழுது, துறவு கால் கொள்கிறது. தொண்டுணர்வு கருக்கொள்கிறது.

துறவு, மிகமிக உயர்ந்த இயல்புடையது. துறவு நெறி வெளிப்படுவது தோற்றத்தில் அல்ல. உள்ளடங்கிக் கிடக்கும் உள் உணர்விலேயே துறவு முகிழ்க்க வேண்டும். என்னுடைய தென்று யாதொன்றும் வைத்துக் கொள்ளாதவரும் இஃதன்றி முடியாது என்ற வாழ்க்கைப் போக்கு இல்லாதவருமே உண்மைத் துறவியாக வாழ முடியும்.

'உற்ற உறவினர்க்கு உடம்பும் மிகையே'

என்பது ஆன்றோர் வாக்கு. இத்தகு துறவுநெறி இந்த வையகத்தில் எங்கிருக்கிறது? என்று கேட்கக் கூடிய நிலையிலிருக்கிறது. ஒருவகையினர், எண்ணில் செவ்வத்திற் குரிய துறவிகளாக நம்மிடையே வாழ்கின்றனர். மற்றொரு வகையினர், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியின்றிப் பிச்சை எடுக்கும் திருக்கோலமாகத் துறவுக் கோலம் பூண்டு நடமாடுகின்றனர். அவர்களிடத்துத் தோற்றத்திலேயே துறவு

காணப்படுகிறது. முதல் வகையினரின் வாழ்க்கை முறையில் அந்த வாடையும் இல்லை. இருந்திருந்தால், துறவி கைப்பட்ட பொருள் இந்த நாட்டு மக்களது வாழ்க்கைக்கு உணவாக, கல்வியாக, மருந்தாகப் பயன்பட்டிருக்கும். அப்படிப் பயன் படாமல் வீணான ஆடம்பரங்களுக்கே அப்பொருள் பயன்பட்டு, இழக்க வேண்டிய 'யான்', 'எனது' என்ற இரண்டும் ஏற்றமுடன் கொலுவிருப்பதைக் கண்டால், வள்ளுவர் தப்பிப் பிழைக்க விடுவாரோ?

'வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.' 273

என்ற திருக்குறள் சிந்தனைக்குரியது.

துறவு என்பது எங்கோ இருக்க வேண்டியவர்களுக்கு இருக்கின்ற இயல்பல்ல. சராசரி ஒவ்வொரு மனிதனுக்கும் கூடத் துறவுணர்வு தேவை. காதல் வாழ்க்கைக்கும் கூட ஓரளவு துறவு தேவை. காதலன் காதலி மகிழ்வுக்காகச் சில வற்றைத் துறக்கிறான். காதலி தாயான பின்பு தனது குழந்தைக்காகச் சிலவற்றைத் துறக்கிறாள். இங்ஙனம் வேண்டியாங்கு வேண்டியவாறு துறவு மனப்பான்மை தலைகாட்டாத குடும்ப வாழ்க்கை இன்பம் தராது. ஊரொடு தழுவி வாழும் இயல்பற்ற குடும்ப வாழ்க்கை இன்பம் பெருக்காது. துன்பமே சூழும். குடிகளைத் தழுவாத கோயில்கள் திருவருள் திருவோலக்கம் இருக்கும் கோயில்கள் அல்ல. சைத்தான் குடியிருக்கும் கோயில்களேயாகும். மன்பதைகளைத் தழுவிக் காக்காத மடங்கள் மடங்களல்ல. புலனுகர்வைத் திசைமாற்றி விடுதலில் துறவும், துறவில் அருளும் தோன்றுகிறது. இந்த அருளுணர்வே வையகத்தை வாழ்விக்கும் அமுது.

13

திருவள்ளுவர் காட்டும் அரசியல்

திருவள்ளுவர் தந்த திருக்குறள் ஓர் இலக்கிய மலர்; அரசியல் ஞாயிறு; பொருளியல்கூறும் புதுநூல்; நீதி நெறியினைக் காட்டும் நீதிநூல்; அறநூல்; உள்ளத்தை ஒட்டித் திருத்தும் உளவியல் நூல்; திருக்குறள் ஒரு முழுதுறழ் அறநூல். ஆயினும் ஏன்? திருக்குறள் இன்றளவும் ஓர் இலக்கிய நூலாகவே பயிற்றுவிக்கப்படுகிறது; பயிலப்படுகிறது. தவறினால் மிகச்சிலரே திருக்குறளை வாழ்க்கை நூலாகக் கண்டு பயின்று பயனடைகின்றனர். சமுதாயத்தின் அனைத்துத் துறையையும் திருக்குறள்நெறி தழுவும் போதே மன்பதை-உலகம் உய்யும்.

திருவள்ளுவர் ஓர் அரசியல்மேதை. 'இலட்சிய அரசியல்' படைத்த பிளேட்டோ. 'சமுதாய ஒப்பந்தம்' கண்ட ரூசோ, பொதுவுடைமைத் தத்துவத்தின் வாயிலாகச் சோவியத்துப் புரட்சியைக் கண்ட லெனின் ஆகியோர் வரிசையில் வைத்து, எண்ணத்தக்க அளவுக்குத் திருவள்ளுவரின் அரசியல் சிந்தனை உயர்ந்தது. ஆனாலும், வள்ளுவர்தம் அரசியல் சிந்தனைகள்—பொதுமைக் கருத்துகள் இந்த நாட்டினில் புரட்சிக் கனிகளாகக் கனியாமல் வள்ளுவம் வையகத்தை ஆளவில்லை.

கடவுள் நம்பிக்கையுடையவர்கள் கடவுளை நீதிக்குத் தலைவன் என்று நம்புகிறார்கள். கிறித்துவ இசுலாமிய சமயங்கள் இறைவனின் நியாயத் தீர்ப்பு நாளைப் பெரிதும் எடுத்துக்காட்டிப் பேசுவனவாம். தமிழகச் சமயநெறி இறைவனை 'நீதி' என்றே அழைக்கிறது. இறைவனுடைய நீதியையே இந்த உலகில் அரசு செயற்படுத்துவதாகக் கருதுவது ஆன்றோர் மரபு. இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் அரசர்கள், தாங்கள் ஆண்டவனிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதாகக் கூறிக் கொண்டு அட்டகாசம் செய்தார்கள். ஆனால் நம் தமிழகத்து அரசர்கள் நெறி முறையின் காவலர்களாக—நீதி தேவதையின் திருக்கோயில் களாக விளங்கினார்கள். இளங்கோவடிகளின் சிலம்பு காட்டும் நெடுஞ்செழியன், சேக்கிழார் பெருமான் காட்டும் மனுநீதிச் சோழன் போன்ற அரசர்களின் வரலாற்றைப் போல உலக வரலாற்றில் வேறு எங்குண்டு! அதனாலன்றோ திருவள்ளுவர்,

> 'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
> இறையென்று வைக்கப் படும்' 388

என்றார்.

திருவள்ளுவர், திருக்குறளில் விழிப்புணர்வுடன் சொற்களை அடுக்கிப் பாடியிருக்கிறார். திருவள்ளுவர், அரசுக்குக் காட்டும் இறைமைச் சிறப்பு, முறைசெய்து காப்பாற்றும் தகுதியைச் சார்ந்ததேயாம்; பிறப்பின்பாற் பட்டதன்று. முறைசெய்து காப்பாற்றும் தகுதியில் சிறந்த அரசன், கடவுளைப் போல எண்ணிப் பாராட்டப் பெறுவானேயன்றி, அவன் கடவுளல்லன்.

நீதி என்பது மனித உலகத்து வாழ்வியலில் ஒரு சிறந்த தத்துவம். நீதி என்ற தத்துவம் ஆழமானது; உருவெளித் தோற்றத்தில் மட்டும் காணக்கூடியதன்று— உணரக்கூடியது மாகும். நீதியை வழங்கும் முறை—நீதியைச் செயற்படுத்தும்

முறை என்றும் ஒரே நிலையானதாக இருக்க முடியாது. அது மட்டுமன்று. நீதி என்ற தத்துவம் அதனுடைய அடிப்படைக் கருத்துக்கு முரணாகாமல் காலத்துக்குக் காலம் மாறுவதும் உண்டு. ஆதலால், அரசன் தன்னால் பாதுகாக்கப்பெறும் சமுதாயத்தின் தேவைகளை, அந்தச் சமுதாயத்தின் முழுமை யான வளர்ச்சிக்குரிய நீதிமுறைகளை நாள்தோறும் ஆராய்ந்து அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்றவாறு நீதியை வழங்க வேண்டும்.

'நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்' 553

என்பது வள்ளுவம்.

திருவள்ளுவர் பார்வையில் அரசு என்பது வரி மட்டுமே வசூலிக்கும் எந்திரமன்று; அல்லது அதிகாரத்தின் சின்னமுமன்று. அல்லது தண்டனை வழங்கும் ஏகபோக உரிமையுடையதுமன்று. குடிமக்கள் குற்றம் செய்தால் அரசு தண்டனை கொடுக்க வேண்டும் என்பது பொதுவான அரசியற் கருத்து. ஆனால், திருவள்ளுவர் குடிமக்களைக் குற்றம் செய்யத் தூண்டாத—அனுமதிக்காத அரசையே அரசு என்று ஏற்றுக் கொள்கிறார். குடிமக்களிடத்தில் குற்றம் காணின் அக்குற்றம் தோன்றுதற்குரிய அரசின் காரணத்தை ஆராய்ந்து அக்குற்றத்தை அகற்றிக் கொள்ளவேண்டும் என்று வள்ளுவர் நெறிமுறை காண்கிறார். அதிகாரக் கட்டிலில் உள்ள அரசு 'இடு' என்று கேட்பதையும் கூட வள்ளுவர் உடன்படவில்லை. மக்களின் ஆற்றலுக்கு விஞ்சிய வரிக் கொள்கையை அரசு, நடைமுறைப்படுத்துமானால், கள்ளக் கணக்குக்கு அது துணைசெய்யும். இன்று நம்முடைய நாட்டில் 'கறுப்புப்பணம்' என்ற பேச்சு அடிக்கடி அடிபடுகிறது. ஏன்? அரசின் வரிவிதிப்புக் கொள்கை களாலும், தனிமனித உடைமையில் அரசு அலட்சியம் காட்டுவதாலும், நாடு, முழு உத்தரவாதமுள்ள ஓர் அரசைப்

பெறாததாலும் இந்த அவலநிலை கருக் கொண்டுள்ளது. ஆதலால், திருவள்ளுவர் மக்களிடத்தில் காணப்பெறும் குற்றங்களுக்குக் காரணம் அரசின் குற்றமேயென்றும் அரசினிடம் காணப்பெறும் குற்றம் நீங்கினால், மக்களிடத்துக் குற்றங்கள் காணப்பெறா என்றும் கருதுகின்றார். வள்ளுவர் கருத்துப்படி குற்றம், கண்டிக்கத் தக்கதுதான். ஆனால், ஒரு குற்றம் காரியமாகவும், ஒரு குற்றம் காரணமாகவும் விளங்கும். காரியக் குற்றத்தைவிடக் காரணக் குற்றத்தை வள்ளுவர் கடுமையாகக் கண்டிக்கின்றார். காரணம் மாறினால்தான் காரியமும் செம்மைப்படும் என்பது வள்ளுவர் கருத்து. இதனை,

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு' 436

என்று கூறுகின்றார்.

திருவள்ளுவர், குடியாட்சி முறையைத் தழுவிய முடியாட்சியையே காட்டியுள்ளார். அவர் காலத்தில் உலக முழுதும் முடியாட்சியே நடைபெற்றது. அந்தக் காலத்தில் குடியாட்சி தழுவிய முடியாட்சியைச் சிந்தனை செய்து தந்த பெருமை திருவள்ளுவருக்கு உண்டு. அதிகாரம் உள்ள அரசைத் தழீஇ நிற்கப் பலர் விரும்புவது இயற்கை. அதுவே நேற்று—இன்று நடைமுறையுமாகும். ஆனால், திருவள்ளுவர் குடிகளைத் தழுவிநிற்கும் அரசை உலகம் தழுவும் என்றும், கூறுகிறார். இத்தகைய ஓர் அரசை இன்று இங்கிலாந்தில் பார்க்கிறோம். இங்கிலாந்து நாட்டு ஆட்சிமுறையில் பாராளுமன்றமும் உண்டு; அரசனும் உண்டு.

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு'. 544

நல்ல அரசு என்பது மக்களுக்குச் சேவை செய்யும் ஓர் அமைப்பே யாகும். அந்தச் சேவையை இடையூறின்றிச்

செய்யவே அதிகாரம் என்ற உப்பு வழங்கப்பெற்றது. ஆனால், இன்று உணவில் உப்பைப் போலல்லாமல் கடல் நீரில் உப்பைப்போல் பல அரசுகளில் அதிகார உரிமை மிகுந்து காணப்படுகின்றது.

அரசுக்கு இரண்டு வகையான உரிமைகளை வள்ளுவர் வழங்குகிறார். முதல் உரிமை கடமை. அதாவது தன்னை நம்பி வாழும் மக்களுக்குத் தொண்டு செய்தல்; அவர்களைக் காத்தல்; அவர்களுக்கு எந்த வகையான தீங்கும் வராமல் பேணிப் பாதுகாத்தல். இவை அரசின் முதற்கடமை. இந்த முதற்கடமையைச் செய்யத் தடையாக இருப்பவரை, இல்லை—தடையாக இருப்பவரின் குற்றத்தைக் கடிந்து நீக்கத் தண்டனை வழங்கும் உரிமை இரண்டாவது. முதலுரிமைக் கடமையாகிய தொண்டினைச் செய்யத் துணைக் கருவியாகவே தண்டம் வழங்கும் உரிமை அரசுக்குக் கிடைத்தது; அதிகாரமும் கிடைத்தது என்பது வள்ளுவரின் கருத்து. ஆனால், இன்று அரசு என்றவுடன் மக்கள் மன்றத்தில் நினைவுக்கு வருவது. தொண்டு அல்ல — சேவையல்ல; அதிகாரம்! அதன் வழிப்பட்ட அச்சம்! இது திருவள்ளுவர் நெறிக்கு முரண். திருவள்ளுவர்,

> 'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
> வடுவன்று வேந்தன் தொழில்' 549

என்பர். வேந்தன், குற்றங் கடிதல் வடுவன்று. அஃது அவன் தொழில்! எப்பொழுது? குடிபுறம் காத்தோம்பும் தொழிலைச் செய்யும் பொழுது வடுவன்று. இவ்வாறு கொண்டு கூட்டிப் பொருள்கொண்டாலே திருவள்ளுவர் காட்டும் அரசியலின் மாட்சிமையை உணர முடியும்.

வேந்தன் தண்டனை வழங்கலாம். ஆம்! வேளாண்மை செய்பவன் களைப்பிடுங்குதலைப் போல, மன்பதை காக்கும் அரசுக்கும் மக்களே போல வாழும் கயவரை ஒறுக்க உரிமை 'புண்டு. ஆனால், இங்கே ஒறுத்திடும் அதிகாரம் ஒறுக்கப்படும்

மக்களின் இழிநிலையைப் பொறுத்ததேயாம். கொலை, உலகில் கொடுமையானது. கொலையினும் கொடியர் என்று வள்ளுவர் வலியுறுத்த "கொலையிற் கொடியாரை" என்பார். கழனியில் உள்ள களையைக் கிள்ளுதல் கூடாது. கிள்ளினால் மீண்டும் தளிர்க்கும். கழனியிற் களைபறிப்போர் களையை வேரோடு அகற்றுதல் வேண்டும். களையல்லாமல் வளரும் பயிருக்கு உரச்சத்தைச் சேர்க்கும் செடியைப் பிடுங்கக் கூடாது. மக்களின் சாதாரணக் குற்றங்களைச் செய்கின்ற வர்கள் சிறிய தண்டனைகள் மூலம் திருத்தமுறுவர். இத்தகை யோருக்குக் கடுந்தண்டனை வழங்குதல் முறையன்று, கொலையிற் கொடியாருக்குத்தான் வேளாளன் களையைப் பிடுங்கி எறிதலைப் போல, அரசு கடுந் தண்டனை வழங்கவேண்டும்.

திருவள்ளுவர்,

> 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்' 550

என்பர். ரூசோவும் கொலையிற் கொடியாருக்குக் கொலைத் தண்டனை வழங்காவிடில் கொலை ஒன்றன் பின் ஒன்றாகத் தொடரும் என்றும், கொலை செய்வார் பலராகப் பெருகுவர் என்றும் கூறுவர். மேலும், கொலைஞன் ஒருவனுக்குக் கொலைத் தண்டனை வழங்குவதன் மூலம், பிறிதொரு மனிதனைக் கொலையினின்று தடுப்பது மட்டுமன்றி இன்னொரு மனிதனைக் கொலைகாரனாக மாறாமலும் தடுக்க முடியும் என்பர்.

அரசுக் கட்டிலில் ஏறுவோர் மற்றவர் செய்யும் விமர்சனத்துக்குக் கூச்சப்படக் கூடாது; உழப்படாத நிலமும், துடைக்கப்படாத வைரமும் விமர்சனம் செய்யப்படாத அரசும் காலப்போக்கில் தாமே வளஞ் சுருங்கும்; ஒளி குன்றும்; தரங் குன்றும். அரசுக்கட்டிலில் இருப்போர் தம்மை மற்றவர் புகழ்ந்தால் எங்ஙனம் மகிழ்கிறார்களோ அது

போலவே தம் தவறுகளை மற்றவர் இடித்து எடுத்துக் காட்டும் பொழுதும் ஏற்றுத் திருத்திக் கொள்ளும் இயல்பினைப் பெறவேண்டும். சீன நாட்டுத் தத்துவஞானி கன்பூசியஸ், "கீழே விழுதல் குற்றமன்று. ஆனால், அப்படியே விழுந்து கிடப்பதும், திரும்பத் திரும்ப வீழ்தலும் அறியாமை" என்றார். அதுபோல அரசுக் கட்டிலில் அமர்ந்திருப்போர் தம்மை நச்சி இச்சை பேசிப் புகழ்வாரை மட்டுமே துணையாகக் கொள்ளக்கூடாது. அத்தகைய துணையைப் பெறுபவர் பகைவரின்றியே அழிவர். அரசாள்வோர் தம் குறையை இடித்துக் காட்டுபவரைத் துணையாகப் பெற்றாலே என்றும் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பர்.

> 'இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
> கெடுக்குந் தகைமை யவர்' 447

என்பது வள்ளுவர் வாக்கு. ஆம்! அதிகமான செல்வமோ, அரசுக் கட்டிலோ வந்துற்றபோது இச்சை முகம் காட்டி நயப்புறப் பேசுவோர் வந்து சூழ்வர். புகழ்ப் போதை ஏற்றுவர். அந்த மயக்கக் கிறுக்கில் மதி நலம் கெடும். அதுபோது யாரேனும் ஒருவர் தம்மையோ—தம் செயலையோ முறையன்று என்று மறுத்தால் ஆராய மனமிருக்காது. சொல்பவர் மீது சினம் தோன்றும். அழுக்காற்றால் — ஆணவத்தால் குற்றம் சொல்கிறான் என்று கருதி முடிவெடுக்கத் தோன்றும். அதுமட்டுமா? அந்த நல்ல மனிதரை அழிக்கவும் மனம் ஒருப்படும். அதனாலன்றோ 'தம் புகழ் கேட்க நாண வேண்டும்' என்று சங்ககாலச் சான்றோர் கூறினர்.

வள்ளுவர், 'செவிகைப்பச் சொற் பொறுக்கவேண்டும்' என்கிறார். வாய்ச் சுவையிலும் கூட இனிப்பு மட்டுமே இன்பம் தருவது அல்ல. கைப்பாக இருக்கும் பாகற்காய்க்கு ஈடு எது? கசக்கும் வேப்பங் கொழுந்துக்கு விஞ்சிய மருந்து ஏது? செவிக்கு இன்சுவைதரும் புகழ்ச் சொற்களை மட்டுமே

கேட்க விரும்பக் கூடாது. சொற்களின் சுவையை விடச் சொற்களால் விளையும் பயனே சிறப்புடையது; நலம் தருவது.

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு' 389

என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் காட்டும் அரசு நீதியை வழங்கும் அரசு; நீதி தழுவிய சமுதாயத்தை அமைக்கும் அரசு. நீதி, உயர்ந்தது. ஆனால், உலகியலின் இன்றியமையாத் தேவையாகிய பொருளியல் முறை மாறுபடும் பொழுது, நீதி கெடும்; செங்கோல் நடைபெறுவதற்கு இயலாது. ஆதலால் திருவள்ளுவர், தாம் படைத்த அரசியலில், பொருளியல் முறை வைப்பையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த இருபதாம் நூற்றாண்டின் சேம நல அரசு என்று கூறிக் கொள்ளும் அரசில் கூடத் திருவள்ளுவர் காட்டுகின்ற அரசின் பொருளியல் முறை செப்பமாக அமையவில்லை. அரசு, ஒரே வழியில் அதாவது மக்களிடத்திலிருந்து வரி தண்டுதல் வாயிலாக வரும் வருவாயை மட்டுமே நம்பியிருத்தல் கூடாது. பொருள் வருவதற்குரிய புதுப்புது வழிகளைத் திட்டமிட்டுக் காணுதல் வேண்டும். அந்த வழிகளில் அரசு விழிப்பாகப் பொருளையீட்ட வேண்டும். அரசு தாம் ஈட்டும் பொருளை, ஈட்டும் பொழுதே சில்லறை யாகச் செலவிடுதல் கூடாது. ஈட்டப்படும் பொருள் பலருக்குப் பயன்தரத் தக்கவாறு வளரும் வரை காத்து வைக்கப் படவேண்டும். அதன்பின் அப்பொருளை, யார் யாருக்கு, எந்தெந்த வகையில் பயன்பட வேண்டும் என்று தெளிவாகத் திட்டமிட்டு வகுத்தும் வழங்க வேண்டும். இந்த அருமையான பொருளியல் கருத்து, திருவள்ளுவருடைய மூதறிவில் பிறந்த சிந்தனை. இன்றைய இந்திய அரசியலில் வள்ளுவர் காட்டிய 'வகுத்தல்' முறையில் தான் கேடு இருக்கிறதென்று அரசியல் — பொருளியல் அறிஞர்கள்

கூறுகின்றனர். ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் நாட்டின் வருமானம் உயர்ந்தும் நாட்டுமக்களின் வறுமை மாறவில்லை. ஏன்? பெருகி வளர்ந்த நாட்டு வருமானம் உழைத்தோருக்கும், தேவையுடையோருக்கும் வழங்கப் பெறாமல் அல்லது கிடைக்காமல் முதலாளித்துவ உலகம் தனக்கு உரிமைப் படுத்திக் கொண்டது. வள்ளுவர் வகுத்த அரசியல் நடைமுறைப்படுத்தப் பெறுமானால் இந்தக் குறை நீங்கும்.

திருவள்ளுவர் காட்டும் அரசியலில் தனிமனிதன் அரசுக்கு அடிமையல்லன். அவன் முழு உரிமையுடைய ஒரு குடிமகன். இத்தகைய குடிமக்களை அரசு பெற்றாலே, அஃது அரசு என்ற இலக்கணத்தைப் பொருந்துகிறது. திருவள்ளுவர் காட்டும் அரசியலில் தனிமனிதன் அரசுக்கும் தனது கடமையைச் செய்கிறான்; அதுபோலவே அரசினிடமிருந்தும் உரிமையைப் பெறுகிறான். திருவள்ளுவர் காட்டும் அரசியலில் சமுதாயக் கூட்டமைப்பு—ஒத்த தறிந்து வாழும் ஒப்புரவு இயல் வாழ்க்கை உண்டு. திருவள்ளுவர் காட்டும் அரசு, குடிகளைக் காக்கும் அரசு; குடிகளிடத்தில் குற்றம் தோன்றாதவாறு தன் குற்றம் நீக்கித் திகழும் அரசு. திருவள்ளுவர் காட்டும் அரசியலில் இச்சைமொழி பேசுவோருக்கு இடமில்லை; இடித்துத் திருத்துவோருக்கே ஏற்றம் உண்டு. திருவள்ளுவர் காட்டும் அரசு பொருளை ஈட்டும் அரசு மட்டுமன்று. பொருளை வகுத்தும் வழங்கும் அரசு. திருவள்ளுவர் காட்டும் அரசியல் வையகத்தில் மலருமானால் துன்பம் நீங்கும்; இன்பம் பெருகி வளரும்.

14

சிந்தனைச் செல்வம்

உலக முதல்வன்!

சிறப்புடைய காட்சிகள் நான்கு. கண்ணுக்குப் புலனாகும் காட்சி ஒன்று. அறிவுக் காட்சி பிறிதொன்று. உணர்வுக் காட்சி மற்றொன்று. நான்காவது காட்சி கடவுட் காட்சி; முதற்காட்சி, உயிர்க்குலம் அனைத்துக்கும் பொது. விலங்குகள், பறவைகள் கூட கண்களால் காணவும், தனக்குச் சார்பான ஒன்றை அணுகவும், பொருத்தப் பாடில்லாதன வற்றைக் கண்டு விலகவும் காண்கின்றோம்! எனவே, கண்களால் காணப்பெறும் காட்சி அளவில் உயிர்க் குலத்தினிடையில் வேறுபாடு இல்லை!

வளர்ந்த மானிடப் பிறப் பெய்தியவர்கள் கண்களால் காணப்பெறும் காட்சியை வாயிலாகக் கொண்டு படிப் படியாக நோக்கி வளர்ந்து, மிகுதியும் பயன்பெறுவர். மனிதன், கண்களால் மட்டும் பார்க்கும் காட்சியே பார்த்தல்; அப்பார்வையின் வழி, காட்சிப் பொருளின் உள்ளீடுகளையும் கூர்ந்து நோக்கி ஆராய்வதை நோக்குதல் என்பர். வளர்ந்த அறிஞர்கள் கண்களை வாயிலாகக் கொண்டு காணாதன

எல்லாம் காண்பர். ஏன் அக் கண்களுக்கே கூட காட்சியைப் படைத்தும் கொடுப்பர்.

கண்ணால் காணப்பெறும் காட்சியிலிருந்து வளர்வது அறிவுக் காட்சி! எந்த ஒன்றையும் அதன் இருப்பையும் உள்ளீட்டையும் பண்பாடுகளையும் அறிவுப் பார்வையில் அணுகுவது அறிவுக் காட்சி. சில சமயங்களில் அறிவுக் காட்சி அப்பட்டமான உண்மைகளைக் கூறும். அது கணிதத்தைப் போல் சுவையற்றதாக இருக்கும்.

அறிவு நிலையிலிருந்து உணர்வு நிலைக்கு வளர்ச்சி அடையும் நிலையில் நெஞ்சம் கலந்த அனுபவங்கள் கிடைக்கும்; உணர்வு சிறக்கும்; புலன்கள் செப்பமடையும்; பொறிகள் செழிக்கும்; புண்ணியத்தின் பயனையடையும். இங்ஙனம் உணர்வுக் காட்சியில் வளர்ந்தவர்கள் நன்னிலை யையே காண்பர். நன்மையையே சொல்லுவர்; நன்மை யையே செய்வர்!

உணர்வுக் காட்சியிலும் சிறந்தது கடவுட் காட்சி! ஏன்? உணர்வுக் காட்சிகளில் கூட ஒரோவழி உயிர்க்குல வேறு பாடுகள் தலைக்காட்டலாம். சுற்றம், உறவு என்ற வட்டங்கள் தோன்றலாம். இந்த உணர்வுகள் குறை உடைய - அல்லாது போனாலும் வளர்ந்த—முழுமையான நிறையாகாது. கடவுட் காட்சியில்தான் எல்லைகள் கரைகின்றன. வேறுபாடுகள் தலைகாட்டுவதில்லை. எங்கும் எல்லாவற்றிலும் ஒருமைப் பாட்டினைக் காட்டும் காட்சி கடவுள் காட்சி!

திருவள்ளுவர், ஞானப் புதல்வர்! திருவள்ளுவர் தந்த திருக்குறள் உலகப் பொதுமறை. திருவள்ளுவர் கடவுள் காட்சியில் திளைத்த பேரருளாளர்; பெருஞானச் செல்வர். திருவள்ளுவர் தாம் கண்ட கடவுட் காட்சியைக் காணாத மக்களுக்கு, ஞானாசிரியராக அமர்ந்து விளக்குகிறார்.

எழுத்துக்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என நான்குவகை. இந் நான்கு

வகை எழுத்துக்களுக்கும் அடிப்படையாகவும் உள் நின்று ஒலிக்கும் ஒலியாகவும் விளங்குவது 'அ' என்ற உயிர் எழுத்து. 'அ' என்ற எழுத்தின் அடிப்படையும் ஒலிக் கலப்பும் இல்லாது எந்த எழுத்துக்கும் ஒலி வடிவமும் இல்லை; வரி வடிவமும் இல்லை.

ஆயினும் எல்லா எழுத்தொலிகளிலும் அகரம் இருப்பது வெளிப்படையாகத் தெரியாது; கேட்காது. இவ்வுண்மையை இலக்கண நுண்ணறிவோடு கூர்ந்து நோக்கினால் தெரியும். இந்தக் காட்சியைக் கடவுட் காட்சிக்கு ஒப்பிடுகிறார் திருவள்ளுவர். காணப்படும் உலகம் 'அவன், அவள், அது' என்று மூன்று நிலையினதாக இயங்குகிறது. மூன்று நிலையினதாக இயங்கும் இவ்வுலகத் திற்கு முதலாக—இயக்கும் ஆற்றலாக ஒன்றாகியும் உடனாகியும் வேறாகியும் நின்று, இயக்கும் ஆற்றலாகக் கடவுள் இருக்கிறார்.

என்பது திருவள்ளுவர் கருத்து.

காணும் காட்சியின் வாயிலாகக் காணாதனவற்றையும் காண்பதுதான் அறிவுடைமை. ஆதலால், இவ்வுலக இயக்கத்திற்கு இறைவன் முதலாக இயக்கும் ஆற்றலாக இருக்கிறான் என்பது பொருள்.

உலக இயக்கத்திற்கு அடிப்படையாக இருக்கும் கடவுளுக்கு ஆற்றல் மிகுதியும் தேவை. தமிழகச் சமய வரலாற்றில் கடவுளை, அம்மையப்பனாகப் போற்றி வழிபடுதல் மரபு. அம்மையப்பன் வழிபாடு என்பது பொருள், பொருளின் ஆற்றல் என்று பகுத்துக் கண்டுணர்ந்து வழிபடுதலாகும். பொருள் சிவம்; ஆற்றல் அம்மை. ஆதி சக்தியைப் பங்கில் உடையவன் என்பது பொருள். உலகத்திற்கு முதலாக இருப்பவன் அம்மையப்பன்.

எழுத்துக்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கிற ஒலிக்கு முதற்காரணம் நாதம். இந்த நாதம் தோற்றக்களத்தில்

அகர வடிவில் இயங்குகிறது. 'அ' என்ற வரிவடிவத்தைக் கூர்ந்து நோக்குங்கள்! 'அ' என்ற எழுத்தின் ஆரம்பம் ஒரு வட்டம். வட்டத்தில் தொடங்கும் 'அ' எழுத்து வளைந்து கீழ் நோக்கி வருகிறது. திரும்ப மேலேறி வளைவின்றி நேராக வளைவைக் கடந்து வெளியில் சென்று ஒரு நேர்கோட்டு வடியில் முடிகிறது. 'அ' எழுத்தில் தொடங்கும் வட்டம் கடவுளின் நிறைநலம். கடவுள், உயிர்களை ஆட்கொள்வதற் காக இறங்கிவரும் நிலைகள் வளைந்த பகுதி. தொடக்க நிலையில் உயிர்கள் தன்முனைப்பாகக் கடவுளைப் பற்றிக் கருதாது முன்னே செல்லும்! வாழ்க்கையில் பல்வேறு, படிப்பினைகளைக் கண்ட பிறகு, உயிர்க்குத் தெய்வம் என்பதோர் சிந்தனை உண்டாகும்.

அதுபோதுதான் உயிர் கடவுளை அறிந்து அவன் வழி காட்ட அவன் பின்னே செல்வதை விளக்கும் பகுதி 'அ' வில் முன்னோக்கிச் செல்லும் நேர்க்கோடு. கடவுளை அறிந்து அவ்வழி நின்று ஒழுகும் உயிரின் நேர் நிலையை உணர்த்தும் பகுதி 'அ' எழுத்தின் வடிவுகளைக் கடந்து வலப்பக்கத்தில் நிமிர்ந்து நிற்கும் நேர்க்கோடு. நேர்மை என்பது ஒரு தூய்மையான அறநெறிப்பட்ட பண்பு!

எல்லா உயிர்களுக்கும் ஒப்ப நினைத்துச் செய்தலே நேர்மை என்ற அறம்! இதனை விளக்குகின்ற வகையில் அகர வடிவம் அமைந்திருப்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.' 1

யாருடன் போர்

மனித குல வாழ்வியலில் பகை, முற்றாக ஒதுக்கத் தக்கதுமன்று. அதனால் பகை, அறம் என்று ஏற்கத் தக்கது மாகாது. பகை, மருந்து போல ஏற்றுப் போற்றப்படுகின்றது. அதாவது பகை கொள்ளும் இடம், பொருள், விளைவு

ஆகியன பற்றிப் பகை, அறமாகிறது—அல்லது மாறாகிறது. தீயவற்றோடு பகைகொண்டு எதிர்த்துப் போராடுதல் வாழ்வின் நோக்கமாய் அமைதல் வேண்டும்.

வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் சமாதானம் செய்வித்தல் போலச் சிலர் தீமையோடும் சமாதானம் செய்து கொள்வர். தீமையையும் செய்துவிட்டுப் பிராயச்சித்தம் — கழுவாய் செய்வர். இது அற நெறியன்று.

அதனால், மனித குல வரலாற்றில் தீமையை எதிர்த்துப் போராடிய போராட்டங்களைவிட ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ள அரசர்கள் நடத்திய போராட்டங்களே மிகுதி. மனிதத் தீமையை எதிர்த்துப் போராடியவர்கள் தீர்க்க தரிசிகள்—ஞானிகள். கொடிய ஆதிக்க வெறி பிடித்த, குடிநலம் பேணாத அரசர்களை எதிர்த்துப் போராடியவர் களும் அரசியலில் ஞானிகள் என்றே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

பிரெஞ்சுப் புரட்சியும், அமெரிக்காவில் நீக்ரோ விடுதலைக்காக நடந்த புரட்சியும், சோவியத் புரட்சியும், இந்திய விடுதலைப் புரட்சியும் ஆதிக்கத்தை எதிர்த்து நிகழ்ந்தவை. புத்தரும், ஏசுவும், முகம்மது நபியும், அப்பரடிகளும் நிகழ்த்திய போர் மனித குலத் தீமையை எதிர்த்த போர்! இந்தப் போர்க் களங்கள் வேள்விக் கூடங்களைப் போலப் புனிதமானவை; அவைகளினும் விஞ்சிய புனிதமானவை.

பகை, எளிதில் கொள்ளக் கூடாது. தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். பகைதானே என்று அற்பத்தின்மீது பகை கொள்ளக்கூடாது. நம்முடைய பகைவரும் மாட்சிமை மிக்குடையராக இருத்தல் வேண்டும். நம்முடைய பகை வருக்கு மாட்சிமை இல்லாது போனால் எதிர்ப்போர்க்கும் இழிவு. அதனாலன்றோ கம்பன், ஒப்புமையில்லாத

இராமனின் பகைவனாகிய இராவணனை ஒப்பாரும் மிக்காருமில்லாத் தலைவனாகக் காட்டுகின்றான்.

அறுமுகச் செவ்வேள் பகைமேற்கொண்டு சென்ற சூரபதுமனும் ஒரு நிகரில் தலைவனே! மாட்சிமை மிக்குடைய ஒருவனையே பகைவனாகக் கொள்ள வேண்டும். மாட்சிமையில்லாதார் வலிய பகை மேற்கொண்டு வந்தாலும் ஒதுங்குதலும் ஒதுக்கித் தள்ளுதலும் பெருமை பொருந்திய ஆண்மைக்கு அழகேயாம். தம்மொடு பொருதற்குத் தகுதியில்லாதார் மாட்டுப் பொருதாது ஒதுங்குதல் கோழைத் தனமாகாது.

பகை மேற் கொள்ளும்பொழுது, மாட்சிமை மிக்க பகைவனிடத்திலேயே பகை கொள்ள வேண்டும். ஆயினும் தம்மின் வலியாரிடத்துப் பகை கொள்ளுதல் வாழும் நெறி யன்று. அறிவின் ஆக்கமும் அன்று. தம்மின் வலியாரிடத்து மோதுதல், கல் மலையைக் கையினால் அடித்து நொறுக்கும் முயற்சி மேற் கொள்ளுதலை ஒத்தது. இதனால் கைக்கே வலி ஏற்படும். மலை உடையாது. ஆதலால், வலியாரோடு பகை கொள்ளுதல் தற்கொலைக்குச் சமம்.

தம்மின் வலியாரோடு பகை கொள்ளற்க என்றதனால் தம்மின் மெலியாரோடு பகை கொள்ளலாம் என்பது பொரு ளன்று. தம்மின் மெலியார்மேற் பகை கொள்ளுதல் ஆண்மைக்கும் மதிப்பிற்கும் இழுக்கைத் தரும். புகழைக் கொல்லும். இவற்றை இழந்த பின் வாழ்வதும் வாழ்வோ?

மெலியார் மேல் மோதுதல் நீதியுமன்று—நெறியுமன்று; ஆண்மையுமன்று—அழகுமன்று; புகழுமன்று. தம்மில் மெலியார் மேல் மோதுதல் மூலம் மோதுவார்க்கு இகழ்ச்சியும், மோதி அழிக்கப் பெற்ற மெலிய பகைவர்க்குப் புகழும் கிடைக்கும்.

வள்ளல் பாரியின் மீது முரணி மோதிய மூவர் பெயர்களும் தெரியாமலே மறைந்து போயின. ஆனால் போர்முறையில் மாண்ட பாரியின் புகழ் இன்றும் நிலவுகிறது.

பெருமன்னன் சேரமான் கணைக்காலிரும்பொறை, தகடூரை ஆண்ட வேளிர்குலத் தலைவன் அதியமானோடு போர் தொடுத்து வெற்றி பெற்றான். அதியமான் இறந்து பட்டான். தகடூர் அழிந்தது! ஆயினும், சேரனின் வெற்றி வாழ்த்தப் பெறவில்லை. அவ்வெற்றி தமிழக மக்களின் நினைவிலும் இல்லை. அதியமானின் புகழ் தகடூர் யாத்திரைக் காவியமாகப் பரிணமித்துள்ளது. அதியமான் "உளதாகும் சாக்காடு" பெற்றான். அவன் புகழ் நிலவுகிறது!

தம்மின் மெலியார்மேல் மறந்தும் பகை கொள்ளற்க! அஃது ஆண்மைக்கு இழுக்கு; புகழினைக் கெடுக்கும்! தம்மொடு மாறுபடும் மெலியாரை மனம் திருத்தி ஓம்புக! வாய்ப்பில்லையாயின் ஒதுங்குக! பகையும் நொதுமலுமின்றி ஒதுக்குக!

தம்மின் வலியார் மீதும் பகை கொள்ளற்க; தம்மின் மெலியார் மீதும் பகை கொள்ளற்க என்றதனால் தம்மை நிகர்த்த வலிமையுடையாரோடு பகை கொள்ளுதல் வர வேற்கப் பெற்றது. தம்மின் வலியாரோடு பகை கொள்ளற்க என்றதனால் கோழைத்தனம் வராதோ என்ற வினா எழலாம். தம்முடைய வலிமையைப் பெருக்கி வளர்த்துக் கொண்டு உரியகாலம் வரும் பொழுது பகை கொள்ளுதல் விலக்கப் படவில்லை.

மாற்றான் வலியைத் தெரிந்து கொள்ளுதலே தம் வலியைப் பெருக்கி வளர்த்துக் கொள்வதற்குத்தான். தம் வலி பெருக்குதல் நாள்தோறும் நாடிச் செய்ய வேண்டிய கடமை. இதில் இடையீடோ, சோர்வோ தலைக்காணின் உள்ள வலிமையும் குன்றும்; தளர்ச்சி வந்தடையும். ஆதலால்,

மாற்றான் வலியறிந்து உரிய வலிமையைப் பெற முயலுக என்பதே வள்ளுவம் உணர்த்தும் வாழ்வியல் முறை.

தம்மின் வலியாரோடு பகை கொள்ளுதல் தற்கொலைக்குச் சமம். ஆதலின், அதனைத் தவிர்த்திடுக! மனத்தைத் தீமையினின்றும் பாதுகாப்போம்! அவ்வழி வாழ்வாங்கு வாழ்வோம்.

'வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை' 861

'அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.' 863

15

ஏன் திருக்குறள் பேரவை?

மனிதகுலத்தின் மேம்பாடு அறிவின் வழிப்பட்டது; ஆள்வினையின் வழியது. மனித குலத்தின் அமைதி, நீதியைச் சார்ந்தது. மனித குலத்தின் உயிர்ப்பு, விழுமிய கடவுள் நெறி. இத்தகு உயர்நெறியில் மனித குலத்தை உய்த்துச் செலுத்த ஒரு நூல் தேவை. அந்த நூல் எதுவாக இருக்கக்கூடும்? நூல்கள் காடுகள் போல் பல்கி உள்ளன. அவற்றுள் பல, நூலின் இலக்கணத்திற்கு மாறுபட்டவை. நூல்கள் மனக் கோட்டத்தைத் தவிர்க்க வேண்டியவை. ஆனால் இந்த நூல்களில் பெரும்பான்மையான நூல்கள் மனக் கோட் டத்தை உண்டாக்குவனவாக அமைந்துள்ளன. இலக்கியக் காட்டில் ஒரே ஒரு நூல் உயர்ந்து விளங்குகின்றது. சர் ஆல்பர்ட் சுவைட்சர், சிந்தைக்கினிய செவிக்கினிய வார்த்தை களால் அந்த நூலைப் பாராட்டுகிறார். "உயர்ந்த நீதி இலக்கியங்களில் திருக்குறளே சிறந்தது. மனிதராகப் பிறந்தோர் பேசும் வேறு எம் மொழியிலும் திருக்குறளை யொப்ப ஒரு நூல் இல்லை" என்று அவர் பாராட்டியுள்ளார். திருவள்ளுவர் தந்த திருக்குறளுக்கு என்ன சிறப்பு?

திருக்குறள் ஒரு முழுநூல்; வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் தழுவி வளர்க்கும் வாழ்க்கை நூல்; அறநூல்;

அரசியல் சாத்திர நூல்; அரசியல் உண்மைகளைச் சதுரப் பாட்டுடன் காட்டும் பெருநூல்; மெய்யுணர்வினை நல்கும் ஞானநூல்; மனித வளர்ச்சியின் பருவம் தோறும் துணைநின்று வழிநடத்தும் வாழ்வு நூல்; உலகப் பொதுநூல். திருக்குறள் கடவுளை நம்புகிறது. ஆனால் கடவுளுக்காகச் செய்யப்பட்ட நூலன்று; மதச்சார்பான நூலன்று. திருக்குறள் அரசனை நம்புகிறது. ஆனால். அரசனுக்காகச் செய்யப்பட்ட நூலன்று. திருக்குறள் ஓர் அரசியல் நூலே. மக்களின் உரிமைகளுக்கு அரண் செய்து நிற்கும் நூலே. கடவுளையும் அரசனையும் முன்னிலைப்படுத்தி, அவர்களுக்காகவே தோன்றும் இலக்கியங்கள் மக்களை மறந்து விடுவனவாக அமைந்து விட்டன. திருக்குறள் மனிதனை முன்னிலைப் படுத்துகிறது. ஆதலால், திருக்குறள் புதுமை நிறைந்தது; பொதுமை தழுவியது.

திருக்குறள் மனித சமுதாயத்தைச் சீருற வளர்த்து அவ்வழி அந்தச் சமுதாயத்தின் ஒரு பகுதியாக இருக்கும் குடும்பத்தைச் செழுமைப்படுத்தி அதன் பயனாகத் தனிமனிதனைச் செழுமையாக வளர்த்து மீண்டும் சமுதாயம் பயனுறும் வகையில் சமுதாயத்தை இயக்கும் நூல். மனித குலத்தை வேறுபடுத்திப் பகைவளர்க்கும் எந்த ஒரு கொள்கை யையும், கோட்பாட்டையும் ஏற்றுக் கொள்ளாதது. திருக்குறளுக்குரிய ஒரே பெருமை. நாடு, மொழி, இனம், சமயம் ஆகிய வேறுபாடுகளைத் திருக்குறள் தழுவவில்லை. மாறாக, முற்றாக ஒதுக்கியிருக்கிறது. நாட்டுப்பற்றும் கூட எல்லை கடக்கும்பொழுது பகையை வளர்க்கிறது. என்நாடு சிறந்தது எனப் போராடத் தொடங்குகின்றனர். திருக்குறள் நாட்டின் இலக்கணம் பேசுகிறது. ஆனால், அது தமிழ்நாட்டைப் பற்றிப் பேசவில்லை. திருக்குறள் உலகம் தழீஇய ஒட்பம் உடையது.

திருக்குறள், வாழ்க்கையில் பிறந்த வாழ்வியல் நூல்; திருக்குறள் வாழ்க்கையோடிசைந்த அறநூல். திருக்குறள் சமய

நூல். ஆனால் உலகப் பொதுச் சமயநூல்; சமயங்களைக் கடந்த பொதுநெறி நூல். திருக்குறள் மானுடத்தின் வெற்றியைக் குறிக்கோளாக உடையது. திருவள்ளுவத்தின் வழி வையகம் இயங்கும் போது இன்பம் மலரும்; துன்பம் நீங்கும்.

திருக்குறள் தமிழிலே தோன்றியிருந்தும் தமிழர்களின் வாழ்வியல் திருக்குறள் வழியதாக அமையவில்லை. பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட வால்டேர, ரூசோ, சோவியத் புரட்சிக்கு வித்திட்ட லெனின் ஆகிய மாமேதை களுக்குத் திருவள்ளுவர் ஒப்பானவர்; காலத்தால் நோக்க உயர்ந்தவர். திருக்குறள் காட்டும் சமுதாய அமைப்பில் உயர்வு தாழ்வு இல்லை. ஆயினும் இன்றைய தமிழகத்தில் வாழும் நெறி எப்படி இருக்கிறது? வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் தடுமாற்றங்கள்! முறை பிறழ்வுகள்! ஒரு கடவுள் வழிபாடு இல்லை! பல நூறு ஆண்டுகளாகக் கடிந்து ஒதுக்கப் பெற்ற சிறு தெய்வ வழிபாடுகள் இன்னும் மறைந்தபாடில்லை.

மேட்டுக்குடி மதத்தலைவர்கள் சாதிமுறைகளைப் பத்திரமாகப் பாதுகாக்கச் சிறுதெய்வ வழிபாடுகளை ஊக்கப்படுத்துகின்றனர். வாலறிவு—ஞானம் வளர்வதற்குத் தடையாகச் சடங்குகளிலேயே மக்களை ஈடுபடுத்தி அலைக் கழிவு செய்கின்றனர்; ‘பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்’ என்று பெரு நெறிகாட்டிய தமிழ் நாட்டில் எண்ணத் தொலையாத சாதிகள்! இன, மத வேற்றுமைகள்! பிரிவினைகள்! பகைமை வழிப்பட்ட மோதல்கள்! அவ்வழியி லாகிய அழுக்காறு! இவை அகன்ற பாடில்லை. ‘இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு’ என்று திருவள்ளுவர் வருந்திக் கோடிட்டுக் காட்டிய வறுமை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஏன்? அன்பினால் இணைக்கப்பெற்று ஒருமையுணர்வுடன் வாழ வேண்டிய உயிர்க்குலம் உட்பகையால் உள்ளீடு அழிந்துவருகிறது. இந்த

அவல நிலையிலிருந்து தமிழகத்தை-மனிதகுலத்தை மீட்பதற்குரிய ஒரேவழி திருக்குறளின் அறத்தை வாழ்வியலறமாக, வாழ்வியற் சட்டமாக ஏற்றுக் கொள்வதுதான்.

திருக்குறள் பேரவை இந்த முயற்சிக்காகத் தொடங்கப் பெறுகிறது. திருக்குறளுக்குப் பல உரைகள் உள்ளன; எண்ணிலா மொழி பெயர்ப்புகள் உள்ளன. திருக்குறள் இடம்பெறாத நூலகம் உலகில் இல்லை. திருக்குறளைத் தொட்டுக் காட்டாத சொற்பொழிவாளர் இல்லை! இப்பணிகளைச் செய்வது திருக்குறள் பேரவையின் பணியன்று. ஆனால், அவை செய்யக் கூடாதன என்று விலக்கப் பட்டனவும் அல்ல. திருக்குறள் பேரவையின் முதல்நோக்கம் திருக்குறளை முழுதாகக் கற்றலாகும். மேலும் திருக்குறட் கருத்தை, கொள்கைகளை, கோட்பாடுகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திச் சோதனைகள் செய்து வெற்றிபெற அறிஞர்கள் ஒரு சில நூறு பேர்களையாவது படைத்திடுவது என்பதாகும். வாழ்க்கையின் அனைத்துச் சிக்கல்களுக்கும் திருக்குறள்வழி தீர்வு காண்பது என்பது திருக்குறள் பேரவையின் குறிக்கோள். திருக்குறளைவிட உயர்ந்த நூலில்லை; திருவள்ளுவரை விடச் சிறந்த ஆசிரியரில்லை என்ற கருத்தில் பேரவை உறுதியாக இருக்கும். நமது சமுதாயம் வாழ்க்கைக்கு ஒத்துவராத-வர இயலாத அயல்வழி கருத்துக்களால் ஊடுருவப் பெற்று உள்ளீடழிந்து உருக்குலைந்து 'அதிர்ஷ்டத்தை நம்பி ஆள்வினையை இழந்து, அறியாமையே அறிவு என மயங்கி, ஒருமைப்பாட்டை இழந்து களிப்பை நாடி, கடவுளை மறந்து தேவதைகளை நாடிச் செல்லும் இழிநிலை ஏற்பட்டது. இதற்கொரு முடிவுகட்டி எங்கும் கல்வி, அறிவின் வளர்ச்சி, ஆள்வினையின் ஆக்கம், ஒல்காப்பெரும் புகழ் ஒப்புரவுநெறி, குடிதழீஇய செங்கோல், உடம்பொடு உயிரனையராகக் கூடிவாழும் காதலர், உயிர்க்கு உறுகண் செய்யாத உயர்தவத்தோர், நடுவூரில் ஊருணி, பயன்மரம், மருந்துமரம் அனைய சமுதாய நெறி இவைகளை வளர்த்து

வையகத்திற்குப் புகழ் சேர்க்க வள்ளுவத்தைக் கருவியாகப் பயன்படுத்துதல் திருக்குறள் பேரவையின் நோக்கம்.

அன்புகூர்ந்து திருக்குறள் பேரவையைத் தொடங்குங்கள். நமது மரபின் வழிவந்தவர்களை, திருக்குறளே வாழ்க்கை மறையென நம்பச் செய்யுங்கள். திருப்பித் திருப்பித் திருக்குறளை ஓதச் செய்யுங்கள். திருக்குறள் தெளிவு வகுப்பு நடத்துங்கள்; வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணத் திருக்குறள் சிந்தனைச் சூழல்களை அமையுங்கள்; திருவள்ளுவர் காட்டும் தனக்குவமையில்லாதான் தாள்களை மட்டுமே தொழுங்கள். திருக்குறள் பேரவை தமிழகத்தைத் தழுவிய இயக்கமாக வேண்டும். அஃது உலகு தழுவியதாக மலரவேண்டும். ஆனாலும், ஆரவாரமாக வளரவேண்டாம். இலட்சியப் பிடிப்புடையதாக அமையவேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள்! இந்தத் தலைமுறையில் தமிழகத்தின் வாழ்வு திருக்குறள் வழியதாக அமையும் புரட்சியை நாம் செய்து முடிக்கத் திருக்குறள் பேரவை அமையுங்கள்! கருத்துப் புரட்சிக்கு வித்திடுங்கள்! திருக்குறளின் தத்துவங்கள் அனைத்தும் செயலுருவம் பெறப் பணி செய்வோமாக! வையகம் வள்ளுவம் வழியில் நடப்பதாக!

16

குறள் நூறு

1. *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
பகவன் முதற்றே உலகு. 1

எழுத்துக்களுக்கு அகர முதலாதல் போல, இந்த உலகத்திற்கு இறைவன் முதலாவான்.

பொருள்

முதல் என்பது இறைவன் உலகத்திற்குக் காரணம் என்பதும் முதல்வன் என்பதும் கருத்து.

2. *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
நிலமிசை நீடுவாழ் வார். 3

நினைப்பவர் மனத்தின்கண் கோயில் கொண்டருளும் இறைவனின் திருவடிகளை நினைத்து தொழுபவர் நிலத்தின் கண் நீண்ட காலம் வாழ்வர்.

பொருள்

வழிபாட்டின் பயன் மறுமை நலன் மட்டுமன்று; இம்மை நலனும் ஆம்.

3. *வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
யாண்டும் இடும்பை இல. 4

இறைவன் வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவன்; அவன் திருவடியை நினைப்பவர்க்கு எக்காலத் திலும் துன்பம் இல்லை.

பொருள்

துன்பத்திற்குக் காரணம் விருப்பும் வெறுப்புமே. விருப்பு வெறுப்பற்ற கடவுளை நினைப்பதால் விருப்பு வெறுப்புகள் நீங்கி விடுகின்றன. துன்பத்திற்குரிய காரணம் நீங்கி விடுவதால் துன்பமில்லை.

4. *நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
வானின் றமையா தொழுக்கு. 20

தண்ணீரின்றி உலகியல் இல்லை. வான் மழையின்றித் தண்ணீரில்லை. தண்ணீரில்லாத வழி ஒழுக்கமும் இல்லை.

பொருள்

உயிர்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வாழ் வுக்கும் தண்ணீர் இன்றியமையாதது: தண்ணீரைத் தரும் வான்மழை பொய்ப்பின் வளம் குன்றும்; அதனால் ஒழுக்கம் கெடும்.

5. *குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி*
கணமேயும் காத்தல் அரிது. 29

தீய இயல்புகளைக் கடந்து வளர்ந்து நற்குணங்களைப் பெற்று உயர்ந்து நிற்போர், வெகுளியை ஒரு நொடியும் தம் நெஞ்சத்தில் நிலைபெறச் செய்யமாட்டார்.

பொருள்

வெகுளியுடையவர் நற்குணமுடைய சான்றோரல்லர். இதனால், சாபம் வழங்குகின்ற முனிவர்கள் சான்றோர் அல்லர் என்பது பெறப்படும்.

6. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
ஆகுல நீர பிற. 34

மனத்தின்கண் தூய்மை யுடையவராக வாழ்தலே அறம். மனத்தின்கண் தூய்மையின்றிச் செய்யப் பெறும் எவையும் அறமாகா. அவை ஆரவாரத் தன்மையுடையன.

பொருள்

மனத்தின் கண் தூய்மை காத்தலே அறம் அஃதின்றிச் செய்யப் பெறுவன யாவும் அறமாகா.

7. *அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 49

அறம் என்று சிறப்பிக்கத் தக்கது இல்வாழ்க்கையே. அந்த இல்வாழ்க்கையும் பிறரால் பழிக்கத் தக்கதாக இல்லாதிருப்பின் மேலும் நல்லது.

பொருள்

இல்லறம், பொதுவாக அறமே. ஆயினும் அது பிறர் பழிக்கத் தக்கவாறில்லாமல் அமைந்தால்தான் நல்லது.

8. *தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

கற்பில் தன்னைக் காத்துக் கொள்பவளும், தன் கணவனைக் கற்பு நிலையினின்று வழாதிருக்கும்படிப் பேணுபவளும் புகழைப் பேணுபவளும், சோர்விலாது பணிகளை மேற் கொள்பவளுமே சிறந்த பெண்.

பொருள்

சிறந்த வாழ்க்கைத் துணை, தன் கணவனின் ஒழுக்கச் சிறப்பிற்கும் துணையாயிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது.

9. *பெறும்அவற்றுள் யாம்அறிவ தில்லை அறிவறிந்த*
மக்கட்பே றல்ல பிற. 61

பெறக் தகுந்த பேறுகளில் அறிவார்ந்த உணர்விற் பெறும் மக்கட்பேறே சிறந்தது. மற்றப் பேறுகள் நம்மால் மதிக்கத் தக்கன அல்ல.

பொருள்

நல்லறிவு உணர்விற்பெறும் மக்கட்பேறின்றி, பெறக் கூடிய பெரும் பேறு வேறெதுமில்லை.

10. *அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
என்போ டியைந்த தொடர்பு. 73

ஆருயிருக்கு, எலும்பொடு கூடிய உடல் இயைத் திருப்பது, அன்போடு பொருந்தி வாழும் வழக்கத்திற்கே.

பொருள்

அன்பு, உயிர்க்குப் புதியதன்று; அன்பு செய்தல் உயிரின் வழக்கம். அவ்வழக்கத்தைச் செயல் முறைப்படுத்தவே உடம் போடு உயிர் கூடிற்று.

11. *வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
மிச்சில் மிசைவான் புலம். 85

விருந்தோம்பி எஞ்சியதை உண்ணும் இயல்புடைய வன், நிலத்திற்கு விதையும் விதைக்கவேண்டுமோ?

பொருள்

விருந்தோம்பி எஞ்சியதை உண்ணும் இயல்புடையவன் விளைநிலத்தின் விளைவு, பொது நலத்திற்குப் பயன் படுவதால், அவன் ஒரு கால், அந்த நிலத்தில் விதைக்கத் தவறினாலும் மற்றவர்கள் விதைக்க முன் வருவர்.

12. *பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
அணியல்ல மற்றுப் பிற. 95

வணக்கமுடைமையும், இன்சொல் வழங்கும் இயல்புமே ஒருவனுக்குச் சிறந்த அணிகள். பிற அணிகள் அணிகளாகா!

பொருள்

தம்மினும் தாழ்ந்தவரிடத்தும் பணிவுடையவராய்ப் பழகுவதும், எப்போதும் இன்சொல் வழங்குதலும் வேண்டும்.

13. *கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
ஒன்றுநன்று உள்ளக் கெடும். 109

முன்பு உதவிய ஒருவர், தமக்குக் கொலையினை ஒத்த துன்பம் செய்தாராயினும், அவர் முன்பு செய்த ஒரு நன்மையினை எண்ணும் பொழுது பின் செய்த அக் கொடுந் துன்பம் கெடும்.

பொருள்

பழகிய ஒருவர் இன்று கொலையினை ஒத்த துன்பம் செய்தாலும், அவருக்கு எதிர்த் துன்பம் தராமல் அவர் முன்னொருகால் செய்த நன்மையினை எண்ணி அமைக! அவ்வழி, நன்றி மறத்தல் என்னும் குற்றம் வராதிருக்கும். எதிர்த்துன்பம் செய்யாமையால் அவரும் மனம் மாறித் துன்பம் செய்தலைத் தவிர்ப்பர்.

தி.14.23.

14. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 118

நிறுவைக்கு முன் சமநிலையில் நின்று, பொருள்களை இட்டும் நிறுக்கும் பொழுது, பொருளின் அளவை வரை யறுத்துக் காட்டும் துலாக்கோல் போல் ஒரு பக்கமாகச் சாராமல் நடுநிற்றலே சான்றோர்க்கு அழகு.

பொருள்

கருத்தறிவதற்கு முன்பு சமநிலையில் நின்று, இரு பாலாரின் கருத்தினை அறிந்த பிறகு, அக் கருத்தின் தரத்திற்கு ஏற்றவாறு நிற்பதே சான்றோர்க்கு அழகு. கருத்தின் தரத்தைத் தேரும் பொழுது ஒருபாற் சாய்தற்குக் காரணமாகிய இனம், மொழி, சமயம், கட்சி, சாதி, நட்பு ஆகியன வழிசார்தல் கூடாது.

15. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 325

பெருமை பாராட்டிக் கொள்ளாமல் அடக்கமாக நடந்து கொள்வது எல்லார்க்குமே நல்லது; அவ்வாறு அடங்கி ஒழுகுதல் செல்வர்க்கு மேலும் ஒரு செல்வம் ஆகும்!

பொருள்

"செல்வம் உடையம்யாம்" என்னும் செருக்கு, பெருமை பாராட்டிக் கொள்ளும் எழுச்சியைத் தரும். அவ்வெழுச்சி வழி ஆட்படின் நல்லோர் பகையும் வந்தமையும். வீணே புகழ்ந்து, செல்வத்தைக் கொள்ளை கொள்ளும் சிற்றினமும் வந்து சாரும். அவ்வழி செல்வம் கெடும். அதனால் செல்வமுடையவர்க்குப் பணிவுடைமை பெருஞ்செல்வ மாகும்!

16. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. 132

இம்மைக்கும் மறுமைக்கும் துணையாய் அமையக் கூடியது ஒழுக்கம்; எனவே, எந்நிலையிலும் எப்பாடு பட்டேனும் அதனைக் காப்பாற்றிக் கொள்க.

பொருள்

உடைமைகள் தொடர்ந்து நலம் செய்யா. உயிரினைச் சார்ந்த ஒழுக்கமே இம்மையிற் புகழையும், மறுமையில் நிலையான இன்பத்தையும் தரும்.

17. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

தம்மோடு வாழும் மனித குலத்திற்கு இசைந்தவாறு ஒழுகுதலே குடிமைப் பண்பு. அங்ஙனம் ஒழுகத் தவறுதல் மனிதப் பிறப்பில் இழிந்ததாகிவிடும்.

பொருள்

குடிமைப் பண்பு என்பது மக்களாட்சி முறையில் குடிமை இயல்பு என்று (citizenship) என்று குறிப்பிடப் படுகிறது. தம்மொடு வாழ்பவருடன் ஒத்திசைந்து வாழ்தலே குடிமைப்பண்பு.

18. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான்
பிறன்இயலான்
பெண்மை நயவா தவன். 147

மாற்றான் மனைவியின் பெண்மையை நாடாதவனே அறநெறி நின்று இல்லறம் வாழ்பவன் என்று பாராட்டப் பெறுவான்.

பொருள்

அறநெறி என்பது உரிமை பூண்டவர்களிடத்தில் ஒன்றிய அன்பு செலுத்துவது; பிறர்க்குரியவளின் பெண்மையை நயத்தல் மூலம், அவள், தன் கணவனுக்குச் செய்யும் அன்பில் இடையறவு ஏற்படுகிறது. தன் மனைவியிடத்தில் தான் காட்ட வேண்டிய அன்பிலும் குறையேற்படுகிறது. அதனால், அறநெறி மாறுபடும்!

19. *உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

பிறர் கூறும் கடுஞ்சொற்களையும் வெகுளாது பொறுத்தாற்றிக் கொள்பவர். உண்ணாது தவம் செய்வாரினும் உயர்ந்தவர்.

பொருள்

உண்ணாது நோற்பது பழக்கத்தால் எளிதில் அமையும். பிறர் கூறும் இன்னாச்சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல் எளிதில் அமையாத பண்பாடு. ஆதலின் முன், பின்னாக வைக்கப்பெற்றது.

20. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்*
தழுக்கா றிலாத இயல்பு. 161

நெஞ்சத்தே அழுக்காறு வராமல் காப்பதை ஒழுக்க நெறியாகக் கொள்க.

பொருள்

ஒழுக்கக் கேடுகள் அனைத்தும் அழுக்காற்றினின்றே விளைகின்றன. அதனால், அழுக்காறின்மையை ஒழுக்காறாக் கொள்க என்றார்.

21. *வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்*
மாண்டற் கரிதாம் பயன். 177

பிறர்பொருளைக் கவரும் வழி உளதாகும் ஆக்கத்தை விரும்பாது ஒழிக! அவ்வாறான ஆக்கம் பெருமை தருவ தன்று!

பொருள்

பிறர்பொருளைக் கவர்ந்து பெற்ற ஆக்கத்தால் கவர்ந்த குற்றத்திற்குரிய இம்மை, மறுமைத் தண்டனையை எண்ணிக் கவலைப்பட நேரிடும். கவர்ந்தவழி, அப்பொருளை இழந்த வர் இவரிடமிருந்து திரும்பக் கவர முயல்வர். அவ்வழியும் காவல் துன்பம் மிகும். ஆதலின் கவர்ந்த பொருள். துய்க்கப்படும் பொழுது இன்பப் பயனையும் பெருமையையும் தராது.

22. *அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை*
புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 185

புறம் சொல்பவனின் நெஞ்சம் நன்மையுடையதல்ல என்பதனைப் புறங்கூறும் அவனது புன்மையினாலே அறியலாம்.

பொருள்

புறங்கூறுதல் அறநெறிக்கு மாறுபட்டது. அறத்தினைக் கூறுபவன் நேரிலேயே கூறலாம். புறம்கூற வேண்டியதில்லை. எனவே, புறங்கூறுபவன் நோக்கம் அறமன்று; பழி தூற்றுவதே யாம்!

23. *நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்*
பயனில சொல்லாமை நன்று. 197

சான்றோர், கேட்பார்க்கு விருப்பமில்லாத சொற் களைச் சொனனாலும் சொல்லுக. பயனற்ற சொற்களைச் சொல்லாதிருப்பது நல்லது.

பொருள்

ஒருவர் விரும்பும் சொற்களையே சொல்லுதல் என்பது சான்றோராலும் இயலாதது. விருப்பம், மனப்பான்மையைப் பொறுத்தது. ஒருவர் விரும்பும் சொற்களைக் கூறுவதைவிட, அவர்க்கு நன்மை பயக்கும் சொற்களைக் கூறுதலே சான்றோர் கடமை. பயனிலாத சொற்களைக் கூறுவதால் பயனுக்கு மூலமாக இருக்கின்ற நேரமும் கெடும். அதனால் பயனற்ற சொற்களைக் கூறக்கூடாது.

24. *தீயவை தீய பயத்தலால் தீயவை*
தீயினும் அஞ்சப் படும். 202

தீயவை தீமையையே தருவதால், நன்மையும் தீமையும் கலந்து தரும் தீயினும் அஞ்சப்படும்.

பொருள்

தீ, உணவு ஆக்குவதற்குத் துணைசெய்கிறது. தீமையோ எட்டுணையும் நன்மை செய்வதில்லை. ஆதலால் தீயினும் தீமை அஞ்சப்படும்.

25. *புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
ஒப்புரவின் நல்ல பிற. 213

தேவருலகத்தும் இந்நிலவுலகத்தும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்வதற்கு ஒப்புரவைப் போன்றதோர் உயர் பண்பைக் காண்பதரிது.

பொருள்

ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக் காகவும் என்ற கூட்டுறவு வாழ்வியலே ஒப்புரவு. அதனிற் சிறந்த அறம் எங்கும் இல்லை.

26. *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
செத்தாருள் வைக்கப் படும். 214

உயிர் நலமறிந்து பிறர்க்குதவியாக ஒப்புரவு நெறி நின்று ஒழுகுபவனே உயிர் வாழ்கின்றவன். அங்ஙனம் வாழாதவன் இறந்தவரோடு இணைத்து எண்ணப்பெறுவான்.

பொருள்

உயிரின் இயற்கை அன்பு காட்டுதலே; அவ்வழி ஒழுகா விடின், உயிரின் அடையாளம் இன்மையாகும்.

27. *ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை*
மாற்றுவார் ஆற்றலின் பின். 225

பசியைப் பொறுத்துக் கொண்டு, உண்ணாமல் தவம் செய்வாரின் ஆற்றலைவிட உயிர்க்குலத்தின் பசிக்கு, உணவு முதலியன வழங்கி அதை மாற்றுவாரின் ஆற்றல் சிறப்புடையது.

பொருள்

பசியைப் பொறுத்துக் கொண்டு தவம் செய்தல் தற்சார்புடையது; அஃது எளிதில் கூடும். உயிர்க்குலத்தின் பசியை மாற்றுதல் பிறர் நலம் பேணும்பணி. ஆதலின் இப்பணியே சிறப்புடையது.

28. *தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்*
தோன்றலின் தோன்றாமை நன்று. 236

பலர் முன் தோன்றும் பொழுது, புகழோடு தோன்றுக. அஃது இயலாதாயின் தோன்றா திருத்தலே நல்லது.

பொருள்

புகழோடு விளங்கமுடியாத துறையில் தோன்றா திருத்தல் நல்லது.

29. *வலியார்முன் தன்னை நினைக்கத்தான் தன்னின்*
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

அருளின்மையின் காரணமாகத் தன்னிலும் மெலி யாரைத் துன்புறுத்த விரும்பிச் செல்லும் பொழுது, தன்னை விட வலியார் ஒருவர் தன்னைத் துன்புறுத்த வரும்பொழுது தான் அஞ்சி நிற்கும் நிலைமையினை எண்ணுக.

பொருள்

துன்பத்திற்கு அஞ்சுபவர் பிறர்க்குத் துன்பம் செய் வானேன்?

30. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 251

தம் உடம்பைக் கொழுக்க வைப்பதற்காக மற்றோர் உயிரின் உடம்பைத் தின்கின்றவனிடம் எங்ஙனம் அரு ளுணர்வு குடிகொள்ள முடியும்?

பொருள்

தன் உடம்பைக் கொழுக்க வைத்தல் என்பதே குற்ற முடைய தன்னலம். அதற்காகப் பிறிதின் ஊனை உண்பது மோசமான குற்றம். இவ்விரண்டுமுடையார் அருளுடைய ராதல் அரிது.

31. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 270

இந்த உலகத்தில் செல்வர்கள் சிலரானது பிறர்க்கென முயலும் தவம் செய்வார் சிலரேயானமையால்தான்.

பொருள்

பிறர்க்கென முயலும் தவமிக்க தாளாண்மையுடைய வர்கள் பலரானால், செல்வம் உடையாரும் பலராவர்.

32. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280

தவம் செய்வார், தவத்திற்கு எதிரான—பழிக்கத் தக்க குற்றங்களில்லாமல் இருந்தாலே போதும். தலைமயிரை மழித்தலும், சடையாக்கலுமாகிய செய்முறைகள் வேண்டா.

பொருள்

தவத்தின் முயற்சியில் மழித்தலும் நீட்டலும் இயல்பாக நிகழுமாயின் குற்றமில்லை. கோலம் கருதி, முயன்று மழித் தலும் நீட்டலும் வேண்டாம்!

33. *உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
கள்ளத்தாற் கள்வேம் எனல். 282

பிறன் பொருளைக் களவினாலே கவர உள்ளத்தால் நினைத்தலும் தீது.

பொருள்

தீமை, களவு செய்தால் மட்டுமன்று. களவாட நினைக்கும் பொழுதே களவின் குற்றம் வந்தடைகிறது.

34. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
தீமை யிலாத சொலல். 291

வாய்மை எனப்படுவது யாதொரு தீமையும் பயவாத சொல்லேயாம்.

பொருள்

பிற நூலார் உண்மை என்று கூறுவது வாய்மையன்று. உயிர்க்குத் துன்பம் செய்யாத சொல்லே வாய்மைக்கு இலக்கணம்.

35. *உள்ளிய வெல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்*
உள்ளான் வெகுளி எனின்.

மனத்தினால் கோபத்தை நினையாதிருப்பின் நினைத் தன வெல்லாம் உடன் வந்தெய்தும்.

பொருள்

வெகுளி, அறிவையும் உணர்வையும் ஆள்வினைத் திறனையும் கெடுக்கும். முயற்சிக்குத் துணையாயிருப் போரைரும் பகைவராக்கிவிடும். ஆதலால், எண்ணியதை இனிதே நிறைவேற்ற நினைப்போர் மனத்தாலும் வெகுளக் கூடாது.

36. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
மாணாசெய் யாமை தலை. 317

யார்க்கும், எப்போதும், ஒரு சிறிதும் மனத்தினால் தீமை செய்யாதிருப்பதே தலையாய அறம் ஆகும்.

பொருள்

அறம், செய்யப்படுவதன்று: ஒழுகப்படுவது. எந்தச் சூழ்நிலையிலும் பகை-உறவு வேறுபாடின்றி எவருக்கும் எத்தகைய துன்பத்தையும் செய்யாதிருப்பதே தலையாய அறம் ஆகும்.

37. *பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்*
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 322

பசித் உயிர்களோடு உணவினைப் பங்கிட்டு உண்பதன் மூலம் பல உயிர்களையும் பாதுகாக்கும் அறம், நூல்கள் பலவாகச் சொன்ன அறங்களுக்கெல்லாம் தலையாயது.

பொருள்

பசித்த உயிர்க்கு உணவளிக்காமல் அதனைச் சாகவிடுதல் கொலைக் குற்றமாகும். எனவே இது கொல்லாமை அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

38. *நாள்என ஒன்றுபோல் காட்டி உயிரீரும்*
வாள்து உணர்வார்ப் பெறின். 334

உயிர் வாழ்க்கையைக் காலம், நாள் என ஒன்று போல எண்ணிக்காட்டி அறுத்து அழிப்பதை அறிவுடையார் உணர்வர்.

பொருள்

வாழ்நாள் முழுமையாக அழிவதில்லை; இன்று, நாளை என்று நாட்கணக்கில்தான் அழிகிறது.

39. *யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்*
குயர்ந்த உலகம் புகும். 346

'நான்' என்ற தன் முனைப்பின் வழியும், 'எனது' என்ற உடைமைப் பற்றின் வழியும் வரும் செருக்கை நீக்குவார். வானோர் உலகினும் உயர்ந்த உலகத்தை அடைவர்.

பொருள்

'நான்' என்ற அகப்பற்றும், 'எனது' என்ற புறப்பற்றும் நீக்குதற்குரியன.

40. *காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
நாமம் கெடக்கெடும் நோய். 360

காமம், வெகுளி, மயக்கம் என்னும் குற்றங்கள் முற்றாகக் கெடின் பிறவித்துன்பம் கெடும்.

பொருள்

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்கள் பெயரளவில் இருந்தால்கூடத் தீமையே செய்யும். ஆதலால் 'நாமம் கெடக்கெடும் நோய்' என்றார்.

41. *வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
யாண்டும் அஃதொப்ப(து) இல். 363

இவ்வுலகில் வேண்டாமையை ஒத்த சிறப்புடைய செல்வம் வேறில்லை; அதற்கு ஒப்பான ஒன்று எங்குமில்லை.

பொருள்

ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசை எல்லையில் லாதது. அதனால், செல்வம் பெற்றோம் என்ற மனநிறைவு ஆசையின் வழியில் இல்லை. வேண்டாமையே விழுமிய செல்வம்.

42. *நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
அல்லற் படுவ தெவன். 379

ஊழால் நல்லன விளையும் பொழுது மகிழ்ந்து துய்ப்பவர், அதே ஊழால் துன்பம் விளையும் பொழுது வருந்துவது ஏன்?

பொருள்

முன் செய்த ஊழால் விளைவனவே இன்பமும் துன்பமும். ஊழின் வழி விளையும் இன்பத்திற்கு மகிழ்தலும் துன்பத்திற்கு நோதலும் மீண்டும் ஊழுக்கு வித்தாகும்.

43. *காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
மீக்கூறும் மன்னன் நிலம். 386

காண்பதற்கு எளியவனாய்—கடும் சொல் கூறாத வனாய் இருக்கும் மன்னனுடைய நாட்டை உலகு புகழும்.

பொருள்

நாடாள்வோன் மக்களால் எளிதில் காணத்தக்க வனாகவும், குடிமக்களின் அச்சத்தினை நீக்குவதற்குக் கடுஞ் சொற் கூறாதவனாகவும் இருத்தல் வேண்டும்.

44. *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
நிற்க அதற்குத் தக. 391

ஒருவன் தன் மனக்குற்றம் நீங்குவதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்து, குற்றம் நீங்குகிற வரையில் கற்க வேண்டும். குற்றம் நீங்கிய நிலையில் நிலைத்து நிற்க வேண்டும்.

பொருள்

மனக்குற்றம் நீங்கக் கற்பதே கல்வி.

45. அரங்கின்றி வட்டாடி யற்றே, நிரம்பிய
நூலின்றி கோட்டி கொளல். 401

அறிய வேண்டுவனவற்றையெல்லாம் அறிதற்குரிய நூல்கள் பலவற்றையும் கற்காமல், அவையிடத்து நின்று ஒன்றைச் சொல்வது, சதுரக்கோடின்றி வட்டாடியதை யொக்கும்.

பொருள்

வட்டாடுவதற்கு அரங்கு தேவை; அவையிலே பேச அறிவு தேவை.

46. எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 416

அளவிற் சிறிதானாலும் நல்லனவற்றைக் கேட்க வேண்டும். கேட்ட அளவிற்கு நல்லவை நிறைந்த பெருமையைத் தரும்.

பொருள்

அரிதின் முயன்று நல்லனவற்றைக் கேட்பது, பெருமை பெறுதற்குரிய வழியாகும்.

47. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 423

எவ்வெவரிடத்து எந்தப் பொருளைக் கேட்டாலும், அப்பொருளின் மெய்த் தன்மையை அறிந்து கொள்வதே அறிவு.

பொருள்

சொல்பவர் எவ்வளவு பெரியவரானாலும் சிறிய வரானாலும், பகைவரானாலும் நண்பரானாலும் அவர் கூறியவற்றை நன்கு ஆய்ந்து தெரிந்து மெய்த்தன்மையைக் கண்டு கொள்ளுதலே அறிவு.

48. *அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்*
அஃதறி கல்லா தவர். 427

அறிவுடையார் ஆக வேண்டியதை அறிந்து செயல் படுவர்; அறிவில்லாதவர் அதனை அறிய மாட்டார்கள்.

பொருள்

எதிர்காலத்தை அறிந்து தொழிற்படுதல் அறிவுடைமை.

49. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்*
என்குற்றம் ஆகும் இறைக்கு. 436

நாடாளும் மன்னன் தன் குற்றத்தை முன்னதாக நீக்கிப் பின்னர் மற்றவர் குற்றத்தைக் காண்பனாயின் அரசனுக்கு ஏது குற்றம்?

பொருள்

மன்னனிடமுள்ள குற்றத்தின் வழியே மக்களிடத்துக் குற்றம் கால் கொள்கிறது. மன்னன் குற்றம் நீங்கிய வழி மக்களிடத்துக் குற்றம் நில்லாது.

50. *அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்*
பேணித் தமராக் கொளல்.

பெரியவர்களைப் போற்றித் தமக்குச் சுற்றத்தார்களாகக் கருதித் தழுவிக் கொள்ளுதல், அரசன் பெறுதற்கரிய பேறுகள் அனைத்திலும் அருமையாகும்.

பெரியார் சுற்றத்தாராதல் மூலம், அருமையானவற்றையெல்லாம் அடையலாம்.

51. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 455

சார்ந்தொழுகும் இனத்தூய்மையின் வழி, மனத்தூய்மையும் செய்யும் செயலின் தூய்மையும் வந்தமையும்.

பொருள்

மனத்தூய்மைக்குரிய சிந்தனையும் பழக்கங்கட்குரிய செயல் தூய்மையும் சேர்ந்தொழுகும் நட்பின் வாயிலாக அமைவதால் இனத்தூய்மையைக் காத்தல் வேண்டும்.

52. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 466

செய்யத்தகாத செயல்களைச் செய்தாலும் கேடுவரும்; செய்யவேடியவற்றைச் செய்யாமையாலும் கேடு வரும்.

பொருள்

செய்யத்தக்கனவற்றைச் செய்து தகாதனவற்றை விலக்க வேண்டும்.

53. ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 477

கொடுக்கும்பொழுது பொருளின் அளவறிந்து கொடுத்தல், பொருளைப் போற்றி வாழும் நெறியாகும்.

பொருள்:

மாற்றார்வலி தம்வலியினும் மிகாதவாறு காத்துக் கொள்ளத் தக்கவகையில் ஆட்சியாளரின் கொடை அமைய வேண்டும்.

54. *காலம் கருதி இருப்பர் கலங்காது*
ஞாலம் கருது பவர். 485

உலகத்தைத் தன்பாற் கொள்ளக் கருதுகின்றவர்கள், அதை அடைவதற்குரிய துன்பங்களைப் பற்றி எண்ணிக் கலங்காமல் உலகத்தைக் கொள்ளுதற்கரிய காலம் கனிகின்ற வரை காத்திருப்பர்.

பொருள்

எந்த ஒன்றை அடைவதற்கும் உரிய காலம்வரும் வரை காத்திருக்க வேண்டும்.

55. *தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
இடங்கண்ட பின்அல் லது. 491

தொடங்கும் செயலை முழுதாக முடித்தற்கு உரிய காலத்தின் இயல்பறிந்து தொடங்குக; இடையில் எச்செயலை யும் எளிதென்று எண்ணற்க.

பொருள்

எச்செயலையும் முடித்தற்குரிய வழிகளை அறிந்து தொடங்க வேண்டும்.

56. *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
மிகைநாடி மிக்க கொளல். 504

ஒருவரின் குணங்களையும் குற்றங்களையும் ஆராய்ந்து மிகுதியானவை பற்றி அவரைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொருள்

குணமும் குற்றமும் எவர்க்கும் உரியன. ஆதலின் மிகுதி காண வேண்டும். குணம் குற்றங்களின் மிகுதி எண்ணிக் கையைப் பொறுத்ததன்று; ஏற்படும் பயனைப் பொறுத்தது.

57. *செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
எய்த உணர்ந்து செயல். 516

ஒரு செயலைச் செய்கின்றவனுடைய தன்மையையும் செயலின் தன்மையையும் ஆராய்ந்து அச்செயலுக்குரிய காலத்தையும் அறிந்து செயல்படுக.

பொருள்

ஒரு செயலில் முழுதாக வெற்றிபெற வேண்டுமானால், அச்செயலைக் செய்தற்குரிய தகுதியுடையவனும் அச்செயல் நிறைவேறுதற்குரிய காலமும் ஒத்திசைந்து அமைதல் வேண்டும்.

58. *பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
மருங்குடையார் மாநிலத் தில். 526

அள்ளி வழங்குபவனாகவும் சினமில்லாதவனாகவும் ஒருவன் விளங்கினால், உலகில் வேறு யாரையும் விடச் சுற்றத்தாரை அதிகம் பெறுவான்.

பொருள்

கொடையிருந்து சினமிருந்தாலும், பொறுமையிருந்து கொடையில்லாமற் போனாலும் சுற்றம் சூழாது.

59. *அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்*
கருவியாற் போற்றிச் செயின். 537

மறவாக் கருவியாகிய மனத்தால் எண்ணிச் செயற் பட்டால், செய்தற்கு அரிய ஏதும் இல்லை.

தி. IV. 24.

பொருள்

மனத்தினால் எண்ணிச் செய்தல், மறதியைத் தவிர்க்கும் வழி; மறவாமை வந்த விடத்து எக்காரியமும் எளிதில் நிறைவேறும்.

60. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

குடிகளைத் தழுவி ஆட்சி செலுத்தும் மன்னனின் அடிகளைத் தழுவி உலகு நிற்கும்.

பொருள்

செங்கோலுக்கு அழகு குடிகளைத் தழுவி நிற்றலே.

61. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555

முறையாக ஆட்சி செய்யாத அரசனின் செல்வத்தைக் கொடுங்கோன்மையால் துன்ப முற்று அழுத குடி மக்களின் கண்ணீரே தேய்த்து அழிக்கும்.

பொருள்

கொடுங்கோன்மையுடைய அரசனை அழிக்கப் படை தேவையில்லை. ஏழையர் அழுத கண்ணீரே போதும்.

62. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 562

பன்னெடுங் காலத்திற்கு ஆக்கத்துடன் விளங்க விரும்புவர், மிகுந்த தண்டனை செய்வார் போலத் தொடங்கிக் குறைந்த தண்டனையை வழங்க வேண்டும்.

பொருள்

தவற்றுக்குப் பெரிய தண்டனை கிடைக்கும் என்ற அச்ச உணர்வும் தண்டிக்கும் போது அழிவு நேராவண்ணம் தண்டிக்கப்படுதலும் ஆக்கத்திற்குப் பாதுகாப்பாகும்.

63. *கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
உரிமை உடைத்திவ் வுலகு. 578

தத்தமது கடமை கெடாமல் கண்ணோட்டம் செய்ய இயலுமாயின், அவர்க்கு இந்த உலகம் உரிமையாகும்.

பொருள்

கடமைக்கு இடையூறு இல்லாத கண்ணோட்டமே வரவேற்கத் தக்கது.

64. *வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு*
அனைவரையும் ஆராய்வ தொற்று. 584

தம்தொழிலைச் செய்கின்றவர், சுற்றத்தார், பகைவர் என்ற வேறுபாடு இன்றி அனைவரையும் ஆராய்ந்து அறிவதே ஒற்று எனப்படும்.

பொருள்

சுற்றத்தார் தோற்றத்தில் பகைவரும் இருக்க இயலும். எனவே வேறுபாடின்றி ஆய்க.

65. *உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை*
நில்லாது நீங்கி விடும். 592

பொருளுடைமைக்குக் காரணமாகிய ஊக்கமே நிலை யான உடைமை. பொருளுடைமை நிலைத்து நிற்பது நீங்கிப்போகும்.

பொருள்

ஊக்கம் உள்ளவழி, பொருளுண்டாம். ஊக்கமில்லாத வழி, பொருளுடைமை ஓர் உடைமையே அன்று.

66. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603

சோம்பலை ஒழிக்காமல் அதனைக் கொண்டொழுகு வோன் அறிவற்றவன். அவன் கெடுவதற்கு முன்பே அவன் பிறந்த குடியும் கெடும்.

பொருள்

சோம்பல் அஃது உடையவனை மட்டுமின்றி, அவனது குடியையும் கெடுக்கும் தன்மை வாய்ந்தது.

67. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 611

எந்த ஒரு செயலையும் செய்து முடித்தற்கு அரிய தென்று கருதித் தளர்ச்சியடையக் கூடாது. அச்செயலை முடித்தற்குரிய முயற்சி பெருமையைத் தரும்.

பொருள்

அருமையான முயற்சிகளை மேற்கொள்ளுதல் பெருமை தரும்.

68. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில். 621

துன்பம் வரும்பொழுது கலங்காமல் நகுதல் வேண்டும்; அங்ஙனம் நகுதலே, அத்துன்பத்தை எதிர்த்து வெற்றி கொள்ளுதற்குரிய சிறந்த வழி.

பொருள்

துன்பத்திற்குக் காரணமாகிய தன்குற்றம் நோக்கி நகுதல் குற்ற நீக்கத்திற்கும் உதவி செய்யும்.

69. *செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்*
தியற்கை அறிந்து செயல். 637

நூல் நெறியாற் செய்யுந் திறனை அறிந்திருந்தாலும், உலகத்தின் இயற்கையறிந்து செய்தல் வேண்டும்.

பொருள்

நூல்நெறியே ஆனாலும் உலகியலுடன் ஒத்து வராதன பயன்தரா.

70. *வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்*
மாட்சியின் மாசற்றார் கோள். 646

பிறர் கேட்க விரும்புமாறு சொல்லுவதும், பிறர் சொல்லும் சொற்களின் பயனைக் கொள்ளுதலும் குற்ற மற்றார் கொள்கை.

பொருள்

கூறும்போது விரும்பத்தக்கவாறு கூறுதலும், அமைச் சியலுக்குரிய பெருமையின் காரணமாகச் சொல்லினிமை நோக்காது பயன் நோக்கிக் கேட்டலும் வேண்டும்.

71. *என்றும் ஒருனவுதல் வேண்டும் புகழொடு*
நன்றி பயவா வினை. 652

புகழோடு அழகும் தராத செயல்களை ஒரு போதும் செய்யாமல் விலக்க வேண்டும்.

பொருள்

செயல், புகழினைத் தந்து, அவ்வழி அறத்தினைப் பெறுதற்குரிய செயல்முறைப் பண்ணையேயாம். பயன்தராத செயலைத் தவிர்த்திடுக.

72. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 666

எண்ணிய வினையிடத்து உறுதி உடையராயின் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

பொருள்

எண்ணியவற்றை அடைவதற்கு எண்ணத்திலும் முயற்சியிலும் உறுதி வேண்டும்.

73. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 672

காலத்தாழ்த்திச் செய்ய வேண்டியவற்றைக் காலத்தால் பிந்திச் செய்க; காலத் தாழ்த்தாது செய்ய வேண்டியவற்றை, உடனே செய்க.

பொருள்

செய்தற்குரிய பணிகளைத் காலத்தோடிசைந்து செய்க.

74. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 961

தீயினிடத்துக் குளிர் காய்வார் போல, நாடாள்வோரிடமிருந்து அகலாது ஒழுகுக; மிக அணுகி ஒழுகாமலும் இருக்க.

பொருள்

குளிர் காய்வோர் தீயிடமிருந்து நெடுந்தொலைவிற்கு விலகினால் குளிரும். அதுபோல நாடாள்வோரிடமிருந்து நெடுந்தொலையில் விலகினால் பகைவர் வருத்துவர். ஆள் வோரை மிகமிக நெருங்கினால் அவர் தம் விருப்பு வெறுப்புத் துன்பம் தரும்.

75. *குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
யாது கொடுத்தும் கொளல். 703

தன் குறிப்பறிந்து செயலாற்ற வல்லாரை, எது கொடுத்தேனும் உறுப்பாக்கிக் கொள்க.

பொருள்

குறிப்பறிந்து செயல்படுவோரைப் பெறுக.

76. *அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்*
தொகையறிந்த தூய்மை யவர். 711

சொற்களின் விளைவறிந்த தூய்மை உடையோர், தாம் சொல்லப் புகுகின்ற அவையின் தகுதிப்பாடறிந்து அங்குச் சொல்லத்தக்கன இவையென அறிந்து சொல்லுக.

பொருள்

சொல்லப்படும் செய்திகளைவிடச் சொல்லும் இடம் நோக்கிச் சொல்லுதல் இன்றியமையாதது.

77. *ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா*
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

அவையில் அஞ்சாது விடை சொல்லுதற்குரிய நெறியும், சொல்லத்தக்க அளவு முறையும் அறிந்து கற்க.

பொருள்

தொடுக்கும் வினாக்களுக்கு விடைசொல்ல முடியாத கல்வி, பயனற்றதாகும்.

78. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. 740

எல்லா வளங்களும் நிறைந்த நாடாயினும், செங்கோல் முறையற்ற நாடு பயனுடையதன்று.

பொருள்

நல்லாட்சி இல்லாத நாட்டில் வளங்கள் பேணப் படுவதில்லை. அதனால் பயனில்லை.

79. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண். 750

எத்தகைய பெருமையுடைய அரணாயினும் செயற் சிறப்பில்லாரிடத்து இவ்வரணின் பெருமை நில்லாதொழியும்.

பொருள்

அரணின் பெருமையைக் காப்பது செயலின் திறனே.

80. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். 759

தொழில் செய்து பொருளை ஆக்குக. பகைவரின் செறுக்கறுக்கும் பொருட் சேர்க்கையினும் கூரிய வாள் வேறில்லை.

பொருள்

பொருளுடையார்க்குப் பகைவர் அடங்குவர். பொருள் என்பது, மனிதகுலத்தின் உயிர்வாழ்க்கைக் குரியதுவே.

81. *சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்*
இல்ஆயின் வெல்லும் படை. 769

இழிவைத் தரும் சிறிய செயல்களும் மாறாப் பிணக்கும் வறுமையும் இல்லையானால் பகைவரைப் படை வென்று விடும்.

பொருள்

வெற்றிக்குப் பெரும் படைமட்டும் போதாது. படை வீரர்க்கு ஊதியம் வழங்க இயலா வறுமையும், ஆட்சி உறுப்புகளுக்கிடையே பிணக்கும், அவ்வழி சிறியன செய் தலும் இல்லா திருத்தல் வேண்டும்.

82. *புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*
இரந்துகோள் தக்க துடைத்து. 780

காத்த தலைவன், கண்ணீர் சொரிய எய்தும் மரணம், இரந்தும் பெறத்தக்க பெருமையுடையது.

பொருள்

பேணிக்காத்த தலைவன் வீழ்வதற்கு முன் வீழ்வது பெருமைக்குரியது. செய்ந்நன்றி அறமும் சேர்ந்ததாகும்.

83. *நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
பண்புடை யாளர் தொடர்பு. 783

நல்ல நூல்களைக் கற்குந்தோறும் இன்பம் பெருகுதல் போல, நற்குணமுடையோர் நட்பு இன்பத்தரும்.

பொருள்

நல்ல நூல்கள், பயில்தோறும் அறிவினைத் தந்து இன்பம் தரும். நல்லோர் நட்பு அன்பினைப் பெருக்கி இன்பம் தரும்.

84. *அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய*
வல்லார்நட் பாய்ந்து கொளல். 795

அறநெறியல்லாத செயலைச் செய்யக் கருதியவழி இடித்துத் திருத்தி, அறநெறியில் நிறுத்துதற்குரிய வல்லாரின் நட்பை அறிந்து கொள்க.

பொருள்

நட்பின் பயன் நன்னெறி நிறுத்துதலேயாம்.

85. *நட்பிற் குறுப்பு கெழுதகைமை மற்றதற்*
குப்பாதல் சான்றோர் கடன். 802

நட்பிற்கு உறுப்பு, நட்டாருக்கு உரியவற்றை உரிமையாற் செய்தல். அங்ஙனம் செய்த செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோரின் கடமை.

பொருள்

நட்புடையார் உரிமையுடன் செய்த செயல்முறைகளுக்கு உடன்பாடுடையராயிருத்தலே இனிமைதரும் நட்பு.

86. *எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ*
மன்றிற் பழிப்பார் தொடர்பு. 820

தனியே மனைக்கண் இருந்தவிடத்து இனிமையாகப் பழகி, பலர்கூடிய மன்றில் பழி கூறுவார் உறவை அறவே விலக்க வேண்டும்.

பொருள்

பழகியோரிடத்தில் குற்றம் கூறுவார் உறவு தீது.

87. *சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க*
வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827

வில்லின் வணக்கம் ஏற்றவர்க்குத் தீமையே செய்யும். பகைவரின் சொல் வணக்கமும் தீமை தருதலையே குறிக்கும்.

பொருள்

பகைவர் மனத்தினால் வணங்குதல் இல்லை. சொல்லினால் வணங்குதல் தீமைசெய்யும் குறிப்புடையதே என்பதை அறிக.

88. *பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதம்கொண்*
டூதியம் போக விடல். 831

அறியாமை என்பது யாதெனில் தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கைக்கொண்டு செல்வம் வருவனவற்றைக் கைவிடுதல்.

பொருள்

அறியாமை என்பது அழிவைத் தழுவிக்கொண்டு, ஆக்கத்தை இழத்தல்.

89. *வெண்மை எனப்படுவது யாதெனில் ஒண்மை*
உடையம்யாம் என்னும் செருக்கு. 844

தம்மைத் தாமே நல்லறிவுடையேம் என்று செருக்கிக் கொள்ளுதல் புல்லறிவாண்மை யாகும்.

பொருள்

அறிவு வளர்தலுக்குரியது; ஆதலின், அறிவு உடையோம் என்று எண்ணுதல் தவறு.

90. *பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி*
இன்னாசெய் யாமை தலை. 852

ஒருவன் தன்னோடு கூடாமையைக் கருதி அன்பில்லாதவற்றைச் செய்தாலும், அவனோடு மாறுபட்டு அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் சிறந்தது.

பொருள்

கூடாதவரைக் கூடும்படி செய்தலே நல்வாழ்க்கை. அஃதின்றிப் பகைகாட்டித் துன்பம் செய்தால் பகை வளரும்; அவ்வழி அழிவு வரும்.

91. *பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
தகைமைக்கண் தங்கிற் றுலகு. 874

தமது பகையைத் தணித்து நட்பாகக் கொண் டொழுகும் பண்புடையாளரின் பெருந்தன்மைக்கண் உலகம் அடங்கும்.

பொருள்

பகையை நட்பாக மாற்றிக் கொள்ளுதல் பண்பு நெறி.

92. *வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக*
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

வாள் போல் வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், உறவினரைப் போல இருந்து மறைந்து பகை செய்பவரைக் கண்டு அஞ்சுக.

பொருள்

முகத்தில் உறவும் அகத்தில் பகையும் உடையாரை அஞ்சி விலகிடுக.

93. *ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
போற்றலுள் எல்லாம் தலை. 891

எடுத்துக் கொண்ட பணிகளை இனிதே முடிக்க வல்லாரின் ஆற்றலை இகழாதிருத்தல் தலையாய காப்பாகும்.

பொருள்

ஆற்றலுடையவரை இகழாதிருத்தல் தலைசிறந்த தற்காப்பு.

94. *மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய*
தற்றது போற்றி உணின் 942

முன் உண்ட உணவு செரித்ததறிந்து பின் உண்ணின் உடம்பினைப் பேண மருந்தென்று ஒன்று வேண்டியதில்லை.

பொருள்

உண்ட உணவு செரித்தபின் உண்டால் பிணி வராது.

95. *நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்*
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

வாய்மையில் வழுவாத நற்குடியில் பிறந்தார்க்கு முகமலர்ச்சி, ஈதல், இனியன கூறுதல், இகழாமை ஆகிய பண்புகள் உரிமையுடையன.

பொருள்

உயர்குடிப் பிறந்தாரின் இலக்கணம் கூறியது.

96. *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

செல்வப் பெருக்கத்தில் பணியுடையராதல் வேண்டும். சிறுமையுடைய வறுமை வந்தடைந்த பொழுது தாழ்வு உணர்வில்லா உயர்வு மனப்பான்மை கொள்ளவேண்டும்.

பொருள்

செல்வப் பெருக்கத்தில் பணிவதால் பெருமையும் செல்வச் சுருக்கத்தில் உயர்வதால் பெருமையும் உண்டு.

97. *பெருமை பெருமிதம் இன்மை சிறுமை*
பெருமிதம் ஊர்ந்து விடல். 979

பெருமைக்குரிய பண்பானது செருக்கின்றி வாழ்தல். சிறுமையென்பது தருக்கித் தற்பெருமை பாராட்டல்.

பொருள்

செருக்கினால் பெருமை வராது.

98. *கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
சொல்லா நலத்தது சால்பு. 984

தவம் என்பது எந்த உயிரையும் கொல்லாத நலமுடையது. சான்றாண்மை யென்பது பிறர் குற்றத்தைச் சொல்லாத நலமுடையது.

பொருள்

தவத்தினும் சிறந்தது கொல்லாமை, சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாதது சிறப்பு.

99. *நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
பண்புபா ராட்டும் உலகு. 994

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழ்வோரின் பண்பை உலகு பாராட்டும்.

பொருள்

மற்றவர் பயன்பெற வாழ்தல் பாராட்டத்தக்க பண்பு.

100. *குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
மடிதற்றுத் தான்முந் துறும். 1023

தான் பிறந்த குடியினை உயரச் செய்யும் பணிகளில் ஈடுபட்டு முயன்று பணி செய்வார்க்குத் தெய்வம்

ஆடையைக் தற்றுக்கொண்டு தானே துணை செய்ய முன் வந்து நிற்கும்.

பொருள்

தெய்வம் வாளா வேண்டுதலுக்குத் துணைசெய்ய முன் வராது. முயற்சியினை மேற்கொண்டாருக்கு அவர் வேண்டா மலே வந்து துணை செய்யும்.

தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
நூல் வரிசை

திருக்குறள்	தொகுதி	I	ரூ. 75.00
திருக்குறள்	தொகுதி	II	ரூ. 65.00
திருக்குறள்	தொகுதி	III	ரூ.100.00
திருக்குறள்	தொகுதி	IV	ரூ. 75.00
இலக்கியம்	தொகுதி	V	ரூ. 75.00
இலக்கியம்	தொகுதி	VI	ரூ. 75.00
சமயம்	தொகுதி	VII	ரூ. 75.00
சமயம்	தொகுதி	VIII	ரூ. 75.00

தமிழ்மாமுனிவர்

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

நூல்வரிசை

திருக்குறள்

இலக்கியம்

சமயம்

சமுதாயம்

பொது